# விடியலைத் தேடும் பூபாளம்



ரமணிசந்திரன்

# விடியலைத் தேடும் பூபாளம்

**ரமணிசந்திரன்**

**அருணோதயம்**
3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை :: சென்னை - 600 014.

# விடியலைத் தேடும் பூபாளம்



## 1

"அப்பா!" என்று அவசரமாக அழைத்தபடி, வேகமாக வீட்டினுள் புகுந்தாள் சுமித்ரா.

"ஏன்? அப்பாவுக்கு என்ன இவ்வளவு அவசரம்? முதலில் கை கால் கழுவிவிட்டு டிபன் சாப்பிட வா" என்று புன்முறுவலுடன் மகளை எதிர் கொண்டாள், சுமியின் தாயார் ஸ்ரீமதி.

தாய் என்றால் பத்து மாதம் சுமந்து பெற்றவள் அல்ல. பெற்றவளின் இடத்துக்கு வந்த அடுத்தவள். ஆனால், அந்த வித்தியாசத்தை இன்றுவரை சுமித்ரா அறிந்தவள் அல்ல. அன்னையாகவே உணர்ந்தாள். அழைத்தாள்.

"அவசரம்தான் அம்மா. இன்னமும் அப்பா அழைப்பிதழ்களைக் கொடுக்கத் தொடங்கி விட வில்லையே?" என்று பதற்றத்துடன் வினவினாள் மகள்.

"இன்னமும் இல்லையடா. ஆனால், என்ன விஷயம்?"- முகத்தில் கவலை பறக்க வினவினாள் ஸ்ரீமதி.

"அம்மா, இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டும் அம்மா."

"என்ன? என்னடீ சொல்லுகிறாய்!" என்று அதிர்ச்சியின் குரல் உயரக் கேட்டாள் தாயார்.

"என்ன? என்ன, என்ன கேட்கிறாள் உன் பெண்? சோக்ரா நெக்லஸா, ஆக்ரா புடவையா, எதுவானாலும் அவள் கேட்பதை வாங்கிக் கொடுத்துவிட வேணுமாம். மாப்பிள்ளையின் படு கண்டிப்பான உத்தரவு இது. சொல்லு குழந்தை, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேலிச் சிரிப்புடன் கூறினார், அப்போதுதான் கழுவிய கையைத் துடைத்துக் கொண்டு வந்த சிவராமன்.

சுமித்ரா அன்னையின் முகத்தைப் பார்த்தாள். அந்த அம்மாள் சிலையாக நிற்கவே, தானே சொன்னாள்: "அந்த மாப்பிள்ளையே வேண்டாம் அப்பா."

"என்ன?" சிவராமன் தன் மனைவிக்கும் மேலாக அதிர்ந்து போனார்.

"ஆமாம் அப்..." என்று தொடங்கிய மகளைக் கையமர்த்தினார். "குழந்தையை அழைத்துக் கொண்டு போய் டிபனைக் கொடு. மற்றதை அப்புறம் பார்க்கலாம்" என்றார் மனைவியிடம்.

"வா, சுமி. இன்று முந்திரி பகோடாவும், பாதாம் அல்வாவும். உனக்குப் பிடிக்குமே" என்று பெண்ணை அழைத்தாள் ஸ்ரீமதி.

பாதாம் அல்வா! முந்திரி பகோடா! பணக்கார டிபன்! சுமித்திரைக்குச் சுருக்கென்றது. "எனக்கு எதுவும் வேண்டாம்" என்றாள் எரிச்சலுடன்.

"அம்மா, சாப்பிடம்மா. நல்ல ருசியாக வந்திருக்கிறது. உன் அம்மாவின் பாகம்தான் தெரியுமே. உண்டகை எப்படி மணக்கிறது பார்!" என்று கையை நீட்டினார் தந்தை.

"டிபன் கிடக்கிறது அப்பா. நான் எவ்வளவு பெரிய விஷயம் பேசுகிறேன். நீங்கள் காது கொடுத்துக் கேட்க மாட்டேன் என்கிறீர்களே?"

"பார்க்கலாமடி. வெறும் வயிற்றோடு நின்றால் கடுகும் மலையாகத்தான் தெரியும். முதலில் சாப்பிடு, வா. பிறகு எல்லாம் ஆற அமரப் பேசலாம். இதெல்லாம் நினைத்த மாத்திரத்தில் தாம்தூம் என்று முடிவு பண்ணுகிற காரியமா? நிதானமாகப் பார்க்கலாம். உனக்கு ஒரு கெடுதல் நாங்கள் செய்வோமா? இதுவரை இந்த அம்மா அப்படிச் செய்திருக்கிறேனா? வாடாம்மா" என்று ஸ்ரீமதி அழைத்த போது, சுமித்ராவால் தட்ட முடியவில்லை. வேண்டா வெறுப்பாகத் தாயுடன் சென்றாள்.

பேருக்கு ஏதோ கொறித்துவிட்டு வந்து, மீண்டும் தொடங்கினாள்.

"பொறு, பொறு. சின்னதுகள் தூங்கட்டும்" என்று தள்ளிப் போட்டாள் தாயார்.

சின்னதுகள் என்றால் ஸ்ரீமதியின் புத்திர பாக்கியங்கள். சுசீலா, சுனீதா, சம்பத் என மூவர். அந்தச் சின்னதுகள் சுலபத்தில் தூங்குவதாக இல்லை. "அக்கா! என் சூட் தைத்து வந்துவிட்டது. பார்க்கிறாயா?" என்று எடுத்து வந்து காட்டினான், சின்னவனான சம்பத். உடனேயே சுசியும், சுனீயும் தங்கள் பட்டுப் பாவாடைகளை எடுத்து வந்து ரசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

மவுனமாக அவர்களைப் பார்த்துவிட்டு, மூத்த மகளையும் பார்த்தாள் தாய்.

சுமித்ரா திக்குமுக்காடிப் போனாள்.

ஒரு வழியாகத் தம்பி தங்கைகள் உறங்கியானதும், மீண்டும் தொடங்கினாள் சுமித்ரா. "அப்பா, இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிடுங்கள்."

"உளறாதே" என்று சுள்ளென்று பாய்ந்தார் தந்தை.

"உளறவில்லை அப்பா. நான் மெய்யாகவேதான் சொல்லுகிறேன். அவர்... அவர்... அவர்தான் அப்பா, அந்தப் பிரபு நல்லவர் இல்லையாம்!" என்றாள் சுமி விடாமல்.

"உலகத்தில் நூற்றுக்கு நூறாக நல்லவராக, யார் இருக்கிறார்கள்? வெள்ளையை மஞ்சள் என்றால் பார்க்கிறவன் கண்ணில்தான் காமாலை இருக்க வேண்டும். மாப்பிள்ளையிடம் கொள்ளை கொள்ளையாகப் பணம் இருக்கிறது. அதைப் பார்த்துப் பொறாமையால் யாராவது ஏதாவது இட்டுக் கட்டுவார்கள். அதைக் கேட்டுக் கொண்டு நீயும் மாப்பிள்ளையை...?"

"திரும்பத் திரும்ப மாப்பிள்ளை என்னாதீர்கள் அப்பா. எனக்குக் கோபமாக வருகிறது. உலகத்தில் எத்தனை கெட்டவர் வேண்டுமானாலும் இருக்கட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் எனக்கு வருகிறவர் - என்னை மணப்பவர் நல்லவராக, ஒழுக்கம் உள்ளவராகத்தான் இருக்க வேண்டும். இவர் அப்படி இல்லை. அதனால் நான் இவரை மணக்கவும் போவதில்லை" என்றாள் சுமித்ரா அழுத்தம் திருத்தமாக.

"ரொம்பப் பெரிய கல்லாகத் தூக்கி மண்டையில் போடுகிறாயேடி. போடுவதைக் கொஞ்சம் மெல்லத்தான் போடேன். சற்று நிதானமாகவே செத்துப் போகிறோம்" என்றாள் தாய் கோபமாக.

"என்னம்மா இப்படிச் சொல்கிறீர்கள்?" என்னுமுன் மகளுக்குத் கண்ணில் நீர் ததும்பியது.

"பின்னே என்னவாம்? என்ன நடந்தது, ஏது நடந்தது என்று ஆற அமரச் சொல்வாயா? சும்மா எண்ணெயில் விழுந்த அப்பம் மாதிரிக் குதிக்கிறாயே. எங்களுக்கும் தலைகால் தெரியவேண்டாமா? இவ்வளவு தூரம் ஆகி விட்டது. இனித் திருமணத்தை நிறுத்துவது என்றால் வேண்டாத சட்டையைக்

கழற்றி எறிகிற மாதிரி சுலபம் என்றா நினைத்தாய்? தணலில் கொட்டிய உப்பு போலப் பொரியாமல் நிதானமாகப் பேசு" என்று அதட்டினாள் ஸ்ரீமதி.

அவள் சொல்வதும் மெய்தான். திடுமென வந்து கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டு மாதிரிக் 'கல்யாணம் வேண்டாம்! கல்யாணம் வேண்டாம்!' என்றால், கட்டிக் காத்து இவ்வளவு செய்தவர்களுக்கு எப்படி இருக்கும்?

"அந்தப் பிரபு ரொம்பக் கெட்டவராம் அம்மா!" என்றாள் சுமி, சற்று நிதானமாக.

"சும்மா கெட்டவர் கெட்டவர் என்றால் என்ன அர்த்தம்? எப்படிக் கெட்டவர்? கொலை செய்தாரா? கொள்ளை அடித்தாரா? ரேசுக்குப் போகிறாரா? அல்லது சீட்டாடுகிறாரா?" என்று குறுக்கிட்டார் சிவராமன்.

முக்கியமானதை விட்டு விட்டார் என்று நினைத்துக் கொண்டாள் சுமித்ரா. "அதெல்லாம் இல்லையப்பா. ஆனால் அவர்... அவருக்கு... இதை எல்லாம் உங்களிடம் நான் எப்படிச் சொல்லட்டும் அப்பா! அவருக்கு நிறையப் பெண்களின் சினேகிதம் உண்டாம்!" என்று முகம் சிவக்கச் சொல்லி முடித்தாள் சுமித்ரா.

"இந்தக் காலத்தில் யாருக்கு இல்லை? பாய் பிரண்டு, கேர்ள் பிரண்டு என்று எல்லாருமே சேர்ந்து தானே கூத்தடிக்கிறார்கள்," என்று நொடித்தாள் ஸ்ரீமதி.

"எல்லாருமே என்றால் நான் எந்த பாய்பிரண்டோடு சுற்றினேனாம்?" என்று ரோஷத்துடன் கேட்டாள் சுமித்ரா.

"ஏன்? அந்த நடராஜ் எப்படியாம்? வீடுவரை வந்தானே."

"என்னம்மா நீங்கள்? நடராஜும் இதுவும் ஒன்றாகுமா? நடராஜின் விரல் கூட என் மேல் பட்டிருக்குமா? மலை உச்சியையும் சேற்று மடுவையும் ஒரே லெவல் என்கிறீர்களே; இவர் விஷயம் அப்படி அல்ல அம்மா."

"பின்னே எப்படியாம்? அதைத்தான் சொல்லிவிடேன்."

"அம்மா, இவர் பல பெண்களோடு தப்பு சிநேகிதம் வைத்திருக்கிறாராம் அம்மா!" என்று சங்கடத்துடன் வெளியிட்டாள் சுமித்ரா.

"எந்தக் கழுதை சொன்னது?"

"கழுதையெல்லாம் சொல்லவில்லை. நம் மீனா இல்லை... அவள்தான் சொன்னாள். அவள் பொய் சொல்ல மாட்டாள்" என்றாள் சுமித்ரா உறுதியாக.

"அவள் பெரிய அரிச்சந்திர அவதாரமோ? மாப்பிள்ளைக்கு அவளைக் கட்டி வைக்க முயன்றிருப்பார்கள். முடியவில்லை என்றதும் இப்படிக் கதை கட்டி விட்டிருக்கிறார்கள்."

"கதை என்று சொல்லுவதற்கு இல்லை அம்மா. இவரை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது என்று நான் கூட உங்களிடம் சொன்னேனில்லையா? நானும் மீனாவும் சினிமா பார்க்கப் போனபோது, இவரும் இன்னொரு பெண்ணுடைய உடை...! அப்பப்பா, அதில்தான் நாங்கள் இவர்களைக் கவனித்ததே. பிறகு மறந்து போனேன். இப்போது மீனா சொல்லவும் நினைவு வந்துவிட்டது."

"சினிமாவுக்குச் சேர்ந்து போவதால் மட்டும் ஒருவரைத் தப்பாக எண்ணிவிட முடியுமா?" என்று வாதம் செய்தாள், சிறிய தாயார்.

சுமித்ரா திகைப்புடன் தாயைப் பார்த்தாள். அப்போதுதான் விஷயம் மூளையில் உறைத்தது. இவள் அந்தப் பிரபுவுக்கே பரிகிறாளே. "அம்மா. நீங்கள் ஏன் அந்த ஆளுக்காகவே பரிந்து பேசுகிறீர்கள்?" என்று கேட்டு விட்டாள்.

சற்று திணறிவிட்டு, "யாராவது ஒருத்தர் பரிய வேண்டும் அல்லவா? நீதான் ஒரேயடியாகக் காய்கிறாயே," என்று குறை கூறினாள் ஸ்ரீமதி.

"காரணம் இல்லாமல் காயவில்லையே அம்மா. நடத்தை கெட்ட ஒருவரை அது தெரிந்த பிறகும் மணப்பார்களா? முடியாது என்று க்ளீனாகச் சொல்லி விடுங்கள்" என்று முடித்தாள் சுமித்ரா. அவளைப் பொறுத்தவரையில் விஷயம் முடிந்து விட்டாற் போலத்தான்.

எனவே முகவாய் கடையைத் தடவிக்கொண்டு, தாயை நோக்கி விட்டுத் தந்தை தொண்டையைக் கனைப்பதைக் கண்டதும் சற்றுத் திகைத்தாள்.

"சுமித்ரா இதெல்லாம் நீ நினைக்கிற மாதிரி சுலபம் இல்லை, நாலையும் யோசிக்க வேண்டும்..." என்று இழுத்த போது, ஒரே வியப்பாகிவிட்டது அவளுக்கு.

"இதில் யோசிப்பதற்கு என்னப்பா இருக்கிறது? அந்த ஆள்..."

"பெரியவர்கள் பேசும்போது குறுக்கே பேசுவது அநாகரிகம். அந்த அநாகரிகத்தை 'நாங்கள்' உனக்குக் கற்றுத் தரவில்லை என்று நினைக்கிறேன்," எனக் குரலை உயர்த்திக் கண்டித்தார் சிவராமன்.

சுமித்ரா உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள்.

விட்ட இடத்தில் சிவராமன் தொடர்ந்தார்: "நாலு பேர் மத்தியில் 'அந்தப் பிரபு என் மாப்பிள்ளை' என்று ஜம்பம் பேசியாயிற்று; அழைப்பிதழ் வரை அச்சிட்டு ஆயிற்று."

"சின்னதுகளும் ஆசை ஆசையாகக் காத்திருக்கிறார்கள்" என்று ஒத்தூதினாள் அவர் மனைவி.

இறுகிய முகத்துடன் தரையையே பார்த்தபடி நின்றாள் மகள்.

"இது மட்டும் தடை என்றாள் விலக்கி விடலாம் சுமி. நம் கடனை அடைத்திருக்கிறார். ஊரில் நம் நிலத்தை - ஒத்தியில் மூழ்கவிருந்த நிலத்தை - அவரது பணம்தான் நமக்கு மீட்டுத் தந்திருக்கிறது..."

"அதே கடனை மீண்டும் வாங்கி அவரிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள் அப்பா. அதோடு நானும் வேலை பார்த்து சம்பாதிப்பேன். நம் இருவர் சம்பளமும் போதும் அப்பா" என்றாள் சுமித்ரா அவசரமாக. அவளுக்கு உள்ளூர அச்சம் பிறந்துவிட்டது. திருமணத்தை நிறுத்த இயலாது என்பது போலப் பேசுகிறார்களே!

"அது சுலபம் இல்லை" என்றார் அவர் மீண்டும். "கடன் கிடைப்பதும் எளிதில்லை. எனக்கு மீண்டும் வேலை கிடைப்பதும் சுலபம் இல்லை. சுமித்ரா, அதோடு இவ்வளவு தூரம் ஆனபின் நாம் வக்கரிப்பது முறையில்லை - சரியுமில்லை."

"அதற்காக...?" வியப்பும் வேதனையுமாக சுமித்ரா வினவினாள்.

"இதே விஷயம் திருமணம் நடந்த பிறகு நமக்குத் தெரிய வந்திருந்தால் என்ன செய்வோம்? விதியே என்று பொறுத்திருக்க மாட்டாயா நீ? அப்படியே எண்ணிக் கொண்டுவிட வேண்டியதுதான்" என்று எங்கோ பார்த்துக் கொண்டு முடித்தார் சிவராமன்.

தன் காதுகளையே நம்ப முடியாமல் தந்தையை வெறித்துப் பார்த்தாள் சுமித்ரா.

சிவராமன் எந்தக் குழந்தைக்கும் செல்லம் கொடுத்தது இல்லைதான். ஆனால் பிள்ளைகள் மனம் நோக நடந்ததும் இல்லை. அவர் இன்று இப்படிப் பேசுகிறாரே.

தாயிடம் திரும்பினாள். "அம்மா, பாருங்கள் அம்மா, இந்த அப்பா சொல்வதை!" என்று முறையிட்டாள்.

"பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? அவர் சொல்வது எல்லாம் சரிதானே. பிள்ளைகள் எவ்வளவு ஆசையாகப் பட்டுப் பாவாடைகளை எடுத்து வந்தன. எல்லாவற்றையும் கெடுக்கச் சொல்கிறாயே" என்று மகளையே குறை கூறினாள் தாய்.

சுமித்ராவுக்குப் பட்டென்று கோபம் வந்தது. "அப்படியானால் உங்கள் வசதிக்காக என்னை விற்கிறீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டு விட்டாள்.

"வாயை மூடடி கழுதை!" என்றாள் ஸ்ரீமதி சினத்துடன். "அய்யோ பாவம், குழந்தை சொல்வதையும் கேட்போமே என்றால் கொழுப்பு இவ்வளவா ஏறுகிறது? யாரைப் பார்த்து என்ன வார்த்தை கேட்டாய்?" என்று அதட்டினாள்.

சுமித்ரா கப்பென்று அடங்கிப் போனாள். கேட்கக் கூடாத வார்த்தையை கேட்டுவிட்டது தவறுதானே. குற்ற உணர்வுடன் தலை குனிந்தாள்.

அவளது மவுனத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிவராமன் இதமாகக் கூறினார்: "இதோ பாரம்மா, பணக்காரப் பையன்கள் என்றால் கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பார்கள். எல்லாம் ஒரு கால்கட்டு விழுந்தால் சரியாகிவிடும்..."

"எனக்குப் பிடிக்கவே இல்லையே அப்பா" என்றாள் கண்ணில் நீருடன் சுமி. "ஒரே வெறுப்பாக இருக்கிறதே."

சிவராமன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்துவிட்டார். "ராமாயணத்தில் சுமித்திரை பற்றிப் படித்திருக்கிறாய் அல்லவா? அவள் ஞானி. அந்தப் பெயரை உனக்கும் வைத்தேன். அதற்குத் தகுமாறு அந்த அறிவுடன் நீ நடந்து கொள்ள வேண்டும். இந்தா ஸ்ரீமதி, அவளைத் தனியே விட்டுவிட்டு வா" என்று எழுந்து சென்றுவிட்டார்.

விழிகளில் இறங்கிய வெள்ளத்துடன் சுமித்ரா தனியே நின்றாள்.

# 2

இரவில் வெகுநேரம் சுமித்ரா அழுதுகொண்டே இருந்தாள். சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, "தூங்கம்மா" என்றாள் ஸ்ரீமதி.

இரவில் ஸ்ரீமதியின் வலப் பக்கம் சுமித்திரையின் உடைமை.

அடுத்தடுத்துப் பிறந்த அவளது சொந்தக் குழந்தைகள் தான் விலகிச் சென்றனவே தவிர, சுமியின் உரிமைக்குப் பங்கம் நேர்ந்ததில்லை. இன்றும் அதே வழக்கமாகப் படுத்தவள் அழுது கொண்டிருக்கவே, தாய் மனம் தாளாமல், சமாதானம் செய்ய முன் வந்து, "அசடு! இன்னமுமா அழுவது! தூங்கு தூங்கு" என்று மகள் முதுகில் தட்டிக் கொடுத்தாள் ஸ்ரீமதி.

"அம்மா" என்று சலுகையோடு அதிகமாக அழுதாள் புத்திரி.

"உஸ்... இப்படி அழுதால் உடம்பு எதற்காகும்? பேசாமல் தூங்கு," என்று சமாதானமாகப் பேசினாள் ஸ்ரீமதி.

"உடம்பைத்தானே பார்க்கிறீர்கள். என் மனத்தை மதிக்க வில்லையே அம்மா" என்று குமுறினாள் அவள்.

"அதையே தொடங்காதே சுமி."

சுமி விடவில்லை. "அம்மா, என் குணம் உங்களுக்கு தெரியுமில்லையா? எனக்கு ஒழுக்கம்தான் பெரிது. அந்த ஆள் எத்தனையோ பெண்களிடம் பழகியவராம். அம்மா, அப்பாவிடம் என்னால் இதை வாய்விட்டுச் சொல்ல முடிய வில்லை. ஆனால் நீங்கள் புரிந்து கொள்வீர்கள் இல்லையா?

அவர் எத்தனையோ பெண்களைத் தொட்ட கையால் என்னையும் தொடலாமா அம்மா? எனக்கு நினைக்கவே மனம் கூசுகிறதே" என்று முகம் சிவப்பும் வெளுப்புமாக மாற, ஒருவாறு சொல்லி முடித்தாள்.

ஸ்ரீமதி ஒருகணம் நிதானித்தாள். பிறகு, "மற்ற பெண்ணைத் தொட்ட கையா? சுமி, உன் அப்பா உன்னைப் பெற்றவளைத் தொட்டு நீ பிறந்த பிறகு, அதே கையால்தான் என்னையும் தொட்டார். தெரியுமா? எனக்கு ஒன்றும் கூசவில்லை," என்றாள்.

"அதுவும் இதுவும் ஒன்றா அம்மா?" என்று கோபமும் அழுகையுமாகக் கேவினாள் சுமித்ரா.

"ஒன்றாகவே பாவித்துக்கொள். இதோ பாரம்மா, ஒன்றை மட்டும் மனதில் புரிந்து கொள். இந்தக் கல்யாண விஷயத்தில் திரும்பிச் செல்ல முடியாத தூரத்துக்கு வந்து விட்டோம். எப்படியும் இது நடந்து தான் தீரும். அதனால் கண்டபடி உளறாமல், தொண தொணக்காமல் பேசாமலிரு," என்று கண்டிப்பாகப் பேசிவிட்டு மறுபுறமாகத் திரும்பிப் படுத்து விட்டாள் ஸ்ரீமதி.

அன்னை இப்படிச் சொல்லுவாள் என்று சுமித்ரா எதிர்பார்க்கவில்லை. இது பதில் கூறமுடியாத பாயின்ட். இதைச் சொன்னால் தாய் மசிந்து விடுவாள் என்று அவள் நினைத்தாள். இப்படிப் பதில் கிடைத்ததும், விக்கித்துப் போனாள்.

இனி ஒரே ஒரு வழி பாக்கியிருந்தது.

அந்த வழி பிரபுவிடம் நேராக முயல்வதுதான். அவனிடம் நேரில் சென்று பேச மனமில்லை. நேரில் கண்டால், எப்படி எப்படி நடந்து கொள்ளுவானோ? அதோடு அவன் எப்போது எங்கே இருப்பான் என்பதும் தெரியவில்லை. எங்கேயோ தொழிற்சாலைகளாம். வேறு எங்கேயோ நகரத்தை விட்டுப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் வீடாம். எங்கென்று தனியே செல்வது? அதைவிட எளிதாக ஒரு கடிதம் எழுதிப் போட்டால்...?

நாலுவரிக் கடிதம். அவனுக்கு ஆத்திரம் வந்துவிடக் கூடாது என்று முதலிலேயே மன்னிப்பை வேண்டிவிட்டாள். "தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன் இந்தத் திருமணம் பிடிக்கவில்லை. என் சொல்லை மதிப்பவர் இங்கு இல்லை. தயவுசெய்து நீங்களாகவே செய்வது போலத் திருமணத்தை நிறுத்திவிடுங்கள் நன்றி!" இவ்வளவுதான்.

மானமுள்ள ஒருவருக்கு இதற்கு மேல் என்ன தேவை? உன்னைப் பிடிக்கவில்லை என்று வெளிப்படையாக ஒருத்தி சொன்ன பிறகு எவனாவது அவளைப் பண்ணிக் கொள்வானா? மாட்டவே மாட்டான் என்று வெகு நிச்சயமாக நினைத்திருந்தாள்.

தினமும் மாலையில் திரும்பி வரும் தந்தையின் முகத்தை ஆவலுடன் கூர்ந்து கவனித்தாள். ஆனால், அவள் எதிர்பார்த்த ஒரு மாறுதலையும் அவர் முகத்தில் காணோம். இவர் தன் போக்கில் திருமண அழைப்பிதழ்களை அனுப்புவதும், நேரில் சென்று அளிப்பதுமாக உற்சாகமாகச் சுழன்று கொண்டிருந்தார். தாயும் திருமண வேலைகளில் மூழ்கியிருந்தார்.

ஒரு சின்ன மாற்றத்தைக் கூடக் காணோம்.

கடிதம் கிணற்றில் போட்ட கல்லாக அசைவற்று அமுங்கிக் கிடந்தது.

அந்தச் சின்னக் கடிதத்தை அவன் ஒரு பொருட்டாக மதிக்கவில்லையோ? சற்றுப் பெரியதாக இன்னொரு கடிதம் எழுதினாள். அதற்கும் பலன் ஒன்றேதான்.

இதற்குள் திருமண நாள் மிகவும் நெருங்கி வந்து விடவே, பெற்றோரிடம் மீண்டும் கெஞ்சிப் பார்த்தாள்.

"ஒழுக்கம் கெட்டவரை எப்படியம்மா மனதார ஏற்பது?" என்று தாயிடம் மன்றாடினாள். "எல்லாம் காலப் போக்கில் சரியாகிவிடும்" என்று அங்கிருந்து மறுமொழி கிடைத்தது.

தந்தையிடம் வாயைத் திறந்தாலே, "சுமித்திரையாக நடந்துகொள்!" என்று இதோபதேசம் செய்தார். இருவரிடமும் மாறி மாறி முயன்று சுமி அலுத்துப் போனாள்.

அலுத்த மனதின் ஆத்திரம் முழுமையும் அந்தப் பிரபுவிடம் பாய்ந்தது. என்ன ஒரு திமிர் இருந்தால் இப்படி கமுக்கமாக இருப்பான்? மனிதனா இவன்? உன்னைப் பிடிக்கவில்லை என்று எழுதிய பெண்ணை மணக்கத் துணிவது என்றால் சரியான கல்லுளி மங்கனாக இருக்க வேண்டும். ஒருவேளை பல பெண்களுடன் பழகிப் பழகிப் பெண்களின் உணர்ச்சி பற்றிய வகையில் மரத்துப் போனானா?

மகளின் கண்ணீரும் கோபமும் சிவராமனுக்குச் சலித்தது. "இதே ஜபம் செய்யாதே, சுமித்ரா. இந்த நிலையில் திருமணத்தை நிறுத்துவதும், விஷம் குடித்து விட்டுக் கூண்டோடு கைலாசம் போவதும் ஒன்றுதான். உனக்குப் பிரியமானதைச் சொல்லு. செய்துவிடுவோம்" என்றார் சலிப்புடன்.

"என்னப்பா, ஏதோ சினிமாவில் வருவது போல மிரட்டுகிறீர்களே" என்றாள் சுமித்ரா, கோபத்துடன்.

"நீதான் கண்ட கண்ட சினிமாவிலும் பார்த்து விட்டு அப்பழுக்கில்லாத ஆண் மகனைத் தேடுகிறாய். எதிலும் நல்லதும் இருக்கும். கெட்டதும் இருக்கும். கெட்டதையே எண்ணி மறுகுவார்களா? மாப்பிள்ளையிடம் அழகு இருக்கிறது. பணம் இருக்கிறது. அந்தஸ்து இருக்கிறது..."

"எனக்கு அழகும், அந்தஸ்தும் வேண்டாம். குணம் நேராக இருந்தால் போதும்." என்று வெடித்தாள் சுமித்ரா.

"அதை நீ போய் நேராக்கிக்கொள். வீணே அடம் பிடித்து எனக்கு ஆத்திரம் மூட்டாதே." என்று அதட்டிவிட்டுப் போய்விட்டார் தந்தை.

"அப்பா சொன்னால் கேட்டுக்கொள். கண்ணம்மா கல்யாணப் பெண்ணாக லட்சணமாக இருப்பாயா? இப்படி அசடு

மாதிரி ஆடுவதும், முசுடு மாதிரிக் கத்துவதும் நன்றாகவா இருக்கிறது?" என்று சுமித்ராவின் முகத்தைத் துடைத்துவிட்டாள் ஸ்ரீமதி.

இவர்களிடம் பேசி பயனில்லை என்று சுமித்ரா கண்டாள்.

வீட்டை விட்டு ஓடி விடலாமா, தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து விடலாமா என்று மனம் போன போக்கில் யோசித்தாள். எல்லாமே கவைக்குதவாத, கால்பைசாப் பெறாத யோசனைகள் என்று தள்ளினாள். வீட்டை விட்டுப் போனால் தீராப்பழி நேரும். யாரோ செய்த- செய்கிற தப்புக்கு இவள் ஏன் அநியாயமாகச் சாகவேண்டும்? அதோடு தற்கொலை கோழைகளின் புகலிடம் என்பது அவளது கருத்து. என்ன செய்வது, என்ன செய்வது என்று சலித்தாள்.

மீண்டும் ஒரு சந்தேகம். கடிதங்கள் தொலையக் கூடுமோ?

ஒரு டெலிபோன் பூத்துக்குள் சென்று அந்தப் பிரபுவின் நம்பரைத் தேடி எடுத்து டயல் செய்தாள். யாரோ ஒரு பெண் எடுத்தாள். இவள் யார் என்று யோசித்தபடி, " பிரபுவிடம் பேசவேண்டும்" என்றாள்.

"யார்?" என்று குலம் கோத்திரம் விசாரித்தாள் அந்தப் பெண்.

"சுமித்ரா என்றால் தெரியும்" என்றாள் மொட்டையாக.

அவ்வளவுதான். அந்தப் பெண்ணின் தொனியே மாறி விட்டது. "இதோ லைன் கொடுக்கிறேன் மேடம்" என்று பயந்தாள்.

உடனேயே ஓர் அழுத்தமான குரல். "யெஸ். பிரபு ஸ்பீக்கிங்" என்றது.

சுமித்ரா சட்டெனத் திணறிப் போனாள். "நான் வந்து... சுமித்ரா பேசுகிறேன்."

"இந்த லைனில் எதுவும் வேண்டாம். நீ எங்கிருந்து பேசுகிறாய் என்று சொல். நான் டயல் செய்கிறேன்" என்றான் அவன்.

"பப்ளிக் பூத்திலிருந்து பேசுகிறேன்."

"ஓ... அப்படியானால் நீ தானே வைத்துவிட்டு மீண்டும் என் ப்ரைவேட் நம்பருக்கு டயல்பண்ணு. நம்பர் தெரியுமா?"

"இம்" என்று எதிரே விரிந்து கிடந்த டெலிபோன் டைரக்டரியைப் பார்த்தாள் சுமித்ரா. மண்டையில் ஓங்கி. ஒன்று போட்டுக் கொண்டாள். பர்சனல் நம்பருக்கு போன் பண்ண வேண்டும் என்று ஏன் தோன்றாது போயிற்று?

டெலிபோனை வைத்துவிட்டு, மீண்டும் டயல் செய்து விட்டு, ரூபாயைப் போட்டாள். உடனே ஒரு ரிங் போகுமுன் அவன் எடுத்து விட்டான். "யெஸ்...?"

"வந்து என் கடிதங்கள் கிடைக்கவில்லையா?" நேரடியாக விஷயத்துக்கு வந்து விட்டாள் சுமித்ரா.

"கிடைத்ததே."

"பி...பி...பின்னே?" என்று திக்கினாள் சுமித்ரா.

"தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். வேறு என்ன விஷயம்?"

"வேறு ஒன்றுமில்லை..."

"சரிதான்" என்று வைத்துவிட்டான் அவன்.

சுமித்ரா குழம்பிப் போனாள். நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்கிறான். என்ன நடவடிக்கை? ஒன்றும் தெரியவில்லையே. திருமணத்தை நிறுத்துவது தவிர வேறு என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? அது நிற்பதற்கான அறிகுறியே தெரியவில்லையே.

சிந்தித்துச் சிந்தித்து, சுமித்ரா சலித்து, ஆடி அடங்கும் பம்பரம் போல ஓய்ந்து போனாள். அவளுக்கா இது நேர்வது? ஒழுக்கம் ஒழுக்கம் என்று மனதை, நடையை, எடையைக் கட்டிக் காத்த அவளுக்கா இப்படி ஒரு கணவன்? இதற்கு அம்மாவும் அப்பாவும் ஒத்து ஊதுவதா?"

நம்ப இயலாத கனவு தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே போயிற்று. திருமணம் என்று ஓமப் புகையின் முன்னே அமர்ந்திருந்தபோது கூட அவனால் இதை நம்பமுடியவில்லை.

நடவடிக்கை எடுத்திருக்கிறேன்- என்றானே துளிகூடச் சலனமே இல்லாமல் துணிவாக உட்கார்ந்து கொஞ்சமும் பிசிறில்லாத குரலில் மந்திரங்களைச் சொல்லுகிறானே. என்ன? எப்படி?

மாலை மாற்றும் தருணத்தில் லேசாக அவன் முகத்தைப் பார்த்தான்.

இவளது பார்வைக்காகக் காத்திருந்தவன் போல, இடக் கண்ணை சுருக்கி விரித்தான் அவன்.

சுமிக்குத் தெரிந்துவிட்டது. திருமணத்தை நிறுத்தும் உத்தேசமே அவனுக்கு இல்லை.

குப்பென்று தீ போல் நெஞ்சில் ஆத்திரம் பொங்கியது. உடனேயே அது அடங்கி ஏமாந்து தோற்று விட்ட உணர்வில் கண்ணில் நீர் ததும்பியது. அதை மறைக்கத் தலை குனிந்தாள். புத்தம் புதிய மாங்கல்யம் கண்ணில் பட்டு ஒளிவீசிச் சிரித்தது.

தாரை வார்க்கையில் பிரபுவின் கரம் வெகு இறுக்கமாகச் சுமித்திரையின் மென் கரத்தைப் பற்றியது. எத்தனை பெண்களைத் தொட்ட கை! அவன் கை பட்ட இடம் நெருப்பாய்ச் சுட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்தாள்.

சிலை மாதிரி இறுகிய தோற்றத்துடன் அமர்ந்திருந்தாள் சுமித்ரா.

அங்கே இங்கே செல்லும் போது, ஜாடையாக மகளைப் பார்த்த ஸ்ரீமதிக்கு வயிற்றில் ஏதோ பிசைந்தது. மற்றவர்கள் அகன்ற சமயம் பார்த்து மகளிடம் வந்தாள் "சுமீம்மா, கண்ணு. எதையாவது நினைத்துக் கொண்டு அசட்டுப் பிசட்டென்று நடந்து கொண்டு விடாதேம்மா. மாப்பிள்ளை மனம் போல..." அவள் முடிக்கவில்லை.

மாப்பிள்ளை மனம் போலவா?

சுமித்ரா விழிகளைத் தூக்கித் தாயை உறுத்து விழித்தாள். பிறகு நிதானமாக எழுந்து அப்பால் சென்றாள். ஸ்ரீமதிக்கு உதறலெடுத்துவிட்டது.

இரவில் மகளைச் சோபன அறைக்குள் அனுப்புகையில், அவளுக்கு ஒரே உதைப்புதான். அந்தக் கதவைச் சாத்தித் தாழிட்ட பிறகும், குறுக்கும் நெடுக்குமாக அங்கேயே சுற்றினாள். 'பிடிவாதக்காரி ஆயிற்றே இந்தப் பெண்!'

அந்தப் பெண் தைரியமாகத் தலை நிமிர்ந்து தாலி கட்டியவனைத் தாங்கொணாத வெறுப்புடன் வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

கட்டிலில் உல்லாசமாகச் சாய்ந்து கொண்டிருந்த பிரபு, சுமித்ரா உள்ளே வரவும் இளநகையுடன் திரும்பினான்.

அவள் முகத்தைப் பார்த்ததும், அந்த நகை மெல்ல மறைந்தது. அவளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான் ஒற்றைப் புருவம் மேலெழும்பியது.

நிதானமாக எழுந்து கட்டிலின் அருகிலிருந்த மேசை மேலிருந்த தங்க சிகரெட் கேஸில் இருந்து ஒரு சிகரெட்டைத் தேர்ந்தெடுத்தான், சிறு ஒலியுடன் லைட்டர் எரிந்தது. பற்றவைத்த சிகரெட்டை வாயில் பொருத்தியபடி, "வெல்...?" என்றான்.

"நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?" என்று குமுறினாள் சுமித்ரா.

"எடுத்தேனே" என்றான் அவன் வெகு சாதாரணமாக.

"என்ன?"

"ஆமாம், சுமி..." எவ்வளவு இயல்பாக, சுலபமாகச் 'சுமி' என்கிறான் என்று சுமித்ரா கொதித்தாள்.

அவன் தொடர்ந்து சொன்னான். "மெய்யாகவே தான் சொல்லுகிறேன். உன் கடிதம் வந்ததுமே உன் தந்தையிடம் கேட்டேன்- நீ வேறு யாரையாவது காதலிக்கிறாயா என்று. அவர் இல்லை என்று உறுதியாகச் சொல்லவேதான், மேலே ஏற்பாடுகளை நடத்தச் சொன்னேன்" அவன் ஈஸியாகச் சொன்னான்.

சுமித்ராவுக்குத்தான் தன் செவிப் புலனின் மேலேயே சந்தேகம் வந்துவிட்டது. அவள் சரியாகத்தான் கேட்கிறாளா? என்ன திமிர்! "வேறு ஒருவரையும் காதலிக்க வில்லை என்றால் உங்களைப் பிடித்தாக வேண்டுமா?" என்று கேட்டு விட்டாள்.

"பிடிக்காமல் போகக் காரணம் இல்லையே ம்ம்..." மீண்டும் உதடுகளில் மலர்ந்துவிட்ட சிறுநகையுடன் அவள் அருகே வந்தான்.

"ஆனாலும் எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை!" என்றாள் சுமித்ரா தன்னை அடக்கிக் கொண்டு.

"அப்படியா? நிச்சயம் செய்தபோது என்ன செய்தாய்?"

"எனக்கு அப்போது உங்கள் குணம் தெரியாது" இவன் கேள்விகளை நிறுத்தித் தொலைக்க மாட்டானா?

"ஓகோ!" வெகு ரசனையுடன் நிதானமாகப் புகையை ஒருமுறை இழுத்துவிட்டான். கண்கள் மட்டும் மனைவியின் முகத்தைவிட்டு விலகவில்லை. "இப்போது புதிதாக என்ன கண்டுவிட்டாய்?" என்று அலட்சியமாக வினவினான்.

"உங்களால் ஊரைவிட்டுப் போன தாரிணி, வயிற்றில் பிள்ளையோடு உயிரைவிட்ட ரேணுகா, இன்னமும் உங்களையே சுற்றிவரும் லில்லி... சீ, இதற்குமேல் வேறு என்ன வேண்டும்?" என்றாள் சுமித்ரா கொதிப்புடன்.

"நிறைய விவகாரங்கள் சேகரித்திருக்கிறாயே."

"உண்மைதானே?" இல்லை என்று சொல்லிவிட மாட்டானா என்ற நப்பாசையுடன் - அவன் இல்லை என்று சொன்னாலும்,

அது பொய் என்று அறிந்தே இருந்த வேதனையுடன் அவள் கேட்டாள்.

ஆனால் அவள் நினைத்ததுபோல அவன் மறுக்கவில்லை. "ஆமாம்" - வெகு சாதாரணமாக ஒப்புக் கொண்டான்.

அவன் பதிலளித்த வகையில் அதிர்ச்சியுற்று, "என்ன" என்றாள் சுமித்ரா.

"ஆமாம் என்றேன். ஆனால் ஒன்று சுமி. யாரையுமே நான் மணப்பதாகச் சொல்லி அணைத்தது இல்லை. மணக்க மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறி, அதன் பிறகுதான் பழகினேன்."

"ஆகா! ஆகா! என்ன நேர்மை! என்ன நேர்மை!" என்றாள் சுமித்ரா பொறுக்க முடியாமல்.

"நீ ஒப்புக் கொண்டாலும், இல்லை என்றாலும், என்னிடம் நேர்மைக் குறைவு இல்லைதான். விளக்கு சுடும் என்று தெரிந்த பின்னும் வந்து விழுந்து செத்தால் அது விட்டில் பூச்சியின் தவறே தவிர, விளக்கினுடையது அல்ல!" என்றான் அவன்.

"மிக அருமையான விளக்கம். இதுபோலவே எல்லா ஆண்களும் சொன்னால்..."

"சொல்ல முடியாதே!" என்றான் அவன் அலட்சியமாக.

"ஏனோ?"

"இதற்கெல்லாம் பணம் வேண்டும்; அழகு வேண்டும்; மேலாக ஆண்மையும் வேண்டும்" என்றான் அவன் கர்வச் சிரிப்புடன்.

"சீ!" என்று முகம் செக்கச் சிவந்தாள் சுமித்ரா. "நானும் உங்களைப் போல நாலு ஆண்களுடன் பழகியிருந்தால்...?" என்று கொதிப்புடன் வினவினாள்.

"உன்னை மணந்திருக்க மாட்டேன்!" என்றான் அவன் வெகு சாதாரணமாக. பிறகு ரசனையுடன் அவளைப் பார்த்தான்.

"என் மனைவி புத்தம் புது மலராக இருக்க வேண்டும் உன்னைப் போல!"

"எனக்கும் அந்த ஆசை இருக்கும்..."

"இனி ஆசைப்பட்டுப் பயன் என்ன?" என்று சிரித்தான்.

ஆத்திரம் கொழுந்துவிட்டு எரிய, "அந்த ஆசை பொருளற்றுப் போகலாம். அதனால், இன்னொரு உறுதி கொண்டிருக்கிறேன்" என்றாள்.

அவன் புருவத்தைச் சுருக்கினான்.

"ஆமாம். என்றும் புது மலராகவே இருந்துவிட முடிவு செய்திருக்கிறேன்" என்று அறிவித்தாள் அவள்.

அவன் வாய்விட்டுச் சிரித்தான். "எந்த யுகத்தில் இருக்கிறாய் சுமி? சொந்த பந்தம் இல்லாதிருக்கும் போதே, ஆணும் பெண்ணும் இணைகிற இந்த நாளில், திருமணத்துக்குப் பின் திருநீலகண்டர் விரதமா? அப்படி எண்ணி நான் உன்னை மணக்கவில்லையே" என்று அவளை நெருங்கினான்.

வேகமாகப் பின்னே நகர முயன்ற மனைவியை எட்டி அணைத்துக் கொண்டு சிரித்தவாறு குனிந்து, "வெ...ல்...?" என்றான்.



# 3

சுமித்ராவுக்கு உடல் குலுங்கியது. உள்ளமும் கூடத்தான்.

அதுவரை துணையிருந்த தன்னம்பிக்கை பறந்தது.

பதற்றத்துடன் துள்ளித் திமிறித் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

என்ன செய்வது என்று புரியாமல், மிரட்சியுடன் அங்குமிங்கும் பார்த்தபோது, வெளியே தாயின் குரல் கேட்டது.

மின்னலெனப் பாய்ந்து கதவைத் திறக்க முயன்றாள். முடியவில்லை. கை குமிழைப் பிடிக்கவே இயலாமல், வியர்வையில் கை வழுக்கியது.

பதறும் நெஞ்சைக் கைகளால் அழுத்தியபடி, சாவித் துவாரத்தில் கண் பதித்துப் பார்த்தாள். ஸ்ரீமதியின் சேலை தெரிந்தது. உடனே வாயை அந்தத் துவாரத்தில் பதித்து அவசரமாக அழைத்தாள். "அம்மா... அம்மா... கதவைத் திறவுங்கள், சீக்கிரம் அம்மா" என்று பதறினாள். மீண்டும் சாவி ஓட்டைக்குக் கண்ணை மாற்றினாள். தாயின் சேலை வெகு அருகில் தெரிந்தது.

உதறலோடு உதறலாக அவன் நின்ற இடத்தைப் பார்க்கவும் தவறவில்லை.

நல்லவேளையாக அவன் நின்ற இடத்திலிருந்து நகரவில்லை. சற்று நிம்மதியோடு கதவை கவனித்தாள். வெளியிலிருந்து கதவுக் குமிழ் திருகப்படவில்லை.

ஏன் என்று கவனிக்கும்போது தாயின் குரல் கேட்டது. "அசடுபோல நடந்து கொள்ளாதே சுமி."

"ஐயோ அம்மா, என்னால் பொறுக்க முடியவில்லை அம்மா. தகிக்கிறது அம்மா, அம்மா... அம்..."

பட்டுச் சேலையின் சரசரப்பு விலகுவது கேட்டது. அச்சத்துடன் அவசரமாக மீண்டும் துவாரத்தில் கண்ணைப் பொருத்திப் பார்த்தாள்.

தாய்தான். அவளேதான். அங்கிருந்து விலகிச் சென்று கொண்டிருந்தாள். சுமித்திரையின் தவிப்பை அறிந்தும் அலட்சியம் செய்து போகிறாள்.

மீண்டும் உள்ளிருந்து கதவைத் திறக்க முயற்சி செய்யப் போனாள். ஆனால் செய்யாமல் அந்தக் கதவின் மேலேயே தொய்ந்து சாய்ந்தாள்.

தாயல்லவே, சித்திதானே என நிராசையுடன் நினைத்தாள்.

பரிச்சயமான ஓர் ஒலி கேட்டது. பதைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

சிகரெட் லைட்டர். அவன்தான். இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டிருந்தான்.

சிகரெட்டை வாயில் பொருத்திக்கொண்டு, வலக் கையை நீட்டி, அதே "வெல்?" என்ற வினாவை எழுப்பினான்.

சுமித்ரா தன்னைச் சமாளித்துக்கொண்டு, மெல்ல நிமிர்ந்தாள். பாறையாய்க் கனத்த பாதங்களைச் சிரமத்துடன் அடிபெயர்த்து வைத்து, அவனருகே வந்து பொம்மை போல நின்றாள்.

அவன் கரம் நீண்டுவந்து உரிமையுடன் அவளை அணைத்தபோது, கன்னித் தன்மையின் இயல்பான உடற்கூச்சம் தவிர மற்றபடி அவள் அவனை எதிர்க்கவில்லை. மறுக்கவும் இல்லை.

இரவில் எப்போதோ சுமித்ரா விழித்துக் கொண்டாள். வழக்கம்போலக் கண்ணைத் திறவாமலே தாயின் கைக்காகத் தேடுகையில், திடுமென்று தூக்கிவாரிப் போட்டது. அருகில்... அருகில்...

திகைப்புடன் எழுகையிலேயே எல்லாம் புரிந்து விட்டது. விம்மி வெடித்துக்கொண்டு அழுகை வந்தது. அருவருப்பு தாளாமல் பாத்ரூமுக்கு ஓடினாள். தோலையே உரித்து விடுவாள் போலப் பரபரவென்று தேய்த்துக் குளித்தாள். உள்ளம் பதறிக்கொண்டே இருந்தது.

உத்தமமான ஓர் ஒப்பற்ற ஆண் மகனுக்காகக் காத்து வந்த கன்னிமை கடைசியில் யானைக் காலிடை மிதிபட்ட தாமரை போலாகி விட்டதே.

அமைதியற்று சன்னல் அருகே சென்று நின்றாள். உள்ளத்தைப்போலவே, வெளியேயும் ஒரே கும்மிருட்டு அந்தகாரம். அமாவாசையோ? ஆமாம். அமாவாசையன்று நல்ல நாள்; அன்றே முகூர்த்தம் என்று பேசியது நினைவு வந்தது. பெரிய நல்ல நாள்; என்னை உயிரோடு பலியிட்ட நாள் என்று வேதனையுடன் நினைத்தாள்.

நினைக்க நினைக்க உடல் எல்லாம் எரிந்தது. எத்தனை பேரை அணைத்தவன்? கடைசியில் இவனிடமா...

"எவ்வளவு நேரம் நிற்பாய்? கால் வலிக்கவில்லை?" என்று பிரபுவின் குரல் ஒலிக்கவும், அதிர்ந்து போய்த் திரும்பிப் பார்த்தாள்.

அவன் விளக்கைப் போட்டுவிட்டு, உல்லாசமான நடையுடன், மந்தகாசமாக அவளருகே வந்தான்.

தன்னை நெருங்கும் காலடிகளை அச்சத்துடன் கவனித்தாள் அவள்.

"இந்த நேரத்திலா குளித்தாய்?" என்று ஒரு விரலால் சுமித்ராவின் கூந்தலை அளந்தான் பிரபு.

தவிப்புடன் விலகினாள் சுமித்ரா. உடனேயே ஏதோ நினைத்தவள்போல தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றாள்.

அவன் கவனியாதவன்போல, விரலை நீக்கிக் கொண்டான். "தூக்கம் வரவில்லையா சுமி?"

மெல்லிய தலை உருட்டல் மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

குனிந்து மணிக்கட்டைப் பார்த்தான் பிரபு. சிட்டிஸனின் பளபளப்பு நாலு ஐம்பது என்றது. "மணி ஐந்து கூட

ஆகவில்லையே சுமி. வா, சற்றுநேரம் தூங்கு" என்று அழைத்தான்.

அவள் மிரட்சியுடன் கட்டிலைப் பார்த்தாள். அவளது பார்வையையும் பாவத்தையும் கவனியாதவன் போலக் கவனித்தான் பிரபு.

ஓர் இளம் புன்னகையுடன், "ஈரத்தலையுடன் படுக்க வேண்டாம். சுமி வா. இந்த சோபாவில் சாய்ந்து உட்கார்" என்று சுவாதீனமாக அவளது கரம் பற்றி அழைத்துச் சென்றான்.

அவன் கையை உதறித் தள்ளிவிட்டு ஓடவேண்டும் போலப் பறந்த மனதை அடக்கிக்கொண்டு அமைதியோடு அவனைப் பின்தொடர்ந்தாள் சுமி.

சோபாவில் அவளை உட்கார வைத்துவிட்டு அவளது நீண்ட கூந்தலைச் சோபாவின் பின்னே விரித்து விட்டான் பிரபு.

அந்த நிலையைவிட்டு விரலை எடுக்க மனம் வராதவன் போல அந்தை அணைத்தான். "எவ்வளவு பட்டான கூந்தல் உனக்கு" என்று வியந்தாள்.

கீழுதட்டைப் பற்களால் அழுத்தியபடி தலை குனிந்து அமர்ந்திருந்தாள் சுமித்ரா.

'பொறு மனமே, அமைதியாயிரு. நீ ஆத்திரப் படுவானேன்? எவ்வளவு பணம் கொடுத்து வாங்கிய பொருள் நீ! தேர்ந்தெடுத்து நாலு பேர் நடுவில் சொந்தமாக்கிக் கொண்ட பொருளின் மேன்மைகளை ரசிக்கிறான். நீ ஏன் பதறுகிறாய்?' என்று துடிக்கும் நெஞ்சை அடக்கினாள்.

ஆனால், "ரியலி ஐ லவ் யூ டார்லிங்!" என்று அவள் முகத்தை நிமிர்த்தி, நெற்றியில் அவன் முத்தமிட்ட போது, அவளால் பொறுக்க முடியாமல் போயிற்று.

சட்டெனத் திமிறி எழுந்து. "இது ஆயிரமாவது ஆளாக இருக்குமா?" என்று வெடித்தாள்.

"எது?" என்றபடி, அவனும் முன்னே வந்தான்.

"இப்படிச் சொல்வதுதான், இந்த ஐ லவ் யூ. ஸ்டாப்" என்றாள் ஆத்திரத்துடன்.

"சேச்சே, அத்தனையிராது சுமி! ஒரு பத்து அல்லது பதினைந்தாக இருக்கலாம்" என்றான் அவன் நமட்டுச் சிரிப்போடு.

அவளுக்கு உடல் எரிந்தது. ஆயினும் "இதுவேனும் கடைசியாக இருக்கும் என்று நம்ப முடியுமா?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டான்.

சென்ற காலம் தொலைகிறது. இனியேனும் ஒழுக்கம் பேணி-

அவன் முகத்தில் சிந்தனையின் கோடுகள் தோன்றின. "நான் பொய் சொல்வது இல்லை சுமி. இப்போது நீ கேட்டாயே ஒரு கேள்வி, அந்த கேள்வி சரிதான். ஆனால் அதற்குரிய பதில்தான் எனக்கும் தெரியவில்லை. இதுவே கடைசியாக இருக்கும் என்று என்னால் உறுதி கூற முடியாது. ஆனால், நான் கண்ட அத்தனை பெண்களிலும் நான் மணக்க விரும்பியது உன்னைத்தான். உன்னை மட்டிலுமேதான் திருமணத்துக்கு முன் உன்னுடன் பழகிப் பார்க்கும் எண்ணமே எனக்கு வரவில்லை. உரிமை வந்தபின்தான் உன்னை நெருங்க வேண்டும் என்றிருந்தேன். இப்போது..." குறுநகையோடு சுமியின் வதனத்தைத் தொட்டு நிமிர்த்தினான் பிரபு.

கீழ்த்திசை வெளுத்தது. பொழுது விடிந்தது. 'உலகத்துக் கெல்லாம் மட்டும்' என்று நினைத்தபடி அறையை விட்டு வெளியே வந்தாள் சுமித்ரா.

பூ வடிவமாக அமைத்த 'ஜாலி' அமைப்பிலிருந்து விடிகாலை வெளிச்சம் பொலிவாகப் பரவியது. அதைப் பார்த்தபடி சற்று நின்றாள். 'இந்த விடிவு எனக்கு இனி ஏது? நான்தான் சேற்றில் விழுந்த மலராகி விட்டேனே!' என்று [illegible]

கலகலவென்ற சிரிப்புச் சத்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். உறவு முறையில் உடனொத்த பெண்கள்.

"என்னடி? இன்னமும் 'அந்த' அறையிலிருந்து வெளியே வர மனம் இல்லையா? தயக்கமான தயக்கம் காட்டுகிறாயே!" என்று கேலி செய்தாள் மாமன் மகள்.

எல்லாரும் சிரிக்க, சுமித்ராவும் வலுக்கட்டாயமாக வரவழைத்த புன்னகையோடு நடந்தாள்.

ஸ்ரீமதி மகளருகே வேகமாக வந்தாள். ஏதேதோ கேட்ட தாயின் பார்வையைச் சந்திக்கவும் மனம் இல்லாமல் ஒதுங்கினாள் சுமி. "சுமிம்மா, மாப்பிள்ளை..." என்று அவள் பேசுவது காதிலேயே விழாதவள் போல, "சம்பத்!" என்று தம்பியை அழைத்து அவனருகே சென்றாள் சுமித்ரா.

"ஏதடா?" என்று கேட்டபடி வாங்கிப் பார்த்தாள் தமக்கை. பளபளவென்ற பல நிறங்களில் அவை ஒளிர்ந்தன. வெள்ளி நிறமான ஒன்றில் தன் பிம்பத்தைப் பார்த்தாள் சுமி.

மொக்கையான மூக்கும், காதளவு ஓடிய வாயுமாக, ஏதோ சகிக்க முடியாதபடி முகம் தெரிந்தது. அருவருப்புடன் பார்வையை அகற்றினாள். 'நானும் இப்படித்தான் ஆகி விட்டேன். என்னிடமே எனக்கு அருவருப்புத் தாளவில்லையே' என்று வருத்தத்துடன் நினைத்தாள். கண்ணில் நீர் பெருகிற்று.

"என்னக்கா?" என்று பரிவுடன் வினவினான் தம்பி.

சமாளித்துக் கொண்டு, சிரிக்க முயன்றபடி, "ஒன்று மில்லையடா. நான்... நான்..." என்று தடுமாறினாள் அவள்.

"நாங்களெல்லாம் ஊருக்குப் போகிறோமே என்று அழுகிறாயா அக்கா? அதற்காக அழாதே. நான் எப்படியும் அடிக்கடி உன்னைப் பார்க்க வருகிறேன்" என்றான் தேறுதலாக.

'நீ தேற்றும் அளவிலாடா நான் இருக்கிறேன்?' என்று நினைத்தபடி, அழுது வடிந்த புன்னகை ஒன்றை வெளிக் கொணர்ந்தாள் சுமித்ரா.

"அவள் ஏண்டா அழப் போகிறாள்? லட்சாதிபதியின் மனைவி. உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறார் மாப்பிள்ளை. நினைத்தால் காரில் பறந்து வந்து விட மாட்டாளா உன்னைப் பார்க்க? அல்லது நாங்கள் தான் எவ்வளவு தூரம் போகிறோம்? இதோ இருக்கிற மதுரைக்குப் பக்கம்தானே. ஒரு கடிதம் போட்டால் நாங்களே வந்து விடுகிறோம். உன்னை விட எது பெரிது கண்ணம்மா?" என்று ஏதேதோ பேசியபடி அருகில் வந்தாள் ஸ்ரீமதி.

'சமாதானம் செய்கிறாளாக்கும்?' சுமித்ரா பதில் கூறாமல் எழுந்து சென்றாள். 'கை கால்களை வெட்டிப் போட்டுவிட்டுக் கண்ணாம்! மூக்காம்!'

சுற்றிச் சுற்றி அந்தத் திருமண மண்டபத்தில் எங்கே செல்வது? எங்கே போனாலும் அங்கே அவளுடைய சிற்றன்னை ஏதாவது ஒரு பேச்சுடன் வந்து நின்றாள்.

அவள் காதுபட யாரிடமோ, 'மாப்பிள்ளைக்கு என் பெண்ணிடம் பைத்தியம். தங்கமும் வைரமுமாக இழைத்திருக்கிறார்!" என்று பெருமையடித்தாள்.

வேசிப் பெண் மூலம் வந்த வரவைப்பற்றித் தாய்க் கிழவி பெருமை அடிப்பதுபோல, என்று தன்னையறியாமல் எண்ணிவிட்டு, அந்த நினைப்பிலேயே அதிர்ந்து போனாள் சுமித்ரா.

'சே, என்ன அநியாயமெல்லாம் எண்ணுகிறோம்' என்று நினைத்தபோது, அழுகை வந்தது. குளியலறைக்குள் சென்று ஒரு மூச்சு அழுதாள். கண்ணில் நன்றாக நீரை அடித்துக் கழுவிவிட்டு வெளியே வந்தாள். சித்தி பெண் பிடித்துக் கொண்டாள்.

“சுமியின் கண்கள் ஒரே சிவப்பாக இருப்பது ஏன்?” என்று ராகம் இழுத்தாள்.

“இரவெல்லாம் தூங்கவே விடவில்லையடி!” என்று நீட்டி முழக்கினாள் இன்னொருத்தி.

“இது தெரியுமா? கொஞ்ச நேரத்துக்குமுன் மாப்பிள்ளையிடம் ஏதாவது பேசிப் பார்க்கலாம் என்று அவர் அறைக்குள் போனேன். பார்த்தால் ‘இகமோ பரமோ யாமறியோம்’ என்று உறங்குகிறார் அய்யா. கஷ்டப்பட்டு எழுப்பி, ‘என்ன அத்தான், பட்டப் பகலில் இப்படித் தூங்குகிறீரே.’ என்று கேட்டால் ‘இரவு முழுவதும் உங்கள் தங்கை என்னைத் தூங்கவே விடவில்லை’ என்கிறார்!” என்று ‘உடான்ஸ்’ விட்டான் பெரியப்பா பிள்ளை.

கலகலத்த சிரிப்புக்கிடையே பேச்சு மேலே வளர்ந்து விரசம் வரையிலும் சென்றது.

ஆசையாக மணந்து வாழ்வை இன்பமாக ஏற்றவளுக்கு எப்படி இருந்திருக்குமோ? சுமித்ராவுக்கு நெஞ்சைக் குமட்டிக் கொண்டு வந்தது. சகிக்க முடியாமல் எழுந்து விலகிச் சென்றாள். அவள் பின்னே ஓவென்ற சிரிப்பு அலைமோதியது.

அந்த ஒலியிலும், “எங்கள் சுமி குட்டிக்கு வெட்கம் அதிகம்!” என்று ஸ்ரீமதியின் குரல் தனித்துக் கேட்டது.

வெளிப்பக்கம் சென்று பார்த்தாள் “என்னம்மா மாப்பிள்ளைக்கு ஏதாவது வேண்டுமா?” என்று கேட்டபடி அருகில் வந்தார் தந்தை. முகத்தில் ஒரே பெருமை.

‘இல்லை’ என்பது போல் தலையை அசைத்து, நகர முயன்றாள் சுமித்ரா.

பின்னோடு வழியை மறைத்து தாய் வந்தாள். சுமி தயங்கி நின்றாள்.

“இனி பிள்ளைகள் எல்லாம் சின்னதுதான். பேசாமல் ஊர்ப்பக்கம் சென்று விவசாயத்தில் முழுமூச்சாக இறங்கப்

போகிறேன். கண்டவனிடம் கைகட்டி வேலை செய்வது ஒரு பிழைப்பா?" என்று அருகில் நின்ற நண்பரிடம் பெருமை அடித்தார் சிவராமன்.

"இவர் சொல்லுவார். பெண்ணுக்குக் கல்யாணமாகி விட்டது. இனிதானே வளைகாப்பு, சீமந்தம் என்று வரிசையாக வரும். அதை விட்டுவிட்டு ஊரோடு ஒதுங்குவாராமே!" என்று நகைத்தாள் ஸ்ரீமதி.

அவளது பார்வை கேள்விக் குறியாகி, மகள் முகத்தில் பரபரப்புடன் பதிந்தது.

'இது என்ன சித்ரவதை' என்று உள்ளம் அலற, உதட்டைக் கடித்து, அதை அடக்கி, அன்னையைச் சுற்றிக் கொண்டு நடந்தாள் சுமித்ரா.

அடுத்த அறையில் உறவினர் கூட்டம்.

சற்றுத் தயங்கிவிட்டுப் படியேறிச் சென்று பிரபு இருந்த அறைக் கதவை மெல்லத் தட்டினாள்.

"உள்ளே வரலாம்" என்று அவன் குரல் - அழுத்தமான குரல் - ஆங்கிலத்தில் கூறியது.

உள்ளே சென்று கதவைச் சாத்தி விட்டு கதவின் அருகிலேயே தயக்கத்துடன் நின்றாள் அவள்.

இடப் புருவம் ஏறி இறங்க, பிரபுவின் பார்வையில் ஒரே வியப்பு.

"நான்... நான் கொஞ்ச நேரம் இங்கே இருக்கட்டுமா?"

பார்வையைக் கூர்மையாக்கி ஒரு கணம் மனைவியைப் பார்த்தான், பிரபு.

மெல்ல மலர்ந்த புன்னகையுடன், "வா, உட்கார்" என்று எதிரே இருந்த சோபாவைக் காட்டினான்.

லேசான பெருமூச்சுடன் சோபாவில் சாய்ந்தாள் சுமி.

"ஏதாவது புத்தகங்கள் படிக்கிறாயா?"

"உம்."

"உனக்கு என்ன மாதிரிக் கதைகள் பிடிக்கும்?" என்று கேட்டபடி, மேஜை மேல் கிடந்த சில புத்தகங்களைப் புரட்டினான் பிரபு.

பெரிய புத்தகம் ஒன்று ஓரமாகக் கிடந்தது. கையை நீட்டி அதை எடுத்தாள் சுமி.

"ஊஹூம். அது வேண்டாம், ஹெரால்ட் ராபின்ஸ் உன் டேஸ்டுக்குச் சரிப்படாது. இந்த ஜார்ஜெட் ஹேயர் புக் படி. நன்றாக இருக்கும்!" என்று ஒரு புத்தகத்தை நீட்டினான் அவன்.

மெடீவல் உடையுடன் இருவர் அட்டையில் நின்றனர். ஏனோ தானோவென்று புத்தகத்தை முதலில் புரட்டிய சுமித்ரா மெல்ல மெல்ல அதிலேயே ஆழ்ந்து போனாள். ஹேயரின் கிண்டலான நடையில் கதை சரளமாகச் சென்றது. படிக்கப் படிக்கத் தன்னை மறந்து கதையோடு ஒன்றினாள். இடையிடையே புன்னகைகூட மலர்ந்தது.

எதிரே படுத்துக் கொண்டு இருந்தவன், இடையிடையே தன்னை நிமிர்ந்து பார்ப்பதை அவள் கவனிக்கவில்லை.

சற்று நேரத்தில் தன் தோளில் ஓர் ஆண் கரம் தவழவும், திடுக்கிட்டு எழ முயன்றாள். ஆனால் முடியவில்லை.

மிருதுவான தோளை மெல்ல அழுத்தி, பட்டான கன்னத்தை வருடியபடி, "புலிக்குத் தப்ப வலையில் சிக்கினாற் போல இருக்கிறதா, சுமி?" என்று அவன் மென்மையாகக் கேட்டான்.



# 4

அடுப்பு நெருப்பு நலமா? அல்லது தகிக்கும் வாணலி சுகமா? வாணலியில் கிடந்து மெல்ல மெல்ல வதங்குவதை விட, அடுப்பில் விழுந்து ஒரேயடியாகக் கருகி விடுவது மேல் என்று சுமி நினைத்தாள்.

வெளியே நிற்க முடியாமல் உள்ளேயும் இருக்க முடியாமல் தவித்த போது, சுமி ஒரு முடிவுக்கு வந்தாள்.

தானாகவே கணவனிடம் சென்று, "உங்கள் வீட்டிற்கு விரைவிலேயே போகலாமா?" என்று கேட்டாள்.

"நம் வீட்டிற்கு என்று சொல்" என்ற திருத்தியவன் "இப்போதே போகலாமே!" என்று கிளம்பி விட்டான்.

"இருந்து நம் வீடு சென்று நாளை போகலாம் மாப்பிள்ளை!" என்று கெஞ்சிய மாமனாரிடம் அலட்சியமாக மறுத்து விட்டான்.

"நீங்கள் நாளை இரவா கிளம்புகிறீர்கள்? முடிந்தால் ஸ்டேஷனுக்கு வந்து பார்த்துக் கொள்ளுகிறோம்." என்று தன் வீட்டுக்கு யாரும் வர வேண்டாம் என்பதை குறிப்பாக உணர்த்தினான்.

சிவராமன் வாயடைத்துப் போனார். அவர் திகைப்புடன் நிற்பதைப் பார்த்து ஒருகணம் சுமித்ராவுக்குப் பரிதாபமாக இருந்தது.

மறுகணம், 'என் கதறலைக் கொஞ்சமேனும் மதித்தாரா? பணக்கார மாப்பிள்ளையிடம் நன்றாகப் படட்டும்' என்று கடுமையாக எண்ணிக் கொண்டாள்.

எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.

ஸ்ரீமதி கார் அருகே ஏக்கத்துடன் நின்றாள்.

"கண்ணம்மா!" என்று தடுமாறினாள்.

அப்போது சுமித்ரா அவளைக் கண்ணோடு நேராகப் பார்க்கவில்லை. தரையை நோக்கியபடி, "போய் வருகிறேன் சித்தி" என்று சுருக்கமாக சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

ஸ்ரீமதி நிலைகுலைந்து போனாள். "சித்தியா? சித்தியா! ஐயோ, பாருங்களேன். நான் சித்தியாமே?" என்று பதறினாள்.

"சித்திதான்" என்று தெளிவாகக் கூறிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டாள் சுமித்ரா. பிரபு காரைச் செலுத்தினான்.

சற்று தூரம் சென்றதும், "பாவம்" என்றான் அவன்.

சென்னையைக் கடந்து பத்து மைல் தாண்டி ஓர் இந்திரபுரியைப் பிரபு நிர்மாணித்து வைத்திருந்தான்.

அழகிய பச்சை வண்ணத்தில் உயரமான காம்பவுண்டுச் சுவர். கேட்டில் இருந்து பார்க்கும்போது வண்ண மலர்த் தோட்டத்தின் நடுவில் பொன் மாளிகை அமைந்ததோ எனும்படியாக இருந்தது. ஓரங்களில் வண்ணம் தீட்டிய செங்கல் பதித்த கார்ப் பாதை. அந்தப் பாதையின் இரு மருங்கிலும் பலவகையான பூச்செடிகள். பாதையின் வழியே சென்ற கார் ஒரு பெரிய போர்டிகோவில் நின்றது. போர்டிகோவைத் தாங்குகின்ற இரு பிரம்மாண்டமான தந்தங்களும் மெய்யோ என ஐயுறும் வகையில் வண்ணம் தீட்டப்பட்டிருந்தன. 'பொன் மாளிகை' என்ற பெயர் தங்க நிறத்தில் தகதகத்தது.

'பொன் கூண்டு' என்று இருக்க வேண்டுமா?

கார் நின்றதும் பச்சைப் பட்டையிட்ட வெண்ணிற யூனிஃபார்ம் அணிந்த ஒருவன் ஓடிவந்து, காரின் கதவைத் திறந்தான்.

வியப்புடன் சுற்றிலும் பார்த்தாள் சுமித்ரா. நீளமான பாலீஷ் செய்யப்பட்ட கருங்கல் படிகள். படி ஏறினால் பெரிய வராண்டா. எதிரேயும் இரு பக்கங்களிலும் கருந்தேக்கினால் சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய கதவுகள். சுவரிலும் அதே சித்திர வேலைப்பாட்டின் நடுவே ஸ்விட்ச் முனைகள் மட்டும் நீட்டிக் கொண்டிருந்தன.

வாயிலில் அந்த வேலைப்பாட்டின் நடுவில் தெரிந்த ஒரு பட்டனை அழுத்தினான் பிரபு.

பல வேலையாட்கள் அதே பச்சைப் பட்டையும் வெண்ணிற ஆடையுமாக ஓடிவந்து குழுமினர். புதிய எசமானிக்கு வணக்கம் செலுத்தினர்.

வயதான ஒரு பெண்மணி முன் வந்து ஆரத்தி சுற்றிக் காட்டினாள். மஞ்சள் நீரில் பொட்டிடும் போது, "இதென்ன ஆயா?" என்று முகம் சுளித்தான் பிரபு.

"சாஸ்திரம் சின்னய்யா" என்று சிரித்தாள் அவள். "இன்றைக்கு அம்மாவோடு மங்களமாக உள்ளே அடியெடுத்து வைத்திருக்கிறீர்கள். ஆலமரம் போலக் கப்பும் கிளையுமாக, வேரும் விழுதுமாக வம்சம் பெருக வேண்டும். அதைப் பார்த்து விட்டுத்தான் நான் கண்களை மூட வேண்டும்" என்றாள் ஆனந்தக் கண்ணீருடன்.

"அப்படியானால் நீ என்றைக்கும் சிரஞ்சீவிதான்." என்று கிண்டலாகச் சிரித்துவிட்டுச் சுமித்ராவிடம் திரும்பினான் பிரபு. "என்னைப் பெற்று இவளிடம் போட்டுவிட்டு என் அம்மா செத்துப் போனாள்" என்று கூறிவிட்டு, எல்லோரையும் அறிமுகம் செய்து வைத்தான்.

அதன் பின் அவளை, மாடிக்கு அழைத்துச் சென்றான்.

கொள்ளிடமும் காவேரியும் பிரிந்து ஸ்ரீரங்கத்தைச் சுற்றி சேர்வதுபோல, அந்த மாடி அகலமாகத் தொடங்கி, இரண்டாகப் பிரிந்து மீண்டும் மேலே சேர்ந்தது.

நடுவில் செங்குன்றம் போல ஓர் அமைப்பு. அதில் கண்ணனும் கோபியருமாக அழகிய சிலைகள். அந்த அழகில் மனதைப் பறிகொடுத்தாள் சுமித்ரா.

மாடி ஏறியதும், சுவரில் அங்கங்கே சிறு படங்கள் இயற்கையின் எழில் கொஞ்சும் காட்சிகள். ஒவ்வொரு படமும் எங்கள் உடமைக்காரன் நல்ல ரசிகன் என்று முரசறையாமல் பறை சாற்றின. சற்று வியப்புடனேயே கணவனைப் பார்த்த சுமித்ராவின் முகம் உடனே சுருங்கியது.

இந்த அழகு ரசனை அளவு மீறிச் சென்று அழகிய பெண்களையும் ரசிக்கத் தொடங்கிவிட்டிருக்கிறதே.

"என்ன நின்று விட்டாய்?" என்று வினவியபடி திரும்பி வந்தான் பிரபு. "என்ன யோசனை சுமி? முகம் அவ்வளவு தீவிரமாயிருக்கிறது.

"ஒன்றுமில்லை" என்று முன்னே நடந்தாள் சுமித்ரா.

"என்னைப் பற்றி நினைத்தாயா?" என்று விளையாட்டாகக் கேட்டான் பிரபு.

சுமித்ரா பேசாமல் நடந்தாள்.

சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தினான் அவன்: "சுமித்ரா, நான் கேட்டால் பதில் சொல்ல வேண்டும்." என்றான் சற்று அழுத்தமாக.

"ஒன்றுமில்லாததை என்னவென்று சொல்வது?" என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள் சுமித்ரா.

"ஓகோ!" அவள் கையை விட்டுவிட்டு, இளஞ்சிவப்பும் பொன்னிறமுமான வேலைப்பாடு செய்த கதவைத் திறந்தான்.

உள்ளே சென்று இரு கைகளையும் விரித்து லேசாகக் குனிந்து, "மகாராணியாரின் திருவுறைத் தலத்துக்கு எழுந்தருள வேண்டுகிறேன்." என்றான் புன்னகையோடு.

உள்ளே காலடி எடுத்து வைத்த சுமித்ரா பிரமித்துப் போனாள்.

லேசான இளஞ்சிவப்பு வண்ணச் சுவர். பொருத்தமாகச் செம்பொன்னிறச் சித்திரக் கார்ப்பெட் காலடியில் மெத்தென்று அழுத்தியது. அறையின் ஒருபுறமாகச் சுவரோடு சுவராக அமைத்த அலமாரிக் கதவுகள் நீலமும் பொன்னுமாகப் பளபளத்தன. வலப்புற ஓரமாகச் சின்ன டேபிள். அதன்மீது குத்து விளக்கின் அமைப்புடன் டேபிள் லாம்ப். இடக்கோடியில் ஒரு வெண்ணிறக் கதவு தெரிந்தது. பாத்ரூம் கதவு போலும் கதவை ஒட்டி இரு தங்க மீன்களின் தாங்கலில் ஆளுயரக் கண்ணாடி. "எப்படி இருக்கிறது?" என்று கர்வத்துடன் கேட்டான் அவன்.

"நன்றாக இருக்கிறது!" என்று திரும்பியவள் திகைத்தாள்.

'இந்த வசதிகளைப் பார்த்த பிறகு என் காலடியில் விழாமல் இருக்க உன்னால் எப்படி முடியும்?' என்ற பாவத்துடன் அவன் நிற்கக் கண்டாள்.

'இதுவா பெரிது?' என்று தோன்றியது. பார்வையைத் திருப்பிக் கொண்டு நகர்ந்தாள்.

இன்னொரு கதவு இருந்தது. அதைத் திறந்ததும், இன்னோர் உலகமும் விரிந்தது. அதிகமான அலங்காரம் இல்லாத ஆணின் அறை அது. அதற்குரிய கம்பீரத்துடன் நின்றது. அங்கும் ஒரு பாத்ரூம் , அதுபோக இரு கதவுகள் தெரிந்தன.

ஒன்றைக் காட்டி, "அது என் ஆபீஸ் அறை" என்றான் பிரபு. தொடர்ந்து, "என்ன பார்க்கிறாய்? நான்கூட வேலை செய்வேனா என்றா? செய்யாவிட்டால், இந்தச் செல்வம் எல்லாம் 'செல்வோம்' என்று சென்று விடும்" என்று சிரித்தான்.

மற்றொரு கதவைக் காட்டி, "அது நம் காம ராஜ்யம்!" என்றான் குறும்பான நகையுடன்.

புரியாமல் உள்ளே சென்ற சுமித்ரா கூசிக் குறுகிப் போனாள்.

அங்கங்கே சிலைகளும் சித்திரங்களும் பிறந்த மேனியாகக் காதல் புரிந்தன. இந்தச் சிற்பங்களை செய்தவனது கைகள் ஏன் கூசவில்லை?

அறையின் நடுவே கிடந்த இரட்டைக் கட்டிலில் ஒரு பிளே பாய் புத்தகம் திறந்து கிடந்து தன் தன்மையைக் காட்டியது.

எந்தப் பக்கமும் பார்க்க முடியாமல் திண்டாடிய சுமித்ரா வெளியேற முயன்றாள்.

அவன் வழிமறித்தான். "இந்த சிலைகளில் ஒன்று கூட உன் அழகில் பாதியில்லை!" என்று ரசனையுடன் பார்வையால் அவளை மேய்ந்தான்.

"ச்சீ! சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லை? குடும்பப் பெண்ணின் கால் படக் கூடிய இடமா இது?" என்று கையை உதறினாள் சுமித்ரா.

கையை விடாமல், அவளது முயற்சியை ரசித்துக் கொண்டு அவன் கூறினான். "குடும்பப் பெண்ணா? தாசி இருக்கும் அறை என்றுதான்..."

"என்ன?" என்று கொதிப்புடன் நிமிர்ந்தாள் அவள்.

"படுக்கை அறையில் மனைவி தாசியாக இருக்க வேண்டும் என்பார்களே."

"பதிலாக ஒரு தாசியையே அழைத்து வைத்துக் கொள்ளுங்கள்" என்று வெடித்தாள் சுமித்ரா.

"எனக்கு என் மனைவிதான் தாசியாக வேண்டும். கண்ணகி காரெக்டரைவிட எனக்கு மாதவிதான் பிடித்தம்."

அருவருப்புடன் அவனைப் பார்த்துவிட்டுக் கையை விடுவித்துக் கொண்டாள் சுமித்ரா.

வேசி, தாய்க் கிழவி என்று காலையில் நினைத்தது இப்போது நினைவு வந்தது. வேதனையில் துடித்துப் போனாள்.

மறுநாள் குடும்பத்தினரை வழியனுப்ப சுமித்ரா ஸ்டேஷனுக்குச் சென்றாள்.

அவளாகக் கேட்கவில்லை. தந்தை போன் செய்ததாகச் சொல்லிக் "கிளம்புகிறாயா?" என்று அவன் கேட்ட போது அவள் மறுக்கவும் இல்லை.

கூடை நிறைய ஆப்பிளை டிரைவர் ரயிலில் ஏற்றினான்.

அவன் இறங்கியதும், "நீ பேசிக் கொண்டிரு சுமி. இங்கே ஓர் ஆபீசர் ஃப்ரண்ட் இருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும்," என்று அகன்று சென்று விட்டான் பிரபு.

பணக்காரப் பிரபுவுக்கு இந்தச் சாதாரண மத்தியதரக் குடும்பத் தலைவருடன் பேசப் பிடிக்கவில்லையாக்கும் என்று இகழ்ச்சியாக நினைத்தாள் சுமித்ரா.

பிறகு தம்பி தங்கைகளுக்காக வாங்கி வந்த பொருட்களை அவர்களிடம் அளித்துவிட்டு, அவர்களோடு பேசிக் கொண்டிருந்தாள்.

தாயின் கண்களை அறவே தவிர்த்தாள்.

ஆனால் ஸ்ரீமதி விடவில்லை. "நீங்கள் கீழே இறங்குங்கள். நான் சுமியுடன் பேச வேண்டும்," என்று தன் குழந்தைகளை இறங்கச் சொன்னாள்.

"இதெல்லாம் என்ன?" என்று தானும் இறங்க முயன்ற சுமியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "என்ன சுமி, இப்படிச் சொல்லிவிட்டியேம்மா. சித்தி என்று அழைத்தாயே. நான் இன்னமும் உயிரோடு இருக்கிறேனே" என்று கலங்கிக் கண்ணீர் விட்டாள்.

இரண்டு தினங்களாக அழுகையில் வீங்கியிருந்த கண் இமைகளோடு அன்னையைக் கண்டதும், சுமிக்கும் கண்ணீர் வந்தது.

அடக்கிக் கொண்டு, "சித்திதான்!" என்றாள் மீண்டும்.

“பார் பார்... ஐயோடி அம்மா மீண்டும் சித்தி என்கிறாயே!” என்று கதறிவிட்டாள் ஸ்ரீமதி.

“ஆமாம் சித்திதான். பெற்றவளாக இருந்தால், என்னதான் பணக்காரன் என்றாலும், ஒழுக்கம் கெட்ட ஒரு பெண் பித்தனுக்கு மகளைக் கொடுக்கத் துணிவாளா? அதுவும் நான் அவ்வளவு தூரம் மன்றாடிய பிறகு?”

“நீ இவ்வளவு தீவிரமாக இருந்திருப்பாய் என்று நான் எண்ணவே இல்லையேம்மா!” என்று பரிதவித்தாள் ஸ்ரீமதி.

“அதுதான் சித்தி. தாயாக இருந்திருந்தால் நீ என் தவிப்பை உணர்ந்திருப்பாய் இல்லையா? உணரவில்லையே. பிறகு நீ எப்படி அம்மா ஆக முடியும்? ஆனாலும் ஒன்று சொல்கிறேன். சுசி, சுனீ இருவரிடமும் இந்த மாதிரி நடந்து விடாதே. இந்தக் கொடுமை அவர்களுக்கு நேர வேண்டாம்” என்றாள்.

நெஞ்சைத் தொட்டு, “இந்தப் புண்ணும் அதன் வேதனையும் அவர்கள் அனுபவிக்க வேண்டாம்” என்று தானும் சேர்ந்து பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள் மகள்.

“சரியாகிப் போகும் என்று நினைத்தேனே. என்ன அம்மா நீ இப்படி என்னை அடியோடு வெறுத்து விடுவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே கண்ணே!” என்று தாளமாட்டாமல் அரற்றினாள் ஸ்ரீமதி.

பரிதாபம் தோன்றியபோதும் சுமித்ராவினால் ஸ்ரீமதியை மன்னிக்க முடியவில்லை.

‘தகிக்கிறதே’ என்றபோதும் பொருட்படுத்தாமல் சென்றாளே.

பெரிய நீர் முத்துகள் உதிரச் சிற்றன்னையைப் பார்த்தாள். “காலம் என் புண்ணையும் ஆற்றக் கூடும் சித்தி. என் மனம் அமைதி அடையலாம். அப்படி ஒரு காலம் வரும்வரை நீ என் அன்னையல்ல; சித்திதான். அந்த நாள் வரும் வரையிலும் தயவு

செய்து விலகி இரு சித்தி. இங்கு யாரும் வந்து என் புண்ணைப் புதிதாக்க வேண்டாம். கடிதம் கூடத் தயவு பண்ணி எழுதாதே." என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

"டேய், சம்பத், சுனீ, சுசி எல்லாரும் ஏறுங்கள் நேரமாகிறது." என்று குரல் கொடுத்துவிட்டுத் தான் இறங்கிக் கொண்டாள்.

ரயில் கிளம்பும் நேரத்துக்குப் பிரபுவும் வந்து சேர்ந்தான்.

"போய் வருகிறேன்!" என்று சொல்லவும் மறந்து, செயலற்று வீற்றிருந்தாள் ஸ்ரீமதி.

"இன்றிரவு ஒரு விருந்துக்குப் போகிறோம்," என்றான் பிரபு. "லெமன் பிங்க் கலரில் வெள்ளி சிம்கி தைத்த சேலை உடுத்திக் கொள்" என்றான் பிரபு.

அலங்காரங்களை முடித்துக் கொண்டு, கடைசியாகத் திலகத்தைச் சீர்படுத்தும்போது, இடைக் கதவைத் திறந்து கொண்டு, பிரபு வந்தான். "ரெடியா?" என்று கேட்டுக் கொண்டு அவளை நெருங்கினான்.

ஆளுயரக் கண்ணாடியில் கணவன் மனைவி இருவரது பிம்பங்களும் நெருங்கித் தெரிந்தன. ஃபுல் சூட்டில் அவன் ஆண்மையின் இலக்கணமாகத் தெரிந்தான் என்றால், குழைந்து விழும் ஷிபானில் வெள்ளிக் கொடிகளுடன் சுமி மென் கொடியாக நின்றாள்.

அவளை விழுங்குவது போலப் பார்த்துவிட்டு "என்ன சுமி!" என்று அவளை இறுக அணைத்தான் பிரபு.

பொம்மை போல உணர்ச்சியற்று நின்றாள் சுமித்ரா.

இதழ்களில் அழுந்த முத்தமிட்ட பின், அவன் விலகியதும், மீண்டும் கண்ணாடி முன் திரும்பினாள். சற்று நலுங்கிய கூந்தலைச் சீர் செய்தாள். சேலையில் ஜரிகை மடங்கியிருந்தது. இழுத்துப் பார்த்தும் கசங்கல் நிமிரவில்லை, 'உச்'சென்று அலுத்தபடி அப்படியே விட்டுவிட்டாள்.

"ரியலி யூ ஆர் பியூட்டிஃபுல் டார்லிங்!" என்று தொண்டையைச் செருமிக் கொண்டான் பிரபு.

"அழகு இல்லாவிட்டால் எனக்கு இந்த வீட்டில் இடம் ஏது?" என்றாள் சுமித்ரா ஏளனமாக .

பளிச்சென்று தோன்றிய கோபத்துடன், "அதோடு என்னைவிட அழகான பெண்களைப் பார்த்ததே - சந்தித்ததே இல்லாதது போலப் பேசுகிறீர்களே!" என்று கேட்டுவிட்டு, அறையைவிட்டு வெளியேறிக் காருக்குச் சென்றாள்.

கையில் சிகரெட்டும் புன்முறுவலுமாகப் பிரபுவும் வெளியே வந்து, காரை எடுத்தான்.

அன்றைய பார்ட்டியில் ஓர் அழகிய யுவதியைச் சுமித்ரா சந்தித்தாள்.

குத்திக் கிழித்துவிட விரும்புகிறவளைப் போல அவளை சுமித்ரா உறுத்து விழித்தாள்.

"இந்த லில்லியின் பார்வையைப் பாரேன்." என்று யாரோ மெல்லக் கிசுகிசுப்பது சுமித்ராவுக்குக் கேட்டது.

லில்லி!

மனதில் சட்டென நினைவு வந்தது.

இன்னமும் பிரபுவைச் சுற்றும் லில்லி என்று மீனா சொன்ன - பிரபு மறுக்காத லில்லி - திருமணத்துக்கு முன்பாகப் பிரபுவின் கடைசிக் காதலி.

ஒருவேளை இப்போதும் அப்படித்தானோ?

சுமிக்கு நெஞ்சு படபடத்தது.



# 5

அந்தப் பெண் லில்லி சுமித்ராவின் எதிலே வந்து நின்று, இடுப்பில் கை வைத்து, அவளை ஏற இறங்க முறைத்துப் பார்த்தாள். கேசச் சுருள்களுடன் பிறை நெற்றியிலிருந்து, விற் புருவங்களோ, மீன் விழிகளோ நேரான நாசியோ, இயற்கையிலேயே சிவந்த மெல்லிதழ்களோ, கொடியுடலோ எதுவும் அவள் கண்களைத் தப்பவில்லை.

ஏன், சுமியின் சேலையில் இருந்த கசங்கலைக்கூட அவள் பார்வை விடவில்லை.

அதைச் சுட்டிக்காட்டி, ஒரு மாதிரிச் சிரித்தாள். "உங்கள் பிரபுவுக்குக் காதலில் பொறுமையே கிடையாது. பொறுமையற்ற காதலர். ஆனால் பர்ஃபக்ட் ஒன்..." என்றாள் விழிகளைச் செருகி.

தான் அனுபவித்தாள் என்பதை மறைமுகமாகக் கூறுகிறாளாக்கும்.

சுமித்ரா முகம் மாறாமல் பதிலளித்தாள். "நீங்கள் இன்னமும் சின்னப்பெண் மிஸ் லில்லி. திருமணமாகாத குழந்தைகள் இப்படி எல்லாம் தெரிந்த மாதிரிப் பேசுவது தப்பு தெரியுமா?" என்று புத்தி கூறுவது போலப் பதிலடி கொடுத்தாள்.

லில்லியின் முகம் செத்துவிட்டது.

யாரோ பக்கென்று அடக்க முடியாதபடி சிரித்தார்கள்.

'அடேயப்பா' என்பது போலப் பிரபு வெகு பிரமிப்புடன் மனைவியைப் பார்த்தான்.

கூடவே உள்ளடங்கிய சிரிப்பில் அவளது கண்கள் பிரகாசித்தன.

'பேரர்' ஒருவன் தட்டில் கிண்ணங்களுடன் வந்தான்.

கிண்ணத்தில் இருந்த சிவந்த திரவத்தை சுமி சந்தேகத்துடன் பார்த்தாள்.

ஒரு கிண்ணத்தை எடுத்த பிரபு சிரித்தான். "மதுவே தான். வேண்டாம் என்றால்... பேரர், ஆப்பிள் ஜூஸ் ஒரு கிண்ணம் கொண்டு வா" என்று பணித்தான்.

அவன் கொண்டு வரவும், "இதைப் பருகு" என்று எடுத்துக் கொடுத்தான்.

'மது வேறா!' என்ற உள் நினைப்பை சுமித்ரா வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"இதெல்லாம் இவள் எங்கே பழகியிருக்கப் போகிறாள்!" என்று இகழ்ச்சியாகச் சிரித்தாள் லில்லி.

சுமித்ரா இனிமையாகப் பதில் அளித்தாள். "இது மட்டுமல்ல மிஸ் லில்லி; இன்னமும் நிறைய விஷயங்கள் உங்களுக்குப் பழக்கமானவை..." சுமியின் பார்வை லில்லியின் பாதி திறந்த மார்பில் நிலைத்தது. "எனக்குப் பழக்கமில்லை... பழக்கப் படுத்திக் கொள்வதாக உத்தேசமில்லை" என்று திரும்பினாள்.

அதற்குப் பிறகு லில்லி சுமித்ரா இருந்த பக்கமே வரவில்லை. 'நல்லதாயிற்று' என்று மூச்சு விட்டாள் சுமித்ரா.

லில்லி மறைக்காமல் காட்டிய மதர்த்த அங்கங்கள் கண்ணில் பட்டபோதெல்லாம் அவளுக்குச் சுருக் சுருக்கென்று வலித்தது. பிரபுவின் காதல் - அதிலும் கட்டுப்பாடற்ற காதல் அவர்களுடையது. நினைக்கையிலேயே குத்தலெடுத்தது.

அன்றிரவு வீடு திரும்பியதும் நகைகளைக் கழற்றியவாறே, சுமித்ரா தன் அறைக்குள் சென்றாள்.

"பொறு சுமி" என்று பின்னோடு வந்த பிரபுவை அலட்சியம் செய்து நடந்தாள்.

அவனிடமிருந்து வந்த மதுவின் லேசான நெடியும், கண்களின் சிவப்பும், அவளுக்கு அருவருப்பை அளித்தன. அவள் இதுவரை பழகிய உலகில் மதுவும், மங்கையரின் பழக்கமும் அவள் முன் குறுக்கிட்டது இல்லை. அவனது 'சுமி' என்ற அதட்டலையும் கேளாதவள் போலக் காதணிகளை மேசை மேல் வைத்துவிட்டு மாற்றுச் சேலையை எடுத்துக் கொண்டு, குளியலறையை நோக்கி விரைந்தாள்.

ஆனால், உள்ளே புகுமுன் இரண்டே எட்டில் பிரபு அவளை மடக்கிவிட்டான். அவள் திமிறத் திமிற வெறி கொண்டவன் போல அவளை முரட்டுத்தனமாக அணைத்தான். சுமித்ரா திணறிப் போனாள்.

நினைப்பதற்குச் சங்கடமாக இருந்த போதிலும், லில்லி சொன்னது மெய்தான். தன் ஒழுக்கப் பைத்தியம் மட்டுமே இல்லையென்றால், சுமித்ரா மயங்கிவிட்டிருப்பாள். ஆனால் இன்று அந்த இதமான மென்மை பெருமளவு குறைந்து போயிருந்தது.

பொதுவாகச் சுமித்ரா இந்த வாழ்வுக்கு ஒரு மாதிரிப் பழகி விட்டிருந்தாள். எப்போது 'திருநீலகண்டர் விரதம் பயன்படாது' என்று அவன் சொன்னானோ, அப்போதே அவள் நிலைகுலைந்து போனாள். பிறகு தாயும் கை கொடுக்கவில்லை என்றானது ஒரேயடியாக ஓய்ந்து விட்டாள்.

அவன் எப்படியும் தன்னை அடைந்தே தீருவான் என்பது புரிந்தது. இதில் திமிறுவானேன்? துள்ளுவானேன்? நீ விலைக்கு வாங்கிய பொருள்தானே. எதற்காக வாங்கினாயோ அதை எடுத்துக்கொள். கார் வாங்கினால் ஓட்ட மாட்டாயா? குதிரை

வாங்கினால் சவாரி செய்ய மாட்டாயா? எந்த நோக்கத்துடன் என்னை வாங்கினாயோ அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள். அந்த ஒன்றைப் பொறுத்த வரையில் எனக்கு உயிருமில்லை; உணர்வுமில்லை என்றெல்லாம் எண்ணித்தான் அவனது அணைப்புக்கு அவள் தன்னை உட்படுத்தியது.

என்னதான் சொல்லிக் கொண்டாலும், உயிரும் உணர்வும் செத்துவிடுமா? அவை தந்த வேதனையில் கண்ணீரும் சிந்தினாள். ஆயினும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அவனது அணைப்பை ஏற்கவும் பழகிக் கொண்டிருந்தாள்.

ஆனால், இன்று அதுவும் இல்லாமல் தவித்தாள்.

பிரபு தூங்கிய பிறகும், சுமித்ரா நல்ல தூக்கம் கொள்ள முடியாமல் திண்டாடினாள்.

கண்ணை மூடினால் கனவு வந்தது. கனவில் லில்லி வந்து நின்றாள். தூக்கம் கெட்டுக் கெட்டு விழித்தாள்.

சுற்றிலும் உள்ள ஜோடி பதுமைகளுக்குப் பதிலாகப் பிரபுவும் லில்லியும் காட்சி தந்து மனதைப் புண்ணாக்கினர்.

கணவனது நெருக்கம் என்றுமில்லா வெறுப்பைத் தந்தது.

தன் தோளைத் தழுவியிருந்த கையைப் பார்த்தாள். எத்தனை பெண்களைத் தழுவிய கை என்று அருவருப்புடன் நினைத்தாள்.

குறைந்த பட்சம் அந்த லில்லியையாவது இப்படித் தழுவியிருப்பான். அவன் கை பட்டுக் கொண்டிருந்த இடமெல்லாம் நெருப்பெனச் சுட்டது. கடவுளே! இனி முடியாது.

அவளது தூக்கம் கலையாதவாறு மெல்ல அவன் கரத்தை விலக்கித் தலையணை மேல் வைத்தாள். அணு அணுவாக நகர்ந்து மெல்லத் தவழ்ந்து கட்டிலை விட்டிறங்கினாள்... இல்லையே.

ஒற்றைப் பாதம் மட்டுமே தரையில் பட்டிருக்க மறுபாதம் கட்டிலை விட்டு வரவில்லையே. அது பிரபுவின் கைப்பிடிக்குள் அல்லவா இருந்தது. பட்டான அந்தப் பாதத்தை மிருதுவாக வருடியபடி குறும்பு நகையுடன் பிரபு மனைவியைப் பார்த்தான்.

வெறுப்பும் சினமுமாக முகத்தைத் திருப்பிய சுமித்ரா, திகைப்புடன் மீண்டும் திரும்பி, அவன் முகத்தைப் பார்த்தாள்.

கீழே ஹாலில் இருந்த கண்ணனின் சிரிப்பும் சாயலும் இவனிடம் எப்படி வந்தன? சுமி மலைத்தாள்.

பிரபுவின் கௌரவமான உறவினரும் தம்பதியரை விருந்துக்கு அழைத்தனர்.

அவர்களில் பிரபு மதித்துச் சென்றது தன் பெரிய தாயாரின் வீட்டுக்கு. சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஒருவருடைய மனைவி. சாந்தமான தோற்றத்துடன் மிகவும் பிரியமாகப் பேசி இருவரையும் விருந்துக்கு அழைத்தார். ஸ்ரீமதியின் முந்தைய தோற்றத்தைச் சுமித்ராவின் நெஞ்சில் எழுப்பினார்.

எவ்வளவு அன்பான தாயாக இருந்தாள். கடைசியில்... கடைசியில்... கடவுளே! இந்த நினைவுகளைக் கொல்ல ஒரு மருந்தில்லையா?

அந்த சுரேஷ் வீட்டு விருந்துபோல இது இல்லை.

சுமியின் மனதுக்குப் பாந்தமான விருந்து, வெளிப்பகட்டோ ஆர்ப்பாட்டமோ இல்லாதபடி இதமாக இனிமையாக இருந்தது.

பிரபுவும் பட்டு வேஷ்டி, ஷர்ட்டுடன் பதவிசாக நடந்து கொண்டான். பெண்கள் இருந்த திசைக்கே வரவில்லை. வெளியே மற்ற ஆண்களோடு ஏதோ ‘ஷாப் டாக்ஸ்’ நடத்திக் கொண்டு இருந்தான். கலகலப்பாக அவனது குரலும் சிரிப்பும் மட்டும் அவ்வப்போது கேட்டது.

தன்னை ஒத்த மனோபாவத்தை உடையவர்களுடன் பேசுவது சுமித்ராவுக்கு நன்றாக இருந்தது. புன்னகையோடு உரையாடினாள்.

ஆனால் நேரம் செல்லச் செல்ல உள்ளத்தில் ஏதோ நெருடத் தொடங்கியது. அங்கிருந்த யாருமே அவளிடம் குத்தலாகப் பேசவோ இகழ்ச்சியாக நடந்து கொள்ளவோ இல்லை; ஆனால் அவளை விழுந்து விழுந்து பார்த்தார்கள்.

ஆனாலும்... ஆனாலும்...

சுமிக்குப் பட்டென்று உறைத்த. அவர்கள் அத்தனை பேரும் அவளை இரக்கமாகப் பார்த்தார்கள். துக்கம் நேர்ந்து விட்டால், அந்த வீட்டினரிடம் மற்றவர்கள் அனுதாபம் காட்டி ஆதரவாக நடப்பது இல்லையா? அதுபோல, அதேபோலத்தான் பரிந்தார்கள்.

சுரேஷ் வீட்டு விருந்தின்போது, அங்கே சில பெண்களின் பொறாமை மிகுந்த நோக்கு நினைவு வந்தது. இங்கே பரிவான பார்வை. இரண்டிற்கும் காரணம் ஒன்றேதான். சுமித்ரா பிரபுவின் மனைவியாகி விட்டதுதான். இந்தப் பிரபுவை அடித்துக் கொண்டு போய் விட்டாளே என்ற ஆற்றாமை அங்கே. பாவம் இந்தப் பிரபுவின் மனைவியாகும்படி நேர்ந்து விட்டதே இவள் கதி என்ற ஆதங்கம் இங்கே.

பொறமையைத் தலை நிமிர்ந்து சமாளித்த சுமித்திரைக்கு இந்த இரக்கத்தைத் தாங்கும் சக்தி இல்லாது போயிற்று. பிறர் பார்த்துப் பரிதாபப்படும் நிலையில் இருக்கிறோம் என்று உள்ளம் நைந்தாள். அதன்பின் அவளுக்கு எதுவுமே ரசிக்கவில்லை; தணல் மேல் நிற்பவள் போலத் தவித்துப் போனாள்.

விருந்தும் ஒரு வழியாக முடிந்து கிளம்பினார்கள். பிரபுவினுடைய பெரியன்னை சுமித்ராவை மாடி அறைக்கு அழைத்துச் சென்றாள்.

வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்குடன் ஒரு பட்டுச் சேலை வைத்துக் கொடுத்தாள். அவரை வணங்கி விட்டுத் தட்டைப் பெற்றுக்கொண்டபோது சுமியின் கண்கள் பனித்தன.

சற்று நேரம் மருமகளின் வதனத்தை உற்றுப் பார்த்த அவர் அன்புடன் அவளை அணைத்துக் கொண்டு, "என்னம்மா?" என்றார் பரிவுடன்.

நடுங்கும் உதட்டைக் கடித்துக்கொண்டு தலையை மட்டும் அசைத்தாள் சுமி.

அவளை அருகமர்த்திக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்தார் பிரபுவினுடைய தாயார். "சுமிம்மா, பிரபுவுக்குப் பெற்றவள் இல்லை. தாய் இவன் பிறந்ததுமே போய் விட்டாள். தகப்பனார் கண்டிப்பதே இல்லை. அவரும் இவன் இரண்டும் கெட்டானாக இருந்த வயதில் என் தங்கையிடம் சென்று விட்டார். பணமோ எக்கச்சக்கம். கெட்ட சகவாசம் ஏற்படக் கேட்க வேண்டுமா? சற்றுக் கெட்ட பழக்கங்கள் ஏற்பட்டு விட்டன. அவன் இயல்பில் நல்லவன் அம்மா. தங்கமான பையன். அந்தத் தங்கத்தைத் தூசு தட்டிப் பிரகாசிக்கும்படி நீதான் செய்ய வேண்டும்."

வெற்றுப் புன்னகையோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள் சுமித்ரா.

"மெய்யாகத்தானம்மா சொல்லுகிறேன். நான் நம்புகிறேன். என் நம்பிக்கை வீணாகாது பார். திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தான். இப்போது மிகவும் நல்ல பெண்ணான உன்னை வேண்டி வந்து மணந்திருக்கிறான். இனி மெல்ல மெல்ல மாறிவிடுவான். நீ மட்டும் லகானைக் கையில் இழுத்துப் பிடிக்க வேண்டும். அந்த சுரேஷ் வீட்டுக்கு விருந்துக்குப் போனாயே, பிரபு கெட்டுப் போகக் காரணமே அந்த சுரேஷ் மாதிரி விஷமிகள்தான். அந்த மாதிரி

இடங்களுக்கு நீயும் போகாதே; அவனையும் போக விடாதே" என்று சொல்லித் தந்தார்.

பிறகு அவளது தோளை அணைத்தபடியே இறங்கி வந்து விடை கொடுத்தார்.

காரில் ஏறும்போது மீண்டும் ஒருமுறை அணைத்து விடை கொடுத்தார். "சாமர்த்தியமாக நடந்து கொள் கண்ணம்மா" என்றார்.

பாசத்தைக் கொட்டிப் பேசிய அவர் பிரிகையில் சுமிக்கு நெஞ்சை அடைத்தது. கலங்கிய கண்ணைக் காட்டாமல் குனிந்த தலையுடன் காரில் ஏறினாள்.

கார் சற்று தூரம் சென்றபின் பிரபு, "என்ன?" என்றான். அவனிடம் பேசப் பிடிக்கவில்லை என்பதைக் காட்ட சன்னல் வழியே வெளிப்புறமாகப் பார்க்கலானாள்.

"இத்தனை நாளில் இன்னமும் என்னைப் புரிந்து கொள்ள வில்லையா சுமி? நான் கேள்வி கேட்டால் எனக்குச் சரியான பதில் வேண்டும். என்ன விஷயம்?" என்று மீண்டும் கேட்டான்.

அவளும் பிடிவாதமாகத் தலையைத் திருப்பவில்லை. தப்பு செய்தவன் இவ்வளவு அதட்ட முடிந்தால் அவள் எவ்வளவு தூரத்துக்குப் போகலாம்?

ஒரு கை ஸ்டீரியங்கில் இருக்க, மறு கையால் அவளைப் பற்றித் திருப்பினான் பிரபு. "சொல் சுமி?" என்றான் அதிகாரமாக. பிறகு "பாடம் நடந்ததாக்கும்; உபதேசங்களா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

சுமித்ராவுக்கும் கோபம் வந்தது. "ஆமாம் பாடம்தான். உபதேசம்தான். ஆனால் தப்பான இடத்துக்கு நடந்தது. தென்னை மரத்தில் தேள் கொட்டியிருக்கப் பனை மரத்துக்கு மருந்து தடவுகிறார்கள்" என்றாள் வெடுக்கென்று.

அவள் கோபப்படுவதைக் கண்டு, பிரபு சிரித்தாள். சிரிப்போடு சிரிப்பாக இடக்கரம் அவளது கன்னத்தை ரசனையுடன் வருடியது.

சற்று நேர மவுனத்துக்குப் பின் சுமித்ரா கேட்டாள். "சொல்லுங்கள், என் மனதில் உங்களுக்கு இடமில்லை. நான் உங்களை முழு மனதோடு வெறுக்கிறேன் என்பது உங்களுக்கே தெரியும். அது.. அது உங்களுக்குச் சங்கடமாக இல்லையா?"

"இல்லையே" என்றான் அவன் சாதாரணமாக, சுமி, எனக்கு நீ வேண்டும். கிடைத்து விட்டாய், இதில் சந்தோஷமே தவிர சங்கடப்பட என்ன இருக்கிறது?"

"நான் என்றால்?" வெறும் கடலும் நிலமுமா உலகம் என்பது? அதில் வாழும் மனிதர்கள் அல்லவா உலகம் ஆகிவிடுகிறார்கள். அதுபோல நான் என்றால் ரத்தமும் சதையும் மட்டுமான இந்த உடலா நான்? என்பதன் பொருள், இந்த உடலைப் போய் நான் என்றும், அது கிட்டி விட்டதாகவும் பெருமை பேசுகிறீர்களே."

"பட், எனக்கு அதுபோதுமே!" என்றான் அவன் கவலையின்றி.

சுமிக்கு வழக்கமான தவிப்பு மீண்டும் வந்து விட்டது.

ஏன்?

ஏன் இப்படி நடந்து விட்டது?

உள் மனதில்கூட மாசு படக்கூடாது என்று வாழ்ந்த அவளும், முழுக்க முழுக்க மாசிலேயே மூழ்கிவிட்ட அவனுமா இணைவது?

இது என்ன நியாயம்?

கடவுள்கூட இதை ஏன் புரிந்து கொள்ளவில்லை?

'பொன் மாளிகை' வாசம் ஒரு வழியாகச் சுமிக்குப் பழகி விட்டது. காலையில் குளித்துவிட்டு வந்தால் காபி வந்திருக்கும். குடித்தபின் தோட்டத்தில் சுற்றுவது. காலை உணவின் பின் அவன் தொழிற்சாலைக்குச் சென்றபின் அந்த ஆயாவுடன் ஏதாவது செய்வாள். மனம் மிகவும் அல்லல் தரும் நாளில் பிரபுவின் லைப்ரரிக்குச் சென்று விடுவாள். அங்கே பல நூறு புத்தகங்கள். எதையாவது படித்துப் பொழுதைப் போக்குவாள். படிக்கப் படிக்க மனம் சம நிலைக்கு வரும். மாலையில் ஐந்து மணி சுமாருக்குப் பிரபு திரும்புவான். ஏதாவது பேசியபடி தோட்டத்தில் அமர்வதோ நடப்பதோ உண்டு. இந்த நேரம் பொதுவாகச் சுமித்ராவுக்குப்பிடிக்கும். இரவு படியவும் நெஞ்சம் கலங்கும், எத்தனை பேரைத் தொட்ட கை, கறை பட்ட கை என்று கதறும் நெஞ்சை வெளிக்காட்டாமல் மனதைக் கல்லாக்கிக் கொள்வாள். பிறகு ஒரு நாளைப் போல மறுநாளும் விடியும்.

இதற்கிடையே விருந்துகள், பிரபுவின் ஸெட் என்றால் சுமியின் மனம் வாடும்.

திரும்பத் திரும்ப அதே ஸெட்; அதே லில்லி; ஆர்ப் பாட்டம்; மது; ஆபாசமான பேச்சுக்கள்.

இதைவிடத் தாங்க முடியாதது அந்த இரவுகளில் பிரபுவின் வேகந்தான்.

மதுவின் நெடியோடு அவனது அழுத்தமான உதடுகள் சுமியின் இதழ்களில் படியும்போது, அடிவயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வரும். அதையும் சகித்துத்தான் தீர வேண்டியிருக்கும்.

அன்றும் ஒரு பார்ட்டி எனவும் அவள் முகம் வாடியது.

"ஏன்?" என்று அருகில் வந்தான் பிரபு.

"ஒன்றுமில்லை" என்று தலையசைத்தாள் சுமித்ரா.

பிரபு சிரித்தான். "நம் திருமணத்துக்குப் பிறகு என்னிடம் நீ எத்தனை 'ஒன்றுமில்லை' சொல்லியிருக்கிறாய் தெரியுமா? விருப்பமில்லை என்றால் வெளிப்படையாகச் சொல்வது தானே."

"விருப்பம் இல்லாதவை எல்லாம் விலகியா போய் விடுகின்றன?"

புரிந்து கொண்டு "மற்ற விஷயங்களில் இல்லைதான். ஆனால் பார்ட்டிகளில் ஒன்றிரண்டைத் தவிர்க்கலாம்!" என்றான் அவன்.

அலுப்புடன் உச்சுக் கொட்டி விட்டுத் திரும்பி நின்று கைக்கெட்டிய ஒரு சேலையை எடுத்தாள் சுமித்ரா.

"வேண்டாம் சுமி. அது வேண்டாம். அதைவிட 'ஸீ ப்ளு'வில் ஸ்ட்ரா வொர்க் பண்ணிய சேலையைக் கட்டிக் கொள். பச்சையும் நீலமுமாய் நகைகள் அணிந்து கொள். பொருத்தமாக இருக்கும்" என்றதோடு நில்லாமல், அவள் கையில் இருந்த சேலையை வாங்கி, உள்ளே மாட்டி விட்டுத் தான் சொன்னதை எடுத்துக் கொடுத்தான்.

"பெண்களின் அலங்காரம் பற்றி நன்றாகத் தெரிகிறதே!" என்றாள் சுமித்ரா குத்தலாக.

"பழக்க தோஷம்!" என்று ஸ்டைலாகத் தோளைக் குலுக்கிவிட்டுப் போனான் பிரபு.

இந்தப் பார்ட்டிக்குச் செல்வதற்காக சுமி இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்திருக்கவே தேவையில்லை. விஷயம் தெரிந்திருந்தால் தயங்கியிருக்கவும் மாட்டாள்.

ஏனெனில் அவள் நடராஜை மீண்டும் அங்கேதான் சந்தித்தாள்.

# 6

அன்றைய பார்ட்டி அளித்தவன் சியாம். குடி தவிர மற்றபடி நல்லவன் என்றான் பிரபு. அவன் வீட்டினுள் சென்றதுமே, "பிரபு!" என்று கீச்சிட்டபடி ஓர் இளம் பெண் - வெகு இளமை - ஓடி வந்தாள். பிரமாதமான அழகி என்பதில்லை. ஆனால் பதினேழு வயதின் பேதைமையில் முகம் ஜொலித்தது.

"பிரபு, உங்களைப் பார்த்து எவ்வளவு நாளாகி விட்டது! சரியாக இருபத்து ஏழு நாட்கள். எனக்கு 'நார்த்'தில் ஒன்றுமே பிடிக்கவில்லை தெரியுமா? எப்போதடா திரும்பிச் செல்லுவோம் என்று துடித்துக் கொண்டே இருந்தேன். ஏன், சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று கிளியாய்க் கொஞ்சினாள்.

சுமித்ரா அருகில் இருப்பதே அவளுக்கு உணர்வில்லை.

பிரபுவைத் தவிர வேறு எந்த வடிவமும் அவள் கண்களில் படவில்லை.

அந்தப் பேதைமைக் கண்களில் நிறைந்திருந்த மயக்கத்தைக் கண்டதும், சுமித்ராவுக்குப் பெருமூச்சு வந்தது. 'பாவம்' என்று நினைத்தவள் சட்டெனத் திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

அவனும் அவளது பார்வையைப் புரிந்து கொண்டு லேசாகக் கண்ணடித்தான்.

சுமித்ரா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"மல்லி சின்னதிலிருந்து பிரபு பைத்தியம்!" என்றாள் சியாமின் மனைவி சுந்தரி. அவளுடைய நாத்தனார்தான் மல்லி.

"நீங்கள் ஒன்றும் தப்பாக எண்ணிக் கொள்ளாதீர்கள் சுமித்ரா. எங்கள் மல்லி ஓர் அசடு."

"நான் அவளைத் தப்பாக நினைக்கவில்லையே" என்றாள் சுமித்ரா.

பளீரென்ற பார்வை பிரபு வெட்டி மறைத்தது.

மல்லி பாவம் ஒரு விட்டிற்பூச்சி.

சுமிதான் விட்டிற்பூச்சியிடம் தவறு இல்லை என்பவள் ஆயிற்றே.

பார்வையை விலக்கிக் கொண்டு சுந்தரியோடு ஏதோ பேசியபடி நடந்தாள்.

உண்மையைச் சொல்லப் போனால் 'உம்' மட்டும்தான் கொட்டினாள். ஏனெனில் சுந்தரிக்கு அடுத்தவர் பேசவேணும் என்ற அவசியம் இல்லை. தன் போக்கில் ரோட்ரோலர் மாதிரி லொடலொடப்பாள்.

"இன்று ஒரு புது விருந்தாளி வருகிறார் சுமித்ரா. பாவம், கொஞ்ச நாளைக்கு முன்பாக அவருடைய அப்பா இறந்து போனார். அதற்கும் சில மாதங்களுக்கு முன் அவருடைய அம்மாவும் செத்துப் போனார் என்று ஏக்கமாம். படுக்கையிலேயே கிடந்து இரு மாதங்களுக்கு முன் அப்பாவும் போய்விட்டார். அங்கே திருச்சியில் சொத்துகளை ஒழுங்கு செய்துவிட்டு இங்கே வந்து விட்டார். அடையாறில் வீடு வாங்கி செட்டிலாகி இருக்கிறார். நம் சியாமுடைய ஃப்ரண்ட் மது இல்லை அவருக்கு ஃப்ரெண்டாம். ரொம்ப அமைதி..." என்று அளந்து கொண்டே போனாள்.

தன் உள்ளக் குமைச்சலை மறைத்து அவளுக்கு 'உம்' போட்டபடி சென்றாள் சுமித்ரா.

அந்தப் புதிய விருந்தினன் வந்து சேர்ந்து அறிமுகப் படலம் தொடங்கியபோது. "சுமீ, நீயா?" என்று திகைப்புற்று வினவினான்.

"நீங்களா, நடராஜ்?" என்று சுமித்ராவும் வியப்படைந்தாள்.

"முன்னேயே தெரிந்தவர்களா?" என்று கேட்டாள் சுந்தரி "உங்களுக்குள் அறிமுகம் செய்தேனே!" என்று சிரித்துக் கொண்டாள்.

"ஆமாம், ஒரே காலேஜில் படித்தோம்... நடராஜ் இப்போது தான் உங்கள் குடும்ப விஷயம் சொன்னார்கள். கேட்பதற்கு வருத்தமாக இருக்கிறது. அப்பாவும் போனதை நினைத்தால் கஷ்டமாக இருக்கிறது!" என்று வருந்தினாள் சுமித்ரா.

"அப்பா போனதே நல்லது சுமி. அம்மா இறந்த பின் இந்த ஐந்து மாதங்களாக அப்பா பட்ட பாடு இருக்கிறதே. அப்பப்பா! இப்போது நினைத்தாலும் நெஞ்சைப் பிளக்கிறது!" என்றான் அவன் வேதனையோடு.

மனத்துக்குள்ளேயே மண்டையில் ஒன்று போட்டுக் கொண்டாள் சுமித்ரா. சற்று மறந்த மனத் துயரைக் கிளப்பி விட்டு விட்டாளே. என்ன சொல்வது என்று புரியாமல் மறுகினாள். அவன் மனதை எப்படி மாற்றுவது? ஒன்றும் தோன்றாமல் மௌனம் சாதித்தாள்.

அதற்குள் சியாம் அருகில் வந்தான் "மிஸ்டர் நடராஜுக்குப் பிரபுவை அறிமுகம் செய்து வைத்தாயா சுந்தரி?" என்றபடி.

"சுமித்ராவுக்குத் தெரிந்தவர்தானாம். அழைத்துப் போங்கள் சுமித்ரா" என்று பொறுப்பைச் சுமியிடம் ஒப்படைத்தாள் அவள்.

நடராஜை அழைத்துச் சென்று, "இவர் காலேஜில் என் ஸீனியர். பெயர் நடராஜ். இவர் பெயர் மிஸ்டர் பிரபு. பிரபு இண்டஸ்ட்ரீஸ் அதிபர்" என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

நடராஜின் முகத்தில் பரவிய திகைப்பும் வாட்டத்தையும் தாங்க முடியாமல், "நான் அங்கே போக வேண்டும்" என்று திணறிக் கொண்டு ஓடிவிட்டாள்.

உதடுகளில் லேசான புன்னகையுடன், "ஏதேனும் தொழில் செய்கிறீர்களா?" என்று வினவினான் பிரபு.

"ஆ... ஆமாம். லால் கம்பெனியில் பார்ட்னராக இருக்கிறேன்."

"வீடு..."

"இங்கே தான் அடையாறில் இருக்கிறது."

"என்ன விளையாட்டுப் பிடிக்கும்?"

"டென்னிஸ், புட்பால்."

கேட்ட கேள்விக்குச் சுருக்கமாக இறுத்த பதிலைத் தவிர நடராஜ் மௌனம் சாதித்தான்.

மெல்ல மெல்லப் புன்னகை மறைந்து பிரபுவின் நெற்றி சுருங்கியது. யோசனையோடு நடராஜின் பார்வை சென்ற திசையைக் கவனித்தான். அங்கே சுமித்ரா இருந்தாள்.

சியாம் வீட்டு விருந்து என்றால் எல்லாமே ஓவராக இருக்குமாம். மேற்கத்திய இசை முழங்கப் பல ஜோடிகள் இணைந்தன.

சுமித்ரா பேசாமல் ஒரு ஸெட்டில் ஒதுங்கி உட்கார்ந்தாள்.

சுரேஷ் கையை நீட்டிக் கொண்டு அவளிடம் வந்தான்.

"எனக்கு ஆடத் தெரியாது, மன்னியுங்கள்," என்று புன்னகையோடு மறுத்து விட்டாள் சுமித்ரா.

அவன் விடாப்பிடியாக வற்புறுத்தியும், ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

இதை கவனித்துக் கொண்டேயிருந்து விட்டு, அவன் சென்றதும் பிரபு வந்தான். "ஆட வருகிறாயா சுமி?" என்று அழைத்தான்.

"இல்லை. தெரியாது என்றேனே." என்றாள் சுமித்ரா - கொஞ்சமும் அசையாமல்.

"நான் கற்றுத் தருகிறேன் வா." என்று புன்னகை மாறாமல் மீண்டும் அழைத்தான் அவன்.

"இல்லை" என்று ஒரே வார்த்தையில் மறுத்து விட்டாள் அவள். மடியில் கிடந்த கைவிரல்களை விட்டுப் பார்வையைக் கூட எழுப்பவில்லை.

"துக்கமாயிருக்கிறாயா?" என்று அவள் காதருகே குனிந்து மிருதுவாகக் கேட்டான் பிரபு.

திகைப்புடன் அவள் நிமிருமுன் அவன் திரும்பி விட்டான்.

அவன் நீட்டிய கரத்துக்காகக் காத்திருந்தவள் போல மல்லி ஓடிவந்து அவன் மேல் விழுந்தாள்.

நெற்றியில் ஒரு கைவைத்துக் கேலியாக சல்யூட் செய்துவிட்டு அவளோடு சென்றான் பிரபு.

இடை ஒட்டி, உடை ஒட்டி, அவர்கள் ஆட ஆட, மல்லியின் கண்களில் மயக்கம் பெருகப் பெருக சுமியால் தாங்க முடியவில்லை.

வேதனை பொறுக்காமல் அங்கிருந்து அகன்று தோட்டத்தினுள் சென்றாள்.

சின்னத் தோட்டம்தான். சற்று இருளாக இருந்த பகுதிக்குச் சென்று மறைவாக நின்றாள். மனம் இருந்த நிலையில் யார் கண்ணிலும் பட அவளுக்கு விருப்பம் இல்லை.

அந்தப் பெண் மல்லியின் கதி என்ன ஆகும்? அவளையும் லில்லி மாதிரி பயன்படுத்துவானா? உடலில் அடிபட்டால் வலிப்பது போலவே மனதில் வலித்தது. நெஞ்சில் கைவைத்து அழுத்தித் தன் வருத்தத்தில் மூழ்கி நின்றாள்.

திடீரென்று அருகில், "சுமி" என்ற அழைப்புக் குரல் கேட்டதும், திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"நடராஜ்!"

"என்னைப் பார்த்துச் சொல் சுமி. ஏன் இவனை மணந்தாய்?" எந்தவிதமான பீடிகையும் இல்லாமல் நேரடியாகக் கேட்டு விட்டான் நடராஜ்.

பதில் சொல்லத் திறனற்றுத் தலை குனிந்தாள் சுமித்ரா.

"சொல்லு சுமி. ஏன் இவனை மணந்தாய்? உன் நேர்மைப் பித்துக்கும், இவனது ஒழுக்கக் கேட்டுக்கும் எந்த விதத்தில் பொருத்தம்? சொல்லேன் சுமி. ஏன் சும்மா நிற்கிறாய்? ஊர் அறிந்த ஒரு காலியை..."

"போதும் நடராஜ்" என அடக்கினாள் சுமித்ரா. "ஏன், எப்படி என்று பிரேத பரிசோதனை செய்வதில் என்ன பயன்? செத்தது செத்ததுதானே? பரிசோதிப்பதால் மட்டும் மீண்டும் உயிர் வந்துவிடப் போகிறதா?"

சுமித்ராவின் மனம் சரியாக இல்லை என்பதை நடராஜ் கண்டு கொண்டான். ஆனாலும் அதை அப்படியே விட மனம் இல்லை.

அவனைப் பொறுத்தவரையில் சுமித்ரா ஒரு தேவதை! அவள் மனம் நோகலாமா?

"நீ வேதனைப்பட்டால் எனக்குத் தாங்கவில்லையே சுமி" என்றான் வருத்தத்துடன்.

அந்தப் பரிவில் சுமித்ரா மீண்டும் தலைகுனிந்தாள்.

"சுமீ, நான் சொல்லாமலே உனக்குத் தெரியும் அல்லவா?" என்று அவள் அருகில் நெருங்கி வந்தான் நடராஜ். "உனக்கு எந்த நேரமும் எந்த உதவி தேவை என்றாலும் என்னிடம் தயங்காமல் கூறலாம்."

"என் மனைவிக்கு அந்நியர் உதவி தேவைப்படாது." என்று அழுத்தமான பதில் கேட்டது.

மூச்சைப் பிடித்துக்கொண்டு திரும்பினாள் சுமி. பிரபுவே தான்.

நடராஜின் முகம் செக்கச் சிவந்து விட்டது.

"வா சுமித்ரா போகலாம்." என்றான் பிரபு கடுமையான குரலில்.

அதற்குமேல் அங்கே நில்லாமல், வீட்டிற்குத் திரும்பி விட்டான்.

தனியறைக்குள் சென்றதுமே அவளை நிறுத்திக் கேட்டான். "அவனை மணந்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருப்பாயா?"

சுமி அவன் கையை உதறினாள்.

"இந்த அலட்சியமோ ஆத்திரமோ அவனிடம் காட்டியிருப்பாயா?"

சுமியின் பொறுமை பறந்தது. "அதற்கு அவசியம் இருந்திராது, ஏனென்றால் அவர் நல்லவர். உள்ளத்தைப் பற்றிக் கவலைப்படுகிறவர்," என்றாள் ஆத்திரமாக.

"சுமி" என்ற அதட்டலோடு அவளைத் திருப்பினான் பிரபு. "நானும்தான் உன் மகிழ்ச்சியை விரும்புகிறேன். உன்னை உயர்வாக பாதுகாக்கிறேன். உன்னைப் பற்றிய கவலை எனக்கு இல்லையா?"

"இல்லை இல்லை இல்லை! கசாப்புக் கடைக்காரன் ஆட்டிடம் காட்டும் கருணை" என்றாள் அவளும் ஆத்திரமாக.

"சுமீ!" என்று கூவியவன் அவளை இறுகப் பற்றி இழுத்தான்.

சுமித்ராவுக்கு நடராஜின் மென்மையான முகம் நினைவு வந்தது. என்றுமில்லா வேகத்துடன் அவளும் எதிர்த்தாள். விடாமல் அவன் தன் வெற்றியை நிலை நாட்டியபோது கண்ணீருடன் ஓடினாள். முதல் இரவன்று போல மாசுபட்ட உணர்ச்சி மிகுதியாகத் தெரிந்தது. விம்மிக் கொண்டே குளியலறைக்குள் சென்று ஷவரில் நின்றாள். எவ்வளவு நேரம் நின்றாளோ, அவளுக்கே தெரியாது. மேலும் மேலும் குளிர் நீர் விழுந்து உடல் குளிர்ந்து உதறல் எடுத்த பிறகும், ஷவரில் இருந்து விலகும் உணர்வே இல்லாமல் அழுது கொண்டே நின்றாள்.

சுமித்ரா சென்றபின் சினத்துடன் சிகரெட்டைப் புகைத்தபடி தன் ஆபீஸ் அறைக்குள் சென்று கதவைச் சாத்தினான் பிரபு.

வரிசையாக ஒரு கேஸ் காலியாயிற்று. பிறகும் ஆத்திரம் அடங்காமல் 'சை' என்றபடி எழுந்து வந்தான்.

படுக்கையில் விழுந்தான்.

சுமித்ரா இன்னமும் திரும்பி வரவில்லை.

சற்று பொறுத்துப் பார்த்தான்.

பிறகு எழுந்து சுமியின் அறைக் கதவைத் திறந்தான். அங்கும் அவள் இல்லை என்பதை அறிந்ததும் திடுக்கிட்டான்.

கதவு உட்புறமாகத் தாழிட்டிருந்ததால் அவள் வெளியேயும் சென்றிருக்க வழியில்லையே.

குழப்பத்தை ஊடுருவிக் குளியலறையில் தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டது.

குனிந்து மணியைப் பார்த்தான். கடவுளே! சுமி சென்று ஒரு மணி நேரத்துக்கும் மேலாகிறதே இவ்வளவு நேரம் இந்த இரவில்...

ஒரே தாவலில் சென்று குளியலறைக் கதவைத் தட்டினான். “சுமி! சுமி! கதவைத் திற.”

தட்டப்படும் கதவைக் கனவு காண்பவள் போல உணர்ச்சியற்றுப் பார்த்தாள் சுமித்ரா.

“சுமி! சுமி!” என்று வேகமாகத் தட்டினான் அவன்.

அவனது அவசரம் அப்போதுதான் உறைத்தது. “வருகிறேன்...” என்றாள் சுமி. குரலும் சொல்லும் வெடவெடத்தன.

“வா சுமி, சீக்கிரம் திற.”

திறக்க வேண்டும் என்றுதான் நினைத்தாள். ஆயினும் குளிரில் விறைத்துப் போன உறுப்புகள் அதைச் செயலாற்றாமல் சும்மா நின்றன.

“சுமிஇ...” கதவை உடைத்து விடுவான் போல இடித்தான்.

எப்படியோ கை கால்களைச் சிரமப்பட்டு அசைத்துக் கதவைத் திறந்தாள்.

பிரபு அவளை அவசரமாக வெளியே இழுத்தான்.

சில்லிட்டிருந்த உடம்பை உணர்ந்ததும் வேகமாக ஓடிச்சென்று இரண்டு டவல்களை எடுத்து வந்தான்.

“முட்டாள்! எவ்வளவு நேரம் ஷவரில் நின்றாய்?” என்று அதட்டியபடி டவலை நீட்டினான்.

குளிரில் கைகளை இறுக்கிக்கொண்டு, நடுக்கத்தோடு பொம்மை போல நின்றாள் சுமித்ரா.

"கட்டியிருப்பதை அவிழ்த்துவிட்டு உடம்பைத் துடை சுமி" என்றவன், அவள் அசையாமல் நிற்பதைக் கண்டதும், ஆத்திரத்துடன் "நான் இருக்கும்போது எப்படி உடையைக் களைவது என்ற தயக்கமா? அப்படி உன்னை நான் பார்த்ததே இல்லையா?" என்று இரக்கமற்றுக் கேட்டான்.

அவன் கேட்டது சுரீலென்று உறைத்துத் திணறிக் கொண்டு திகைப்புடன் நிமிர்ந்தாள் அவள்.

அதற்குள், "வா, நானே..." என்று அவளை நெருங்கினான் பிரபு.

தன்னையும் அறியாமல் இரண்டு எட்டுப் பின்னடைந்தாள் சுமித்ரா.

அவனுக்குச் சினம் மிஞ்சிவிட்டது. "ஏன் இந்த நிலையில் உன்னிடம் 'லவ் மேக்கிங்' தொடங்கி விடுவேன் என்று பயமா? முட்டாள், என்னை என்னவென்று நினைத்தாய்?" என்று அதட்டினான்.

பரபரவென்று சுமியின் ஆடைகளைக் களைந்தெறிந்தான்.

தேங்காய்ப்பூத் துவாலையால் பரபரவென்று அவன் துடைக்கும்போதே சுமியின் உடல் தள்ளாடத் தொடங்கி விட்டது.

ஒரு டவலால் அவள் உடலைச் சுற்றிப் போர்த்தி அப்படியே தூக்கிச் சென்றான்.

பற்கள் கிட்டி விறைத்துப் போயிருந்த சுமிக்குப் பிரபுவின் உடல்சூடு இதமாக இருந்ததோ! சில்லிட்ட முகத்தை அவனது பரந்த மார்பில் பதித்து ஒண்டினாள்.

பிரபு சில கணங்கள் அப்படியே அசைவற்று நின்று விட்டான்.

பிறகு நிலைமை நினைவுக்கு வர அவளைப் படுக்கையில் கிடத்தி, நன்றாகப் போர்த்தினான். கொஞ்சம் ராபக்ஸ் எடுத்து உள்ளங்காலிலும் உள்ளங்கையிலும் சூடு பறக்கத் தேய்த்தான். சூடாகப் பால் கொண்டு வந்து குழந்தைக்குப் புகட்டுவது போல அரைகுறை நினைவில் கிடந்த அவளுக்குப் புகட்டினான். அவள் உறங்கும் வரையில் பிறகும் அவளை விட்டு அகலாமல் ஒரு குழந்தையை அணைத்துப் படுப்பதுபோல அவளை ஒரு கையால் அணைத்துக் கொண்டு படுத்தான். இரவில் வெகுநேரம் காமமோ காதலோ எவ்வித பாலுணர்வும் இல்லாதபடி அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

லேசான ஜலதோஷமும் உடல் அயர்வும் தவிர, வேறு எந்த வகையிலும் சுமியின் உடல்நிலை பாதிக்கப்படவில்லை. ஆயினும் பிரபுவின் கட்டளைக்கிணங்கக் காலை முழுவதும் பேசாமல் படுத்திருந்தாள்.

மாலையில் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்த பிரபு கீழே மனைவியைக் காணாமல் மேலே வந்தான்.

மொட்டை மாடியில் ஊஞ்சலுக்குச் சற்றுத் தள்ளிக் கிடந்த சோபாவில் சாய்ந்து கொண்டு வெட்ட வெளியை வெறித்திருந்தாள் சுமித்ரா.

புருவத்தில் ஏதோ எண்ணங்களின் பிரதிபலிப்பான கணிப்பு. உதடுகளில் விரக்தியாக ஒரு சிறு நெளிவு.

சற்று நேரம் அங்கேயே நின்று பார்த்துவிட்டு, அவள் அருகே வந்தான் பிரபு. அவளுக்கு எதிரே இருந்த மேஜை மீது சாய்ந்தாற் போல அமர்ந்தான்.

அப்போதும் சுமித்ராவின் தியானம் கலையவில்லை.

ஒரு சிகரெட்டைப் பொருத்திக் கொண்டு, "வெல்...சுமி?" என்றான்.

சுமித்ரா அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு, மீண்டும் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

அறைக்குள் அந்த விழிகளில் தோன்றியிருந்த லேசான நீர்த் திரையைக் கண்டுவிட்ட பிரபுவின் கண்கள் இடுங்கின.

பார்வை கூர்மைபெற, "சுமி!" என்று அழைத்தான்.



# 7

"அந்த நடராஜை மணந்திருந்தால்... என்று அதை நினைத்துக் கொண்டு இருக்கிறாயல்லவா சுமி?" என்று வினவினான் பிரபு.

சுமித்ராவின் பார்வை இப்போது கணவனை வெறித்தது. 'இல்லை'யென்பதைப் போல தலையை அசைத்தாள், "இல்லை அப்படி நினைக்கவில்லை ஆனால்..." வார்த்தைகள் நின்றுவிட்டன.

"ஆனால்...?"

உதட்டைக் கடித்துக்கொண்டு வெளியே பார்த்தாள் சுமித்ரா.

ஆனால் அவன் விடுகிறவனா? "ஆனால்..." என்றான் மீண்டும்.

விடமாட்டான் என்பது புரிந்து அவள் சொன்னாள். "ஆனால், ஏன் இப்படி நேர்ந்தது என்று யோசித்துக் கொண்டு

இருந்தேன், ஏன்?... எப்படி? எதனால்? ச்சு..." என்று பெருமூச்சு விட்டாள்.

அவன் நிமிர்ந்தான். "ஏன் சுமி, உனக்கு இங்கே என்ன குறை? இப்படிக் கண்ணீருடன் சிந்திக்க தேவை என்ன?" அவன் பார்வை அவளது புதிய ஃபாரின் நைலக்ஸிலும் நகைக்ளிலும் பட்டுத் தெறித்தது.

அவனது பார்வை ஓடிய இடங்களை அவளும் கவனித்தாள். உதடுகளில் ஓர் மென்முறுவல் பிறந்தது. "இந்த நகைளும் சேலைகளும் மகிழ்ச்சியைத் தரக் கூடியவை என்றால், இவையெல்லாம் கிட்டாதவர்கள் அழுது கொண்டே இருப்பார்கள், சிரிப்பதே இல்லை என்றா நினைக்கிறீர்கள்?"

"இல்லையா பின்னே? உன் இளமைக் கனவுகளில் இந்த மாதிரி உயர்ந்த பொருட்கள் இடம் பெற்றதில்லையா?"

"என் கனவுகள்!" சுமித்ரா பெருமூச்செறிந்தாள்.

கண்கள் தொடு வானத்தில் நிலைத்தன. அவ்வளவு தூரத்தில் அந்தக் கனவுகளும் சென்று, அவளுக்கு எட்டாமல் மறைந்து விட்டதாக நினைத்தாளோ?

"சொல்லேன்..." பிரபுவின் குரல் எங்கிருந்தோ ஒலித்தது. "அழகான கணவன், மாளிகை போல வீடு, தோட்டம், அணிமணிகள்..."

"இல்லை, இல்லவே இல்லை. நான் எப்போதுமே அதிகமாக ஆசைப்பட்டது இல்லை. அல்லது நான் ஆசைப்பட்டதே அதிகம் தானோ என்னவோ! சின்னதான ஒரு விடு. தேவைக்கு வேண்டிய அளவு மட்டுமான வருமானம்; நிம்மதியான வாழ்வு; அன்பான கணவன்..." விழிகள் பளபளக்கச் சொல்லிக் கொண்டே போனவள் சட்டென நிறுத்தினாள்.

புருவங்களில் வேதனையின் சுருக்கம் விழுந்தது.

அந்தக் கணவனைப் பற்றியும் சுமித்ரா கற்பனை செய்தது உண்டு! இருவரும் ஒருவரை ஒருவர் மதித்துக் கருத்தொருமித்துக் காதல் வாழ்வு வாழ நினைத்திருந்தாள். ஆனால், எவ்வளவு பெரிய ஏமாற்றம் நேர்ந்து விட்டது! காதலை விரும்பியவள் காமத்தைத் தணிக்கும் கருவியாகிப் போனாளோ!

பிரபு அவள் கையைப் பற்றி நிறுத்தினான். "கொஞ்சம் பணம் மிகுந்து விட்டதாலே... உன் கனவில் குறை வந்து விட்டதா?" என்று கேட்டான். தொடர்ந்து, "மற்றபடி நான் என்னவோ உன்னிடம் அன்பாகத்தான் இருக்கிறேன்." என்றான்.

மீண்டும் அவனை வெறித்துப் பார்த்தாள். 'அன்பான கணவன்!' இவனது அகராதியில் அன்பின் அர்த்தமே வேறு போலும். உதடுகள் லேசாக வளைய, "பாரதியார் பாட்டுகள் படித்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம். அவருடைய காதல் பாட்டுகள்... அப்பப்பா! மிகவும் பிரமாதமாக இருக்குமே!" என்றான் ரசனையுடன்.

"ஹூம், ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ருசி!" என்றாள் சுமித்ரா, சலிப்புடன். "அதில் காணி நிலம் வேண்டும் என்ற பாட்டு ஒன்று உண்டு தெரியுமா?"

பிரபு பேசாமல் காரிய நோக்குடன் அவளைப் பார்த்தான்.

அவள் அவன் முகத்தையே பாராமல் தன் போக்கில் கூறிக் கொண்டே போனாள். "அதில் இயல்பான குடும்ப வாழ்வைப் பற்றி அவர் எப்படி எழுதியிருக்கிறார் தெரியுமா? உம்... நீங்கள் எங்கே அதையெல்லாம் படித்திருக்கப் போகிறீர்கள்? எங்கேனும் நாடித் தழுவுவதையும், கூடி விளையாடுவதையும்

பற்றி எழுதியிருந்தால் அதை நெட்டுருப் போட்டிருப்பீர்கள்." என்றாள் இகழ்ச்சியாக.

பிரபு கண்களை மூடித் திறந்தான். "நீ அந்த நடராஜனை மணந்திருந்தால் காணி நிலத்தில் கண்டது போல வாழ்ந்திருப்பாய். இல்லையா, சுமி? அமைதியான வாழ்வு... காணி நிலத்திடையே நல்ல மாளிகை; கேணி; கேணி அருகிலே தென்னை மரக்கீற்றும் இளநீரும்... ச்சு ச்சுச்சு. பாவம், கடைசியில் எல்லாம் வீணாகிப் போயிற்று. நடராஜின் தென்னந் தோப்பும் அதன் நடுவில் உள்ள வீடும் எசமானி இல்லாமல் ஏங்கித் தவிக்கும்படி ஆகிவிட்டதாக்கும். திருச்சியில் தவிர, சென்னையை அடுத்தும் அடுக்குத் தென்னந் தோப்புகள் இருக்கின்றன. தெரியும் அல்லவா? எப்போதாவது அங்கே சென்றிருக்கிறாயா? சென்றிருந்தால் அந்த நினைவேனும் இந்தத் துன்ப வாழ்வில் ஓர் ஆறுதலாக இருக்கும்?" அவன் குரூரமாக அவள் இதயத்தில் குத்தினான்.

"அவருக்குத் தென்னந் தோப்பு இருப்பதே எனக்குத் தெரியாது," என்றாள் சுமித்ரா அமைதியாகவே.

"இதை நான் நம்ப வேண்டுமா?"

"அது உங்கள் விருப்பம்."

"என் விருப்பம்." பிரபு லேசாகச் சிரித்தான். "என் விருப்பத்தைத்தான் நீ எப்படி மதிக்கிறாய்." என்று வியந்தான்.

சுமிக்குக் கோபம் வந்தது. அவன் குறிப்பு அவளுக்குப் புரியாமலா போகும்? "மதிக்கவில்லை என்பதால் அவை நிறைவேறாது நிற்பதில்லை!" என்றாள் பதிலுக்கு.

"இல்லைதான். என் விருப்பங்கள் நிறைவேறாமல் போக வழியில்லை சுமி. அதற்கு நான் விடுவதில்லை!" என்று தன் கையில் சிக்கியிருந்த சுமியின் கரத்தைச் சுண்டி இழுத்தான்.

இதை எதிர்பாராத சுமித்ரா அப்படியே அவன் நெஞ்சில் வந்து விழுந்தாள்.

அவன் கைகள் அவளைச் சுற்றி வளைத்தபோது, திமிற வில்லை, துடிக்கவில்லை. அடுத்து நடக்கப் போவதை எதிர் பார்த்தவள் போல, இதழ்களை மூடிக் கொண்டு, கல்லாய் உறைந்து நின்றாள்.

குனிந்து அவள் முகத்தைப் பார்த்த பிரபு, உடனே அவளை விடுவித்தான். திரும்பிப் பாராமல் வேகமாகத் தன் தனியறைக்குச் சென்று கதவைச் சார்த்திக் கொண்டான்.

இரண்டு நாட்கள் கழித்துப் பிரபு சுமித்ராவை அழைத்தான். "சுமி, இந்தச் சனிக்கிழமை..."

"விருந்தா? கடவுளே!" என்ற சலிப்புடன் கணவனைப் பார்த்தாள் சுமித்ரா.

புரிந்து கொண்டு, "விருந்தில்லை சுமி. நாம் இருவரும் ஒரு சின்ன ட்ரிப் போய் வரலாம்." என்றான் அவன்.

"சரி" என்றாள் சுமி சுருக்கமாக.

"இரண்டு நாளைக்குத் தேவையான எல்லாம் எடுத்துக் கொள்... எங்கே என்று நீ கேட்கவே இல்லையே சுமி."

"எங்கானாலும் ஒன்று தான்." என்றாள் சுமி பற்றற்று.

அவன் தலையைச் சரித்துச் சற்றுக் கூர்மையாக ஒரு விதமான பார்வையுடன் அவளைப் பார்த்தான். "உனக்கும் பிடிக்கக்கூடிய இடம்!" என்றான் புன்னகையோடு.

"சரிதான்" என்றது தவிர, வேறு பதில் தரவில்லை சுமித்ரா.

மறுநாள் அதிகாலையிலேயே இருவரும் கிளம்பி விட்டனர்.

ரோடா மேடா கார் படகுபோல வழுக்கிக் கொண்டு சென்றதைச் சுமி சுகமாக உணர்ந்தாள். காருக்காகக் கொட்டிய பயணமா அல்லது ஓட்டுகிறவனது சாமர்த்தியமா?

ஸ்டீரிங்கில் கைகளின் மீது சுமியின் கவனம் படிந்தது.

நீண்ட வலிய விரல்கள்; கவனமாகக் கத்தரிக்கப்பட்ட நகங்கள். வெகு சுத்தமான ஆண்மை மிக்க கரங்கள். வியப்புடன் அந்தக் கைகளையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கைகளைக் கொண்டு ஒருவரது குணத்தை அறியலாம் என்று எதிலோ படித்த நினைவு வந்தது. இந்தக் கைகளுக்கு உரியவன் எப்படிப்பட்டவன்? சுமிக்குத் தெரிந்த அளவில், அந்தக் கைகளின் வனப்புக்கும், பிரபு உள்ளத்தின் தன்மைக்கும் உள்ளளவும் ஒற்றுமை இல்லையே.

சுமார் ஒரு மணி நேரம் சென்றபின், ஓர் ஓட்டு வீட்டின் முன்னர் கார் நின்றது. பிரபு இறங்கி வந்து, சுமியின் பக்கம் கதவைத் திறந்தான். "இறங்கு... சுமி" என்று கை கொடுத்தான்.

இறங்குகையில் அவன் முகத்தைப் பார்த்த சுமித்ரா சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அவன் முகத்தில் என்னவோ இருந்தது. அது என்ன?

இருவருமாக வீட்டை அடைந்தனர். எங்கோ மாமரக் குயில் இனிமையாகக் கூவியது.

மனம் மென்மையுற, லேசான புன்னகையோடு அந்தப் பக்கம் திரும்பினாள் சுமித்ரா.

மெய்யாகவே நிறையக் காய்களுடன் மாமரம் ஒன்று அங்கே நின்றது. இதில் எங்கே மறைந்திருந்து இனிமையை வாரி வழங்குகிறது இந்தக் குயில்?

"வருகிறாயா சுமி," என்ற பிரபுவின் குரல் மாறுபட்டிருந்தது. முகமும் கூடத்தான்.

"என்ன?" என வினவினாள் சுமித்ரா.

"இந்த வேலைக்கார மடையனைக் காணவில்லை..." முன்னறையில் இருந்த வெள்ளை நிறத்துக் காகிதம் கண்ணில் பட்டது. அதைப் படித்ததும் அவன் கோபம் மிகுதியாயிற்று.

"கழுதை!" என்ற ஆத்திரத்துடன் அதை வீசி எறிந்தான்.

குனிந்து அதை எடுத்துப் படித்தாள் சுமித்ரா. அந்த வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்த தம்பதிக்கு ஒரு மகள் பக்கத்து ஊரில் இருக்கும் அவளுக்குப் பிரசவ காலம் வலியெடுத்து விட்டதாம். ஆள் அனுப்பி இருக்கிறாள். புதிய எசமானை வரவேற்கக் கணவனை நிறுத்தி விட்டுத் தாய் மட்டும் ஓடியிருக்கிறாள். அங்கு சென்று பார்த்தால் மருமகன் ஊரில் இல்லையாம். பிரசவமும் சற்றுச் சிக்கலாகத் தோன்றியிருக்கிறது. அவனுக்கோ சொல்லவும் பயம். புத்தம் புதிய எஜமானனின் குணம் தெரியாதே. ஆனாலும் வேலை முக்கியமா? மகள் முக்கியமா? தன் சதை ஆடவே. கடிதத்தை எழுதி வைத்து விட்டு, மகளிடம் சென்று விட்டான். அந்த கிராமவாசியின் எளிய நடையில் இந்த விஷயங்களை அறிந்ததும், சுமியின் மனம் உருகியது. "பாவம்!" என்றாள் வாய் விட்டு.

"என்ன பாவம்! இங்கே யார் செய்வதாம்? அவனவன் மகள், மண்ணாங்கட்டி என்று சொல்வதற்காகவா இவ்வளவு சம்பளம் கொட்டிக் கொடுக்கிறேன்!" என்றான் அவன் எரிச்சலோடு.

"வேறு வழி இல்லாமல்தானே சென்றிருக்கிறான்... 'பாவம்' என்று விட்டு விடுங்கள்." என்றாள் சுமி மீண்டும்.

இதன் விளைவாக அந்த ஏழை கஷ்டப்படக் கூடாதே என்று அவளுக்குக் கவலை.

"சரி வா, போகலாம்... இனி இங்கே என்ன செய்வது?" என்று எரிச்சல் தீராமல் திரும்பினான் பிரபு.

“போக வேண்டுமா?” என்று இழுத்தாள் சுமித்ரா.

“பின்னே இங்கிருந்து என்ன செய்வது? ஓட்டலில் சாப்பிடலாம் என்பதற்குக்கூட இங்கே ஓட்டல் இராது. இருந்தாலும் சாப்பாடு வாயில் வைக்க விளங்காது. உண்ணாமல் உயிர் வாழ நாம் தேவர்கள் இல்லையே!” என்றான் பிரபு பரிகாசமாக.

“நான் செய்கிறேனே!” என்றாள் சுமி. அவளுக்கு இங்கிருந்து செல்ல மனமில்லை. ஏனோ அங்கு அவ்வளவு வசதிகளோடு இருந்த மாளிகையைவிட ஒரு வசதியும் இல்லாத இந்த ஓட்டு வீட்டில் இதம் தெரிந்தது.

“நீயா? சை” என்று விட்டான் பிரபு.

“ஏன் எங்கள் வீட்டில் எத்தனையோ தரம் செய்திருக்கிறேனே,” என்றாள் சுமி ரோஷத்துடன்.

பிரபுவின் முகத்தில் கடுப்பு மறைந்து மெல்லப் புன்னகை மலர்ந்தது. “நீயா சமையல் செய்வாய்?” என்றான் சந்தேகம் போல-

“நானே தான்!” என்று பெருமையடித்தாள் சுமி.

“போச்சுடா, பிறகு என் வயிறு என்ன ஆவது?” என்று நடித்தான் பிரபு.

“என்ன ஆகிறதென்றுதான் பார்த்து விடலாமே,” என்று சிரிக்கத் தொடங்கியவள், சட்டெனக் குழம்பிப் போனாள்.

பிரபுவிடமா?

சுமித்ராவா?

இப்படியும் அவளால் அவனிடம் பேச முடிகிறதா? என்ன விந்தை இது?

அவளது குழப்பத்தைக் கவனியாதவன் போல, "என்ன சமையல் செய்யலாம்?" என்று விட்ட இடத்தில் தொடர்ந்தான் பிரபு.

"என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன்" என்று முணுமுணுத்து விட்டு, உள்ளே சென்றாள் சுமித்ரா.

'வீல்' என்ற சத்தத்துடன் இரு மடங்கு வேகத்துடன் அவனிடமே திரும்பி ஓடிவந்தாள்.

அவள் கத்துவதைக் கேட்டதும், பிரபு பதற்றத்துடன் ஓடி வந்தான்.

இருவரும் மோதிக் கொள்ள, அவன் அவளைப் பிடித்து நிறுத்தி, "என்ன?" என்று வினவினான்.

வெட்கமும் பயமுமாக, "எலி...எலி..." என்று அசடு வழிந்தாள் மனைவி.

பிரபு வாய்விட்டுச் சிரித்துவிட்டான். "எலிதானா? நான் என்னவோ என்று பயந்து போனேன்!" என்றான் புன்னகையோடு. "அந்தக் காலத்தில் புலியையே முறத்தினால் அடித்துத் துரத்தினாளாம் மறத்தி ஒருத்தி!" என்று கிண்டலாகத் தொடங்கினான்.

"என்னிடம் முறம் இல்லையே!" என்றாள் சுமித்ரா பதிலுக்கு.

"அடே! முறம் இல்லாமல்தான் இப்படி ஓடி வந்தாயா? பரவாயில்லை. இப்போது நாமே வந்து எலியை அடித்து வீழ்த்துவோம்" என்று கிளம்பினான் அவன்.

"முன் காலத்தில் புலியைக் கொன்று புலிப் பல்லை எடுத்து வந்து தாலி கட்டுவார்களாம் ஆண்கள்!" என்று தன் பங்கை எடுத்துவிட்டாள் சுமித்ரா.

"புலியை மறத்தி விரட்டுகிற காலத்தில், மறவன் புலிப் பல்லைக் கொண்டு வந்தான். நீ எலிக்கே இப்படிப் பயந்து ஓடுகிறாயே. புலிப் பல்லைக் கண்டால் மயங்கியே விழுந்து விடுவாய். அதனால் எலியையே கொன்று என் வீரத்தைக் காட்டித் தொலைக்கிறேன்!" என்று விளையாட்டாகப் பேசியபடி உள்ளே சென்றான் பிரபு.

சுமித்ராவும் அவன் பின்னோடு சென்றாள்.

ஜலதாரைப் பக்கமாக அமர்ந்து தன் சின்ன மணிக் கண்களை உருட்டிக் கொண்டு புன்னகை புரிந்தார் எலியார்.

அமர்ந்திருந்த விதத்தைப் பார்த்தும், பிரபுவுக்கு அதை அடிக்க மனம் வரவில்லை.

சுமித்ராவும் அதையே நினைத்தாளோ! முகம் கனிய, "அடிக்க வேண்டாம்" என்றாள்.

"பின்னே சமையல்... வாயில் மண்ணா?" என்றான் பிரபு.

"இல்லை இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று இதழ்களில் ஓர் இளம் புன்னகையுடன், முன் அனுபவத்தின் காரணமாக, எச்சரிக்கையோடு மெல்ல அடியெடுத்து வைத்து முன்னேறிச் சமையலறைக்குள் சென்றாள் சுமித்ரா.

அங்கே கிட்டத்தட்ட தேவையான எல்லாச் சாமான்களுமே இருந்தன. காய்கறிகள் கூடப் புத்தம் புதிதாக இருந்தன. அண்டாவிலும் பானைகளிலும் நீர் ஒருபுறமாக மண் பானைத் தண்ணீர் குளிர்ச்சியாக இருந்தது.

சேலையை வரிந்து கட்டிக் கொண்டு வேலையில் மும்முரமாக இறங்கினாள்.

சற்று நேரத்தில் பிரபு மீண்டும் உள்ளே வந்தான். முகத்தில் திருப்தி நிலவியது. "நான் ஏதாவது உதவி செய்யட்டுமா?" என்று கேட்டான்.

"உங்களால் என்ன செய்ய முடியும்?" என்று ஜாடையாகப் பார்த்தாள்.

"ஊஹூம்ஹூம். இந்த மஞ்சள் எல்லாம் அரைத்துக் கொடுப்பேன் என்று நினைத்தாயா? ம்ம்... காய்வெட்டித் தரலாம். அதில் என் ஆண்மைக்கு இழுக்கு ஏதும் வந்து விடாது. இந்த வாழைக்காயை வெட்டட்டுமா?"

"வாழைக்காயை வெட்டினால் கறை பிடிக்குமே..." என்று அவனது சுத்தமான கைகளை இரக்கத்துடன் பார்த்தாள் சுமித்ரா.

"அதெல்லாம் நானே செய்து கொள்ளுவேன். நீங்கள் போங்கள்."

"போய் என்ன செய்வது?"

"யாராவது தெரிந்தவர்களைப் பார்த்து வருவது."

"இந்தப் பட்டிக்காட்டில் எனக்குத் தெரிந்தவர் யார்? இப்போதுதான் புத்தம் புதிதாக இதை வாங்கினேன்."

காதில் விழுந்ததை மனதில் வாங்காமல், "காடுகளி ளெல்லாம் சுற்றிப் பார்த்து வருவது." என்று உலை நீரை அடுப்பில் ஏற்றினாள்.

வேலைகளைச் செய்து முடிப்பதற்குள், சுமித்ரா வியர்த்து விறுவிறுத்துப் போனாள். கொஞ்ச நாள்களாக வேலையே செய்யாமல் உடம்பு துருப்பிடித்துப் போய் விட்டது போலும். வேலை முடிந்து உணவானதும் அப்பாடி என்று சாய்ந்து விட்டாள்.

மாலை வெயில் கொஞ்சம் சூடு தணிந்ததும், வீட்டுத் தோட்டம் துரவைப் பார்க்கலாம் என்று பிரபு சுமியை அழைத்தான்.

பின்புறமாகப் பெரிய தோப்பு இருந்தது. சுற்றிலும் பல்வகை மரங்கள். நட்ட நடுவில் ஒரு கிணறு. கிணற்றருகில் சில தென்னை மரங்கள். தென்னை மரத்தின் ஓலையில் இரு பச்சைக் கிளிகள்

கூடக் கொஞ்சிக் கொண்டிருந்தன. ரம்மியமான சூழ்நிலை. அந்தப் பகட்டுக்கு இந்த எளிமை எவ்வாறு இனிமை தருகிறது!

பிரபுவின் மூச்சு சுமியின் கழுத்தில் பட்டது. அவள் தோளில் கை வைத்துச் சொன்னான். "பார்த்தாயா சுமி! காணி நிலம், அதன் நடுவே நன்மாளிகை. கேணி, கேணி அருகில் தென்னை மரம். இனி இந்தப் பத்தினிப் பெண் என் பாட்டில் கலந்திட வேண்டுவதுதான் மிச்சம். பிறகு நம் கூட்டுக்களியினில்..."

பச்சைத் தண்ணீரைத் திடுமென முகத்தில் வாரி அடித்தது போலத் துடித்துக் கொண்டு விலகினாள் சுமித்ரா.

பளிச்சென்று எல்லாம் விளங்கியது. புதிய எசமான், புதிதாக வாங்கியது. பிரபுவின் முகத்தில் குறுகுறுப்பு எல்லாமே விளங்கிப் போயிற்று.

ஆக. ஆகக்கூடி எல்லாம் இவ்வளவுதானா? இம்மெனுமுன் அவன் காலில் விழுந்த எல்லாப் பெண்களையும் போல இந்தச் சுமியை எண்ணிவிட்டான் போலும்.

பட்டுச் சட்டை அணிந்தாலும், பருத்தி ஆடை பூண்டாலும், உள்ளே இருப்பது இதே பிரபுதான் - ஒழுக்கம் கெட்ட காமாந்தகாரப் பிரபுதான். இவ்வளவு கூடப் புரிந்து கொள்ள முடியாத முட்டாளா இந்த சுமித்ரா?

அவனை வெறித்துப் பார்த்துவிட்டுப் படபடவென்று வீட்டினுள் சென்று விட்டாள் சுமித்ரா. அதன்பின், தன் காட்டினுள்ளும் புகுந்து கொண்டாள்.

அன்றே இருவரும் வீடு திரும்பி விட்டார்கள். திரும்பியதும், நடராஜ் என்ற ஒருவர் அம்மாவுக்கு டெலிபோன் செய்ததாகப் பணியாள் கூறினான்.

பிரபுவின் பார்வை கூர்மையாகத் தன்மீது படிவதைப் பிடிவாதமாகக் கவனிக்க மறுத்துத் தன் அறைக்குள் சென்றாள் சுமி.

# 8

அன்று காலையில் தோட்டத்தைச் சுற்றுகையில் சுமித்ரா வித்தியாசமாக ஒன்று கண்டாள்.

அது ஒரு குழந்தை. ரொம்பவும் சின்னதல்ல. மூன்று அல்லது நான்கு வயது இருக்கக்கூடும். திராட்சை விழிகளுடன், உருண்டை உருண்டையாகக் கைகால்களுடன், வெகு அழகாக இருந்தது. புன்முறுவலுடன் சுமி அழைத்ததும் அருகில் வந்து விட்டது. "என்னைத் தூக்கேன்!" என்று கைகளைத் தூக்கியது.

சிறுமியைத் தூக்கிக் கொண்டு, சுமித்ரா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

'பென்'ஸின் டிரைவர் ஓடிவந்தான். "இறங்கு கீழே." என்று குழந்தையை அதட்டினான்.

"தங்கச்சி மகள் அம்மா. இங்கே தோட்டம் பார்க்கணுமாம். ஒரே அழுகை. அதுதான் இட்டாந்தேன்" என்று பதற்றத்துடன் சமாதானம் சொல்லி விட்டுச் சிறுமியிடம், "இறங்கடி கீழே, அம்மா தோளில் மரியாதை இல்லாமல் ஏறிக் கொண்டு!" என்று அதட்டினான்.

"சரி சரி இருக்கட்டும் நீ போ" என்று அவனை அனுப்பினாள் சுமித்ரா.

பிறகு அந்தச் சிறுமியோடு தோட்டத்தில் சுற்றலானாள்.

சற்று நேரத்தில் அந்த மலர்களைப் பார்த்து அலுத்து விட்டாள் குழந்தை. "நாம வெள்ளாடலாமா?" என்று மழலை மாறாத குரலில் மிழற்றினாள்.

"என்ன வெள்ளாட்டு?" என்று நகைத்தாள் சுமித்ரா.

"எங்கள் 'ஈச்சர்' (டீச்சராம்) ஒரு வெள்ளாட்டு சொன்னாங்க." என்று வெகு நேரம் யோசித்தது. அந்த விளையாட்டு நினைவு வரவில்லை போலும், "நாம்ப வேற வெள்ளாட்டு வெள்ளாடலாம்." என்று முடிந்து விட்டது.

"ஓடிப் பிடித்து விளையாடலாமா?" என்று சுமித்ரா பணிவோடு கேட்டாள்.

கண்ணை உருட்டிக் கொண்டு சற்று சிந்தித்து விட்டு, "உம், நான் பிடிச்சா ஆப்டுகிடணும்" என்று கண்டிஷன் போட்டது பிள்ளைச் செல்வம்.

"சரி" என்று சிரித்தாள் சுமித்ரா.

உடனே தானே பிடிப்பதாகச் சொல்லிவிட்டாள் சிறுமி. சுமித்ராதான் அகப்பட்டுக் கொள்ளுவாளே... தைரியமாகக் காட்ச்சர் ஆகி விட்டாள்.

வீட்டின் முன் பக்கத்தில் சிறிதான அல்லிக் குளம் - செங்குளமாக ஒன்றிருந்தது. அதைச் சுற்றி சுமித்ரா ஓட வேண்டும். ஒரு சுற்றில் விட்டுவிட வேண்டும். பிடித்ததற்குப் பரிசு, சிறுமியைத் தூக்கிப் போட்டுப் பிடித்து முத்தமிட வேண்டும்.

பனிக்கட்டிக் கன்னத்தில் சுமியின் இதழ்கள் அழுந்தியதும், குபீர் என்று சிரிப்பாள் குழந்தை. குழந்தையின் சிரிப்புடன் தானும் இணைந்து கொள்வாள் சுமி.

சுமித்ராவுக்கே சிரிப்பது வெகு ஆனந்தமாக இருந்தது. மனம் விட்டு சிரித்து எவ்வளவு நாளாகி விட்டது! இன்று இந்தக் குழந்தையோடு குழந்தையாக அவளும் பொங்கிப் பொங்கிச் சிரித்தாள்.

சற்று நேரத்தில் ஒரு பணியாள் வந்து. "அய்யா கூப்பிடுறாங்கம்மா" என்று உரைத்தான்.

சுமித்ரையின் சிரிப்பு உதட்டிலேயே மறைந்தது.

டிரைவரை அழைத்துக் குழந்தையை ஒப்புவித்தாள்.

கொஞ்சம் பலகாரங்கள் கொண்டு வந்து குழந்தையிடம் தருமாறு, வேலையாளிடம் பணித்துவிட்டு, மெல்ல மாடிக்குச் சென்றாள்.

அவன் ஆபீஸ் அறையில் கிரில் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

அறை வாயிலில் நின்று, "அழைத்தீர்களாமே?" என்று கேட்டாள் சுமித்ரா.

மனைவியின் குரல் கேட்டதும், திரும்பி வேகமாக அவளிடம் வந்தான் பிரபு. "சுமி! கிஸ் மி" என்றான் பரபரப்புடன்.

சற்றுத் திகைத்துவிட்டுத் திகைப்பு அடங்கியதும், வெறுப்பான பார்வையுடன் திரும்பினாள் சுமித்ரா.

"சுமித்ரா! கிவ் மி எ கிஸ்!" என்றான் அவன், குரலில் அழுத்தம் கொடுத்து.

அவள் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றாள்.

"சொன்னது கேட்கவில்லை?" என்று அதட்டினான் அவன்.

"சொன்னது கேட்டது. ஆனால் நடக்காத விஷயம் பேசுகிறீர்களே."

"எது நடக்காது?" வெளிப்புறமாகக் கையைக் காட்டி - "சற்று முன் நடக்கவில்லை? யாரோ ஒரு குழந்தையைக் கன்னம் கன்ற முத்தமிடுகிறவளுக்குக் கொண்ட கணவனை முத்தமிடத் தெரியாதா?"

தைரியமாக அவனை ஏறெடுத்துப் பார்த்தாள் சுமித்ரா. "தெரியாமல் இல்லை. ஆனால் பிடிக்காதது."

"சொன்னதைச் செய் சுமீ," என்றான் அவன் ஆத்திரமாக.

"நெவர்"என்ற ஒற்றை வார்த்தை பளீரென்று விழுந்தது.

"சொன்னால் கேட்க மாட்டாய்?" என்று கையை ஓங்கினான் பிரபு.

வெறித்துப் பார்த்துக்கொண்டு அவள் அசையாமல் நின்றாள்.

ஓங்கிய கை தானாகக் கீழே விழுந்தது. "இரவு பகல் எந்நேரமும் இது என்ன வெறுப்பு சுமி?" என்றான் எரிச்சலுடன்.

"நீங்கள் தேடிக் கொண்டதுதானே,"

"நீயும் தானே கழுத்தை நீட்டினாய்?"

"நான் தந்தைக்கு அடங்கியவள். என்னால் இயன்ற மறுப்பைத் தெரிவித்தேன். நீங்கள்தான் சற்றும் அதை மதிக்க வில்லையே." சமயம் வாய்த்தது என்று குத்தினாள் சுமித்ரா.

"நீதான் வேறு யாரையும் காதலிக்கவில்லையே! பிறகு என்னை..."

"என்ன அகம்பாவம் உங்களுக்கு! ஒரு பெண் வேறு யாரையும் விரும்பவில்லை என்றால், உங்களை விரும்பியாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?"

"மற்ற எவளையும் பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால். உன் உள்ளம் என்னை விரும்பியாக வேண்டும். உன் மனதில் நான்தான் இடம் பெற்றாக வேண்டும்." என்றான்

“மனம்! உள்ளம்! நீங்கள் கூடவா இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுகிறீர்கள்?” சுமித்ரா வெகுவாக வியந்தாள். “நாலுபேர் மத்தியில் சொந்தமாக்கிக் கொண்ட உடல்தானே உங்களுக்கு முக்கியம்? அதுதான் தட்டாமல் கிடைக்கிறதே. பிறகு என்ன? உள்ளம், மனம் என்று கொம்புத் தேனுக்கு வீணே ஆசைப்படாதீர்கள். தோல்விதான் கிட்டும்” என்று ஏளனமாக உரைத்துவிட்டு நகர்ந்தாள் சுமித்ரா.

“அதையும் பார்க்கலாம்” என்று சவால் விட்டான் பிரபு.

பிரபு விடாக்கண்டன். எதிலும் தோல்வியைப் பணிவுடன் ஏற்பவன் இல்லை. தொழிலில் அவனது வெற்றிகளை எதிராளிகளே பாராட்டுவார்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் வரை ஓய மாட்டான்.

இப்போது சுமித்ராவின் மனதை மாற்றியே தீருவது என்று உறுதி கொண்டான்.

வெறும் கிராமத்து எழிலில் அவ்ளது மனம் நெகிழ்வதைக் கண்டாள். அதை விடவும் அழகிய இயற்கை வனப்புகளிடையே அவளை அழைத்துச் சென்றால், இளகாமலா போய் விடுவாள்? அவள் மனமோ பெண் மனம். அதிலும் ரசனைமிக்க மென்மையான மனம். லேசாக இளகிவிட்டால் பிறகு விருப்பம் போல வளைக்கத் தெரியாதவனா, இந்தப் பிரபு?

முதலில் காஷ்மீரை நினைத்தான். ஆனால் அங்கே அக்டோபர் சீசன்தான் அழகில் சிறப்பாக இருக்கும். இப்போது ஊட்டிதான் சிறப்பு. மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

. தன் வழக்கம்போலவே சுமித்ரா ‘ஏன்?’ என்று கேட்கவும் இல்லை. வேண்டாம் என்று மறுக்கவுமில்லை. எதிலும் ஒன்றாத

பாவத்துடன், துணிமணிகளை எடுத்து வைத்து விட்டுத் தயாரானாள்.

ஆனால் அந்த மேற்கு மலையின் எழிலில் மயங்காத மனம் எது?

மேட்டுப்பாளையத்திலிருந்து மலை மீது ஏறத் தொடங்கியது கார்.

ஏற ஏறச் சுமியின் மனம் தன் கூட்டிலிருந்து வண்ணத்துப் பூச்சியாக வெளிவந்து சிறகடித்தது. வானளாவிய பாக்கு மரக் காட்டை அதிசயத்துடன் பார்த்தாள். இயற்கை கொஞ்சும் மலை முகட்டைப் பார்த்துக் கண்ணை விரித்தாள். கரும்பச்சை நிறத்துப் பள்ளத்தாக்கும் அவள் கண்கள் கவர்ந்தது. பக்கத்தில் ரயில் செல்வதைப் புன்னகையுடன் ரசித்துப் பார்த்தாள்.

பிரபுவின் முகத்தில் திருப்தி பரவியது. ஆயினும் அவன "சுமி" என்றழைத்து ஏதோ சொல்லத் தொடங்கியபோது, சுமியின் கண்கள் இறுகி விட்டன. 'எவ்வளவு நேரம்' என்று உள்ளூர நினைத்துக் கொண்டான் அவன்.

கூடலூரில் ஒரு ஹோட்டலில் லேசாக ஏதோ சாப்பிட்டார்கள்.

டிரைவரிடம் காரை விட்டுவிட்டு, ரயிலில் ஏறி இறங்கினார்கள்.

எல்லாமே சுமிக்கு ரசனையாக இருந்தது.

கடைசியாக ஊட்டியை அடைந்தபோது சட்டென இருட்டிக் குளிர்ந்து விடடது.

ஊட்டியில் 'லான்ட்ஸில் சூட்' ஒன்று ஏற்பாடு செய்திருந்தான் பிரபு.

காரில் இருந்து இறங்கியதும் குளிரக் குளிர ஓடினார்கள்.

சூடாகச் சாப்பிட்டு விட்டுப் படுத்தார்கள்.

காலை வேளையில் கண் விழித்ததும் சுமிக்குத் துறு துறு என்றது. அவன் கையில் மணியைப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

மணி ஏழு.

சென்னையின் ஐந்தரை போல அப்போதுதான் பொழுது புலரத் தொடங்கியிருந்தது. எழுந்து அவசரமாகப் பல்லைத் தேய்த்துவிட்டுப் பின்பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

இவ்வளவு அழகு ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறதே என்று வியந்து கொண்டே குறுக்கும் நெடுக்கும் நடந்தாள்.

உடலை ஊடுருவிய குளிர் வெகு சுகமாக இருந்தது. பெரிய பெரிய பூக்களையும் தாமரைப் போலத் தரையில் வரிசையாக வளர்ந்த குரோட்டன்சையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்ட வில்லை அவளுக்கு.

பிரபு விழித்திருப்பானோ என்று தோன்றியது. அவன் தேடி வரும்படியாக வைத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்தாள்.

பிரபு இந்த இனிமையைக் கெடுக்கும்படியாக ஏதாவது சொல்லிவிடக் கூடாதே என்று எண்ணி, உள்ளே சென்றாள்.

பிரபுவும் விழித்திருந்தான்.

டீபாயில் காபி ட்ரே இருந்தது.

"வெளியே வாக்கிங் போனாயா சுமி?" என்று இதமான குரலில் கேட்டான் பிரபு.

லேசாகக் கலைந்த தலை, குளிரில் சிவப்பேறிய கன்னங்கள், கள்ளுண்ட வண்டின் மயக்கத்துடன் இரு விழிகள்,

இதழோரத்தின் உயிர்ப்பு - எல்லாமே பிரபுவின் கன்னத்தில் சிக்கின உதடுகளில் வெற்றிப் புன்னகை பரவியது.

கைவிரல்களை ஒன்றுடன் ஒன்று சேர்த்துத் தேய்த்துச் சூடாக்கியபடி உள்ளே வந்தாள் சுமித்ரா.

"இங்கே வா, நான் தேய்த்து விடுகிறேன்." என்று அழைத்தான் பிரபு.

"இல்லை இல்லை. நான் தேய்த்துக் கொண்டதிலேயே சரியாகி விட்டது" என்று காபியைக் கலந்தாள். "வெளியே உலாவப் போனேன். பார்க்குமிடம் எல்லாம் அம்மம்மா, என்ன அழகு!" ரசனையோடு கூறியபடி, ஒரு கப் காபியை ஸாசரில் வைத்து அவனிடம் கொடுத்தாள்.

"இதை விடவும் அழகான இடங்கள் கூட இங்கே உண்டு."

"ம்ம்ம்...?"

"மெய்தான். இன்று அழைத்துப் போகிறேன் பார்" என்றான் பிரபு.

பொடானிகல் கார்டனில் காலையெல்லாம் சுற்றினார்கள். லேக்கில் படகுவிட்டார்கள். அந்த லேக்கின் அமைப்பே சுமிக்கு விசித்திரமாக இருந்தது. பொதுவாக ஏரி என்றால் வட்டமாக இருக்கும் என்று அவள் நினைப்பு. இது எல் வடிவில் இருந்ததை வியந்தாள்.

மாலையில் கடைசியாகச் சுமியைத் 'தொட்ட பெட்டா'வுக்கு அழைத்துச் சென்றான் பிரபு.

அவனுடைய திட்டத்தின் கடைசிப்படி அதுதான்.

மெல்ல மெல்ல இளகி வந்திருக்கும் சுமித்ராவின் - மனதை அங்கே முழுக்கத் தன்வசமாக்கிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தான்.

தொட்டபெட்டா செல்லும் வழியில் அங்கங்கே தேயிலைச் செடிகளும், யூகலிப்டஸ் மரங்களும், சுமியின் கண்களைக் கவர்ந்தன. புன்னகையுடன் பிரபுவுக்குச் சுட்டிக் காட்டினாள்.

பிரபு காரை ஓரமாக நிறுத்திவிட்டு அங்கே தேயிலை பறித்த ஒரு பெண்ணிடம் இரு தேயிலை மொக்குகளை வாங்கி வந்தான்.

ஆவலுடன் அதை வாங்கி வாசம் பார்த்துவிட்டு, உதட்டைப் பிதுக்கினாள் சுமி.

பிரபு சிரித்தான்.

அருகில் நின்ற யூகலிப்டஸின் இலையைப் பறித்து நீட்டினான். "இதை முகர்ந்து பார், சரியான வாசம் வரும்," என்றான் புன்னகையோடு.

மூக்கைச் சுருக்கி, அவன் கையைத் தள்ளிவிட்டாள் சுமி. "எனக்கு அந்த வாசமே பிடிக்காது." சூழலின் எழிலை விழுங்கிய கண்கள் நடைபாதைப் பக்கமாகப் பாறைப்பிளவில் பூத்திருந்த பூவில் நிலைத்தன.

சிரித்துக்கொண்டே சென்று அதையும் பறித்து வந்தான்.

அதை ஆவலுடன் அவள் அழகு பார்ப்பதை யூகலிப்டஸ் மரத்தின் மீது சாய்ந்து நின்று ரசித்தான்.

"ஏன் ஸார், தொட்டபெட்டாவில் உச்சியில் காபி கிடைக்குமா?" என்று யாரோ பாதசாரி கேட்டார்கள்.

பிரபு புன்னகை மாறாமல், "கிடைக்கும்" என்று பதிலளித்தான்.

பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பிய சுமி திகைத்துப் போனாள்.

மரத்தில் இலகுவாகச் சாய்ந்து இயல்பான புன்னகையுடன் பேசிய பிரபு.

கண் கொட்டாமல் அவனைப் பார்த்தாள். சட்டெனக் குழப்பத்துடன் பூவில் முகம் புதைத்தாள். இதே பிரபுவை அவள் முன்னே பின்னே பார்த்தது இல்லையா? பின்னே ஏன் இந்த மனக் கிளர்ச்சி?

தொட்டபெட்டாவை அடைந்ததும், மீண்டும் உற்சாகம் வந்து விட்டது அவளுக்கு.

"தென்னிந்தியாவிலேயே உயரமான இடத்தில் நிற்கிறோம் சுமி!" என்ற கணவனுக்கு, "நான் படித்தது நினைவிருக்கிறதே," என்று புன்னகையோடு பதில் தந்தாள்.

"அதோ அங்கிருந்துதான் ஊட்டிக்குக் குடி தண்ணீர் வருகிறது..." சுமியின் தோளை இயல்பாகத் தொடுவது போல் அணைத்துக் கொண்டு கூறினான் பிரபு.

கூர்ந்து பார்த்து விட்டு, "பெரிய குழாய் மாதிரித் தெரிகிறது." என்றாள் சுமி.

"அந்தப் பக்கம் வா" என்று கையை விலக்காமலே அவளை அழைத்துச் சென்றான் பிரபு.

"அந்த மலையைப் பார் சுமி. அந்த மேகம் அந்த மலைமேல் உட்கார்ந்து ஓய்வு எடுப்பது போல இல்லை?"

பேச்சோடு பேச்சாக அவன் கை மெல்ல உயர்ந்து சுமித்ராவின் தோளின் செழுமையை மெல்ல வருடியது.

"ஆமாம்" என்று அந்த மஞ்சுக் கூட்டத்தின் எழிலை ரசித்த சுமித்ராவுக்கு நெஞ்சை ஏதோ கவ்விப் பிடித்தது.

சற்று முன் கண்ட பிரபுவின் தோற்றம் அப்படியே மனக்கண்ணில் தோன்றியது.

அந்தப் பிரபுவின் மெய்யான காதல் அணைப்பில் நின்று இதைப் பார்த்தால் இந்தக் கிளுகிளுப்பான சீதோஷ்ணத்தில் எவ்வளவு இன்பமாக இருக்கும்!

சட்டென உடல் சிலிர்க்க, சுமித்ரா நிமிர்ந்தாள். அவன் கை... மெல்ல மெல்ல அவள் தோளை வருடி, அதன் செழுமையை அழுத்தியது. இதோ அணைக்கிறான். இது நிலையற்ற காமமாக இருந்தால் என்ன? என் உடம்பின் ஒவ்வோர் அணுவும் அவனது அணைப்புக்காகத்தானே இப்போது ஏங்குகிறது? ஏன் அதை மறுக்க வேண்டும்? திரும்பு. அவன் தோளில் முகம் புதைத்து இந்த அணைப்பை ஏற்றுக் கொண்டாள்.

சுமி மெல்லத் திரும்புகையிலேயே குப்பென்று ஒரு நினைவு. 'இந்தப் பிரபு இதே போல் எத்தனை பெண்களை இங்கு அழைத்து வந்திருப்பான்?' கண்ணில் நீர் மல்க, அவன் பிடியிலிருந்து விலகினாள். "போகலாமா?" என்றாள் கண்ணீரை உள்ளடக்கி.

"இன்னும் கொஞ்ச நேரம் நின்று பார்த்துவிட்டுப் போகலாம் சுமி" என்றான் அவன் கையை நீட்டி அவளைத் தொட முயன்றபடி.

அவசரமாக நகர்ந்து நின்றாள். "எதைப் பார்க்க?"

ஆச்சரியத்துடன், "சுற்றிலும் பார் சுமி! பார்த்து ரசிக்க எத்தனை இருக்கின்றன. இப்படிக் கேட்கிறாயே?" என்றான்.

சுமித்ரா சுற்றிலும் பார்த்தாள்.

சற்று முன் கண்ட எழிற் கோலங்கள் ஏன் அழகிழந்து போயின? "இல்லை, ரசிப்பதற்கு எதுவுமே இல்லை" என்று சொல்லும்போதே, குபுக்கென்று கண்ணீர் வழிந்து விட்டது. முன்றானையை வாயில் அடைத்தபடி, ஓடிச் சென்று, காரில் விழுந்து விம்மினாள்.

யோசனையோடு பிரபு மெதுவாக வந்து, காரில் ஏறும்போது, அங்கே இன்னொரு கார் வந்து, சற்றுத் தள்ளி நின்றது.

"ப்ரபூ" என்று கூவியபடி அதிலிருந்து குதித்தாள் ஒரு பெண்.

அவள் லில்லி.



9

லில்லியின் குரலைக் கேட்டதும், சுமித்ரா பதறிப் போனாள். செய்வதறியாமல் பரக்க விழித்தாள்.

ஒரே கணம் தான்.

மறுகணமே பரபரப்புடன் கண்களைத் துடைத்தாள். நனைந்து ஒட்டியிருந்த இமைகளை விரல்களால் வேகமாக வருடிப் பிரித்து விட்டாள். வலியப்புன்னகையை வரவழைத்துக் கொண்டு காரின் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள்.

சுமிக்கும் லில்லிக்கும் இடையே பிரபு நின்றது இதற்கெல்லாம் வசதியாற்று.

ஓரக்கண்ணால் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்த பிரபுவுக்கு ஊமையடியாக நெஞ்சில் வேதனை உண்டாயிற்று.

தன்னோடு வந்தவர்கள் எல்லாரும் இறங்கி முடிக்கு முன், லில்லி பிரபுவிடம் ஓடி வந்து விட்டாள்.

"பிரபு, பிரபு!"

வெகு அருகில் வந்த பிறகுதான் காரினுள் அமர்ந்திருந்த சுமித்ராவைப் பார்த்தாள். முகம் சுருங்கியது. "ஓ, நீ கூட

வந்திருக்கிறாயா?" என்று உதாசீனமாகக் கேட்டாள். சுமித்ரா கலகலவென்று நகைத்தாள். "நான் இல்லாமலா? சக்தியில்லாமல் சிவம் தனியே செல்லுமா? நான் இல்லாமல் இவர் வருவாரா?" என்றாள் உரிமையுடன்.

"பிரபுவுக்கு இது மிகவும் பழக்கமான இடம். சென்ற வருடம் என்னை இங்கே அழைத்து வந்தார். தெரியுமா உனக்கு?" வேண்டுமென்றே வன்மனத்துடன் கூறினாள் லில்லி.

நெஞ்சில் சுருக்கென்று தைத்த வேதனையை மறைத்தபடி, "உன்னை மட்டுமா? இன்னும் பலரை அழைத்து வந்திருக்கிறாரே. அவருடைய தாராள குணம்தான் எல்லாருக்குமே தெரியுமே. இல்லையா மிஸ்டர் சுதிர்?" என்று சாட்சிக்குச் சுதிரை அழைத்தாள் சுமித்ரா.

லில்லியுடன் நாலைந்து பேர் வந்திருந்தார்கள். ஒருவன் சுரேஷ்.

கூடவே அந்தச் சுதிரையும் சில பார்ட்டிகளில் சுமித்ரா கண்டதுண்டு. அவனுக்குப் பிரபு ஏதோ பண உண உதவி செய்ததைச் சுந்தரியின் லொடலொடப்பில் அறிந்திருந்தாள். இப்போது அவசரத்துக்கு ஏதாவது பேசி உதவ மாட்டானா என்ற எண்ணத்தில் அவனைப் பேச்சில் இழுத்தாள்.

அவன் அவசரமாக, "ஆமாம், ஆமாம்" என்றான்; வேறு ஒன்றும் கூறத் தோன்றாமல் விழித்தான். பாவம் சிறு வயது.

ஆனால் சுமித்ராவுக்கு அந்த இரு 'ஆமாம்'களே போதுமானதாக இருந்தது. வெள்ளிச் சதங்கை குலுங்குவது போலக் கலீர் என்று சிரித்தாள். "மிஸ்டர் சுதிர்! நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஆமாம் என்கிறீர்களே அதைக் கேட்டதும் எனக்குப் பழைய நினைவு ஒன்று வந்துவிட்டது. சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்கு ஒரு

பெரியம்மா, அவருக்கு ஒரு பிள்ளை. ரேடியோவில் வரும் விளம்பரங்களை நக்கல் செய்வதே அவன் வேலை. ரேடியோவில் ஒரு விளம்பரம் ஏதோ டானிக்குக்காக, 'உங்களுக்குச் சோர்வாயிருக்கிறதா, பலவீனமாயிருக்கிறதா, அப்படியிருக்கிறதா இப்படியிருக்கிறதா' என்று வரிசையாகக் கேட்டுப் பிறகு, 'அப்படியானால் இந்த டானிக்கைச் சாப்பிடுங்கள்!' என்று ஒருவர் சொல்லுவார். அன்று அம்மாதிரி ஒவ்வொரு கேள்விக்கும் இவன் கேலியாக ஆமாம் போட்டுக் கொண்டே வந்தானா, இறுதியாக 'நீங்கள் கர்ப்பிணியாக இருக்கிறீர்களா?' என்ற கேள்விக்கும் தன்னையறியாமல் 'ஆமாம்' போட்டு விட்டான். அவ்வளவுதான், வீட்டில் ஒரே சிரிப்பு! என் பெரியப்பா கூடக் கொஞ்ச நாள் அவனை 'ஏ ப்ரக்னன்ட் பாய்' என்று தான் கூப்பிடுவார்'' என்று சொல்லிச் சிரித்தாள்.

எல்லாரும் ஓகோ என்று சிரித்தனர்.

பிரபு வியப்புடன் மனைவியைப் பார்த்தான். அவனுடைய 'ஜெம்செட்'டில் இந்த மாதிரி ஜோக்குகள் சொல்வது சகஜம் தான். அந்தச் சமயங்களில் மரியாதைக்காக ஒரு புன்னகையை மட்டும் சிந்திவிட்டு ஒதுங்கி விடுவது சுமியின் பழக்கம்.

இன்று அவளே கலகலக்கிறாளே, அதுவும் சற்று முன் அப்படிக் கண்ணீர் சிந்திவிட்டு.

கவனிக்கையிலேயே சிரிப்பின் நடுவே அவள் குரலில் சிறு ஏக்கம் கலப்பது காதில் விழுந்தது. அவளது கண்கள் அலைப்புறுவதையும் கண்டான்.

அதிகம் தாங்க மாட்டாள் என்று நினைத்தான்.

"உள்ளே நகரு சுமி! இனி நாங்கள் வரட்டுமா?" என்று விடைபெற்றவாறு கார்க் கதவைத் திறந்தான்.

"பறக்கிறீர்களே பிரபு. எங்களைக் கண்டால் அவ்வளவு வெறுப்பாயிருக்கிறதா இப்போது?" என்று அழகுகாட்டினாள் லில்லி.

"சிவபூஜையில் கரடி புகுந்தால், சந்தோஷம் அடைவார்களா?" என்று சீட்டில் அமர்ந்தான் பிரபு.

"சிவ பூஜையா? தேவி பூஜையா?" என்று விட் அடித்தான் சுரேஷ்.

"கண்டுபிடிப்பதற்குப் பிரமாதமான புத்தி தேவையில்லை." என்றான் பிரபு அலட்சியமாக.

லில்லி விடுவதாயில்லை. "ஏன் பிரபு, நம்பர் த்ரீ தானே. வழக்கமான ஸீட் தானே?" அவளுக்குச் சுமித்ராவின் முன்னிலையில் பிரபுவிடம் தனக்கிருந்த பந்தத்தை நிலை நாட்டியாக வேண்டும்.

பிரபு கண்களை மூடித் திறந்தான்; "உன் வழக்கமான ஸீட் எது என்று எனக்குத் தெரியாது" என்றான் இகழ்ச்சியாக. இக்னிஷன் கீயை நுழைத்துத் திருப்பியபடி, "அதோடு இன்னொன்று, அங்கேயும் நீ வந்து எங்களைத் தொல்லை பண்ண வேண்டாம்." என்றான்.

லில்லியின் முகம் சுண்ணாம்பாக வெளுப்பதைக் காண நிற்காமல் கார் கிளம்பி விட்டது.

வழியெல்லாம் சுமித்ரா தலை நிமிரவே இல்லை. உதட்டின் மேல் அழுந்திய பற்களுடன், இறுக மூடிய கரங்களுடன், அந்தக் கரங்களின் மீது படிந்த பார்வையுடன், அசையாமல் இருந்தாள்.

காரை நிறுத்திவிட்டு வந்து அறைக் கதவைத் திறந்தான் பிரபு. சுமித்ராவின் கண்கள் தாமாகக் கதவின் அருகே நோக்கின.

நம்பர் 3.

அவ்வளவுதான். இதுவரை அடக்கி வைத்திருந்த கண்ணீர் வெள்ளமாய்ப் பீரிட்டு வரக் கட்டிலில் குப்புற விழுந்து பரிதாபமாக விம்மி விம்மி அழலானாள்.

வராண்டா பக்கம் திரும்பி ஒரு முழு சிகரெட்டைப் புகைத்துவிட்டு உள்ளே வந்தான் பிரபு.

இன்னமும் சுமியின் உடல் குலுங்கியது நிற்கவில்லை.

அருகில் வந்து உட்கார்ந்து, அவள் முதுகில் மெல்லத் தட்டிக் கொடுத்தான்.

அழுது அழுது சோர்ந்து அப்படியே உறங்கிப் போனாள் சுமித்ரா.

கையில் இன்னொரு சிகரெட்டுடன் சிந்தனையில் ஆழ்ந்தான் பிரபு.

"எங்கே என்ன தவறு நேர்ந்தது? எப்படி நேர்ந்தது?"

பிரபுவின் திட்டங்கள் இதுவரை தோல்வி அடைந்தது இல்லை. இது தோல்வி என்று அவன் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லைதான். ஆயினும், வாழ்விலேயே முதன் முறையாக, அடுத்த முயற்சி என்ன என்று புரியாமல் விழித்தான்.

உலகத்தையே அவள் காலடியில் வைக்க அவன் தயாராக இருந்தும், அவள் ஏன் முகம் திருப்புகிறாள்?

சென்னைக்கு வந்து சேர்ந்த பிறகு வாழ்க்கை பழைய மாதிரியே தொடர்ந்தது.

ஒரே ஒரு மாறுதல் என்னவென்றால், சுமித்ரா சோகமாக இருந்தாள்.

அவன் அழைத்தால் கண் கலங்கினாள். தொட்டால் வேண்டாம் என்றாள். மீறினால் விம்மினாள்.

பிரபு திணறிப் போனான்.

பிரபுவும் சளைக்காமல் ஏதேதோ பேசிப் பார்த்தான். சுமித்ரா பதில் பேசுவதே இல்லை. பேசுவது எங்கே? சட்டைப் பட்டனுக்கு மேல் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தால் அல்லவா!

அவள் நடந்து கொண்ட முறையில் பிரபுவுக்குக் கோபம் வந்தது. சிரிப்பு வந்தது. ஒருநாள் "சுமீ!" "சுமீ!" என்று அவளை அருகே அழைத்தான்.

"என்ன?" என்று சற்று தூரம் தள்ளியே நின்றாள் சுமித்ரா.

"இந்த மீசை நன்றாக இருக்கிறதா பார்."

சுமித்ராவின் பார்வை மீசை வரை சென்றது. மீண்டும் கவிழ்ந்து கொண்டு, "நன்றாக இருக்கிறது!" என்றாள்.

"நன்றாகப் பார்த்தாயா சுமி? வித்தியாசம் நன்றாகத் தானே இருக்கிறது?" என்றான் பிரபு.

"ஆமாம்" என்று நகர்ந்தாள் சுமித்ரா.

"அகப்பட்டாயா?" என்று அவள் கையை எட்டிப் பிடித்தான் பிரபு. "என் மீசையில் வித்தியாசம் இருக்கிறதா? முன்பு இருந்ததை நான் மாற்றவே இல்லையே. நீயானால் வித்தியாசம் இருப்பதாக ஒப்புக் கொண்டு அது நன்றாக இருப்பதாகச் சொல்லிவிட்டாயே!" என்றான்.

தன் கையில் சிக்கியிருந்த மென்விரல்களை வருடி விளையாடிக் கொண்டே, "ஏன் சுமி, என் முகத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காத அளவுக்கு என்ன ஆகிவிட்டது?" என்று மிகவும் மென்மையாக வினவினான்.

கேட்கும்போதே அவள் கை விரல்கள் நடுங்குவதைக் [illegible] விட்டு நிமிர்ந்தான்.

கண்ணில் நீர் பெருக, இதழ்கள் துடிக்க, அவள் அங்கிருந்து வேகமாகச் செல்வதைத் திகைப்புடன் பார்த்தான்.

என்றுமே அவனுடன் சேர்ந்து கலகலத்து அவள் சிரித்தது இல்லை என்றாலும், இந்த விளையாட்டினால் ஒரு புன்னகையாவது கிடைக்கும் என்று அவன் எண்ணியிருந்தான். இந்தக் கண்ணீர் ஏன்?

சுமித்ராவைச் சினிமாவுக்கு அழைத்துச் சென்றான் பிரபு.

நிறையக் காதல் காட்சிகள் நிறைந்த படம் அது.

பாதியிலேயே தலையைப் பிடித்துக் கொண்டு எழுந்து விட்டாள். "எனக்குத் தலைவலி தாங்கவில்லை. நான் காரில் இருக்கிறேன். நீங்கள் பார்த்துவிட்டு வாருங்கள்" என்று வெளியேறி விட்டான்.

பிறகு பிரபு மட்டும் எங்கே படம் பார்ப்பது? அவனும் இவளோடு வந்து விட்டான்.

நாடகமா? வேண்டாம். நாட்டியமா? வேண்டாம். சேலையா? ஊஹூம். நகை? துணிமணி? ஒன்றுமே வேண்டாம்.

"ஒன்றுமே வேண்டாம்."

"பின்னே அம்மா அப்பாவைப் பார்க்க வேண்டுமா அங்கே போய் வருகிறாயா...?"

"ஐயோ வேண்டாம். வேண்டவே வேண்டாம்!" என்று பதற்றத்துடன் மறுத்தாள் சுமித்ரா.

சரியென்று அவள் விருப்பம்போல சில நாள்கள் விட்டு விட்டான் பிரபு.

கடைசியாக அவள் உணவிலும் வெறுப்புக் காட்டவே, அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "உன்னை உன் போக்கில்

விட்டால் சரிப்படாது” என்று கட்டாயப்படுத்தி உண்ண வைத்தான்; உறங்கச் செய்தான். தன்னோடு வெளியே அழைத்துச் சென்றான்.

சுதிருக்குப் பிறந்த நாள் வந்தது. கட்டாயமாகப் பிரபுவும் சுமித்ராவும் வரவேண்டும் என்று வீட்டில் வந்து அழைத்து விட்டுப் போனான்.

சுமி மெல்ல மறுத்துப் பார்த்தாள். “மரியாதைகூட மறந்து விட்டதா?” என்று பிரபு அதட்டவும் கிளம்பினாள்.

ஒரு பெரிய ஓட்டலில் விருந்து. அநேகமாகப் பார்த்த முகங்கள் தான்.

‘இவர்களுக்கு வேறு வேலை என்ன? பார்ட்டிகளில் விழிப்பதும், பகலில் தூங்குவதுமாகப் பொழுதுபோக்கு கிறார்கள்!’ என்று வெறுப்புடன் நினைத்தாள்.

நடராஜும் வந்திருந்தான். எவருடனும் அதிகம் பேசாமல் ஒதுங்கி அமர்ந்து இரக்கமாக அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தாள்.

அந்த இரக்கமும் வேதனையாகவே இருந்தது. முடிந்த மட்டும் அவனது பார்வையைத் தவிர்த்தாள்.

எல்லாரும் வந்தானதும், சுதிர் ‘கேக்’ வெட்டினான்.

முதல் துண்டைப் பிரபுவிடம் நீட்டினான். அவன் முன்னுக்கு வரப் பிரபுதான் காரணமாம்.

பிரபு வெகு இயல்பாக அந்தக் கௌரவத்தை ஏற்பதைக் கவனித்தாள் சுமித்ரா. அடுத்த துண்டும் பிரபுவிடமே நீட்டப்பட்டது. அது சுமித்ராவுக்காம். பிரபுவின் கையாலேயே அவள் வாயில் ஊட்ட வேண்டும் என்று எல்லாரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். சுமித்ரா குன்றிப் போனாள். பிரபு

சிரித்துக்கொண்டே அருகில் வரவும், தவிப்புடன் பார்த்தாள்.

அவன் சிரிப்பு மாறாமல், கேக்கை அவள் கையில் வைத்துவிட்டு அகன்று விட்டான்.

எதிர்ப்புத் தெரிவித்து எல்லாரும் கத்தினார்கள்.

"ஊஹூம் என்றால் ஊஹூம்தான். எங்கள் தனியறையில் நடப்பதை, உங்கள் முன் அம்பலத்தில் நடித்துக் காட்ட முடியாது." என்று நகைமுகத்துடனேயே மறுத்து விட்டான் அவன்.

ஓகோ என்று மீண்டும் ஆர்ப்பாட்டச் சிரிப்பு.

ஒரு வழியாகக் 'கேக் வெட்டல்' இனிது முடிந்தது.

அடுத்து வழக்கமான பாணியில் முந்திரிப் பருப்பும் சிப்சும் கூடவே தட்டுகளில் மதுக் கிண்ணங்களும் வரவும், சுமிக்குப் பகீரென்றது.

ஒரு மாதிரிப் பார்வையுடன் பிரபு கிண்ணங்களைக் காலி செய்வதை அச்சத்துடன் பார்த்தாள்.

"சுமி!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

அருகில் நடராஜ் நின்று கொண்டிருந்தான். இரு கைகளிலும் இரு தம்ளர்கள், வெறும் பழச்சாறு. "சுமி! வா, அங்கே போய் உட்காரலாம்," என்று சுமித்ராவை அழைத்துச் சென்றான்.

ஓர் ஓரமாக வளைவான கால்களுடன் அழகான வட்ட மேஜை நின்றது. சுற்றிலும் நாற்காலிகள் காலியாய்க் கிடந்தன.

அதில் இரு நாற்காலிகளில் இருவரும் அமர்ந்தனர்.

ஒரு மடக்கு ஜூஸ் குடிக்குமுன் வயிற்றைப் புரட்டியது, சுமிக்கு. தம்ளரை மேஜை மேல் வைத்தாள்.

அதற்குள் ஆர்க்கெஸ்ட்ரா முழங்கத் தொடங்கி விட்டது. ஜோடிகள் இணைந்தன.

பிரபுவும் - மல்லியும்.

சுமிக்குக் கண்ணைக் கரித்தது. நடராஜ் பக்கமாகத் திரும்பினாள்.

"மிகவும் மெலிந்திருக்கிறாயே, சுமிம்மா!" என்றான் அவன் பரிவுடன்.

"இல்லையே!" என்று சிரிக்க முயன்றாள் சுமி பதிலாகக் கண்ணீர்தான் வந்தது. காலில் மெட்டியில் சிக்கிய சேலையைச் சரி செய்பவள் போலக் கனிந்தாள். ரகசியமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

பொறுமையாகக் காத்திருந்து, "ஏன் சுமி?" என்றான் நடராஜ்.

"ஒன்றுமில்லையே, காலில் சேலை..."

நடராஜ் கையமர்த்தி, அவள் பேச்சை நிறுத்தினான்.

"என்னிடம் இந்த நடிப்பெல்லாம் வேண்டுமா? பதில் சொல்லப் பிடிக்காவிட்டால், 'எதுவும் கேளாதே' என்று சுலபமாகச் சொல்லிவிடலாமே."

"நடராஜ்..."

நடராஜ் புன்னகை செய்தான். "நாம் வேறு ஏதாவது பேசலாம். சுமி. சுமீ, உன்னோடு பி. யூ. சி. படித்தாளே, நப்பின்னை என்று - நினைவிருக்கிறதா?"

"ஆமாம்" என்று தலையாட்டினாள் சுமித்ரா. அவளுக்கு இன்னமும் தன்னிலைக்கு வர முடியவில்லை.

"அவளைச் சமீபத்தில் பார்த்தேன்."

"ம்ம்..."

"திருச்சியிலேயே பார்த்தேன் சுமி! முன்பே கொஞ்சம் குண்டாக இருப்பாள் அல்லவா? கிருஷ்ணன் ஸெட் எல்லாம் கூடக் குள்ளக் கத்தரிக்காய் என்று கேலி பண்ணுவார்களே, இப்போது இன்னம் கொஞ்சம் உப்பியிருக்கிறாள். கண் இருக்குமிடம் மெய்யாகவே தெரியவில்லை!" என்று சிரித்தான்.

சுமித்ராவும் புன்னகை செய்தாள். நப்பின்னையின் விழிகள் சதை மடிப்பினுள் ஆழ்ந்திருக்கும். பொய்யோ எனும் கண்ணாள் என்று கூடச் சில வால்கள் அவளுக்குப் பெயர் வைத்திருந்தனர்.

"அவள் அம்மாவும் பாட்டியுமாக நெய்யும் சர்க்கரையுமாக ஊட்டுவார்கள். பிறகு குண்டாகாமல் என்ன செய்வாள்?" என்று நப்பின்னைக்காகப் பரிந்தாள் சுமித்திரா.

"அதென்னவோ அம்மா. எனக்கு இது தெரியாது. நீயும அவளுமாகச் செல்லும்போது படுபயங்கரமாக இருக்கும். அவளுக்குப் பயந்து கொண்டே நான் உன்னிடம் கூட நெருங்குவது இல்லை. இன்னொன்று தெரிந்து கொள். அவளுக்கு மணமாகி விட்டது. மாப்பிள்ளை பெயரைக் கேட்டதும், மயங்கி விழுந்து விடாதே நம் கிருஷ்ணன் தான்!"

"என்ன! அவளைக் கிண்டல் செய்வாரே அதே கிருஷ்ணனா?"

நடராஜ் சிரித்தான். "அவனேதான். கல்லூரியில் அவன் அவளைப் பண்ணிய கோட்டா என்ன! இப்போது அவளிடம் பெட்டிப் பாம்பாய் அடங்கிக் கிடக்கிறான். ஒருநாள் சிங்காரத் தோப்பில் பார்த்து, என்னை அவன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். பயல், அவள் உட்கார் என்றால் உட்காருகிறான். நில் என்று சொன்னால், நிற்கிறான்!" என்றான் நகைப்பினூடே.

சுமித்ராவும் கலகல என்று சிரித்தாள்.

"அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அதுவும் நப்பின்னையின் மறு அவதாரமே!" என்று மேலும் சிரித்தான் நடராஜ்.

"இவளிடம் யார் மாட்டப் போகிறார்களோ!" அருவியாய் நகைத்தாள் சுமித்ரா. இந்தச் சிரிப்பைக் கவனித்தான் பிரபு.

ஆர்க்கெஸ்ட்ராவிடம் ஏதோ சொல்லிவிட்டு, இவர்களிடம் வந்தான். "சுமித்ரா!" என்றபடி ஒரு நாற்காலியை அவள் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

சுமித்ராவின் சிரிப்பு துணி கொண்டு துடைத்தாற்போல் மறைந்தது. பேசாமல் தரையைப் பார்த்தாள்.

பிரபுவின் முகம் கடுகடுத்தது. "மிஸ்டர் நடராஜ்! உங்களுக்கு இந்த நடனங்கள் தெரியாதோ?" என்று அவனிடம் திரும்பினான்.

"தெரியும்" என்றான் நடராஜ் அமைதியாக.

உள்ளூர அவனுக்கு எரிச்சல் மண்டியது. இப்போது தான் சுமி ஒரு வழியாகச் சிரித்தாள். அதைக் கெடுத்து விட்டானே பாவி.

"ஆடவே காணோமே." என்று பேரரை அழைத்து, ஒரு கிண்ணத்தை எடுத்துக் கொண்டான் பிரபு.

"ஆடப் பிடிப்பதில்லை."

"பார்ட்னர் சரியில்லாமல் பிடிப்பது இல்லையா?"

"அதுவும் காரணமாக இருக்கக்கூடும்."

"சுமியோடு ஆடுங்களேன்," என்றான் பிரபு நிதானமாக.

நடராஜ் மறைப்பற்ற வெறுப்புடன் பிரபுவை நோக்கினான். "சுமிக்கு அது பிடிக்காது." என்றான் எரிச்சலோடு.

"உங்களோடு ஆடச் சுமிக்குப் பிடிக்காதா? அ..." என்று ஒரு மாதிரியாகச் சிரித்தான் பிரபு. "அப்படியானால் என்னோடு ஆட வா" என்று மனைவியின் கையைப் பற்றினான்.

கையை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தபடி, "இல்லை. எனக்குத் தெரியாது" என்று அவசரமாக மறுத்தாள் சுமி.

"பரவாயில்லை வா. ஷேக், ரம்பா மாதிரி இது கஷ்டமில்லை. வெறும் வால்ட்ஸ்தான் வாசிக்கப் போகிறார்கள். ஈஸியாக இருக்கும், சொல்லித் தருகிறேன். எளிதாகப் பிக்கப் பண்ணிக் கொள்ளலாம் வா" என்று பிடிவாதமாக அவளை எழுப்பினான்.

"இல்லை..."

"அவளை விடுங்கள் பிரபு. அவள்தான் வேண்டாம் என்கிறாளே" என்று ஆத்திரத்துடன் எழுந்தான் நடராஜ்.

இனியும் மறுத்தால் இந்த இடத்தில் ரசாபாசம் ஆகுமோ என்று சுமி அஞ்சி விட்டாள். "பரவாயில்லை நடராஜ்! அவர்தான் கற்றுத் தருகிறேன் என்கிறாரே. நானும் பழகிக் கொள்கிறேன்."

கணவனோடு சென்றாள். "ஒன் டூ" என்று ஸ்டெப்ஸ் சொல்லித் தரலானான் பிரபு.

இடையில் அவன் கை பட்டதுமே, அவன் மல்லியுடன் ஆடியது நினைவு வந்தது. "வேண்டாமே, ப்ளீஸ்" என்று கண்ணீர் மல்கக் கெஞ்சினாள்.

பிரபு என்ன நினைத்தானோ, "சரி வா' என்று அழைத்துக் கொண்டு கிளம்பினான். மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாதபடி விலகிச் சென்றான். அப்போதும் சுமியின் இடையை விடவில்லை.

வாயிலில் நின்ற சுரேஷிடம், "நாங்கள் போகிறோம். பி
சுத்திரிடம் சொல்லிவிடு" என்று விடை பெற்றான்.

காரில் ஏறும்போதே சுமித்ராவுக்குக் கால் தயங்கியது. வீட்டுக்குப் போனதும் இவன்... ஆனால், எப்போது சென்றாலும் எதிர் நோக்க வேண்டிய ஒன்றுதானே! சமாளித்துக் கொண்டு காரில் ஏறி அமர்ந்தாள்.

மடியில் கோத்த விரல்களைப் பார்த்தபடி உட்கார்ந் திருந்தவளுக்கு ஏதோ தோன்றியது.

கணவனது கைவிரல்களைப் பார்த்து எண்ணமிட்டது நினைவு வந்தது.

என்ன கை!

மெல்லிய நீண்ட விரல்கள் அப்பழுக்கு இல்லாது தங்க நிறமாக ஒளி வீசின.

இந்த விரல்கள் காட்டும் குறிப்பு என்ன?

வாழ்வு முழுவதும் கண்ணீர் வடிப்பாள் என்பதா?



## 10

விரல்களைப் பார்த்து எண்ணமிட்டவள், திடீரென்று கார் நின்றதும், திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அதற்குள்ளாகவா வீடு வந்து விட்டது!

இல்லை இது கடற்கரை. திகைப்புடன், 'இங்கே ஏன்' என்பது போல அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"இறங்கி வா சுமி! உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்று மணலில் நடந்தான் பிரபு.

சற்று தூரம் சென்ற மணலில் அமர்ந்தனர் இருவரும்.

குருட்டாம்போக்கில் மணலில் கோடு இழுத்தாள் சுமி.

திடுமென்று சிகரெட் லைட்டரின் சத்தம் கேட்கவும், சற்று பதைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். இப்போது என்ன?

சிகரெட்டை வாயில் பொருத்தியபடி, "வெ...ல்" என்று பிரபு இழுக்கவும், முதல் இரவின் நினைவில் சுமித்ரா திணறிப் போனாள்.

"எ... என்ன?"

"புரியவில்லை?"

"புரியவில்லையே" என்றாள் அவள் தவிப்புடன்.

"புரிகிறது என்று நான் நினைக்கிறேன்."

"இல்லையே. மெய்யாகவே இல்லையே."

"ம்ம்... உனக்கு என்ன குறைவு?" என்றான்.

உதட்டைக் கடித்துக்கொண்டு, தலை குனிந்தாள், சுமித்ரா. தன் குறையை என்னவென்று இவனிடம் சொல்லுவது?

"தலையை நிமிரு சுமித்ரா! நிமிர்ந்து என்னைப் பார். உனக்கு என்ன குறை? சொல்லு. சொன்னால் அதை நிவர்த்தி செய்கிறேன். அதை விட்டுத் தொட்டதற்கும் கண்ணீர் விட்டால், எனக்குப் பிடிக்காது. சொல், என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை."

அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "எதற்கெடுத்தாலும் ஒன்றுமில்லைதானா? இந்த 'ஒன்றுமில்லை' என்ற வார்த்தையைச் சற்று மறந்துவிட்டுப் பேசு. ஒன்று மில்லாதபோது இந்தக் கண்ணீர் விடுவானேன்? பிடிக்காத திருமணம் -

இருக்கலாம். ஆனால், அதற்காக இவ்வளவு நாள் இப்படி அழவில்லையே. இப்போது என்ன வந்தது?" என்று அதட்டிக் கேட்டான்.

"......"

"ஒரு வேளை அந்த நடராஜ் கேட்டால் சொல்வாயோ?"

சிவுக்கென்று எழுந்து விட்டாள் சுமித்ரை. காரை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

"சொல்லாமல் நீ இங்கிருந்து செல்லப் போவது இல்லை சுமித்ரா" என்று வழி மறித்தான் பிரபு.

சுமித்ராவுக்கும் சினம் உண்டாயிற்று. "ஒரு வேளை நான் இழந்துவிட்ட பாக்கியத்தின் அளவு இப்போதுதான் எனக்குச் சரியாகப் புரிந்ததோ என்னவோ?" என்றாள் வெடுக்கென்று.

"இழந்துவிட்ட பாக்கியமா? உன் செல்வ நிலைக்கு நான் உன்னை மணந்ததே நீ செய்த பாக்கியம்தான். ஜென்ம ஜென்மமாக நீ செய்த புண்ணியம்தான். நினைவு வைத்துக் கொள்." என்று சிறினான் பிரபு.

"என் ஒழுக்க மேன்மைக்கு நான் உங்களை மணக்க நேர்ந்ததே என் துர்பாக்கியம்தான். ஜென்ம ஜென்மமாக நான் செய்த பாவம்தான். புரிந்து கொள்ளுங்கள்" என்று விம்மிக் கொண்டே, அவனைச் சுற்றி காருக்கு ஓடினாள் சுமி.

காரில் ஏறி அமரும் வரையிலும் பிரபு ஏதும் பேசவில்லை.

பிறகு "ஒருவேளை அந்த நடராஜை மணந்திருந்தால் அது மெய்யான பாக்கியம் என்று ஒப்புக்கொண்டிருப்பாயோ?" என்றான்.

"சீ" என்று வெடித்தாள் சுமித்திரை.

"என்ன சீ?"

"இப்படி என்னிடம் பேச உங்களுக்கு வெட்கமாயில்லை?"

"பேசுவதற்கு வெட்கம் ஏன்? ஆனால் கட்டிய கணவனிடம் ஒரு புன்னகைக்குப் பஞ்சமாகிப் போகக் கண்டவனுடன் நாலு பேர் நடுவில் கலகலத்துச் சிரிப்பதுதான் அருவருப்பாக இருக்கிறது" என்றான் பிரபு.

பதில் சொல்ல முடியாமல் மளமளவென்று கண்ணீர் வடித்தாள் சுமித்ரா.

சற்று நேரம் பேசாமல் அமர்ந்திருந்தான் அவன். பிறகு தன் கைக்குட்டையை எடுத்து நீட்டினான் அவன். "முகத்தைத் துடைத்துச் சீர் செய்து கொள். நாம் இப்போது சியாம் வீட்டுக்குப் போகிறோம்," என்றான்.

அவள் முகம் துடைத்து, கார் கம்பார்ட்மெண்டில் இருந்த பவுடரை எடுத்து லேசாக முகத்தில் பூசிக் கொண்டாள்.

"சுந்தரிக்கு உடம்பு சரியாயில்லை. பார்ட்டி முடிந்ததும் அங்கு வந்து தலையைக் காட்டி விட்டுப் போகச் சொன்னான்."

"வெகு நேரமாகி விட்டதே," என்று சகஜமாகப் பேச முயன்று கூறினாள் சுமித்திரை.

"படுக்கையில் இருக்கிறாள் அல்லவா? பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவெல்லாம் அவன் உயிரை வாங்குகிறாளாம். 'நீங்கள் இருவரும் வந்தால் சற்று டைவர்ஷன் இருக்கும்' என்று அழைத்தான். 'வருகிறேன்' என்று மடத்தனமாகச் சொல்லித் தொலைத்து விட்டேன்" என்று அவன் கசந்து கொண்டான்.

அவன் பேச்சின் பின் பகுதியைக் கவனியாதவளாகப் "படுக்கையிலா? என்ன உடம்புக்கு?" என்று கவலையுடன் விசாரித்தாள் சுமி.

இந்த ஸெட்டில் சுந்தரியிடம் சுமிக்குக் கொஞ்சம் பிரியம் உண்டு.

"ச்சு. எல்லாம் போய்ப் பார்த்துக் கொள்," என்று காரை எடுத்தான் பிரபு.

"அப்பாடி. நல்ல காலம். வந்தாயப்பா!" என்று நன்றியுடன் ஓடிவந்து பிரபுவின் கைகளைப் பிடித்துக் கொண்டான் சியாம். "சுந்தரி உள் அறையில் இருக்கிறாள் மிஸஸ் பிரபு. அங்கே வாருங்கள்" என்று உள்ளே அழைத்துச் சென்றான்.

"சுந்தரி! இதோ வந்துவிட்டார்கள் சுமித்ரா. இனி அவர்களைப் போரடி. நாங்கள் போகிறோம்." என்று பிரபுவோடு கிளம்பினான் சியாம்.

"எனக்கும்..." என்று கெஞ்சுதலாக இழுத்தாள் சுந்தரி.

"ஊஹூம், டாக்டர் அது கூடாது என்று சொன்னார் இல்லையா? பிறகு பார்க்கலாம்," என்று பிரபுவோடு சென்று விட்டான் சியாம்.

முகத்தைச் சுளித்து உதட்டைப் பிதுக்கி அவனுக்கு அழகு காட்டிவிட்டுச் சுமியிடம் திரும்பினாள் சுந்தரி.

"பாருங்களேன் இவரை. ஒரு பெக் கூடத்தான் தர மாட்டேன் என்கிறார். மூன்று நாள்களாக இது வேறு ஒரே எரிச்சலாக வருகிறது" என்றாள்.

அப்போதுதான் சுந்தரி கேட்டது மது என்பதும், சியாம் அதைத் தரமறுத்தான் என்பதும் சுமித்ராவுக்குப் புரிந்தது. என்ன சொல்வது என்று புரியாமல் மௌனம் சாதித்தாள்.

"ஓ... உங்களிடம் இதைச் சொல்லுகிறேனே, நீங்களே ஒரு டீ போட்டவர் ஆயிற்றே. ஆனால் நான் கூட முன்பு அப்படித்தான் இருந்தேன் சுமித்ரா. திருமணத்துக்குப் பிறகு இவர்தான் பழக்கம் காட்டி விட்டார். இப்போது தினமும் இரண்டு பெக் இல்லையானால் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறது. ஆனால் இதிலும் உங்கள் பிரபு கெட்டிக்காரர்தான். அளவு

என்றால் அளவுதான். வேண்டாம் என்றால் வேண்டாம் தான்! நானும் சியாமும் வேறு ரகம். பார்ட்டி என்றால் நிறுத்தத் தெரியாது. அரை மயக்கமாகி விடுவோம் அதற்காகவே பார்ட்டி நாள்களில் டிரைவரைத்தான் கார் ஓட்டச் சொல்வது. ஆனால் எனக்கு ஒரே அதிசயம் சுமித்ரா. நாங்கள் தினமும் குடிக்கிறோம். அப்படியும் கொஞ்சம் மீறினால் மயக்கம் வந்து விடுகிறது. பிரபுவைப் பாருங்கள். அவர் தினமும் குடிப்பது இல்லை இல்லை தானே?"

"இல்லை" என்றாள் சுமி மெல்லிய குரலில்.

"தினமும் குடிக்கும் வழக்கம் இல்லை. ஆனாலும் ஐந்து பெக் குடித்தாலும் அவர் தடுமாறுவது இல்லை. ஒருநாள் பக்கத்திலேயே இருந்து நானே ஊற்றிக் கொடுத்தேன். அவர் குடிக்கக் குடிக்கப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பிறகும் அவருக்கு வாய்கூடக் குழறவில்லை" என்று அதிசயித்தாள் சுந்தரி.

ஆனால் அதற்குப் பிறகுதான் வெறி பிடிப்பது உண்டு என்று மனக்கசப்புடன் நினைத்தாள் சுமித்ரா.

"ஒரு நாள் சுமித்ரா, நாங்கள் ஓர் எட்டுப் பேர் உட்கார்ந்து கொண்டு குடித்தோம். எல்லாரும் மயங்கி விழுந்த பிறகும், பிரபு நிதானத்தோடு இருந்து எங்களை யெல்லாம் அவரவர் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ரொம்பவும் திடமான சித்தம்" என்று சிலிர்த்தாள் சுந்தரி.

சுமித்ராவுக்கு இந்தப் பேச்சே வயிற்றைக் குமட்டியது. "மல்லி எங்கே?" என்று பேச்சை மாற்றினாள்.

"ஊருக்குப் போயிருக்கிறாள். இங்கிருந்தால் கெட்டு விடுவாளாம். மாமாவும் மாமியும் அழைத்துக் கொண்டார்கள். அவர்கள் சொல்வதும் மெய்தான். இந்தக் குடி பற்றிக்கொண்டால் விடாது!"

மீண்டும் பேச்சு குடியில் செல்வதைச் சுமித்ரா தவிர்க்க முயன்றாள். "உங்கள் உடம்புக்கு என்ன சுந்தரி?" என்று வினவினாள்.

"அபார்ஷன்தான்" என்று சலித்துக் கொண்டாள் சுந்தரி.

சுந்தரியின் முக வெளுப்பின் காரணம் இப்போதுதான் சுமித்ராவுக்குப் புரிந்தது. "அடடா!" என்று வருந்தினாள். "கஷ்டமாக இருக்கிறதா?"

"ஆமாம் சுமித்ரா. இதோடு ஐந்து தடவை செய்தாயிற்று. அவருக்கென்ன ஆண்பிள்ளை. ஜாலியாகத் தப்பித்துக் கொள்கிறார். நான்தான் மாட்டிக் கொள்கிறேன். வருஷத்துக்கு இரண்டு தடவை அனுவிடம் செல்ல வேண்டியதாகி விடுகிறது."

சுமித்ரா அதிர்ந்து போனாள்.

தானாகக் கரு சிதைந்து போயிற்றே என்ற அனுதாபம் காட்டினாள். இல்லையென்றதும் திகைத்தாள். இதுவே வழக்கம் என்பது தெரிந்ததும் அதிர்ச்சியுற்றாள்.

"பெற்றுக் கொள்வதுதானே சுந்தரி?" என்று மெல்லக் கேட்டாள்.

"ஐயய்யோ? வயிற்றைத் தள்ளிக் கொண்டு- ஒரே அசிங்கம். முதலில்தான் ஒன்றும் தெரியாமல் விக்டரைப் பெற்றுக் கொண்டேன்" பார்வை சுவரில் இருந்த படத்தில் பதிந்தது.

அந்தப் படத்தில் இருந்த சிறுவன்தான் விக்டர். சுந்தரி சியாம் தம்பதியின் அருமந்தப் புத்திரன். இங்கே இல்லை. தாத்தா பாட்டியுடன் வளர்கிறான். தாயிடம் இல்லாத பொறுமையும் கவனிப்பும் பாட்டியிடமிருந்து தான் அவனுக்குக் கிடைத்தன.

"அவன் பிறந்ததிலிருந்து இதே கதைதான். பிள்ளை பெறுவது என்றால் எவ்வளவு வலிக்கும் தெரியுமா? அதோடு

முதலில் ஷேப்பே இல்லாமல் உடம்பு அசிங்கமாகி விடும் ட்விஸ்ட், ஷேக் ஒன்றும் ஆடமுடியாது. அது மட்டுமா? விஸ்கி, பிராந்தி எல்லாம் அடியோடு கூடாது என்று விடுவாள். அந்த அனு... அவள்தான் டாக்டர். இரவு விழிக்காதே என்பார்கள். இந்த இரண்டு நாள் அடைபட்டுக் கிடப்பதே இவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. இதையே பத்து மாசம் செய்வதா? அப்பப்பா, நம்மால் ஆகாதம்மா. செத்தே போவேன்."

"ஏதோ பில்ஸ்... என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அது சரிப்படாது. தினமும் மறக்காமல் தின்ன வேண்டுமாம். அது எப்படி முடியும்?" என்று ஆட்சேபித்தாள் சுந்தரி. "அதைவிட இது எவ்வளவோ மேல்."

"ஓ... ஓகோ!" என்று முடித்துவிட்டாள் சுமித்ரா.

"சுமித்ரா! இந்தச் சியாமைக் கொஞ்சம் அழைத்து வாருங்களேன். என்னை மட்டும் பெரிதாகத் திட்டுவார். வருகிறவர்களுக்கு உண்ண, தின்ன ஒழுங்காகக் கொடுப்பது இல்லை. இன்று இப்போது உங்களுக்கு இவர் என்ன தந்தாராம்?"

"எனக்கு எதுவுமே வேண்டாம்!" என்றாள் சுமித்ரா.

"பரவாயில்லை, அவரைக் கூப்பிடுங்கள்" என்றாள் சுந்தரி.

சுமித்ரா எழுந்து சியாமை அழைக்கச் சென்றாள்.

சிறு மேசை மேல் விஸ்கி பாட்டில் இருக்க, இருவர் கையிலும் மதுக் கிண்ணங்கள் இருப்பதைக் கண்டாள். மனதுக்குள் திக்கென்றது.

"உங்களைச் சுந்தரி அழைக்கிறாள்" என்றாள் சியாமிடம்.

கிண்ணத்தில் இருந்த மீதியை ஒரே மூச்சில் விழுங்கி விட்டு எழுந்து சென்றான் அவன்.

சுந்தரி கணவனுடன் பேசும்போது எப்படிச் செல்வது என்று தயங்கி நின்றாள்.

அச்சமும் லேசான வெறுப்புமாக அவள் பார்வை பிரபுவின் கையில் இருந்த கிண்ணத்தில் நிலைத்தது.

அவள் பார்வையைக் கவனித்த பிரபு கேலியாக நகைத்தான். கிண்ணத்தைத் தூக்கி 'டோஸ்ட்' பண்ணிவிட்டு, மேலும் ஒரு மிடறு விழுங்கினான். சுமி திரும்பி விட்டாள்.

அதற்குள்ளாகவே, "இருவரும் என்ன ரகசியம் பேசுகிறீர்கள்? அதெல்லாம் பிறகு பேசலாம். இப்போது இங்கே வாருங்கள்" என்று சுந்தரியின் உரத்த குரல் கேட்டது.

நல்லதாயிற்று என்று அங்கே விரைந்தாள் சுமித்ரா.

பிரபுவும் பின்தொடர்ந்தான்.

"வாருங்கள், இரண்டு ஆட்டம் சீட்டுப்போடலாம்" என்றாள் சுந்தரி.

"சுந்தரி, அவர்கள் தூங்க வேண்டாம்? மணி பத்தரை ஆகிறது" என்று மனைவியைக் கண்டித்தான் சியாம். "பிரபு தொழிற்சாலைக்குப் போக வேண்டும்..."

"பரவாயில்லை. நாளைக் காலை, கூடக்கொஞ்சம் தூங்கிவிட்டு லேட்டாகப் போய்க் கொள்வார். அவர் என்ன, பிறரிடம் கை கட்டிச் சேவகம் செய்கிறவரா? கொஞ்சம் தாமதமாகச் சென்றால் யாரேனும் தலையை வாங்கி விடுவார்களா?" என்று வாதிட்டாள் சுந்தரி.

"சரி சரி. சற்று ஆடலாம் சியாம். ஆனால், ஒரே ரவுண்ட்தான். நானே கலவை. பிறகு நானே எழுந்து விடுவேன்" என்றான் பிரபு கண்டிப்பாக.

"உம்" என்று அரைமனதாகச் சம்மதித்தாள் சுந்தரி. "பிரிட்ஜ் வ...லாமா?"

"எனக்குச் சரியாகத் தெரியாதே" என்றாள் சுமி தயக்கத்துடன்.

"பரவாயில்லை, நான் பார்த்துக் கொள்கிறேன் உட்கார்" என்று சீட்டுக் கட்டைக் கலைத்தான் பிரபு.

சுமித்ராவை டம்மியாக வைத்துக் கொண்டு மூன்று ஆட்டங்களில் வென்றான். ஓர் ஆட்டத்தில் மட்டும் சுந்தரி பிடிவாதமாகப் 'பிட்' செய்தாள். சுமியும் சற்றுக் கவனித்து ஆடவே, அந்த ஆட்டத்திலும் சியாம் - சுந்தரி ஜோடி தோற்றார்கள். நாலு ஆட்டம் முடிந்ததும் பிரபு உறுதியோடு எழுந்து விட்டான்.

சுந்தரி எவ்வளவோ கெஞ்சியும் அவன் மசியவில்லை. கடைசியாகச் சுந்தரி அரைமனதாக அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

இருவரும் தங்கள் வீட்டினுள் புகும்போது மணி பன்னிரண்டு.

மனமும் உடலும் சோர்ந்து களைத்துத் தன் அறைக்குள் சென்றாள் சுமித்ரா.

பின்னோடு வந்த பிரபு அவள் கைகளைப் பற்றியதும், துள்ளிக் கொண்டு கதறி விட்டாள். "வேண்டாம், வேண்டாம்."

"வேண்டாமா?" என்று அவளைப் போலவே மிமிக்ரி செய்து பரிகசித்தான் பிரபு. "ஏன் வேண்டாம்? கட்டியவன் காதலோடு வந்தால் வேண்டாமா?"

"இது காதலா? இல்லவே இல்லை. ஐயோ, எனக்குப் பிடிக்கவில்லையே! விட்டு விடுங்களேன்!" என்று தவித்தாள் சுமித்ரா.

"நடராஜ் என்றால் மறுப்பாயா?"

"கடவுளே! அவர் பெயரைச் சொல்லிச் சொல்லி என்னை ஏன் வதைக்கிறீர்கள்?" என்று விம்மினாள் சுமித்ரா.

"தெரியவில்லை?"

"ஐயோ இல்லையே."

பிரபு ஏளனமாகச் சிரித்தான். "நடராஜ் உன்னைக் காதலிக்கிறான். இது உனக்குத் தெரியாதா?"

ஒருகணம் பிரமித்து நின்றாள் சுமித்ரா. பிறகு பலமாகத் தலையசைத்தாள். "அவருக்கு என்னிடம் இரக்கம். வேறு ஒன்றும் கிடையாது" என்று மறுத்தாள்.

"உன்னிடம் இரக்கப்பட அவன் யார்!"

"அவர் என் நண்பர். கல்லூரி சிநேகிதர். அப்போதிருந்தே என்னிடம் நட்போடு இருப்பார்."

"நண்பர்! சிநேகிதர்!" என்று இகழ்ச்சியாகச் சிரித்தான் பிரபு.

"நண்பர் இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சட்டென்று பொங்கிய சினத்துடன் கேட்டாள் சுமித்ரா.

"எப்படித் தெரியும்? அவன் உனக்காகப் பரிந்து பரிந்து பேசுவதைக் கேட்டால் தெரியவில்லை? உன்னைத் தவிர வேறு யாரும் அவன் கண்ணில் படுகிறார்களா? அந்தப் பார்வையிலிருந்து கூடவா எனக்குத் தெரியவில்லை?"

"இல்லை. இல்லை. இல்லை. அவர் என்னைக் காதலிக்க வில்லை. அப்படிக் காதலித்தால் அது எனக்குத் தெரியாது தெரியாது!" என்று காதுகளைப் பொத்திக் கொண்டு கத்தினாள் சுமித்ரா.

"காதலிப்பது தெரியாதா? காதல்! ம்ம்..." கிண்டலாகக் கேட்டான் பிரபு. "இன்னொருவன் தொட்டுத் தாலி கட்டிய

பெண்ணை அடுத்தவன் விரும்புவது காதலாக்கும்! கட்டிய மனைவியைக் கணவன் ஆசையுடன் நெருங்கினால், அது காமமாக்கும்! ஆகா, எவ்வளவு அற்புதமான விளக்கம்!" கடகடவென்று சிரித்தான் பிரபு.

அந்தச் சிரிப்பையும் சிவந்த விழிகளையும் கண்டதும், சுமித்ராவின் உடல் நடுங்கியது. எவ்வளவு குடித்தான்? வயிற்றில் ஏதோ பிசைய அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவன் சிரிப்பு நின்றது.

எட்டி அவளது இரு கரங்களையும் பற்றித் தன்னருகே இழுத்தான். "பார்ட்டியில் வைத்தும் இதே மாதிரி அச்சத்துடன் பார்த்தாயல்லவா? பிறகு சியாம் வீட்டில் கூட இதே அஞ்சிய நோக்கு. என்னிடம் உனக்கு என்ன பயம் சுமீ? எதற்குப் பயம் இதற்கா? இதற்கா?" என்று தன் உதடுகளை லேசாக நடுங்கிய சுமியின் இதழ்களின் மீது வைத்து முரட்டுத்தனமாக அழுத்தினான் பிரபு.

சுமித்ரா விடுபட முயன்றபோது, முரட்டுத்தனம் மிருகத்தனத்துக்குச் சென்றது.

கடைசியாக மூச்சிரைக்க அவன் நிமிர்ந்தபோது சுமித்ரா கொகொடவென்று அவன் மேலேயே வாந்தி எடுத்துவிட்டாள்.

"சுமி!" என்று திகைத்துப் பதறிப் போனான் பிரபு.



## 11

மதுவின் நெடி சுமித்ராவுக்குப் பிடிக்காது என்று பிரபுவுக்குத் தெரியும். ஆனால் அவள் வாந்தி பண்ணும்

தூரத்துக்கு அந்த அருவருப்பு செய்யும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

மேலும் மேலும் வயிற்றைப் புரட்டிக் கொண்டு வர, சுமி ட்ரெஸ்ஸிங் டேபிள் அருகிலுள்ள வாஷ் பேசினுக்கு வாயைப் பொத்திக் கொண்டு ஓடினாள்.

எத்தனை நாள் உண்டதெல்லாமோ சேர்ந்து வெளி வருவது போல வாந்தி செய்தாள். கடைசியாக வயிற்றில் ஒன்றுமில்லாத போதும் அந்த உணர்ச்சி அடங்காமல் ஓங்கரித்துக் கொண்டு தள்ளாடினாள்.

அதற்குள்ளாக வேகமாகக் கோட்டைக் கழற்றி வீசி விட்டு மனைவியின் அருகில் ஓடிவந்தான் பிரபு.

பாண்ட் மேல்பட்ட அசிங்கத்தைப் பொருட்படுத்தாமல், சுமித்ராவின் தலையைத் தூக்கினான்.

அவள் தள்ளாடுவதைக் கண்டதும், அவளைத் தன் மேல் சாய்த்துக்கொண்டு, குழாயைத் திறந்து தண்ணீரை ஏந்தி அவள் முகத்தில் லேசாகத் தெளித்தான். திரும்பவும் கையில் நீரெடுத்து அவளை வாய் கொப்பளிக்கச் செய்தான்.

சுமித்ரா கொஞ்சம் நிதானத்துக்கு வந்ததும், உடை மாற்ற வைத்துப் படுக்கையில் படுக்கவைத்தான்.

மிருதுவான தலையணையில் தலை அழுந்திய பிறகுதான் சுமித்ராவுக்குக் கொஞ்சம் சக்தி வந்தது.

கண்ணைத் திறந்து பார்த்தாள். பிரபு நின்ற அலங்கோலம் கண்ணை உறுத்தியது. விரல் நுனியில்கூட அழுக்குப்படாத பிரபு...

"என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள் கம்மிய குரலில். அதற்குள் கண்களில் நீர் திரண்டது.

"எனக்கு என்ன வந்தது. இதுவா? இதில் ஒன்றுமில்லை. உனக்கு எப்படி இருக்கிறது? பரவாயில்லை? ஓர் ஐந்து நிமிடம் தனியாக இருப்பாயா?"

"உம்."

ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே குளித்துவிட்டு கட்டம் போட்ட லுங்கியோடு பிரபு வந்தபோது, சுமித்ரா நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

மறுநாள் வெகுநேரம் கழித்து சுமி விழித்தபோது, பிரபு வீட்டில் இல்லை. காலையிலேயே தொழிற்சாலைக்குச் சென்றுவிட்டு விரைவில் திரும்பி விடுவதாக அருகில் மேஜையில் இருந்த குறிப்பு சொல்லியது.

எட்டு மணியான பிறகும் படுக்கையை விட்டு எழ மனம் இல்லாமல், புரண்டு கொண்டே இருந்தாள். எழுந்து தான் என்ன வேலை செய்ய வேண்டும்? மறுபுறம் திரும்பிப் படுத்து மீண்டும் தூங்கி விட்டாள்.

ஒன்பது மணி சுமாருக்கு மீண்டும் விழித்தாள். உடல் காகிதத்தில் செய்தது போலப் பறந்தது.

சிரமத்துடன் எழுந்து, மெல்ல மெல்லக் காலைக் கடன்களை முடித்துவிட்டு, அவள் கீழே இறங்கியபோது, மணி பத்தாகி விட்டது.

அவள் இறங்கிவரக் கண்டு தலைமைப் பணியாள் மரியாதையுடன் அங்கே வந்தான்.

"நான் தோட்ட வீட்டுக்குப் போகிறேன். அய்யா வந்தால் சொல்லிவிடு" என்று கையில் ஒரு புத்தகத்துடன் அங்கே சென்றாள்.

பிரபுவின் பெரிய தோட்டத்தில் ஓர் ஓரமாக இருந்தது இந்தத் தோட்ட வீடு. வட்ட வடிவமான ஒரு பெரிய அறை. கண்ணாடி

கூரை. மணமிக்க மலர்களையுடைய பல கொடிகள். அந்த வீட்டின் கூரையை மறைத்துப் படர்ந்திருந்தன.

தஞ்சையில் சிவகங்கா கார்டனில் பார்த்து வந்து, அதுபோல அமைத்தானாம். கடுங் கோடையிலும் அங்கே குளு குளு என்றிருக்கும்.

ஹேயரின் புக்கைப் பிரித்துக்கொண்டு, சோபாவில் சாய்ந்தாள். உடலில் மிதப்பது போன்ற ஓர் உணர்ச்சி இருந்துகொண்டே இருந்தது. நன்றாகச் சாய்ந்து கொண்டு புத்தகத்தைப் படித்தாள்.

எங்கோ கார் வரும் ஓசை கேட்டது.

பிரபுவாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு, புத்தகத்தை மூடி வைத்தாள். ஆனால் வந்தவனைக் கண்டதும் விழிகள் வியப்பால் விரிந்தன.

ஏனெனில், வந்தவன் நடராஜ்!

நடராஜனுக்கும் இரவு முழுமையும் மனம் சரியாக இல்லை; அதனால் தூக்கமும் இல்லை.

சுமியைப் பிரபு இரக்கமற்று இழுத்துச் சென்றதே நினைவு வந்தது.

இந்த முரடனிடம் சிக்கி அவள் என்ன பாடுபடுகிறாளோ?

கிளியை வளர்த்துப் பொல்லாப் பூனையிடம் கொடுத்தார்களே என்று சுமியின் பெற்றோரை வைதான்.

நேற்று பார்ட்டியில் பிரபுவிடம் ஒன்றிரண்டு கடுமையான வார்த்தைகள் சொல்லத்தான் நடராஜ் வாயைத் திறந்தான்.

'எப்படிப்பட்ட புனிதமான தேவதையைப் புழுதியால் புரட்டுகிறாய் மடையா!' என்று சூடாகக் கேட்க நினைத்தான்.

ஆனால் சுமி. அதற்கு இடம் கொடாமல் அவனோடு சென்று விட்டாளே.

பொறுத்துக் கொண்டு அப்போது பேசாதிருந்தான். பிறகும் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவன் ஹோட்டலை விட்டே சென்றுவிட்டான், சுமியையும் இழுத்துக் கொண்டு.

பலியாடு போல அச்சம் கலந்த பார்வையுடன் அவள் சென்றது நினைவு வந்தது.

குடிகாரன்தானே, குடிபோதையில் அவளை அடிப்பானோ? உதைப்பானோ? நடராஜால் தூங்க முடியவில்லை.

காலை எழுந்ததும் இருப்புக் கொள்ளவில்லை.

பத்து மணிவரை பொறுத்துப் பார்த்தான். இப்போது அந்த முரடன் தொழிற்சாலைக்குச் சென்றிருப்பான். சுமியைப் பார்த்துப் பேசினால் என்ன? அல்லது அவனையே சந்திக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. பார்த்துக் கொள்ளலாம் என்று கிளம்பினான்.

எப்படியும், எந்த விலை கொடுத்தேனும், அவனுக்குச் சுமித்ராவைப் பார்த்தாக வேண்டும். அவள் சுகத்தை அறிந்தாக வேண்டும்.

விரிந்த கூந்தலுடன், அயர்வின் முத்திரை முகத்தில் தெரிய, அவள் உட்கார்ந்திருந்ததைக் காணவும், அவனுக்கு மனம் பொறுக்கவில்லை. அடி, உதையின் அடையாளம் ஏதேனும் தெரிகிறதா என்று அவசரமாகப் பார்த்தான். நல்ல வேளையாக இல்லை.

"சுமித்ரா" என்று அழைத்து அருகில் சென்றான்.

"நடராஜ்?" என்று மகிழ்ச்சியுடன் ஆச்சரியப்பட்டாள் சுமித்ரா.

"நானேதான். ஏன் அவ்வளவு வியப்பு? உன்னைப் பார்க்க நான் வரக் கூடாதா?" என்று கேட்டான் அவளது மகிழ்ச்சியைக்

காண அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. "அங்கே உட்காரட்டுமா?" என்று எதிர் சோபாவைக் காட்டினான்.

"ஓ... உட்காருங்கள், உட்காருங்கள். மறந்தே போனேனே, என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று எழுந்தாள் சுமித்ரா.

கையை அசைத்து அவளைத் தடுத்தான் நடராஜ். "ஒன்றுமே வேண்டாம். பேசாமல் உட்கார். உன்னுடன் நான் பேச வேண்டும்."

நிச்சயமில்லாமல் நின்றாள் சுமித்ரா.

"மெய்யாகவே ஒன்றும் வேண்டாம் சுமித்ரா! அதோடு எப்படியும் நான் பிரபுவின் வீட்டில் எதுவும் பச்சைத் தண்ணீர்கூட அருந்துவதாக இல்லை" என்றான் முடிவாக.

சுமியின் முகம் வாடியது. உதட்டைக் கடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தாள்.

சற்று நேரம் இருவருமே பேசவில்லை.

பிறகு, "சென்னையை அடுத்து உங்களுக்குத் தென்னந் தோப்பு இருக்கிறதா நடராஜ்?" என்று திடீரென்று கேட்டாள் சுமித்ரா.

"இருக்கிறதே! ஏன்? நீ ஒருநாள் அங்கே வருகிறாயா, சுமி? மிகவும் இனிமையாக அமைதியாகப் பொழுது போகும்."

சுமி அதற்கு மேல் பேசவில்லை.

பொம்மையாக அமர்ந்திருந்தாள். காணி நிலத்தையும் கணவனது பேச்சையும் நினைத்தாள்.

நடராஜூக்கும் பேசத் தோன்றவில்லை. மேஜை மேல் கிடந்த ஹேயரின் புத்தகத்தை எடுத்துப் புரட்டினான். பிறகு மூடினான். மீண்டும் திறந்து விட்டு மூடினான்.

இந்தப் பொருளற்ற செய்கைகள் சுமித்ராவின் கவனத்தைக் கவர்ந்தன.

நடராஜிடம் எப்போதும் ஒரு நிதானம் இருக்கும். இன்று என்ன ஆயிற்று? "என்ன நடராஜ்?" என்றாள் பரிவுடன்.

நடராஜ் ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தான். "நீ சோர்ந்திருக்கிறாயே சுமி. எப்படி இருந்தவள் எப்படி ஆகிவிட்டாய்!"

மெல்லியதாகப் புன்னகை செய்தாள் சுமித்ரா.

திடீர் என்று நடராஜ் பரபரத்தான். "இந்த வாழ்வில் உனக்கு நிம்மதி இல்லை என்று தெரிகிறது; சுமி! ஏன் இதைத் தொடர வேண்டும்? வந்துவிடு சுமி. இங்கிருந்து வெளியேறி வந்துவிடு. உனக்குத் துன்பமே மறந்துவிடும்படி செய்து விடுகிறேன். வந்துவிடு சுமித்ரா!"

முதலில் முகத்தில் படர்ந்த திகைப்பு மாறி, அவனை இரக்கத்துடன் பார்த்தாள் சுமித்ரா. "வந்து விடலாமே, நடராஜ்! ஆனால், என்னைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். என்னோடு பிறந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கதி என்ன ஆவது?"

"அவர்கள் எல்லாரும் உன்னை எண்ணவில்லையே சுமி! எண்ணியிருந்தால் இவனுக்கு உன்னை பலியிட்டுயிருப் பார்களா? அவர்களைப் பற்றி நீ ஏன் எண்ண வேண்டும்?"

"அதுவும் சரிதான். வந்து விடுகிறேன். என்றே வைத்துக்கொள்வோம், பிறகு?" நிதானமாகத் தர்க்கித்தாள் சுமித்ரா.

"எந்த நிலையிலும் நீ எனக்குப் புனிதமானவள், சுமி! குரங்கின் கையில் சிக்கி விட்டது பூமாலையின் குற்றமல்ல. நீ என் தேவதை. நாம் இருவரும்..."

“பொறுங்கள் நடராஜ். இதற்கு நான் சம்மதித்தேன் என்றால், பிறகு அவருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்.”

“சுமித்ரா!”

“நடராஜ்! உணர்ச்சி வசப்படாமல் யோசியுங்கள். இது முடிந்து போன விஷயம். நடந்து விட்டதை மாற்ற முடியாது. அதோடு...”

இருவருக்குமே மேலே பேச்சு எழவில்லை. சற்று நேர அமைதிக்குப்பின், நடராஜ் கேட்டான்: “சுமி, நீ ஏன் இந்தப் பிரபுவை மணந்தாய்? எப்படி இந்த விபத்து நேர்ந்தது?”

“விபத்தா? விபத்துதான் நடராஜ். உங்களுக்குத் தெரியும் அல்லவா, நாங்கள் நல்ல நிலையில் இல்லை என்று. அப்பாவுக்குக் கடன். இவரிடம் வாங்கித் திருப்பியிருக்கிறார். திருப்பிக் கொடுக்க வகையில்லை அல்லது மனம் இல்லை” என்று முடித்தாள் - முகம் கடுகடுக்க.

“அப்போது நீ ஏன் என்னை நினைக்கவில்லை, சுமி? என்னிடமும் பணம் உண்டென்று உனக்குத் தெரியுமில்லையா? சுமி! உனக்கு ஏன் நினைவு வரவில்லை? தெரிந்தால் நான் எந்தவிதமான பிரதிபலனும் கோராமல் உனக்கு உதவியிருக்க மாட்டேனா?” என்று புண்பட்ட குரலில் பேசினான், நடராஜ்.

சுமித்ரா யோசனையோடு பதிலளித்தாள். “ஏன் நினைவு வரவில்லை? நீங்கள் இங்கே இல்லையே என்றாலும் உங்கள் திருச்சி விலாசமும் எனக்குத் தெரியுமே. பின்னே எதனால் நினைவு வரவில்லை? எனக்கும் தெரியவில்லை, நடராஜ்! ஏதோ நான் நினைக்கவே இல்லை. ஒருவேளை நீங்கள் சொன்னது போல, இது விபத்துதானோ? செயல்களை நாம் திட்டமிட்டு நடத்தலாம். ஆனால் விபத்துக்கள் தாமாக நடப்பவை ஆயிற்றே. அவற்றில் இதுவும் ஒன்று போலும்.”

"விபத்து நடந்தாலும் விளைவை மனிதன் சீர்ப்படுத்துவது தான் வழக்கம் சுமீ! இந்த விபத்தையும் நாம் நேராக்கலாம். சொல்வதைக் கேள், சுமி! உன் வாய் நிறைந்த புன்னகை எங்கே? கண்களில் சதா துள்ளும் சிரிப்பு எங்கே? வெறும் கூடாக இருக்கிறாயே, இது சரியில்லை சுமி! வந்துவிடு, வந்துவிடு, சுமி."

"எங்கே?"

இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

பிரபுவின் பார்வை வெகு கூர்மையாக நடராஜைத் துளைத்தது.

நடராஜின் முகம் சிவந்த போதிலும் அவனது பார்வை விலகவில்லை. குனியவில்லை.

"எங்கே என்று கேட்டேன்!" என்றான் பிரபு.

"இந்த நரகத்தில் இருந்து வெளியேறி என்னோடு வந்து விடு என்றேன்" என்றான் நடராஜ், இறுகிய குரலில்.

"ஓகோ!" பிரபு ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்தான். உதடுகளில் ஏளனம் தெறித்தது. "பரவாயில்லை. நான் நினைத்ததை விடவும் நீ தைரியசாலியாக இருக்கிறாய். ஆனால், இந்த அசட்டுத் துணிச்சலுக்கு இங்கே வேலையில்லை! கெட் அவுட்."

நடராஜ் அவனை வெறுப்புடன் பார்த்துவிட்டுச் சுமித்ராவிடம் திரும்பினான். "சுமீ நீ..."

"வேலைக்காரர்களைக் கூப்பிட்டு உன்னை வெளியே தள்ளு முன், நீயாகப் போய்விடு. ஐ ஸே க்ளீயர் தி ப்ளேஸ். கெட் அவுட்" என்றான் பிரபு - கடுமையாக.

நடராஜ் பின்னரும் தயங்கினான்.

“போய் வாருங்கள் நடராஜ்” என்றாள் சுமித்ரா அமைதியாக.

“சுமி, உன்னை... உனக்கு...” நடராஜ் இன்னமும் கூடத் தயங்கினான்.

“எனக்கு ஒன்றும் ஆகாது. நீங்கள் போய் வாருங்கள்.” என்றாள் சுமித்ரா - மென்மையாக.

“போகலாம், வரவேண்டாம்.” என்றான் பிரபு.

மறு வார்த்தை இல்லாமல் நடராஜ் திரும்பிச் சென்றான்.

அவன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு, அசையாமல் இருந்தாள் சுமித்ரா.

கணவனது பார்வை தன் மேல் கூர்மையாகப் படிந்திருப்பதை நன்றாகவே உணர்ந்தாள்.

ஆயினும் இருந்த இடத்தை விட்டு அசையவும் இல்லை. அவனை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை.

பிரபு அமைதியாக சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ஒருமுறை புகையை இழுத்து விட்டான். பிறகு வழக்கமான “வெல்?” வெளிவந்தது.

இது சுமித்ரா எதிர்பார்த்ததுதான்.

ஏதாவது வாக்கு வாதத்துக்கு முன் இதேபோல சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அவன் “வெ...ல்” என்பது அவளுக்கும் பழக்கமாகி விட்டது.

“பதில் சொல்ல விருப்பமில்லாமல் பேசாமல் இருந்தாள்.”

“கேட்பது காதில் விழவில்லை?”

“......”

"கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும் என்று அர்த்தம் சுமித்ரா."

"பதில் சொல்லாவிட்டால், பதில் சொல்ல விருப்பம் இல்லை என்று அர்த்தம்" என்றாள் சுமித்ரா அசட்டையாக. பிரபு நடராஜை அவமானம் செய்து அனுப்பிய விதம் அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அவனுக்கோ கோபம். "ஊம். சரியான நேரத்தில் குறுக்கிட்டு விட்டேன். நெஞ்சின் ஆழத்தில் இருந்து வந்த வேண்டுகோள். பாவம்!" என்றான் இகழ்ச்சியாக.

"உங்களைப் போல உதட்டளவில் பேச அவருக்குத் தெரியாது இருக்கலாம்."

"கவனித்தேன், கவனித்தேன். 'என்னை ஏன் நினைக்க வில்லை ஏன் நினைக்கவில்லை' என்று கதறினானே, எனக்கே பரிதாபமாகத்தான் இருந்தது."

அவன் முதலிலிருந்தே கவனித்திருக்கிறான். அதாவது ஒட்டுக் கேட்டிருக்கிறான். கணவனை வெறித்து நோக்கி விட்டுச் சுமித்ரா எழுந்து நடந்தாள்.

"நான் பேசிக்கொண்டு இருக்கிறேன்." என்றான் பிரபு ஆத்திரத்துடன்.

"உங்கள் பேச்சு எனக்கு ரசிக்கவில்லை."

"சுமித்ரா!" என்று அதட்டினான் அவன்.

அசட்டை செய்து நடந்தாள் சுமித்ரா.

சிகரெட்டைக் காலின் கீழ் இட்டு நசுக்கிய பிரபு இரண்டே எட்டில் சுமித்ராவை அடைந்து விட்டான். அவள் தோளில் அவன் கை அழுத்தமாகப் பதிந்தது. "சுமித்ரா! முதலும்

கடைசியுமாக உனக்கு ஓர் எச்சரிக்கை. நடராஜை இனி நீ சந்திக்கக் கூடாது. இந்த வீட்டுக்குள் இனி அவன் வரக் கூடாது."

அன்று காலையில் வழக்கம் போலக் கண் விழித்த சுமித்ராவுக்குத் தலை ஒரேயடியாகக் கனத்தது. அதை அலட்சியம் செய்து எழுந்து காலைக் கீழே ஊன்றினாள். அப்படியே அந்த அறையே கிர்ரென்று சுழன்றது. பயந்து போய் மீண்டும் படுத்துக் கொண்டாள்.

படுத்திருப்பது சுகமாகத் தோன்றவே, அப்படியே கண்ணை மூடிக்கொண்டு மீண்டும் தூங்கி விட்டாள்.

திரும்பவும் விழிப்பு வந்தபோது, பிரபு தொழிற்சாலைக்கு செல்ல ட்ரெஸ் செய்து கொண்டு அருகில் ஒரு மோடாவில் அமர்ந்திருந்தான்.

அவள் கண் திறக்கவும், "ஏன் சுமி, அப்படி என்ன தூக்கம்? தூங்கும் வியாதி பிடித்துக் கொண்டதோ என்று அஞ்சி விட்டேன்" என்று சிரித்தான்.

அந்தச் சிரிப்பு சுமிக்கு வியப்பாக இல்லை. நடராஜ் சென்ற பிறகு இந்த இரு தினங்களாவே பிரபு எப்போதும் சிரித்த முகமாகத்தான் இருந்தான்.

நடராஜ் என்ற பிறவி இந்த உலகத்தில் இருப்பதாகவே அவன் நினையாதது போல அவன் நடந்து கொண்டான்.

சுமியிடம் பரிவும் பிரியமும் கொண்ட கணவனாக இருந்தான். அவளது கண் பார்த்து நடந்தான் என்று கூடச் சொல்லலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும் நடப்பு அவளுக்கு இதமாக இருந்தது.

தன்னையும் அறியாமல் மலர்ந்த லேசான புன்னகையோடு மெல்ல எழுந்தாள். மீண்டும் உடல் காலியாகித் தலை மட்டும் கனக்கவே, பாலன்ஸ் சரியாக இல்லாமல் தடுமாறியது. யோசனையோடு மீண்டும் படுக்கையிலேயே அமர்ந்தாள்.

"என்ன சுமி?" என்று கவலையோடு அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான் பிரபு.

"ஊம். ஒன்றுமில்லை. அதிக நேரம் தூங்கியது கொஞ்சம் தலைகனமாகத் தெரிகிறது" என்று தலைக்குக் கையை முட்டுக் கொடுத்தாள்.

பிரபு ஒரு கைக்குட்டையை நனைத்து வந்தான்.

"இங்கே திரும்பு" என்று அவள் கண்களிலும் நெற்றியிலும் ஈரத் துணியை ஒற்றியெடுத்தான்.

தலைப் பளு சற்று மறைந்தது சுமித்ராவுக்கு.

எவ்வளவு மென்மையாகத் தடவுகிறான்! எவ்வளவு இதமாக இருக்கிறது! இதெல்லாம்கூட அறிந்து வைத்திருக்கிறானே என்று வியந்தாள்.

கூடவே வக்கிர புத்தி வேறு நினைவை இழுத்தது. 'அவனோடு களியாடிய பெண்கள் பலர் வெகு நேரம் விழித்திருந்து காலையில் வெகுநேரம் துயின்றிருப் பார்கள். அவர்களுக்கும் இதே சிகிச்சை செய்த பழக்கம் ஆகியிருக்கும்.'

இந்த நினைவு வரவும் சுமித்ராவின் முகம் மாறி விட்டது.

"என்ன?" என்று பிரபுவின் குரல் கனிந்து கேட்டது.

அந்தக் கனிவு அவளுக்குக் கண்ணிமைக்குள் கரித்தது.

## 12

கணவனது கனிவுமிக்க கேள்வியில் சுமித்ராவுக்கு கண்ணீர் வந்தது. அவன் மார்பில் முகம் புதைத்து, மனப்பாரமும் தலைப்பாரமும் குறைய அழவேண்டும் போல் இருந்தது. ஆனால், அது அவனது வெற்றியாகிவிடுமே.

அதன்பின் வெற்றி என்றால் பரவாயில்லை.

அதுவும் ஊட்டி போல, கிராமத்து வீடு போல, ஒரு வேஷம் தானே. இந்த வேஷத்துக்குக் கிடைத்த வெற்றியாகிப் போகுமே.

முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு எழுந்தாள்.

ஒரு பெருமூச்சுடன், "நீ சிரிப்பதே இல்லையே சுமி!" என்றான் பிரபு.

எதிர்பாராமல் வந்த இந்தக் கேள்வியில் சுமித்ரா திகைத்துப் போனாள்.

சில தினங்களுக்கு முன் ஹோட்டலில் நடராஜனுடன் சிரித்தது நினைவு வந்தது. அவனும் அதையே நினைத்துத் தானோ, "கலகலப்பாகச் சிரிப்பது இல்லையே என்று கேட்டேன்," என்றான் சற்றுக் கடுமையாக.

சற்றுமுன் காட்டிய மென்மைக்கும் இந்தக் கடுமைக்கும் எப்படிப் பொருத்தம்?

இதை ஜீரணிக்க முயன்றபடி "தெரியவில்லை" என்றாள் மெல்லிய குரலில்.

"சிரிக்கத் தெரியாதவளும் இல்லை. சில சமயங்களில் வெள்ளிச் சதங்கையாக நீ சிரித்து நானே கேட்டிருக்கிறேன்."

நடராஜுடன் சிரித்ததைத்தான் குறிப்பிடுகிறான் என்பது புரிந்ததும், தப்பு செய்தவள் போல சுமி முகம் சிவந்தாள்.

அவள் முகத்திலிருந்து பார்வையை எடுக்காமல் "அன்று டிரைவர் வீட்டுக் குழந்தையுடன் சிரித்தாயே அதைச் சொன்னேன்," என்றான்.

சுமிக்கு இப்போது தன் மீதே கோபம் வந்தது. இவன் இப்படி எல்லாம் மடக்குவான் என்பது தெரியாதா? ஒரு நிமிஷக் கனவில் பாகாக உருகிவிட வேண்டுமா? கோபமாக ஏதாவது சொல்ல நினைத்தாள். உடனேயே மனம் மாறிவிட்டது.

விநாடிக்கு ஒருமுறை கண்ணை உருட்டியபடி, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த முயல் கடிகாரத்தைக் காட்டினாள். "பாருங்கள், மணி ஒன்பது, இன்னமும் நான் ஒரு காபி கூடக் குடிக்கவில்லை. பசியோடு இருக்கும் இந்த நேரத்தில் என்னிடம் சண்டைக்கு வருகிறீர்களே." என்றாள்.

பிரபுவின் கடுமை உடனே மாறிவிட்டது. "மறந்து போனேன் சுமி, சீக்கிரம் பல் தேய்த்துவிட்டு வா. நீ காபி அருந்தியதும் நான் கிளம்புகிறேன்" என்றான் சற்று இதமாக.

பல் விளக்க பிரஷ்ஷை வாயில் வைத்ததும். சுமித்ராவுக்கு என்னவோ ஆகிவிட்டது.

வயிற்றைப் புரட்டிக் கொண்டு, மீண்டும் வாந்தி எடுத்தாள். மஞ்சள் மஞ்சளாக வாந்தி, வாயெல்லாம் கசக்க அடித்தது.

பிரபு திடுக்கிட்டு அவளருகே ஓடிவந்தான். "இது என்ன சுமி? வாந்தி மஞ்சளாக இருந்தால் பித்தம் என்று கேட்டிருக்கிறேன். உடம்பை என்ன செய்கிறது?" என்று பரிந்தபடி அவளைத் தாங்கி அணைத்து வந்து படுக்க வைத்தான்.

"பேசாமல் படுத்துக் கொள்" என்று இன்டர்காமில் ஹார்லிக்ஸ் கொண்டு வரச் சொன்னான்.

"காபி வேண்டாம் சுமி. பித்தம் அதிகமாகிவிடப் போகிறது. நீ ஹார்லிக்ஸ் குடி. நான் டாக்டரை வரச் சொல்லுகிறேன்."

"டாக்டர் வேண்டாம்" என்றாள் சுமி பலவீனமாக.

"டாக்டர் வேணாம் என்று பயப்பட நீ பச்சைக் குழந்தையா? அன்று வேறு வாந்தி செய்தாய். இரண்டே நாளில் இன்று. இதையெல்லாம் வளர விடக்கூடாது." என்று டெலிபோன் அருகில் சென்றான்.

அதற்குள் தானாகவே டெலிபோன் மணி அடித்தது. ரிசீவரை எடுத்து, "பிரபு ஸ்பீக்கிங்" என்றான்.

அங்கே யார் சொன்னார்களோ, முகம் கடுக்க, "அதெல்லாம் முடியாது. ஒன்பதாம் தேதி என்றால் ஒன்பதாம் தேதிதான். யாரோ எங்கோ செல்லுகிறார்கள் என்பதற்காக என்னால் இன்று வர முடியாது" என்றான் அழுத்தமாக.

அங்கே யாரோ மன்றாடினார்கள்.

"முடியாது என்றால் முடியாது. இந்த அளவில் சொன்ன நேரத்தில் உறுதியாக இருக்க முடியாத நீங்கள் எல்லாம் என்ன பிசினஸ் செய்து புரட்டப் போகிறீர்கள்?"

மீண்டும் போன் குரல் கெஞ்சியது.

"ஒருநாள் முன்னே பின்னே என்று என்னிடம் பேசிப் பயனில்லை மிஸ்டர் கன்னா. நாளை மாலை நாலு மணிக்கு மீட்டிங் என்றால் என்னால் அப்போதுதான் வரமுடியும். அதை விட்டு யாரோ ஊருக்குப் போகிறார்கள். அதனால் இன்று எட்டாம் தேதியே மீட்டிங் என்றால் இப்போது டெலிபோனை வையுங்கள்." என்று பட்டென்று ரிசீவரைக் கீழே போட்டான் பிரபு.

பிறகு மீண்டும் எடுத்து டயல் செய்தான்.

சுமித்ரா திகைப்புடன் குறுக்கிட்டாள்: "இன்று என்ன தேதி என்றீர்கள்?"

அங்கே எங்கேஜ்ட் சத்தம் வரவே, பட்டனை அமுக்கி விட்டு, "எட்டு என்றேன். ஏன்? எட்டுதான்," என்று மீண்டும் டயல் பண்ணத் தொடங்கினான்.

"எட்டா? ஒன்றாம் தேதியே..." என்று மலைப்புடன் தொடங்கி விட்டுக் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள், சுமித்ரா.

சலிப்புடன் ரிசீவரை வைத்துவிட்டு, "ஒன்றாம் தேதியே என்ன?" என்று வினவினான், பிரபு.

"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்று அவசரமாக மறுத்தாள் சுமித்ரா.

"இந்த ஒன்றுமில்லைகளைக் குறித்து வை. ஒரு நாளைக்கு ஒரு நூறேனும் சொல்லி விடுகிறாய். டாக்டர் நம்பர் எங்கேஜ்டாக இருக்கிறது. அதனால் ஃபாக்டரியிலிருந்து வரும்போது நானே அவரை அழைத்து வந்து விடுகிறேன். நீ கீழே வரவேண்டாம். பேசாமல் படுத்துக் கொள்" என்று போய்விட்டான் அவன்.

அவன் சென்றதும், தன் அறையில் சோபாவில் உட்கார்ந்து யோசித்தாள் சுமித்ரா. கொஞ்சம் கணக்குப் போட்டாள். சின்ன கணக்கு. கணக்கில் விடை சீக்கிரத்திலேயே கிடைத்து விட்டது.

காலை வேளைகளில் சோர்வும், உணவில் வெறுப்பும் ஏன் வந்தது என்று புரிந்தது.

அடிக்கடி உலகம் ஏன் சுற்றுகிறது என்றும் தெரிந்து விட்டது.

பிரபுவின் குழந்தை, அவனது வாரிசு, அவள் வயிற்றின் உள்ளே வளர்கிறது.

அவளுக்குள் இன்னொரு உயிர். தாயென்னும் பெருமை அவளுக்கு வரப் போகிறது.

நினைக்க நினைக்க புன்னகையும் மலர்ந்தது. கண்ணீரும் வழிந்தது.

பிரபுவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அவனது கை வளையத்தினுள் நின்று இதைச் சொல்ல ஆசைப்பட்டாள்.

இது தெரிந்ததும் அவன் என்ன சொல்லுவான்?

சுமித்ரா விருட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவன் என்ன சொல்லக்கூடும் என்பது தெரியாதா? ஏன், முன்பே அவன் சொன்னதுதானே.

மணமான புதிதில் நடந்தது. எங்கோ செல்வதற்காக அலங்காரம் செய்துகொள்ளச் சொன்னான். அவள் செய்த அலங்காரம் போதாது போல அது இது என்று மேலும் மேலும் செய்யச் சொன்னான். காதருகே கேசச் சுருளை இழுத்து விட்டான். ஒரு கையில் நாக முகப்புடன் வங்கியை மாட்டச் சொன்னான். இடையிலும் சதங்கைச் சங்கிலியை இழுத்து மாட்டச் சொன்னான்.

கடைசியாக எரிச்சலுடன், "இதே போதாதா?" என்று அலுத்துக் கொண்டாள், சுமித்ரா.

"என் மனைவியின் அழகைக் கண்டு எல்லோரும் பிரமிக்க வேண்டாமா?" என்று கர்வத்துடன் கூறினான் பிரபு.

பிறகு அருகில் வந்து ஒவ்வொன்றாகத் தொட்டு ரசனையுடன் சொன்னான். "பிறை நெற்றி, அழகான கன்னம், ரோஜா இதழ், சங்குக் கழுத்து, கொடி போல் இடை... ஆனாலும் சுமி, உன் உடல் அழகே தனிதான்!" என்றான்.

"இதை விடவும் அழகான தினுசுகளைக் காணாதவர் போல, கண்டு ரசிக்காதவர் போலப் பேசுகிறீர்களே!" என்றாள் அவள், வேண்டுமென்றே.

"இருக்கலாம்,. சுமி" என்று புன்னகை மாறாமலே பதிலிறுத்தான் அவன். "உன் அழகில் ஒரு விசேஷம். அனுபவிப்பது மட்டும் இல்லாமல் எனக்கே மட்டும் உரியது என்று காட்டிப் பெருமையும் படலாமே."

அவனை எப்படியாவது மடக்க வேண்டும் என்று, "எத்தனை நாளைக்கு?" என்று கிண்டலாகக் கேட்டாள், சுமித்ரா.

"ஏன்?" என்று புருவங்களை உயர்த்தினான் அவன்.

"நாளைக்கே உங்கள் வாரிசு ஏதேனும் வளரத் தொடங்கி விட்டால் அப்புறம் உடலாவது அழகாவது!"

"அப்படி வந்தால் முளையிலேயே கிள்ளிவிட வேண்டியது தான்," என்று அதற்கும் அலட்சியமாகப் பதில் கொடுத்தான் பிரபு.

ஒரு கணம் திடுக்கிட்ட சுமித்ராவும், தோளை அலட்சியமாகக் குலுக்கினாள். "எனக்கென்ன? நாளை பிறந்தால், என் பெயரையா சொல்லப் போகிறது. உங்களுடையது தானே. வேண்டாமென்றால் போகிறது... அதோடு இது முதலாவதாகவும் இராதே..." என்று இழுத்தாள்.

"என்ன உளறுகிறாய்?" என்றான் அவன் சுள்ளென்று.

சுமித்ராவும் அவனை நேராகப் பார்த்தாள். "வயிற்றில் பிள்ளையோடு செத்துப் போனாளே, ரேணுகா. அதுவும் உங்கள் குழந்தைதானே. அதுதான் முதலாவதா அல்லது..."

மின் வெட்டுப் போலக் கன்னத்தில் சுளீர் என்று ஒன்று விழுந்து விட்டது.

ஒரு கணம் பொறி கலங்கிப் போனாள், சுமி.

மறு கணமே சுதாரித்துக் கொண்டு, 'இவ்வளவு தானா, இன்னமும் உண்டா' என்பதுபோல, அவனை வெறித்துப் பார்த்தாள்.

பிரபுவின் முகம் சினம் மிகுந்து கறுத்திருந்தது. "அவளை நானா சாகச் சொன்னேன்? டாக்டர் அனுவிடம் போ என்றேனே அவள் கேட்கவில்லை. பிறகு லபோ ல்போ என்றால், நான் என்ன செய்வது? அவள் ஒரு முட்டாள்..."

"ஆமாம், உங்களோடு பழகினாள் அல்லவா?"

"நீ அவளைவிடப் பெரிய முட்டாள்!" என்று முடித்தான், பிரபு.

இந்தப் பழைய நினைவில், கரகரவென்று கண்ணீர் வழிந்தது சுமித்ராவுக்கு.

அன்றைய மன நிலையில் அப்படி ஒரு குழந்தை உதித்திருந்தாள், அதன் கதியைப் பற்றி அவள் கவலைப் பட்டிருக்க மாட்டாளோ, என்னவோ? ஆனால் இன்று?

இன்றைய விஷயம் முழுக்க முழுக்க வேறு ஆயிற்றே. எப்படி நேர்ந்தது என்று புரியாதபடி, பிரபு அவள் நெஞ்சில் புகுந்து விட்டானே! சுமித்ரா பிரபுவைக் காதலிக்கிறாளே...

மெய்தான், இதை இன்னமும் தன்னிடம் மறைப்பதில் பயம் என்ன? மாங்கல்யத்தின் சக்தியோ என்னவோ, பிரபு சுமியின் நெஞ்சில் இடம் பெற்று விட்டான். 'உன் மனதில் எனக்குத்தான் இடம் இருக்க வேண்டும்' என்று கர்வம் காட்டிப் பேசியவனுடைய காலடியில் தன்மானத்தை அறவே விட்டு விட்டு தஞ்சம் புகுந்து விட்டது சுமியின் மனம் என்பது அப்பட்டமான உண்மைதான்.

நெஞ்சு நிறையக் காதலுடன், அதன் பிரதிபலிப்பு ஒரு நாளும் அவனிடமிருந்து கிட்டாது என்பதை அறிந்த தவிப்புடன்,

அவனது வெறும் ஆசையைத் தீர்க்கும் கருவியாக இருக்கிறோமே என்று எண்ணி எண்ணி அவள் கண்ணீர் விடுவதும் நிஜம்தான்.

இதுவேனும் கடைசியாக இருக்கும் என்று சொல்ல முடியாது என்று சொன்ன அவனிடம், சுமி மனம் அடி பணிந்து விட்டது மெய்யே.

காதலின் விளைவாக இல்லாதபடி காமத்தின் விளைவாக விளைந்தாலும், இது பிரபுவின் குழந்தை. அவனைக் காதலிக்கும் சுமித்ரா குழந்தையை இழப்பதாக இல்லை. இந்தக் குழந்தையைப் பிரபு அகற்ற நினைத்தால்...?

அந்த நிலை படுபயங்கரமாக இருந்தது.

"எனக்கு என் குழந்தை வேண்டும்! வேண்டும்!" என்று பித்துப் போலப் பிதற்றினாள்.

திரும்பத் திரும்ப அதையே சொல்லி விட்டுச் சற்று நேரத்தில் தான் உளறுவதைத் தானே உணர்ந்தாள்.

'பைத்தியம் பிடித்துவிட்டதோ' என்று குழப்பத்துடன் தன்னையே கேட்டுக் கொண்டாள். ஒன்றும் ஓடாமல் தவிப்பாக இருந்தது. "நம் குழந்தை எனக்கு வேண்டும் பிரபு!" என்று அப்படியே சோபாவில் குப்புற விழுந்து அழுதாள்.

எவ்வளவு நேரம் அழுதாளோ, பிரபுவின் கார் ஹார்ன் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தாள். அவசரமாக ஓடிச் சென்று முகம் கழுவினாள். அழுந்தத் துடைத்து நன்றாகப் பவுடர் ஏற்றினாள். ஆனால் கண்ணின் சிவப்பை என்ன செய்வது?

சுமி திணறிச் சிந்திக்கு முன், பிரபு அவசரமாக மாடிக்கே வந்துவிட்டான். "சுமி!" என்ற அழைப்புடன் உள்ளே

வந்தான். "எப்படி இருக்கிறாய்? இப்போது ஒன்றும் இல்லையே?"

வலிந்து வரவழைத்த புன்னகையுடன் அவனை எதிர் கொண்டாள் சுமித்ரா.

பிரபு சட்டென நின்றான். அவன் பார்வை அவளது சிவந்த விழிகளையும், வீங்கிய இமைகளையும், அவசரமாகச் செய்து கொண்ட அலங்காரங்களையும் குறிப்பெடுத்தன.

"அழுதாயா?"

"இ... இல்லையே."

"பொய் தேவையில்லை சுமி. உடம்பு சரியில்லை என்றால் அழுகை வருவது இயல்புதான். இதை மறைப்பானேன்? வா. டாக்டர் வந்திருக்கிறார்."

'டாக்டர்' என்ற சொல்லில், சுமி மிரண்டு முகம் வெளுத்தாள்.

அந்த மிரட்சியைக் கவனித்து, அவன் 'என்ன'வென்று வினவவும், பதில் சொல்ல முடியாமல், மயங்க விழித்தாள். அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவன் முகம் இளகியது. புன்னகையுடன், " சிறு குழந்தை போல டாக்டரிடம் பயமா சுமி? வா. சோபாவில் உட்கார்" என்று விட்டு, டாக்டரை உள்ளே அழைத்து வந்தான்.

பந்தயக் குதிரை வேகத்தில் ரேஸ் அடித்த நாடியையும், பார்வையின் பயத்தையும் கவனித்தார் டாக்டர்.

அவர் குடும்ப டாக்டர்தான். எனவே, உரிமையுடன் பிரபுவிடம், "சற்று வெளியே இருப்பா" என்று அவனை அனுப்பினார்.

அவன் சென்றதும், "என்னம்மா, இந்தப் பயம்?" என்று பிரியமாகக் கேட்டார்.

"பயமா? இ... இல்லையே..." என்று சிரிக்க முயன்றாள் சுமித்ரா.

"பயமில்லா விட்டால் சரிதான். உடம்பை என்ன செய்கிறது? இரண்டு தடவை வாந்தி பண்ணி விட்டாயாம். பலவீனமாக இருக்கிறாயாம். பிரபு ரொம்பவும் கவலைப்படுகிறான்" என்று கண் இரப்பைகளைப் பிதுக்கிப் பார்த்தார்.

சுமித்ரா மௌனம் சாதித்தாள்.

"எனக்கு அவன் சொன்னபோதே சந்தேகம். நீ..."

"இல்லை, டாக்டர்," என்று அவசரமாக சொன்னாள் சுமி.

"என்ன இல்லை?"

நாக்கைக் கடித்துக் கொண்டாள், சுமித்ரா.

"சொல்லம்மா. ஜூனியர் பிரபு வரப் போகிறான் என்று எனக்குச் சந்தேகம்."

"அப்படி இல்லை டாக்டர்" என்றாள் சுமித்ரா குனிந்த தலை நிமிராமல்.

"வேறு நோய் தெரியவில்லையம்மா. லேசாக அனீமியா இருக்கிறது. அது எல்லாப் பெண்களுக்கும் இந்த நிலையில் ஏற்படுவதுதான்."

"அப்படியெல்லாம் இல்லை என்கிறேனே, டாக்டர்" என்று தவிப்புடன் மறுத்தாள் சுமித்ரா.

"நன்றாகத் தெரியுமா? லெட் அஸ் ஸீ. எப்போது...?"

"இன்னும் நாள் இருக்கிறது டாக்டர். அதெல்லாம் இல்லை. இல்லவே இல்லை டாக்டர்" என்று பதிலளித்தாள் சுமித்ரா. கண்களில் நீர் மீண்டும் இதோ என்று மிரட்டியது.

"ம்ம்... அப்படியா?"

"ஆமாம், டாக்டர். அந்த மாதிரிச் சந்தேகத்துக்கே இடமில்லை. அதனால் அவரிடம் ஏதும் சொல்ல வேண்டாம். மேலும் இது தானாகச் சரியாகிவிடும்."

"நோய்கள் எல்லாம் தானாகச் சரியாவது என்றால் எங்கள் பிழைப்பு எப்படி நடக்கும் அம்மா? சரி... அப்புறம் பார்க்கலாம்" என்று திரும்பினார், டாக்டர்.

"டாக்டர்!" என்று பதற்றத்துடன் அழைத்தாள் சுமித்ரா. அவர் நின்றார்.

"அவரிடம் அந்த இந்தச் சந்தேகம் எல்லாம் சொல்ல வேண்டாம், டாக்டர்" என்று கூறும்போதே, மன்றாடும் தொனி வந்துவிட்டது.

சற்று யோசித்துவிட்டு, 'ஆல் ரைட், ஆல் ரைட்' என்று வெளியே சென்றார் டாக்டர்.

பிரபுவை அழைத்துக் கொண்டு கீழே சென்றார். "பிர்பு! இது கர்ப்பமோ என்று சந்தேகப்பட்டேன். உன் மனைவியானால் அதற்கு இடமே இல்லை என்கிறாள். நீ எதற்கும் ஒரு லேடி டாக்டரை வரவழைத்துப் பார். இது பேபி இல்லையானால், கடுமையான அனீமியா. கவனமாகப் பார்க்க வேண்டும். முழு ட்ரீட்மென்ட் கொடுக்க வேண்டும்" என்றார்.

டிரைவரிடம் காரை எடுக்கச் சொல்லி அவரை ஏற்றி வழியனுப்பிவிட்டுச் சுமித்ராவிடம் வந்தான் பிரபு.

கவிழ்ந்த தலையைக் கையில் தாங்கியபடி அமர்ந்திருந்தாள் அவள்.

அவளருகில் வந்து அமர்ந்துகொண்டு, "சுமி, உனக்கு என்ன செய்கிறது?" என்று மிருதுவாகக் கேட்டான்.

சுமித்ரா பதிலே சொல்லவில்லை. ஆனால், பெரிய நீர்மணிகள் மட்டும் கண்ணிலிருந்து வெளிப்பட்டுக் கைகளின் வழியே வழிந்தோடின.

"ஸ்ஸ்... அழக் கூடாது. உடம்பு சரியில்லை என்றால் மருந்து சாப்பிட்டுக் குணப்படுத்திக் கொள்வார்களா, அதை விட்டு இப்படி அழுவார்களா?" அவளை நிமிர்த்தித் தன் தோள்மீது சாய்த்துக் கொண்டான். "நம் டாக்டர் யாராவது லேடி டாக்டரைப் பார்க்கச் சொல்கிறார். ஏதோ டெஸ்ட் பண்ண வேண்டுமாம்."

அவன் அணைப்பில் சுமியின் உடல் ஓரேயடியாக நடுங்கியது.

அவளை இறுக அணைத்துக்கொண்டு "அசடு போல் இது என்ன பயம், சுமி, டாக்டருக்குப் பயந்து நோய்களை வளர விடுவார்களா? நோய் வந்தால் முளையிலேயே கிள்ள வேண்டும்."

முளையிலேயே கிள்ள வேண்டுமாமே?

சுமித்ரா கதிகலங்கிப் போனாள்.

முளையிலேயே கிள்ளுவதுபற்றிய பிரபுவின் முந்தையப் பேச்சு சுமித்ராவுக்கு நினைவு வரவும் அடி வயிற்றிலிருந்து பகீரென்றது.

பிரபு தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தான். "எனக்குத் தெரிந்த லேடி டாக்டர் ஒருத்தி இருக்கிறாள். டாக்டர் அனுசூயா என்று பெயர் (இந்த இடத்தில் மீண்டும் சுமிக்குத் தூக்கிவாரிப் போட்டது) அவளிடம் பார்க்கலாம். அவள் மாலையில் தன் டிஸ்பென்சரியை விட்டு வரமாட்டாள். அதனால், நாளைக் காலையில் அழைத்து வருகிறேன். அவள் பார்த்தால் உனக்கு

எல்லாம் சரியாகி விடும். நீ என் பழைய சுமி ஆகிவிடுவாய்?... சுமீ!"

பழைய சுமி என்றால் சுந்தரி மாதிரியா?

சுமித்ராவின் உடல் வெடவெடவென்று உதறுவதை உணர்ந்ததும், பிரபு திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினான்.

"ஷ்... பேசாமல் படுத்துக் கொள். மற்றது எல்லாம் பிறகு பார்க்கலாம். படு, சுமி" என்று அந்த நீளமான சோபாவிலேயே அவளைப் படுக்க வைத்தான்.

கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாமல் படுத்தாள், சுமித்ரா.

சற்று நேரம் லேசான புருவச் சுளிப்புடன், அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அருகில் நின்றான் பிரபு.

பிறகு ஒரு பெருமூச்சுடன் அறையை விட்டு நீங்கித் தன் அறைக்குள் சென்றுவிட்டான்.

அவனது காலடிச் சத்தம் தேய்ந்து மறைந்த பின், மெல்லக் கண்களைத் திறந்தாள், சுமித்ரா. உடனே அடக்க முடியாத அழுகையில் உடல் குலுங்கியது.

முளையிலேயே கிள்ள வேண்டுமாமே! என் குழந்தையையா? டாக்டர் அனுவாமே. அந்த ரேணுகாவைப் போகச் சொன்னாளே, அந்த டாக்டர் அனுதானே. சுந்தரிக்கு வருடத்துக்கு இரண்டு அபார்ஷன் செய்து வரும் டாக்டர் அனு எனக்குமா? குப்புறப் படுத்து விம்மினாள் சுமித்ரா.

# 13

'நாளை வருவாளாமே, டெஸ்ட் செய்வாளாமே, கண்டு கொள்வாளோ? இதைக்கூட உடனே கண்டு பிடிக்க இப்பொது எத்தனையோ சோதனைகள் இருக்கின்றன. தெரிந்து விடுமா? எப்படியும் இன்னமும் ஓரிரண்டு மாதத்தில் தெரிந்து போய்விடுமே. என்ன செய்வது? என்ன செய்ய முடியும்?'

இதுதான் முடியும் என்பது போலக் குமுறிக் குமுறி அழுதாள்.

ஓசையின்றி உள்ளே வந்த பிரபு தன்னை விசித்திரமாகப் பார்ப்பதைச் சுமித்ரா அறியவில்லை.

அன்று மதியமும் தொழிற்சாலையிலிருந்து உடனேயே திரும்பி வந்து விட்டான். பிரபு சுமித்ராவிடமே ஏதேதோ பேசிப் பொழுதைப் போக்கினான்.

நெஞ்சு நிறையக் குழப்பமும் பயமுமாக இருந்தாலும், அவன் அருகில் இருப்பது சுமிக்கு இதமாக இருந்தது. ஒன்றிரண்டு வார்த்தைகள் பதில் கூறிக் கொண்டு அவன் குரலை மனதுக்குள் இதமாக ரசித்துக் கொண்டிருந்தாள்.

"சுமி, நமக்கு வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஒரு பெரிய ஆர்டர் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் லாபம் மட்டும் ஆண்டுக்குப் பதினைந்து லட்சம் கிடைக்கும். லெதர் ஃபாக்டரியை இரு மடங்காக்கி விடலாம்" என்று மகிழ்ச்சியுடன் கூறினான். சற்று நிறுத்தி "திடீரென்று அதிர்ஷ்டம் அடிக்கிறதே சுமி, என்ன காரணமாக இருக்கும்?" என்று மென் குரலில் வினவினான்.

'நம் குழந்தைதான் காரணம். பிறக்கு முன்னராகவே அப்பாவுக்கு அதிர்ஷ்டத்தை அழைத்து வருகிறது' என்று உள்ளூரப் பரவசப்பட்டாள் சுமித்ரா. ஆனால், இதை வாய் விட்டுப் பெருமையாகச் சொல்லி மகிழ முடியவில்லையே என்று மறுகினாள்.

“இன்று அலுவலகத்தில் ஒரு கிளார்க் தன் குழந்தையை என்னிடம் காட்ட எடுத்து வந்தார். குழந்தை மிக அழகாக இருந்தது...”

சுமித்ரா உட்கார முடியாமல் நெளிந்தாள். இவன் ஆழம் பார்க்கிறானா? அவள் வாய் மூலமாகவே விஷயத்தை பிடுங்க முயற்சிக்கிறானா? உள்ளூர அச்சம் பிறந்து விட்டது அவளுக்கு.

“நம் டாக்டர் என்னிடம் ஒரு சந்தேகம் சொன்னார், சுமி,” என்று திடீரென்று தொடங்கினான் அவன்.

“இல்லை இல்லை. சந்தேகத்துக்கே இடமில்லை” என்று குதித்தெழுந்தாள் சுமி. 'ஐயோ, இந்த டாக்டர் இப்படி மோசம் செய்து விட்டாரே; சொல்ல வேண்டாம் என்றும் சொல்லி விட்டாரே' என்று பதறியது நெஞ்சு.

“அனீமியாவாக இருக்கக் கூடும் என்றார். அது இல்லையா?” யோசிப்பவன் போலப் பேசினான் பிரபு. “பின்னே வேறு என்னவாக இருக்கக் கூடும்?”

ஐயோ, டாக்டர் சொல்லவில்லை போலிருக்கிறதே; அசட்டுத்தனமாக உளறி விட்டோமே என்று கலங்கினாள் சுமி. “இல்லை, அனீமியாதான்” என்று சமாளிக்கப் பார்த்தான்.

“பின்னே எது சந்தேகமில்லை என்றாய்?”

பதில் சொல்ல முடியாமல் கெஞ்சுவது போலப் பிரபுவைப் பார்த்தாள் சுமி.

அவள் கூந்தலை வருடியபடி, "எதுவானால் என்ன? நாளை டாக்டர் அனு கண்டுபிடித்துவிடப் போகிறாள். பிறகு எல்லாம் சரியாகிவிடப் போகிறது" என்றான் குறுஞ்சிரிப்புடன், பிரபு.

இருப்புக் கொள்ளாமல் எழுந்து, ஜன்னல் அருகே சென்று, வெளியே பார்த்தாள் சுமி.

டாக்டர் அனு, பாவி! சுந்தரிக்கு ஐந்து முறை செய்தவள், படுபாவி. பணத்துக்காக இந்தக் கொலைகளைச் செய்கிறாளே, பாதகி. இதுகளையெல்லாமே கடவுள் கூட ஏனென்று கேட்கக் காணோமே, என்று பொருமினாள்.

"சுமி, அனு கைராசிக்காரி தெரியுமா?" என்று எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினான் பிரபு.

ஆறு மணி சுமாருக்கு டின்னர். டிரஸ் அணிந்து கிளம்பினான் பிரபு. ஆறடி உயரம், அகன்ற தோள், வலிய கரங்கள், சற்றும் சரியாத வயிறு, ஆண்மை மிக்க உடற்கட்டு, கர்வத்துடன் நிமிர்ந்த தலை - இவ்வளவோடு உறுதியான நடையுடன் அவன் வரும்போது எந்தப் பெண்ணின் மனம்தான் அலைப்புறாது?

இவன் கொஞ்சம் வனப்புக் குறைந்தவனாக இருக்கக் கூடாதா என்று வேதனையுடன் நினைத்தாள் சுமித்ரா.

"சவேராவில் ஒரு பிஸினெஸ் பார்ட்டி சுமி. நான் வரக் குறைந்தது மணி பன்னிரண்டாகும். வீணே விழித்துக் கொண்டிராமல் தூங்கிவிடு. மறக்காமல் சாப்பிட்டு விட்டுப் படு. செய்கிறாயா? போய் வரட்டுமா?" என்று கைகளைக் கிண்ணமாக்கி, அவள் முகத்தை ஏந்தி, நெற்றியில் லேசாக ஒரு முத்தமிட்டு விட்டுக் கிளம்பினான்.

விலக மனமற்று, அவன் அருகில் மெய்மறந்து நின்றாள் சுமி. இப்படியே நிற்கக் கூடாதா என்றிருந்தது. அன்பு இல்லாதவனா உணவு, தூக்கம் என்ற கவலைப் படுவான்?

"போகும்போதே டாக்டர் அனுவிடம் சொல்லி விட்டுப் போகிறேன். காலை விழித்ததும் வந்து விடுவாள்."

இனிய கனவிலிருந்து முரட்டுத்தனமாக எழுப்பப் பட்டவள் போல நிமிர்ந்தாள் சுமித்ரா.

"மனதைக் குழப்பிக் கொள்ளாமல் அமைதியாகத் தூங்கு." தோளை ஒருமுறை அணைத்து விட்டுச் சென்று விட்டான், பிரபு.

கண் மறையு மட்டும் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள், சுமித்ரா.

நெஞ்சில் ஒரு பகுதியை வெட்டிப் பிரிப்பது போல வேதனை உண்டாயிற்று.

'சரியாகிப் போய் விடும்' என்று அன்னை சொன்னது, நினைவு வந்தது.

மெய்தான். அவளைப் பொறுத்தவரையில் எல்லாம் சரியாகித்தான் போயிற்று.

'ஆனால், அவர் மாறவில்லையே அம்மா. இன்னமும் அதே ப்ளேபாய் பிரபுவாகத்தானே இருக்கிறார்! இப்போது கூட என்னிடம் சலிப்பு வந்து விட்டது. இல்லையானால் இப்படி நெற்றியில் லேசாக முத்தமிட்டு விட்டுப் போவாரா? இப்போதெல்லாம் மல்லி மோகம் என்று எண்ணி விம்மினாள்.

இப்போது கூட சவேராவில் பிஸினஸ் டின்னர் தானோ அல்லது அந்த மல்லியுடன் உல்லாசமோ, யார் கண்டது என்று வேதனைப்பட்டாள்.

மல்லி ஊரில் இல்லை என்று சுந்தரி சொன்னாளே என்று மூளை எடுத்துச் சொன்னபோதும், ஏன் ஊருக்குப் போனால் திரும்பி வந்திருக்கக் கூடாதா என்று எதிர் வாதம் செய்து அழ வைத்தது. அசடாகிப் போன மனது.

போனால் போகிறது. எனக்கு என் குழந்தை போதும் என்று தன்னையே தேற்றிக் கொண்டாள்.

உடனேயே தவித்தாள். அதற்கும் காலனாகக் காலையிலேயே டாக்டர் அனு வந்து விடுவாளே.

அதற்கெல்லாம் விடமாட்டேன் என்று உரக்கக் கூறினாள். உடனேயே வாயைப் பொத்திக் கொண்டு சுற்றிலும் பார்த்தாள்.

வேலையாட்கள் மாடிக்கு அழையாமல் வருவது கூடாது என்ற பழக்கம் இருந்ததால் போயிற்று.

இல்லையானால் இதை யாரும் கேட்டிருந்தால், அவளைப் பைத்தியம் என்றல்லவோ எண்ணுவார்கள்!

பைத்தியமே பிடித்து விடுமோ என்று கூட அச்சம்தான். வயிற்றில் குழந்தையோடு செத்துப் போன ரேணுகா கூட இப்படித்தான் மனம் தடுமாறியிருப்பாள்.

பழைய குப்பைகளைக் கிளறிப் புத்தியைச் சிதறவிடக் கூடாது என்று முடிவு செய்தாள். இனி நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்தித்தாள்.

'குழந்தையை எப்படிக் காப்பது?'

வெகு தீவிரமான சிந்தனைக்குப் பிறகு ஒரு வழி தெரிந்தது. அதைச் செயலாற்றுவது என்றால் எவ்வளவோ வேதனையாக இருந்தது. மனதைக் கல்லாக்கிக் கொண்டு எழுந்தாள்.

இன்டர்காமில் தலைமைப் பணியாளை அழைத்து "டிரைவரிடம் ஃபியட் காரை எடுக்கச் சொல்," என்றாள்.

ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்தாள். பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதினாள் - அல்லது எழுத முயற்சி செய்தாள். என்ன எழுதுவது என்று புரியவில்லை. முதலில் தொடங்கவே தெரியவில்லை. பொன்னான பதினைந்து நிமிடங்களை

வீணாக்கி அது எழுதாத கடிதமாகவே முடிந்தது. மேலும் வீண் விரயம் செய்ய நேரம் இல்லையே.

பிரபு பன்னிரண்டு மணிக்கு வருகிறேன் என்றான். சரியாகப் பன்னிரண்டுக்கு அவனை வீட்டில் எதிர்பார்க்கலாம்.

இடைப்பட்டது இன்னமும் நாலே மணிநேரம்.

கைப்பையுடன் வேகமாகக் கீழே இறங்கி வந்தான். பாதியிலேயே நின்றாள். இவ்வளவு வேகமாக இறங்கினால் குழந்தைக்கு கெடுதலோ? நிதானமாக இறங்கலானாள்.

வாயிலில் கார் ரெடியாக நின்றது. குறுகுறுவென்று பார்த்த தலைமைப் பணியாளிடம், "ஒரு சினேகிதி வீட்டுக்குப் போகிறேன்," என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டாள்.

கார் கேட்டைத் தாண்டும் போது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. பிரபுவுடைய பெரியன்னையின் ஞாபகம் வந்தது. அவர் என்ன நினைப்பார்? முதலில் பிரபுவுக்கு எவ்வளவு கோபம் வரும்? அவனது கோபத்தை எண்ணி உடல் சிலிர்த்தாள். நாளை விஷயம் வெளியாகும் போது அவனுக்குத் தலைகுனிவாயிற்றே என்று வருத்தமாக இருந்தது. ஆனால், இந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேறு வழி இல்லையே.

"அடையாறு போப்பா" என்று டிரைவரிடம் சொல்லி விட்டுப் பின்னே சாய்ந்து கொண்டாள். என்ன செய்ய வேண்டும் எப்படிப் பேச வேண்டும் என்று மனதிற்குள்ளாக திட்டமிடத் தொடங்கினாள்.

"அடையாறு வந்து விட்டது. இங்கே எங்கேம்மா?" என்று டிரைவர் கேட்கவும் திகைத்துப் போனாள்.

நடராஜின் வீட்டில் சென்று இறங்க முடியாது. எப்படியும் பிரபுவுக்குத் தெரிந்து திட்டம் வீணாகி விடும்.

பிரபுவுடைய தூரத்து உறவினர் ஒருவர் ஃபர்ஸ்ட் மெயின் ரோட்டில் இருப்பது நினைவு வந்தது. காரை அங்கே விடச் சொன்னாள். வெளியிலேயே நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டாள்.

"நீ போப்பா. ஐயா திரும்பும்போது என்னைப் பிக்கப் செய்து கொள்வார்" என்று அலட்சியமாகச் சொல்லுவது போலக் கூறினாள்.

டிரைவர் அசையாமல் நிற்கக் கண்டு திகைத்தாள். "என்ன? என் நிற்கிறாய்?" என்று பதட்டத்தை மறைத்து வினவினாள்.

"நீங்கள் வீட்டுக்குள் போகும்வரை நின்று விட்டுப் போகிறேன் அம்மா" என்றான் அவன் பணிவுடன்.

"ஓ... ஏன்? என்னை அதற்குள் ஏதேனும் பூதம் பிடித்து விழுங்கி விடுமா? போ என்றால் போயேன்" என்று அவனிடம் எரிந்து விழுந்தாள்.

பாவம், டிரைவர் மிரண்டு போனான். அவள் ஆத்திரப்படுவதன் காரணம் புரியாமல் விழித்து விட்டுக் காரில் ஏறி ஓட்டிக் கொண்டு சென்று விட்டான்.

நல்லதை நினைத்து நின்றவனைத் திட்டி விட்டோமே என்று பச்சாதாபப்பட்டாள் சுமி. பெருமூச்சுடன் திரும்பி நடந்தாள்.

நடராஜின் வீட்டு நம்பர் 17-B என்று அவன் ஒரு முறை சொன்னது நினைவு இருந்தது. வரிசையாகப் பார்த்துக் கொண்டே நடந்தாள். கொஞ்சம் திண்டாடி விட்டுக் கண்டுபிடித்தாள்.

உள்ளே செல்லவிடாமல் கேட்டில் நின்ற கூர்க்கா தடுத்தான். "கோன் ஹை?" என்று அதட்டினான்.

"நான்தான், அவரிடம் சுமித்ரா என்று சொல்லப்பா" என்று திணறினாள் சுமி.

இராப் பிச்சைக்காரி போலத் தெருவில் நிற்கச் சுமிக்கு அவமானமாக இருந்தது. திரும்பி விடலாமா என்று கூடத் தோன்றியது.

அதற்குள் நடராஜே தற்செயலாக மொட்டை மாடியில் வந்து நின்றான்.

"கூர்க்கா, என்ன அது?" என்று வினவினான்.

"நடராஜ்!" என்று கூவியே அழைத்து விட்டாள் சுமித்ரா.

"யார்? சுமியா! உள்ளே வா சுமி, இதோ வருகிறேன்" என்று விரைந்து உள்ளே மறைந்தான்.

'ஸாப்'புக்குத் தெரிந்தவள் என்பது புரிந்ததும், அவசரமாக அவளை உள்ளே அனுமதித்தான் கூர்க்கா.

அவள் உள்ளே வருமுன் நடராஜ் கீழே வந்து விட்டான். பறந்தான் போலும்! "வா சுமி, உள்ளே வா" என்று அழைத்துச் சென்றான்.

"உட்கார், சுமி. ஏதேனும் சாப்பிடுகிறாயா?" என்று சோபாவைக் காட்டினான்.

"ஒன்றும் வேண்டாம். நடராஜ், நான்... நான்..." என்று தடுமாறினாள், சுமி. வரும் வழியில் நினைத்து வைத்ததெல்லாம் மறந்து போயிற்று.

"என்ன சுமி? என்ன நடந்தது? இந்த நேரத்தில் தனியாக எப்படி வந்தாய்?" என்று பரபரத்தான் அவன்.

பதில் பேச முடியாமல் அழுதாள் சுமி.

நடராஜின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. கை முஷ்டி இறுகியது. "சொல்லு, சுமி. அவன் உன்னை ஏதாவது துன்புறுத்தினானா?" என்று சினத்துடன் வினவினான்.

"இல்லை, நடராஜ் அப்படி ஒன்றும் இல்லை" என்று முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் சுமித்ரா. "நான்... நானாகவேதான் வீட்டை விட்டு வந்து விட்டேன்." என்றாள். குரல் தடைப்பட்டது. சற்றுச் செருமிச் சரிப்படுத்திக்கொண்டு, "நடராஜ், நான் உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறேன். இன்னும் சில மாதங்கள் நான் அவர் அறியாமல் வாழ வேண்டும்" என்றாள்.

"வாழ்க்கை முழுவதுமே அவர் அறியாமல் வாழலாம் சுமி" என்றான் அவன் மிக மிக மிருதுவாக.

சுமித்ரா பதறிப் போனாள். "இல்லை இல்லை. அப்படி இல்லை நடராஜ். அப்படி இல்லை" என்றாள் - கண்ணில் நீர் வழிய.

"இல்லை என்றால் போகிறது. அதற்காக நீ அழுவானேன்? எதற்காகவும் நீ அழக்கூடாது சுமி?" என்றான் நடராஜ். "சரி, இப்போது என்ன செய்யவேண்டும்? சொல், செய்துவிடுவோம். என் இப்படி வந்தாய்? பிரபு இப்போது எங்கே?"

"நடராஜ், நான் இப்போது அவருடைய குழந்தையின் தாய்!" என்றாள் சுமித்ரா.

"ம்ம்?" என்றான், நடராஜ் விழிகள் மின்ன.

"அவருக்கு இன்னமும் தெரியாது. தெரிந்து விட்டால்... தெரிந்து விட்டால் அவர் அதை அழித்து விடுவார்."

"சுமித்ரா!" என்றான் நடராஜ் அதிர்ச்சியுற்று.

"ஆமாம் நடராஜ், மெய்தான் இது. முன்பே சொல்லியிருக்கிறார்." என்றாள் சுமித்ரா வேதனையுடன். "நாளைக்கு லேடி டாக்டர் வருவார். அதனால், அதற்குள் தப்பி ஓடி வந்துவிட்டேன்."

"என்ன சுமி இது. நீ மறுத்தால் அவர்களால் என்ன செய்ய இயலும்?"

"உங்களுக்குத் தெரியாது நடராஜ். இதற்கு என்றே எத்தனை மாத்திரைகள் மருந்துகள் இருக்கின்றன தெரியுமா? எனக்குத் தெரியாமலேயே உணவில் கலந்து தந்து விட்டால் நான் என்ன செய்வேன்? எனக்க நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது."

நடர்ராஜ் தன் விழிகளைக் கூர்மையாகச் சுமியின் முகத்தில் நாட்டினான். "சுமி, ஒரு பதில் சொல்லுகிறாயா? இது வெறும் குழந்தைப் பைத்தியமா அல்லது பிரபுவின் பிள்ளை மேல் உனக்கு இவ்வளவு அக்கறையா?"

சுமித்ரா உதட்டைக் கடித்துக் கொண்டு, தலை குனிந்தாள். நடராஜனின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"சுமி! அந்தப் பிரபுவைக் கடவுள் என்ன பொருளால் செய்தார்? ஒழுக்கமே உருவான உன்னைக்கூடக் கவர்ந்து விட்டானே!"

சுமி பதிலே பேசவில்லை.

"சிசுவைக் காப்பாற்ற ஓடி வந்துவிட்டாய் இல்லையா? ஏதோ. அந்த மட்டும் என் உதவியை நாடினாயே அதற்கு என் நன்றி!" என்று சிந்தனையில் ஆழ்ந்தான் நடராஜ்.

## 14

நடராஜ் சில நிமிடங்கள்தான் சிந்தித்தான். அதற்குள் சுமித்ரா அவசரப்பட்டாள். "நடராஜ்! அவர் பன்னிரண்டு

மணிக்கு வந்துவிடுவார். உடனே நான் இல்லாததைக் கண்டுவிடுவார். அதற்குள் நாம் சீக்கிரமாக ஏதாவது செய்துவிட வேண்டும்" என்று பரபரத்தாள்.

"சரி வா, போகலாம்" என்று எழுந்தான் நடராஜ். மேஜைமேல் இருந்த டெலிபோனை எடுத்தான்.

தன் மானேஜரிடம் அவசரமாக வெளியூர் செல்வதாகவும், திரும்பி வர இரண்டு மூன்று தினங்கள் ஆகக்கூடும் என்றும் கூறினான். உடனடியாகக் கவனிக்க வேண்டிய வியாபார விஷயங்கள் சிலவற்றையும் கூறிவிட்டு ரிசீவரை வைத்தான்.

"கிளம்பு சுமி" என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

சுமித்ராவுக்கு முகம் சிவந்தது. "நான் ஒன்றும் எடுத்து வரவில்லை நடராஜ்! சூட்கேஸில் ஏதேனும் எடுத்து வந்தால், வேலைக்காரர்கள் சந்தேகப்படுவார்கள் என்று கொஞ்சம் பணம் மட்டும்... ஓர் இரண்டாயிரம் ரூபாயுடன் வந்து விட்டேன்" என்றாள்.

"பரவாயில்லை. போகிற வழியில் ஏதாவது வாங்கிக் கொள்ளலாம். ஆனால் மணி ஒன்பது. கடைகள் எல்லாம் அடைத்திருப்பார்கள். ஒருவேளை மாம்பலம் பக்கம் ஏதேனும் கடை திறந்திருக்கிறதா என்று பார்க்கலாம்." என்று மேஜையைத் தாண்டி வந்தான். "கொஞ்சம் இரு சுமி" என்று உள்ளே போனான். சில நிமிடங்களில் ஒரு ப்ரீப்கேசுடன் வந்தான்.

இருவருமாகக் காரில் ஏறிக் கொண்டனர்.

அவர்களது நற்காலம் - மாம்பலத்தில் ஒரு ஜவுளிக் கடை திறந்திருந்தது. யாரோ ஒரு கல்யாண கோஷ்டி சேலை செலக்ட் செய்து நேரம் போக்கிக் கொண்டிருந்தனர்.

நல்லதாயிற்று என்று அவர்களும் உள்ளே சென்றனர்.

"ஆறு செட் எடுத்துக் கொள்." என்றான் நடராஜ்.

அது ரெடிமேட் துணிகளும் கிடைக்குமிடம். சேலைகளோடு பிளவுஸ், பெட்டிகோட், ப்ரா எல்லாம் அங்கேயே வாங்கிக் கொண்டாள் சுமித்ரா. நாலைந்து டவல், கர்ச்சீப் கூட எடுத்து வைத்தான் நடராஜ்.

துணிமணிகளை எடுத்தானதும் தன் கைப்பையைத் திறந்தாள் சுமித்ரா.

"இந்த நடராஜ் இன்னமும் பிச்சைக்காரனாகிவிட வில்லை. அதை மூடு சுமி" என்று அவள் காதருகே முணுமுணுத்துவிட்டுக் கல்லாவில் அமர்ந்திருந்தவரிடம் பில்லுடன் சென்றான் நடராஜ்.

சிவந்த முகத்துடன் காரில் ஏறினாள் சுமித்ரா.

கார் சீரான வேகத்துடன் சென்றது. நகரத்தைத் தாண்டியதும் "நீ படுத்துக்கொள் சுமி" என்று பணித்தான் நடராஜ்.

மெய்யாகவே சுமித்ரா மிகவும் சோர்ந்து போயிருந்தாள்.

ஏற்கெனவே உடம்பு கொஞ்சம் வீக்காக இருந்தது இப்போது இவ்வளவு மனக் குழப்பத்தில் ஒரேயடியாகத் துவண்டு போனாள்.

நடராஜ் கூறியதும் மறுப்பின்றிப் பின் ஸீட்டில் படுத்து உறங்கிப் போனாள்.

அவளுக்குக் கார்ப் பயணம் தொல்லையாகிவிடக் கூடாதே என்று வெகு கவனத்துடன் காரோட்டினான் நடராஜ்.

கடைசியாக அவர்கள் வேலூரை அடைந்தபோது, இரவு மணி இரண்டாகி விட்டது.

வேலூரில் ஒரு பெரிய ஹோட்டலின் முன்னே காரை நிறுத்தினான்.

இரண்டு அறைகள் வாடகைக்கு எடுத்து விட்டு வந்து சுமியை எழுப்பினான்.

அவளை அவளது அறைக்கு அழைத்துச் சென்றான். ஒரு தம்ளர் சூடான பால் கொண்டு வரச்செய்து அவளை அதைக் குடிக்க வைத்தான். பிறகு படுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

அவள் விழித்ததும் தன்னிடம் வந்து சொல்லுமாறு ஹோட்டல் பணியாளனிடம் சொல்லிவிட்டுப் படுத்தான்.

அந்த ஹோட்டலின் நிர்வாகி நடராஜனுக்குத் தெரிந்தவர். எனவே, அந்த இரவிலும் தான் நினைத்ததை எல்லாம் சாதிப்பதில் நடராஜனுக்குச் சங்கடம் இல்லாது போயிற்று.

அடித்துப் போட்டது போல சுமித்ரா வெகுநேரம் தூங்கினாள்.

சன்னல் வழியே வந்த சூரிய வெளிச்சம் சுள்ளென்று முகத்தில் உறைத்த பின்தான் விழித்தாள்.

எழும்போதே எல்லாம் வேறுபாடாகத் தெரிந்தது. முதலில் அவள் வீட்டில் சூரிய வெளிச்சம் சூடாக முகத்தில் படுவது ஏது? யோசித்துக் கொண்டு கண்ணைத் திறக்கும் போதே எல்லாம் விளங்கிவிட்டது. அருகில் பிரபு இருக்க மாட்டான்.

முதலில் அன்னையின் கை, பிறகு ஆளவந்தவன் கை, இவை இரண்டுமில்லாத தனிமை.

அழுகை வரப் பார்த்தது. பிடிவாதமாக அடக்கிக் கொண்டாள். 'இந்தத் தன்னிரக்கம் போலத் தைரியத்துக்குட் பட்டது எதுவுமில்லை' என்று யாரோ எழுதி எப்போதோ படித்தது சமயத்தில் நினைவுக்கு வந்து கை கொடுத்தது.

கூடவே நடராஜுக்கு நம்மால் எத்தனை தொல்லை என்று கலக்கம் வந்தது. 'யோசியாதே மனமே, யோசியாதே' என்றபடி கதவைத் திறந்தாள்.

"இதோ, அவரண்டை சொல்றேனம்மா" என்று ஒரு பையன் ஓடினான்.

சற்று நேரத்தில் நடராஜ் வந்தான். கூடவே காபியும் வந்தது. பிரஷ், பேஸ்ட் எல்லாம் வந்தது.

"பல் துலக்கிவிட்டு, காபியைக் குடி" என்றான் நடராஜ்.

அவன் சொன்னபடி பல் தேய்த்துவிட்டு வந்து காபியை எடுத்தாள் சுமித்ரா. "அங்கே என்ன நடக்கிறதோ தெரிய வில்லை," என்றாள் சற்றுக் கலக்கத்துடன்.

"எப்படியும் நீ கவலைப்படும்படியாக ஒன்றும் நடவாது. உன் பிரபு அப்படி ஒன்றும் உயிரை விட்டு விடமாட்டான்."

சுமியின் முகம் அனிச்சமாக வாடிவிட்டது.

அதைப் பார்த்ததும் நாக்கைக் கடித்துக் கொண்டான் நடராஜ். "ஸாரி சுமி! என்னவோ தெரியவில்லை. என்னால் பிரபுவை நல்லபடியாக நினைக்கவே முடியவில்லை. சரி அதைவிடு. இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம் தெரியுமா?".என்று பேச்சை மாற்றினான்.

"ஆமாம். அதைப் பார்க்க வேண்டும். இனி என்ன செய்வது நடராஜ்? எங்கே தங்குவது? ஓட்டலிலே வசிக்க முடியாது அல்லவா?"

"நிச்சயமாக முடியாது" என்று ஆமோதித்தான் நடராஜ். "சுமி! உனக்குப் பூங்கோதையை நினைவிருக்கிறதா?" என வினவினான்.

"ஓ நன்றாக. மிகவும் நல்லவள். எனக்கு அவளை நிறையப் பிடிக்கும். ஆனால் அவள் பி.யு.சி முடித்ததுமே விலகி விட்டாளே."

"அவள் இங்குதான் இருக்கிறாள்."

சுமித்ரா யோசனையோடு நடராஜைப் பார்த்தாள். பூங்கோதையின் பேச்சு ஏன் வருகிறது?

"அவள் இங்கேதான் மெடிகல் காலேஜில் படிக்கிறாள். அவளிடம் தான் உன்னை ஒப்புவிக்கப் போகிறேன்."

"நடராஜ்! அவள் நல்லவள் தான். நல்ல சினேகிதியும் கூட. ஆனாலும் அவளுடைய உறவினர்கள், பெற்றோர் என்று இருப்பார்களே. அவர்கள் ஒப்புக் கொள்வார்களா?"

"அவள் குடும்பம் மிகவும் நல்ல மாதிரி சுமி. அவளுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். இங்கே அண்ணன் குடும்பம் இருக்கிறது. எல்லாரும் ஒன்றாக இருக்கிறார்கள். அவர்களும் நல்ல குணம். அதிலும் அந்த அண்ணி அப்படியே மகாலட்சுமிதான். அதோடு மாறன் பிரதரை - அவர்தான் நம் பூங்கோதையின் அண்ணன் - எனக்கு முன்பே தெரியும். திருச்சியில்தான் அவர் படித்தார். ஒரு தடவை காவிரியில் என்னைக் காப்பாற்றினார். அதிலிருந்து நம் வீட்டுக்கு வந்து போவார்."

"ஆனாலும்..." என்று தொடங்கிவிட்டுக் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள் சுமித்ரா.

சும்மாவே அவளால் அவனுக்கு மிகுந்த சிரமம். அவனாக ஓர் இடம் கண்டு பிடித்தால், அதில் சொத்தையும் சொள்ளையும் கண்டுபிடிப்பதா? "ஸாரி நடராஜ்" என்று மன்னிப்புக் கேட்டாள்.

"ஸாரியெல்லாம் என்னிடம் வேண்டாம் சுமி. இது தான் உனக்கு வசதியாக இருக்கும். திருச்சியில் நம் வீட்டில் தங்கலாம். ஆனால் உன்னைப் பரிவுடன் பாதுகாக்க ஆளும் இல்லை; அதோடு பிரபுவும் அங்கே தான் தேடி வருவார். பிரபு முட்டாளில்லை சுமி. நீ என்னிடம்தான் உதவி தேடி வந்திருப்பாய் என்று அவர் ஊகித்திருப்பார். அதோடு இந்த நிலையில் உனக்கு கவனிப்பும் வேண்டும். உடனொத்த தோழியும் வேண்டும். இரண்டிற்கும் இது நலம் என்றுதானே இங்கே அழைத்து வந்தேன்."

"சரிதான் நடராஜ்," என்றாள் சுமித்ரா.

நடராஜுக்குச் சங்கடமாக இருந்தது.

தேவதை மாதிரிப் பெண்ணுக்கு இந்த சோதனையா? புழுதியில் புரட்டிவிட்டானே பாவி! கண்களின் உயிர்ப்பையே கொன்றுவிட்டானே.

இந்த நாட்டில் இதற்கு விமோசனமும் இல்லை. கொடுத்தாலும் ஏற்கும் மனப்பான்மையும் இருக்க வேண்டும் அல்லவா?

"ஹலோ நடராஜ்," என்று உற்சாகமாக அழைத்தபடி ஒருவர் உள்ளே வந்தார்.

நடராஜனைவிட ஓர் ஏழெட்டு வயது மூத்தவராக இருப்பார். ஆனால் அதற்குள் பின்னந் தலையில் லேசான வழுக்கை விழுந்து விட்டது. நல்ல தொப்பைகூட. ஆனால் விளக்கப் போட்ட மாதிரி ஒரே உற்சாகம்.

சுமி சுவாரசியத்துடன் அவரைக் கவனித்தாள்.

அவளுக்கும் ஒரு வணக்கம் போட்டுவிட்டு நடராஜிடம் தொடர்ந்தார். "இரவே வந்து விட்டீர்களாமே. வீட்டிற்கு

வரக்கூடாதா? நம் வீடு இருக்கும் போது இங்கே ஹோட்டலில் தங்க வேண்டுமா? நீ என்ன அந்நியனா? நீ என்கிறேனே என்று தவறாக எண்ண வேண்டாம் அம்மா! இவன் என் தம்பி மாதிரி."

"உங்கள் வீட்டில் தங்கலாம் மாறன் பிரதர். ஆனால் இங்கு மாதிரி மணியடித்தால் காபி தருவீர்களா?" என்று வேடிக்கையாக வினவினான் நடராஜ்.

"அடிப்பதற்கு மணி கிடையாதே தவிர, இந்தக் காபியைவிடப் பத்து மடங்கு மேலான காபி தருவோம்," என்று பெருமையடித்தார் மாறன்.

"போச்சு போச்சு. மானமே போச்சு. உங்கள் ஹோட்டலின் மானத்தை நீங்களே வாங்கிவிட்டீர்களே. நீங்களே இப்படிப் பேசினால் இந்த ஹோட்டலில் எவன் காபி குடிப்பான்?" என்று கேலியாகச் சிரித்தான் நடராஜ்.

"அதற்குத் தேவையான ஏமாந்த சோணகிரிகள் உன்னைப் போல ஆயிரம் பேர் இருக்கிறார்கள் அப்பா" என்றார் அவர் பளிச்சென்று.

சுமி சிரித்து விட்டாள்.

உடனே அவர் அவளிடம் திரும்பினார். "இந்தத் தம்பிக்கு மரியாதை தெரியவில்லையே அம்மா. அறிமுகப் படலத்தை அடியோடு மறந்து போனார் பாருங்களேன். என் பெயர் மாறன். இந்த ஹோட்டலின் மானேஜர். உங்கள் பெயர்?"

"அந்த 'ங்கள்' எல்லாம் வேண்டாம் ஸார். அவர் தம்பி என்றால், நான் தங்கைதான். நடராஜின் ஒன்று விட்ட தங்கை நான். என் பெயர் சுமித்ரா" என்று வணங்கினாள் சுமித்ரா.

"சரிதானம்மா. சாமான்களை எடுத்துக் கொண்டு கிளம்பு. நம் விட்டுக்குப் போகலாம். நடராஜ் நீயும்தான். நான் டாக்ஸி

கொண்டு வரச் சொல்லுகிறேன்." என்று வெளியே சென்றார் மாறன்.

அவர் சென்றதும், "தங்கையாகிவிட்டாயா சுமி?" என்று வினவினான் நடராஜ். கண்களை இறுக மூடித் திறந்தான். "அதுவும் சரிதான்' என்றான்.

ஒருகணம் அமைதி காத்த சுமித்ரா, திடீரென்று பதறினாள். "அடடா நடராஜ், நான் தங்கை என்று சொல்லி விட்டேனே. உங்களுக்கு மிகவும் தெரிந்தவராக இருக்கிறாரே கண்டு கொள்ளுவாரா?"

"மாட்டார், இவர் படித்த காலம் பத்து ஆண்டுகளுக்கு முன்னால். அப்போதுதான் நம் வீட்டுக்கு வரப் போக இருந்தார். பிறகு படிப்பு முடிந்து இங்கே வேலை கிடைத்து அவர் சென்ற பின் தொடர்பே விட்டுப் போய் விட்டது. நான்தான் அப்பா அம்மா இருவரும் போன பிறகு சென்னையில் வசிக்கத் தொடங்குமுன் தெரிந்தவர்கள் எல்லாரையும் பார்த்துவிட்டு வந்தேன். அப்போதுதான் மீண்டும் இவரைப் பார்த்தேன். அதன் பிறகுதான் மீண்டும் இவரைப் பார்த்தேன். அதன் பிறகுதான் பூங்கோதை இவருடைய தங்கை என்பது கூடத் தெரியும்." என்றான்.

அதற்குள் இருவரையும் அழைத்துக் கொண்டு செல்ல மாறன் வந்துவிட்டார்.

பூங்கோதை வீட்டு வாசலிலேயே காத்து நின்றாள்.

ஆண்களுக்கு அடுத்து சுமித்ராவும் இறங்குவதை ஆச்சரியத்துடன் பார்த்தாள். "சுமித்ரா! நீ உங்கே இவருடன்?" என்று வியப்புடன் கூறினாள்.

"ஆமாம் கோதை. நம் வீடு இருக்கத் தங்கையுடன் ஹோட்டலில் தங்குகிறார் பார்" என்று குறை கூறினார் மாறன்.

"நம் வீடு இருக்க ஹோட்டலில் உண்டு வயிற்றைக் கெடுத்துக் கொள்வதா?" என்று உரிமையுடன் கடிந்தவாறு வந்தாள் அவர் மனைவி ஸ்வர்ணா.

"சேச்சே, என்ன அநியாயம் பார். நடராஜ் தம்பி! இவள் சொல்வது புரிகிறதா? வயிற்றைக் கெடுப்பது இவளது ஏகபோக உரிமை. அதிலிருந்து தப்பி ஹோட்டலில் சாப்பிட்டு நிம்மதியாக இருக்கலாமா என்று கேட்கிறாள்" என்று மனைவியைக் கேலி செய்தார் மாறன்.

"ஆமாம், அப்படிக் கெட்டுக் கெட்டுத்தானே இவ்வளவு பெரிய தொந்தி வந்திருக்கிறது." என்று திருப்பிக் கொடுத்தாள் ஸ்வர்ணா.

"ஆகா, என்னைக் கேவலப்படுத்தி விட்டாயே. எனக்குத் தொந்தியா? ஏது தொந்தி, காட்டுப் பார்ப்போம்" என்று சிரமத்துடன் வயிற்றை எக்கிக் கொண்டு நின்றார். எல்லாரும் சிரித்தனர்.

இந்தக் கேலியிலும் சிரிப்பிலும் "பூங்கோதையின் தங்கையா?" என்ற ஆச்சரியமான கேள்வி அடிபட்டுப் போயிற்று.

நடராஜ் மட்டும் அதைக் கவனித்து, அவளை நேர் பார்வையாகப் பார்த்தான். "ஆமாம், தங்கைதான். என் பெரியம்மா கணவருடைய தம்பி மகள்" என்றான் விளக்கம் கூறுவதாக.

"ஓ..." விழிகள் அகன்று பளபளத்தபோதும், 'ஓகே' என்ற சம்மதத்தைத் தர அவள் மறுக்கவில்லை.

அன்று மாலையில் சுமி, நடராஜ் பூங்கோதை மூவருமாக வாக்கிங் போனார்கள்.

அப்போது பூங்கோதையிடம் எல்லாம் சொன்னான் நடராஜ். "சுமியை உன்னிடம் ஒப்புவித்துப் போகப் போகிறேன் பூங்கோதை. குறைந்தபட்சம் அவளது பிரசவம் வரையிலேனும் நீதான் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் உன்னைத்தான் நம்பி வந்தேன்" என்று முடித்தான்.

"உங்களுக்காக நான் இதுகூடச் செய்ய மாட்டேனா?" என்று முடித்தான்.

"அதுதானே! உன்னையும் சுமியையும் எப்பேர்ப்பட்ட ஆபத்தான இக்கட்டிலிருந்து காப்பாற்றினேன். அந்த நன்றிக்காகவேனும் நீ இது செய்ய வேண்டாமா?" என்று வேடிக்கையாகப் பேசினான் நடராஜ்.

சுமியும் பூங்கோதையும் சிரித்தார்கள். இருவரும் அந்த வருடம்தான் கல்லூரியில் அடியெடுத்து வைத்த மாணவிகள். பழைய மாணவர்கள் படு அட்டகாசம் செய்தார்கள். 'மயங்குகிறாள் ஒரு மாடு' என்பான் ஒருவன். 'மாதா? மாடா?' என்பான் இன்னொருவன். ஒரு நாள் சுமித்ராவும் பூங்கோதையும் மட்டும் மாணவர்களின் மத்தியில் தனியே மாட்டிக் கொண்டார்கள். மாணவர்கள் அவர்களைச் சுற்றிக் கும்மியடித்தனர். இருவருமே அழாத குறைதான். அப்போது நடராஜ் ஒரு லெக்சரருடன் பேசிக் கொண்டு வந்தவன் இவர்களைக் கண்டான். அவன் அந்த மாணவர்களை விரட்டி அவர்களை மீட்டான். இருவருக்கும் நடராஜிடம் மகா நன்றி.

இந்த பழைய நினைவில் இருவரும் நகைத்தார்கள். ஆனால், பூங்கோதையின் சிரிப்பு முன் போலன்றிச் சற்று அடங்கியிருப்பதாக சுமிக்குத் தோன்றியது.

சிரித்து முடித்ததும், "வேறே எங்கே என்றாலும் வேட்டை நாயின் மோப்பத்தோடு பிரபு கண்டு விடுவான். இங்கே என்றால்

துளி சந்தேகம் தோன்றக் கூட வழியில்லை” என்றான் நடராஜ்.

“அது நிஜம்தான். ஆனால், அண்ணனிடம் என்ன சொல்லப் போகிறீர்கள்?” என்று பூங்கோதை கேட்டாள்.

“அதை நான் பார்த்துக்கொள்கிறேன். சுமி, நீ மட்டும் நான் சொல்வதற்கெல்லாம் ஆமாம் போட்டு விடு” என்றான் நடராஜ்.

சரி என்று தலையை உருட்டிய சுமியின் முகம் வாடியது.

“ஏன், அவர் நினைவு வந்துவிட்டதா?” என்று கொஞ்சம் கோபமும் கேலியுமாகக் கேட்டான் நடராஜ்.

“தலை சுற்றுகிறதா?” என்று பரிவுடன் கேட்டாள் பூங்கோதை.

“இரண்டுமேதான்” என்று நடராஜைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள் சுமித்ரா.

சுமியின் நெற்றியில் குளிர்ச்சியாகப் புறங்கையை வைத்து அழுத்தினாள் பூங்கோதை. அப்படியே சற்று நேரம் அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டாள். சில நிமிடங்களில் சுமி சரியாகிவிட்டாள்.

எல்லாரும் வீடு வந்தார்கள்.

அதற்குள்ளாக மாறனும் வந்துவிட்டார். எல்லாருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

“ஒரு விஷயம் தெரியுமா நடராஜ்? போன தடவை நீங்கள் இங்கே வந்து விட்டுப் போனீர்களே. பிறகு கொஞ்ச நாள் கோதை என்னைக் கரித்தெடுத்து விட்டாள். ‘எங்கே இருக்கிறார் என்ன செய்கிறார்’ என்று கேட்டுக் கேட்டு உயிரை வாங்கி விட்டாள்” என்று தங்கையைக் கேலி செய்தார் மாறன்.

"நான் அவளுடைய கல்லூரிக் காவலன் அல்லவா? அதுதான் துளைத்திருக்கிறாள்" என்றான் நடராஜ்.

புன்னகையோடு பூங்கோதையின் முகத்தைப் பார்த்து சுமி பிரமித்தாள். அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்திருந்தது.



## 15

பூங்கோதை ஏன் இப்படி முகம் சிவக்க வேண்டும் என்று யோசித்தவாறே சுமித்ரா நடராஜின் பக்கம் திரும்பினாள். அவன் முகத்தில் எதையும் கண்ட அடையாளமே இல்லை. அவன் தன் போக்கில் மாறனுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"உனக்கு இது எத்தனாம் மாதம்?" என்ற மாறனுடைய தாயார் பார்வதி கேட்கவும் சுமித்ரா திகைத்துப் போனாள்

பூங்கோதை லேசாகச் சிரித்தாள். "அம்மாவுக்கு இது எப்படித் தெரியும் என்று பார்க்கிறாயா? இந்த மாதிரி விஷயங்களில் அவர்களுக்கு எக்ஸ்ரே கண்."

எல்லாரும் சிரித்தார்கள்.

சுமி வெட்கத்துடன், "இப்போதுதான் இரண்டு என்று நினைக்கிறேன்," என்றார் பார்வதி.

"அதுதான் மசக்கை ஜாஸ்தியாக இருக்கிறது. கண் இறங்கி முகம் சோர்ந்து விட்டதே," என்றார் பார்வதி.

"மசக்கை என்றால் என்னம்மா?" என்று மாறனுடைய ஐந்து வயது மகள் மதுமதி கேட்டாள்.

"அது அது... அது ஒரு மாதிரி தலைவலி கண்ணு!" என்று பதிலளித்தாள் ஸ்வர்ணா.

"எனக்குக்கூடக் கொஞ்சம் மசக்கை இருக்கிறது, அம்மா" என்றான் மதுவுடைய இரட்டையான மதன்.

"பாவி, கெடுத்தாயே!" - ஓகோ என்று சிரித்தார் மாறன்.

எல்லாருமே - சுமி உட்பட - ஒரேயடியாகச் சிரித்து விட்டார்கள்.

"ஏம்பா சிரிக்கிறீர்கள்?" இது மதனின் கேள்வி.

"அது பெண்களுக்கு மட்டும் வரும் தலைவலிடா" என்று விளக்கம் கூறினார் பாட்டியார்.

"எனக்குத்தான் வரும், ஹய்யா!" என்று குதித்தாள் மதுமதி.

"எல்லாம் உன்னால் வந்த வினை ஸ்வர்ணா. குழந்தைகளிடம் என்ன சொல்வது என்று இல்லாமல் பேசி" என்று மனைவி மேல் பாய்ந்தார் மாறன்.

அவள் வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

"சும்மா இரடா," என்று மகனை அதட்டி விட்டுப் பேத்தியிடம், "அதெல்லாம் இப்போது வராதடா கண்ணு. நன்றாக உயரமாக வளர்ந்து சேலை கட்டிக் கல்யாணமாகி அம்மா மாதிரி ஆன பிறகுதான் வரும்" என்று உரைத்தார் பார்வதி. உடனேயே வாடிய முகத்துடன் மகளைப் பார்த்தார்.

பூங்கோதை முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"அம்மா, உங்களுக்கு இப்போது வந்திருக்கிறதா!" என்று தாயைப் பிடித்தன குழந்தைகள்.

"போச்சுடா. அதெல்லாம் வராது. போ. ஓடுங்கள், ஓடுங்கள். உங்கள் ஹோம் வொர்க் என்ன ஆயிற்று? நாளைக்கு டீச்சர்

அடிப்பார்கள் ஓடுங்கள்" என்று குழந்தைகளை விரட்டினாள் ஸ்வர்ணா.

குழந்தைகள் சென்றபின், "அதென்னடி வராது? அதுகளுக்கும் வயது ஐந்தாகிறது" என்று மருமகளைப் பார்த்தார் பார்வதி.

"அம்மா, அம்மா, போதும் நம்ம நிலைமை இதற்கு மேல் தாங்காது. இவள் வேறு, ஒன்றென்றால் இரண்டு என்று செய்து வைப்பாள்" என்று நகைத்தார் மாறன்.

மதனும் மதுமதியும் இரட்டைகளாகப் பிறந்ததிலிருந்து இது அவரது ஜோக். அடிக்கடி கேட்டுப் பழக்கம்தான் என்றாலும் ஸ்வர்ணாவுக்கு முகம் சிவந்து விட்டது.

"சரி சரி, விருந்தாளிகள் மத்தியில் நம்மைப் பற்றியே என்ன பேச்சு? அவர்களுக்குப் போரடிக்கும்" என்று இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் அவள்.

"அண்ணி நழுவுகிறார்கள்" என்று புன்னகை பூத்தாள் பூங்கோதை. அவளது பார்வை நடராஜனிடம் நிலைத்தது. 'இதுதான் தருணம்' என்று குறிப்புக் காட்டியது.

"மாறன் பிரதர், உங்களிடம் ஓர் உதவி தேடி வந்தேன்." என்று அவனும் தொடங்கினான்.

சுமித்ராவுக்குத் திக்கென்றது. அவமானத்துடன் தலை குனிந்தாள். ஆனால், எப்போதானாலும் எதிர் நோக்கியாக வேண்டிய பேச்சு இது.

"என்ன தம்பி?"

"இந்தப் பெண் சுமித்ரா இருக்கிறாளே, இவளைக் கொஞ்சம் வசதியான இடத்தில்தான் மணம் செய்து கொடுத்திருந்தோம். அவன் கொஞ்சம் சரியில்லை என்று வையுங்களேன். இப்போது இவளை விட்டுவிட்டு ஓடி விட்டான்."

"என்ன?" என்று அதிர்ந்தாள் ஸ்வர்ணா.

"மகாலட்சுமி மாதிரி இவளை விட்டுவிட்டு ஒருவன் ஓடினானா? அதுவும் வாயும் வயிறுமாக இருக்கிறபோது? சுத்தத் தறுதலை போல இருக்கிறது." என்றார் பார்வதி.

சுமிக்கு வேதனை தாங்கவில்லை. மெய்யாக ஓடி வந்தது அவள். வார்த்தை வாங்கிக் கட்டுவது பிரபுவா? ஒன்றும் சொல்ல முடியாமல், வேதனையுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆமாம் ஆமாம். இப்போது இவளைப் பார்க்க ஆளில்லை. புக்ககத்திலும் ஒருவருமில்லை. நம் வீட்டிலும் வசதியில்லை..."

"அதற்கென்ன? தாராளமாக இங்கேயே தங்கட்டுமே." என்றனர் மாமியும், மருமகளும் கோரஸாக.

நடராஜ் மாறனைப் பார்த்தான்.

"ஹைகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் முடிவு சொல்லியாகி விட்டதே! பூங்கோதை போலச் சுமித்ராவும் ஒரு தங்கையாக இங்கேயே இருக்கட்டும். சி.எம்.சியில் நன்றாகப் பார்த்துக் கொள்ளலாம்" என்று முடிவு கூறினார் அவர்.

பிரச்சினை முடிந்துவிட்டது. நடராஜன் திருப்தியுடன் சுமியைப் பார்த்தான்.

அவள் தலைநிமிரவே இல்லை.

அவளது மனநிலையை உணர்ந்தவன் போல ஸ்வர்ணா சுமியின் அருகே வந்து அமர்ந்து, ஆதரவாகத் தோளை அணைத்துக் கொண்டாள்.

அதற்குமேல் கட்டுப்படுத்த முடியாமல் ஸ்வர்ணாவின் மடியில் முகம் புதைத்து விம்மினாள் சுமித்ரா.

"அடிக்கடி வாப்பா" என்றார் மாறன்.

அவரிடம் உம் போட்டுவிட்டுச் சுமியிடம் வந்து வேறு சொன்னான் நடராஜ். "சற்றுப் பொறுத்துத்தான் வருவேன் சுமி. இல்லையென்றால் பிரபு கண்டு கொள்வான். வரட்டுமா? தைரியமாக இரு" என்று விடைபெற்றான்.

"வந்து" என்று இழுத்தாள் சுமித்ரா.

"என்ன?"

"அவரைப் பற்றி எழுதுங்கள்" என்று பயந்து கொண்டே சொன்னாள் சுமி.

அவள் எதிர்பார்த்தது போலவே ஒரு கணம் நடராஜின் முகத்தில் கோபம் தெறித்தது. உடனேயே சாந்தமாக. "சரி எழுதுகிறேன்" என்றான்.

"சுமியைப் பார்த்துக் கொள் பூங்கோதை" என்று விட்டுக் காரை ஓட்டிக் கொண்டு சென்று விட்டான்.

சென்னையில் அவனுக்காக வெறி கொண்ட வேங்கை போல பிரபு காத்திருந்தான்.

நடராஜ் வீட்டை அடைந்ததும் அலுவலகத்துக்கு டெலிபோன் செய்தான்.

அந்த மானேஜர், "வந்தீர்களா, ஸார்!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

"ஏன்? என்ன விஷயம்? என்னைக் காணாமல் ஏங்கி விட்டீர்காளா?" என்று சிரித்தான் நடராஜ்.

"அதில்லை ஸார்..." மானேஜரின் குரல் தாழ்ந்தது. "இங்கே பிரபு என்று ஒருத்தர்-"

“உரக்கவே பேசுங்கள். அந்தப் பிரபு ஒன்றும் உங்கள் தலையை வாங்கிவிட மாட்டான்” என்று அதட்டினான் நடராஜ்.

“வாங்கினாலும் வாங்கிவிடுவார் சார்” என்றார் அவர் நடுக்கத்துடன்.

“உங்கள் தலை பத்திரமாக இருக்கும்படி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள்.”

“ஸார், நீங்கள் எட்டாம் தேதி இரவு போனீர்கள் இல்லையா? ஒன்பதாம் தேதி அதிகாலை நேரம் ஸார் - வாசல் தெளிக்கக்கூட இல்லை. அதற்குள் அந்த மனிதர் என் வீட்டுக்கே வந்து விட்டார். ‘எங்கேடா உன் முதலாளி?’ என்று ஓர் அதட்டல் போட்டார் பாருங்கள். எனக்கு இன்னமும் கை கால் நடுங்குகிறது ஸார். ஸார் உங்க நன்மைக்குச் சொல்கிறேன். எதற்கும் போலீசில் புகார் கொடுத்து வையுங்கள்.”

“போதும் மேலே சொல்லுங்கள்.”

“பிறகு என்ன ஸார், நீங்கள் வந்ததும் டெலிபோன் செய்யச் சொன்னார். நானாகச் செய்வேனோ என்ற சந்தேகம் வேறு. பத்து நிமிஷத்துக்கு ஒரு தடவை அவரே டெலிபோன் செய்யறார். இப்போ நர்ன் என்ன ஸார் செய்யட்டும்?” என்று வெடவெடத்தார் அவர்.

“ம்ம்... நான் வந்து விட்டேன் என்று சொல்லிவிட்டு, வீட்டில்தான் இருப்பேன் என்று சொல்லுங்கள். அது போதும். அப்புறம் அந்தத் தேங்காய் நார் வாங்க அந்த ஏஜெண்ட் வந்தாரா?” என்று தொழில் பேச்சுகளைத் தொடங்கினான் நடராஜன்.

அவருடைய பதில்களைக் கேட்டு, மேலும் சில வேலைகளைக் கூறினான். கடைசியாக “நான் இன்று மதியம் தான் ஆபீஸுக்கு வருவேன்” என்று முடித்தான்.

"நிச்சயமாக வருவீர்களா ஸார்? ஸார், எதற்கும் கூர்க்காவையாவது பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் அவர்.

நடராஜ் லேசாகச் சிரித்துவிட்டு டெலிபோனை வைத்தான். சிந்தனையோடு சற்று நேரம் நின்றான். பிறகு உள்ளே சென்று குளித்து முடித்து விட்டு காபி கொண்டு வரச் சொல்லி அருந்தினான்.

அருந்தி முடிக்கும்போதே புயலெனப் பிரபு வந்து விட்டான்.

புன்னகையோடு எழுந்தான் நடராஜ். "வாருங்கள், உட்காருங்கள். ஏதாவது அருந்துகிறீர்களா? ஆனால்... உங்களுக்குப் பிடித்த சரக்கு இங்கே கிடையாது. காபி பரவாயில்லையா?" என்றான் கிண்டலாக.

"உன் உபசாரத்துக்காக இங்கே யாரும் வரவில்லை." என்றான் பிரபு சினத்துடன். "எங்கே சுமித்ரா?"

"சுமித்ரா!? உங்கள் மனைவி சுமித்ராவா? என்னைக் கேட்டால் எனக்கெப்படித் தெரியும்? உங்கள் மனைவி எங்கே என்று உங்களுக்கல்லவா தெரிய வேண்டும்?" என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கி விட்டு நகர்ந்தான் நடராஜ்.

சட்டெனக் கையை நீட்டி, அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தான் பிரபு. கேட்டால் மரியாதையாகச் சொல்லிவிடு" என்று உறுமினான்.

"முதலில் நீ மரியாதையாகக் கேள்."

"ஏய்... சொல்லு... சுமி எங்கே? சொல்லு. சொல்லி விடு" என்று அவனைப் பற்றிக் குலுக்கினான் பிரபு.

நடராஜ் ஒரு விரலைக்கூட உயர்த்தவில்லை. ஆனால், "உன் மனைவி எங்கே என்று என்னைக் கேட்கிறாயே.

வெட்கமாக இல்லை?" என்று வெகு ஏளனமாகக் கேட்டு விட்டான்.

சினம் பொறுக்காமல் சுளீர் என்று அறைந்து விட்டான் பிரபு.

அப்போதும் நடராஜ் உடன் முயற்சியாக எதுவும் செய்யவில்லை.

"உன்னைத் திருப்பி அடிப்பதற்கு எனக்கு அருவருப்பாக இருக்கிறது. வேலைக்காரனைக் கூப்பிட்டு, உன்னை வெளியே தள்ளுமுன், நீயாகப் போய்விடு. ஐ ஸே க்ளியர் தி ப்ளேஸ், கெட்அவுட்" என்றான் கடுமையாக.

அன்றொரு நாள் பிரபு உபயோகித்த அதே வார்த்தைகள்.

பிரபு வெறிகொண்டு விட்டான். பேயனைப் போல நடராஜின் கழுத்தைப் பிடித்து "உன்னைக் கொன்று விடுவேன். சொல்லு, சொல்லிவிடு. இல்லையானால் நிச்சயம் கொன்று விடுவேன்" என்று விரல்களை அழுத்தினான்.

அப்போதும் நடராஜ், "கொன்றுவிடு. அதன் பிறகு என் பிணத்திடம் கேள். அது சொல்லும் சுமித்ரா எங்கே என்று" கிண்டல்தான் செய்தான்.

பிரபு சட்டென ஓய்ந்துவிட்டான். நடராஜை விட்டு விட்டு ஒரு நாற்காலியில் சாய்ந்தான். "சுமி எங்கே என்று சொல்ல மாட்டாயா?" என்றான் அமைதியாக. அவனையும் மீறிக் குரல் கெஞ்சிற்று.

நன்றாகக் கெஞ்சட்டுமே என்று அலட்சியமாகச் சிரித்தான் நடராஜ். "எனக்குத் தெரியாது. தெரிந்தாலும் அதை நான் உன்னிடம் சொல்லப் போவது இல்லை" என்றான் தெளிவாக.

சட்டென ஆத்திரத்துடன் நிமிர்ந்தான் பிரபு.

பிறகு மெல்ல அந்த ஆத்திரம் வடிந்து உணர்ச்சியற்று நடராஜை வெறித்துப் பார்த்தான்.

மேலே ஒரு வார்த்தை கூடப் பேசாமல், அங்கிருந்து வெளியேறினான்.

மனம் போன போக்கெல்லாம் காரை ஓட்டிச் சென்றான். பசித்த போது எதையோ தின்றான். மாலையானதும் கடைசியாகக் கடற்கரைச் சாலையில் காரை நிறுத்திவிட்டு, வீல் மேலேயே கவிழ்ந்தான். கடற்கரையின் சிலுசிலுப்பான காற்றில் தெளிவாகச் சிந்திக்க முயன்றான்.

எத்தனையோ உணர்ச்சிகள் நெஞ்சில் குமுறிய போதும் பிரபு அதிகம் உணர்ந்தது சினத்தைத்தான். அதுவும் நடராஜ் மீதுதான்.

சுமிதான் பெண் - அசட்டுத்தனமான எண்ணங்களுடன் சென்றாள் என்றால், இவன் எப்படி உதவலாம்?

நடராஜ்தான் சுமித்ராவுக்கு உதவியவன் என்பதில் பிரபுவுக்கு எள்ளளவும் சந்தேகம் இருக்கவில்லை. இரண்டும் இரண்டும் நாலுதான். இதைக் காண்பதில் என்ன கஷ்டம்?

அன்று சவேராவில் இருந்து நினைத்த நேரத்துக்கும் முன்னதாகவே பிரபு வீடு திரும்பி விட்டான். "என்ன மிஸ்டர் பிரபு? இவ்வளவு அவசரம் ஏன்? வீட்டில் அம்மா உத்தரவா?" என்ற கேலி செய்த 'ஈஸிவேர் ஷூ கம்பெனி' பங்குதாரரிடம் சிரித்து மழுப்பி விட்டு ஓடி வந்தான்.

என்னமோ சுமியை உடனே பார்த்தாக வேண்டும் போல ஒரு வெறி- வினாடிக்கு வினாடி வளர்ந்தது.

வெகுவேகமாகக் காரைச் செலுத்திக் கொண்டு வீட்டுக்கு ஓடி வந்தால், வீட்டில் சுமியே இல்லை. காரில் இருந்து இறங்கும் போதே, சங்கரன் சற்று விநோதமாகப் பார்ப்பது தெரிந்தது.

நின்று கேளாமல் மாடிக்குச் சென்றான்.

அவளது அறையில் சுமி இல்லை. அவன் அறையிலும் இல்லை. படுக்கை அறை, ஆபீஸ் அறை எங்கும் இல்லை. மற்ற அறைகளிலும் காணோம்.

அசட்டுத்தனமாக நிலா முற்றத்தில் பனியில் படுத்துத் துயில்கிறாளோ என்ற பதைப்புடன் அங்கே ஓடினான் அங்கும் இல்லை.

காலியான ஊஞ்சல், சோபா, ஸெட்டீ... ஊஹூம்.

வாழ்விலேயே முதல் முறையாகச் சற்று நேரம் என்ன செய்வது என்று புரியாமல் நெஞ்சும் வயிறும் கூடாகிப் போன உணர்வுடன் நின்றான்.

பிறகு மீண்டும் சுமியின் அறைக்குள் சென்றான். மேஜை மேல் லெட்டர்பேட், பேனா, கசங்கிக் கிடந்த இரண்டொரு பேப்பர்கள்.

ஏதோ விபரீதம் என்று தோன்றியது.

மேஜை, டிராயர், ட்ரெஸ்ஸிங் டேபிள், தலையணையின் கீழ் எல்லா இடங்களிலும் அவசரமாகப் பரிசோதித்தான்.

ஒரு சின்ன துண்டுக் கடிதம் கூட இல்லை.

வேகமாகக் கீழே சென்றான். சங்கரன் மாடிப்படியிலேயே நின்றான். "அம்மா எங்கே?" என்று அவனிடம் வெடித்தான்.

"உங்களோடு வருவதாக டிரைவர் சுந்தரத்திடம் சொன்னார்களாமே," என்றான் அவன் நடுக்கத்துடன்.

படுத்துவிட்ட சுந்தரத்தை எழுப்பி வந்து விசாரித்ததில் எல்லாம் புரிந்துவிட்டது.

அடையாறு என்ற மாத்திரத்தில் நடராஜ் வீடுதான் என்று பிரபு தெரிந்து கொண்டான்.

நெஞ்சில் நெருப்புப் பற்றியது. காரை எடுத்துக் கொண்டு சீறும் புயலாக நடராஜின் வீட்டுக்குப் போனான். "வெளியூர் சென்றிருக்கிறார். வரும் நாள் தெரியாது" என்றான் சமையலாள். கூர்க்காவை விசாரித்ததில் சுமி வந்தது தெரிந்தது.

ஆனால் பாவி நடராஜ் சுமியைப் பற்றி எதுவுமே செல்ல மறுக்கிறானே, என்ன செய்வது?

சுமி, நீ ஏன் இப்படிச் செய்தாய்? நெற்றிப் பொட்டைத் தேய்த்துவிட்டுக் கொண்டு நிமிர்ந்தான் பிரபு. சுற்றிலும் வெறிச்சோடி விட்டிருந்தது.

...மணிக்கட்டைப் பார்த்தான். மணி பதினொன்றரை.

வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று நிமிர்ந்தான். உடனேயே மனம் வலித்தது. வீட்டில் யார் இருக்கிறார்கள்?

மீண்டும் காரை எடுத்துக் கொண்டு சுற்றினான்.

'சூப்பர் பாரடைஸ்' என்று நியான் மின்னக் கண்டான். 'கார் பார்க்'கில் காரை நிறுத்திவிட்டு, அங்கே சென்றான். உள்ளே சென்று அமர்ந்து மேடையைப் பார்த்தான்.

காதருகே "பிரபு" என்ற கிசுகிசுப்பு கேட்டது.

"லில்லி!"

"சுரேஷுடன் வந்தேன். நீங்கள் தனியாகவா வந்தீர்கள்?" என்று கண்களை விரித்தாள் லில்லி.

"ஆமாம்" என்றான் பிரபு சுருக்கமாக.

"உங்கள் சுமித்ரா?"

"அவள் இங்கே இல்லை" என்றான் பிரபு உணர்ச்சியற்று.

பிரபுவின் குணங்களை அறிந்து கொள்ளும் அளவுக்கு லில்லி அவனுடன் நெருங்கிப் பழகியவள். அவனுக்கு கோபம்

என்று புரிந்து கொண்டாள். அந்தக் கோபம் சுமித்ராவிடம் என்றால் அது லில்லிக்குப் பயன்படக் கூடுமா?

"இங்கே இல்லை என்றால் ஊருக்குப் போயிருக்கிறாளா?"

"உம்."

லில்லி சுரேஷைப் பொருள் பொதியப் பார்த்தாள்.

அவன் பேச்சின்றி அகன்றான்.

சற்று நேரத்தில் விஸ்கி வந்தது. லில்லி ஊற்றிக் கொடுக்கக் கொடுக்க, மது பிரபுவின் வயிற்றினுள் சென்றது. வழக்கமான அளவு எல்லாம் மறந்தது. அவன் கண்கள் நன்கு சிவக்கு மட்டும் லில்லி பொறுத்திருந்தாள்.

பிறகு, "பிரபு" என்று மெல்ல இழைத்தாள்.

"ம்ம்...?"

"இன்று என் ஃப்ளாட்டுக்கு வருகிறீர்களா?"

வெகு மதர்ப்புடன் கண்ணெதிரே தெரிந்த அங்கங்களைப் பார்த்தான் பிரபு. "ஒய் நாட்?" என்றான்.



## 16

லில்லி சுதந்திரமாக வளர்க்கப்பட்டவள். அந்தச் சுதந்திரத்தை அவள் அளவுமீறி உபயோகித்த போது பெற்ற தாய் கண்டித்தாள் என்று வீட்டை விட்டு வெளியேறி விட்டாள். சுரேஷின் கூட்டுறவு இருந்தது. நிம்மதியாக ஒரு ஃப்ளாட்டில் வாழத் தொடங்கினாள்.

சுரேஷ் ஒரு ரகம். துணையாகவும் இருப்பான். துணை தேடித் தருவதும் உண்டு. புது ரக 'மாமா' என்று சொல்லலாம். பிரபுவை லில்லிக்குப் பழக்கப்படுத்தி வைத்தது அவன்தான்.

பிரபுவின் பழக்கத்துக்குப் பிறகு லில்லிக்கு வேறு யாரையும் பிடிக்கவில்லை. அவனிடம் இருந்த பணமோ, அவன் தாராளமோ காரணமில்லை. என்னவோ அவனிடம் ஒரு மயக்கம். அவனது ஆண்மையில், வனப்பில் மயக்கம். அவனை மணமே புரிந்து விடலாம் என்று முயன்று கொண்டிருந்தாள்.

அப்போதுதான் திடீரென்று பிரபு சுமித்ராவை மணந்து கொண்டு விட்டான்.

'ஸம் திங் இஸ் பெட்டர்தேன் நத்திங்' என்று உரிமையற்ற உறவேனும் கிட்டாதா என்று அவனிடம் நெருங்கிப் பார்த்தாள்.

பிரபுவின் உதாசீனம் கிட்டியது.

'சரி, போகிறது' என்ற ஒதுங்க நினைத்தபோது, இப்போது அவனே தனியாகக் கிட்டியிருக்கிறான். அவள் அறைக்கும் வருவதாகச் சொல்லி விட்டான். அவளுக்கு ஒரே ஆனந்தம். "வாருங்கள் பிரபு! போகலாம்" என்று கிளம்பிவிட்டாள்.

தன் வீட்டில் பிரபுவுக்கு ராஜோபசாரம் செய்தாள். கூடவே மெல்ல விசாரித்தாள். "சுமித்ரா எப்போது வருவாள் பிரபு?"

"தெரியாது" என்று அவன் மதுக் கிண்ணத்தைப் பார்த்தான்.

"ஓகே!" லில்லிக்கு விளங்கிவிட்டது. கணவன் மனைவிக்குள் தகராறு. சுமித்ரா கோபித்துக்கொண்டு பிறந்த வீடு சென்று விட்டாள். அவளுக்கு மகிழ்ச்சியில் உள்ளம் துள்ளியது. எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவதாக எண்ணிக்கொண்டு, "வளர்ப்புமுறை சரியில்லா விட்டால் இப்படித்தான் பிரபு! அட்ஜஸ்ட் செய்து கொண்டு போகத் தெரியாது." என்றாள்.

பிரபு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். "உன் வளர்ப்பு முறை எப்படி லில்லி?" என்றாள் உதாசீனமாக.

லில்லி திகைத்துப் போனாள். இனி இவரோடு ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்று எண்ணினாள்.

மெல்லச் சிரித்தாள். "மற்றவர்களைப் பற்றி நமக்கு என்ன வந்தது பிரபு? இங்கே நாம் மட்டும் இருக்கிறோம். நம் காதலும் இருக்கிறது" என்று அவனை நெருங்கினாள்.

"காமம் என்று சொல்."

உதட்டைக் கடித்துக் கொண்டாள் லில்லி. "எந்தப் பெயரிட்டால் என்ன? உங்களுக்கு நான் வேண்டாமா?" என்று அவன் கைகளைப் பிடித்துத் தன்னைச் சுற்றி விட்டாள் லில்லி.

பிரபுவின் கரங்கள் இயந்திரமாய் அவளைத் தழுவின.

இந்த வெற்றியில் பூரித்தபடி அவன் மார்பில் முகம் புதைத்தாள் லில்லி.

ஒரே ஒருநாள் மட்டும் குளிரில் நடுங்கியபடி அவன் மார்பில் தானாக முகம் புதைத்தாள் சுமி. ஷாக் அடித்தவன் போல நிமிர்ந்தான் பிரபு. வெறிபிடித்தவன் போலத் தன்னிடமிருந்து லில்லியைப் பிரித்து எறிந்தான்.

திகைப்புடன் நிலைகுலைந்து விழுந்தாள் லில்லி. பையிலிருந்து சில நோட்டுகளை உருவி அவளிடம் வீசி விட்டு வெளியே நடந்துவிட்டான் பிரபு.

வீடு சேர்ந்ததும் நன்றாகக் குளித்தான். லில்லியின் உடல்பட்ட மாசு நீங்கிய உணர்வு வந்தது.

பிறகு, சுமியின் அறைக்குள் சென்றான். அவள் இருந்ததன் அடையாளங்கள் அதிகம் இல்லை. எந்த இடமும் கலைந்து கிடக்கவில்லை. அதது அந்தந்த இடத்தில் ஒழுங்காக இருந்தது.

இல்லையென்று இல்லாமல் நீளமான சோபாவில் மட்டும் உறை சற்றுக் கலைந்திருந்தது. சின்னக் குஷனில் கண்ணீர் காய்ந்த கறை தெரிந்தது. அவனுக்குக் கண்ணைக் கரித்தது.

சோபாவில் அமர்ந்து குஷனை வருடினான்.

சுமி, நீ ஏன் இப்படிச் செய்தாய்?

கன்னத்தில் ஏதோ சில்லென்ற உணர்ச்சி தோன்றியது. தொட்டுப் பார்த்தான். ஈரம். நானா அழுதேன்? சந்தேகத்துக்குக் கண்ணையும் தொட்டுப் பார்த்தான். அவன் அழுதது மெய்தான். சே என்று அவமானத்துடன் கண்ணைத் துடைக்கப் போனான்.

கையைத் தூக்கியபோதே இந்த அழுகையில்கூட ஏதோ சுகமாகத் தோன்றியது. மேலும் மேலும் பிடிவாதமாகக் கண்ணீர் விட்டபடி அந்த சோபாவிலேயே படுத்து உறங்கி விட்டான்.

நடராஜ் சென்னைக்குச் சென்றபின், பல நாள்கள் சுமி எதிலும் அக்கறை கொள்ள முடியாத அளவு சோர்ந்து கிடந்தாள். படுத்த பாய் கரையான் பிடிக்கும் என்று ஊர்ப்பக்கம் கூறுவார்கள். பாயும் படுக்கையுமாக அப்படி கிடந்தாள். எழுந்தால் தலை சுற்றிலும் வாந்தியும் முடிவாக மயக்கமும் அவளைப் பாடாய்ப் படுத்தின. வேலூரின் வெயில் வேறு ஒத்து ஊதியது. மருந்து மாத்திரை எதுவும் பலனின்றிப் போகக் கண்ணீருடன், "இப்படி என்று தெரியாதே" என்று அவள் அரற்றிய போது பார்வதிக்கும் ஸ்வர்ணாவுக்கும் சிரிப்பும் பரிதாபமுமாகி விட்டது.

இயல்பான நல்ல குணமும், பிள்ளைத் தாய்ச்சிப் பெண் என்கிற அனுதாபமுமாக, அந்தக் குடும்பத்தின் பெரியவர்கள் எல்லாருமே அவளை அன்புடன் கவனித்துக் கொண்டனர்.

மெல்ல மெல்லச் சுமியின் உடல்நிலை தேறியது.

அடுத்தவர் வீட்டில் பாரமாகப் படுத்திருக்கிறோமே என்ற வேதனையுடன் வாடியிருந்த நாள்கள் கழிந்தன.

அன்போடு பணிவிடை செய்தவர்களிடம் சிரிக்க முயன்று தோற்ற நாள்கள் கரைந்தன.

'பிரபு! என் பிரபு!' என்று அவன் நினைப்பிலேயே துடித்துத் தவித்த நாள்கள் கரைந்தன.

நான்கு மாதங்கள் நிறைவெய்தியபோது, சுமித்ரா இயல்பாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டாள்.

மதுவும் மதனும் 'ஆன்ட்டி! ஆன்ட்டி!' என்று அவளிடம் ஒட்டிக் கொண்டனர். சுமியின் பொழுதில் பாதி அவர்களுடன் இனிமையாகக் கழிந்தது.

காலையில் எழுந்தால் குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் செய்து அனுப்பும் வேலையைச் சுமித்ரா ஏற்றுக் கொண்டாள். அவர்களைக் குளிப்பாட்டி, யூனிபார்ம் அணிவித்து, பென்ஸில் ரப்பர் எல்லாம் இருக்கிறதா என்று பார்த்து அனுப்பி வைப்பாள். பிறகு, வீட்டில் காய்கறி வெட்டுவது மாதிரிச் சில்லரை வேலைகளில் உதவி செய்வாள். மாலையானால் பூங்கோதையும் அவளும் மது, மதனுடன் உலாவப் போவது வழக்கம் ஆயிற்று. வாக்கிங் முடிந்து வீடு வந்தால் பிள்ளைகளின் படிப்பில் உதவுவாள். அவர்களை உறங்க வைத்துவிட்டு எல்லாருமாகச் சற்று நேரம் உரையாடிக் கொண்டு இருப்பார்கள். அது முடிந்த பிறகுதான் சற்று வேதனைப் படுவாள் சுமித்ரா.

பகலெல்லாம் மற்றவர்களுடன் பேசுவதிலும், வேலை செய்வதிலும் சுலபமாகப் பொழுதைக் கழித்து விடுவாள் சுமி. இரவானால் போதும். அவளைத் துன்புறுத்தப் பிரபு வந்து விடுவான். 'என் பிரபு இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்? எப்படி இருப்பார்?'

திருமணமாகி இருவரும் இணைந்து வாழ்ந்த அந்த இரண்டு மாதங்களில் ஒரு நாள் இரவுகூடப் பிரபு சுமியை விட்டு அகன்றதில்லை.

இப்போது... இப்போது யாரை அணைத்துக் கொண்டு... என் எண்ணும்போதே துடித்துப்போவாள்.

ஆனால், பிடிவாதமாக அந்த நினைவுகளை ஒதுக்கி விட்டு அவன் முகத்தை மட்டும் நினைத்துக் கொண்டு துயிலப் பழகிக் கொண்டாள். இது பழகிய பின் எல்லாமே எளிதாகி விட்டது போலத் தோன்றியது. உடல்நிலையும் அதன் பிறகுதான் தேறியதோ என்னவோ, மொத்தத்தில் சுமி நிம்மதியாக இருந்தாள் - பிரபு அருகில் இல்லையே என்ற ஒரு குறை தவிர.

பிரபு வந்து சென்ற மறுநாள் நடராஜ் ஒன்றைக் கண்டான்.

அவனது அலுவலகம் ஒரு பெரிய கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் இருந்தது. தினமும் மாலையில் வேலை முடித்து கிளம்பும்போது ஜன்னலருகே வந்து சில நிமிஷங்கள் நிற்பான். மாலை நேரத்து சென்னையின் பரபரப்பு அவனுக்கு வெகு ரசனையாக இருக்கும். அன்றும் அதுபோலச் சோம்பல் முறித்தபடி நின்று கொண்டிருந்த போது ஏதோ ஒன்று கண்ணில் உறுத்தியது. என்ன வென்று கவனமாகப் பார்த்தான்.

எதிர்ச்சாரியில் வழக்கமாகப் பல வாகனங்கள் நிற்பதுண்டு. வழக்கமானவை தவிரக் கூடுதலாக மோட்டார் பைக் ஒன்றும் இப்போது நிற்கக் கண்டான். இதே பைக்கை மதிய உணவுக்கு ஹோட்டலுக்குச் செல்லும்போதும் கண்ட நினைவு வந்தது. இதே த்ரீ பாய்ன்ட் ஃபைவ் புல்லட். இது நின்றதிலும் அதிசயமில்லை. யாரேனும் இந்தப் பக்கத்தில் பணிபுரிபவர்கள் புதிதாக வாங்கியிருக்கலாம். ஆனாலும் அவன் மனதில் அது பதிந்தது.

யோசனையோடு இறங்கி வந்து காரை எடுத்தான்.

சற்றுநேரம் சென்றபின், பின்புறம் பார்க்கும் கண்ணாடியில் பார்த்தபோது கொஞ்சம் பின்தங்கி அந்தப் பைக் வருவது தெரிந்தது.

அப்போதும் நடராஜ் அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

அடையாறு வரையும் அது தொடரவே, வேண்டுமென்றே வேறு தெருவினுள் காரைச் செலுத்தினான். கான்ஸர் இன்ஸ்ட்யூட் வரையிலும் சென்றான். பைக்கும் பின்தொடர்ந்தது. சற்றுத் திரும்பி ஒரு வீட்டின் முன்னே நிறுத்தியபோது சற்றுத் தயங்கி முன்னே சென்றது.

'வேறுதான்' என்று எண்ணித் திரும்பவும் காரை ஸ்டார்ட் செய்தபோது, பைக் மீண்டும் திரும்பி வந்தது.

நடராஜ் நேராக வீட்டுக்கு வந்தான். அப்போதும் அது பின்தொடரவே அவனுக்கு உறுதியாகிவிட்டது.

தனக்குள் சிரித்துக்கொண்டே உள்ளே சென்றான்.

இரவு உணவை முடித்துக் கொண்டு டெலிபோனிடம் வந்தான். ரீசிவரைக் கையில் எடுக்கும் போதே மனம் மாறிவிட்டது. மீண்டும் தாங்கியில் பொருத்திவிட்டு நகர்ந்தான். பார்க்கரை எடுத்து லெட்டர் பேடில் ஒரு கடிதம் எழுதினான். "நான் சில மாதங்கள் கழித்து வருகிறேன் சுமி. இப்போது வந்தால் பிரபு உன் இருப்பிடத்தைக் கண்டு கொள்வான்" என்று எழுதினான்.

பின் குறிப்பாக- "உன் பிரபுவும் நானும் நேற்று மனம் விட்டுப் பேசிக் கொண்டோம். எனக்கு வெகு திருப்தி" என்று எழுதி முடித்தான்.

மெய்யாகவே திருப்தியான புன்னகை அவன் இதழ்களில் மலர்ந்திருந்தது.

ஒரு முறையல்ல பல தடவை பிரபு நடராஜிடம் சென்றான். சுமியின் இருப்பிடத்தைச் சொல்லுமாறு மன்றாடிப் பார்த்தான். தன் கர்வத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுக் கெஞ்சிக்கூடப் பார்த்தான்.

அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பார்களே, நடராஜ் அசையாத பாறாங்கல்லாக இருந்தான்.

இப்போதெல்லாம் பிரபு வீட்டில் இருக்கும் நேரம் எல்லாம் சுமியின் அறையில்தான் கழித்தான்.

அவள் நடந்த இடத்தில் நடப்பதில் ஒரு திருப்தி. அமர்ந்த இடத்தில் உட்காருவதில் ஓர் இதம். அணிந்த சேலைகளைத் தொட்டுப் பார்ப்பதில் ஓர் இன்பம்.

இப்படிப் பார்த்துக் கொண்டு இருந்தபோது அன்று திடீரென்று ஒரு பயம் வந்துவிட்டது. சேலை துணிமணி நகை என்று சுமி ஒன்றையும் எடுத்துச் செல்லவில்லையே. வாழும் எண்ணம் இல்லாமல் சென்றாளோ என்று அஞ்சி விட்டான்.

பிறகு ஸேஃபில் குறைந்த இரண்டாயிரம் ரூபாய் நினைவு வந்தது. கொஞ்சம் நிம்மதியடைந்தான். உயிரை விடுவது என்றால் பணம் ஏன் எடுக்கப் போகிறாள்? அப்பாடி!

அந்த நிம்மதியும் நிலைக்கவில்லை.

இந்த இரண்டாயிரம் ரூபாய் எத்தனை நாள் தாங்கும்? 'பைத்தியக்காரி, சென்றதுதான் சென்றாய். இன்னும் கொஞ்சம் பணமேனும் எடுத்துச் சென்றிருக்கக் கூடாதா?' என்று மறுகினான்.

அதுவும் டாக்டரின் - பிரபுவின் சந்தேகம் சரியாக இருக்குமானால்?

மேலே இருப்புக் கொள்ளாமல் மீண்டும் நடராஜைத் தேடிச் சென்றான். இப்போது நடராஜ் அளித்த ஓவலை மறுக்காமல் குடித்தான்.

"நடராஜ்! சுமி எங்கிருக்கிறாள் என்ற சொல்ல மாட்டீர்கள் இல்லையா?"

நடராஜ் பதிலேதும் சொல்லவில்லை.

"போகிறது. இந்தப் பணத்தையேனும் அவளிடம் சேர்ப்பித்து விடுங்கள்" என்று ஓர் ஐயாயிரம் ரூபாய் - ஐந்து கத்தைகளாக எடுத்து நீட்டினான்.

நடராஜ் வாங்காமல் இருக்கவே, மேஜைமேல் வைத்தான்.

"மிஸ்டர் பிரபு! சுமிக்குப் பணம் எதற்கு?" என்றான் மொட்டையாக.

பிரபு குலுங்கிப் போனான். பழைய பயம் நெஞ்சை அடைக்க, "நடராஜ் நடராஜ், என் சுமி உயிரோடு தானே இருக்கிறாள்?" என்று பதறினான்.

"எனக்கெப்படித் தெரியும்?" என்றான் அவன் - இரக்கமே இல்லாமல்.

"தயவு செய்து நடராஜ், அவள் சுகமாக இருக்கிறாளா என்றேனும் சொல்லுங்கள் போதும்" என்று கெஞ்சவே செய்தான் பிரபு.

"எனக்குத் தெரியாது." என்று ஒரேயடியாக அடித்து விட்டான் நடராஜ்.

பிரபு ஓய்ந்து போய்த் திரும்பினான்.

மறுநாள் அந்த ஐயாயிரம் ரூபாய் ஓர் ஆள் மூலம் அவனிடமே திரும்பி வந்து சேர்ந்தது.

இதையும் நடராஜ் சுமிக்கு எழுதினான். வாராவாரம் நடராஜின் கடிதங்களில் பிரபுவைப் பற்றிய சிறு குறிப்பேனும் இருக்கும். இந்தக் கடிதத்தில் 'அவர் கெஞ்சியதைப் பார்த்து எனக்கே பரிதாபமாகி விட்டது.' என்றே எழுதியிருந்தான்.

இந்த மாதிரிக் கடிதங்களைப் படித்ததும் இறக்கை கட்டிக் கொண்டு பிரபுவிடம் பறந்து சென்றுவிட அவள் மனம் துடிக்கும்.

ஆனால், அவன் இனி அவளை எப்படி ஏற்பானோ? அதோடு குழந்தை ஏழு மாதம் வரையிலும் ஏதேதோ செய்யணுமாமே. பூங்கோதை சொன்னாளே, பங்களாதேஷில் செய்தார்களாமே.

சுமி சோர்ந்திருப்பதைக் கண்டு ஸ்வர்ணா அருகே வருவாள். "இன்னமும் உன் கணவர் திரும்பவில்லையாமா?" என்று பரிவுடன் வினவினாள்.

இவர்கள் அப்படித்தானே எண்ணியிருக்கிறார்கள் பதில் பேச முடியாமல் தலையசைப்பாள் சுமி.

"பரவாயில்லே, அவர் எப்போவானாலும் திரும்பட்டும். எங்கள் வீட்டில் நீ இன்னொரு பூங்கோதை. நிம்மதியாக இரு." என்பாள்.

"அண்ணி!" என்று அழுவாள் சுமி. பூங்கோதை போலவே அவளும் ஸ்வர்ணாவை அண்ணி என்று அழைக்கத் தொடங்கியிருந்தாள்.

பிறகு ஸ்வர்ணாவும் பூங்கோதையும் ஏதோ பேசுவார்கள். அன்று முழுவதும் பூங்கோதை சுமியின் அருகிலேயே இருப்பாள். கல்லூரியில் நடந்தது எதையாவது பேசுவாள்.

அமைதியான பேச்சானலும் ஆழமாக இருக்கும். கல்லூரியின் பொதுப் பணிகளைப் பற்றியும் விவரிப்பாள். யார் யார் அதனால் பயன் பெறுகிறார்கள் என்று எடுத்துரைப்பாள். 'உன்னிலும் கேடு நாட்டிலும் கேடு' என்ற மனதில் பதிய வைப்பாள். சுமியின் மனமும் அதில் ஒன்றும். மெல்ல மெல்லத் தன் விவகாரத்தை மறந்து போவாள்.

அடுத்த கடிதம் நடராஜிடமிருந்து வரும்வரை எல்லாம் சரியாக நடக்கும்.

ஐந்தாம் மாதத் தொடக்கத்தில் ஒருநாள் மாலை வாக்கிங் முடிந்து வருகையில் திடீரென்று வயிற்றினுள் ஏதோ புரள்வதுபோல் உணர்ந்து பயந்து போனாள் சுமி. அச்சத்துடன் பார்வதியிடம் சென்ற விஷயத்தைச் சொன்னாள். அவர் சிரித்தார். "பிள்ளை துடிக்கிறது கண்ணு. பயந்து விட்டாயா?" என்றார் பிரியமாக. "பிள்ளை உருப்பெற்ற பிறகு இப்படித்தான் அவ்வப் போது கையைக் காலை அசைத்து, 'அம்மா, நான் இருக்கிறேன்,' என்று நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

சுமிக்கு மகிழ்ச்சியுடன் வெட்கமுமாக முகம் சிவந்தது.

ஏழாம் மாதம் தொடங்கியதும் இனி வளைகாப்பு என்று தொடங்கி விட்டார் பார்வதி. வேண்டாம் என்று சுமி எவ்வளவோ மறுத்தும் பயனில்லை.

ஒருநாள் ஸ்வர்ணா, சுமிக்குத் தலைவாரி விட்டுக் கொண்டிருந்தபோது, "இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறாரே அம்மா" என்று அவளிடம் முறையிட்டாள் சுமி.

"பூங்கோதைக்குச் செய்து முடியாதது என்று ஆகிவிட்டதால் உனக்கேனும் செய்து மனக்குறையைத் தீர்த்துக் கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்." என்றாள் ஸ்வர்ணா.

# 17

இந்த வீட்டுக்கு வந்ததில் இருந்தே இவ்வளவு மகிழ்ச்சியான குடும்பத்திலும் சோகத்தின் இழையொன்று ஊடுருவியிருப்பதை சுமி கண்டிருந்தாள்.

எங்கேனும் திருமணம் என்று பேச்சு வந்தால் பார்வதி தாயின் முகம் வாடுவதைக் கண்டிருந்தாள்.

ஸ்வர்ணா முகத்தில் கவலையோடு மாமியையும் நாத்தனாரையும் பார்ப்பதைக் கண்டிருந்தாள்.

பூங்கோதை சற்றுக் கடுப்பான முகத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டு செல்வதைக் கண்டிருந்தாள்.

மாறன் பெருமூச்செறிவதைக்கூடக் கண்டிருந்தாள்.

என்ன விஷயம் என்று கேட்கத் தோன்றும். ஆனால், சுமியின் துயரத்துக்கு மதிப்பளித்து அது சம்பந்தமாக எதையும் அவர்கள் யாரும் கேட்பது கிடையாது. இப்போது சுமி மட்டும் எப்படிக் கேட்பது? இதை எண்ணி வாளாயிருந்தாள்.

“ஆனால், இன்று அப்படி இருக்க முடியவில்லை. “ஏன் அண்ணி? ஏன் பூங்கோதைக்குச் செய்ய முடியாதது என்றீர்கள். அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால் என்ன?” என்று கேட்டாள்.

“அவள் தான் ஒரேயடியாக முடியாது என்று முடித்து விட்டாளே,” என்றாள் ஸ்வர்ணா.

அவளுக்கும் இந்தப் பாரத்தை யாரிடமாவது இறக்கி வைக்க வேண்டும் போல இருந்ததோ என்னவோ. சுமியிடம் விஸ்தாரமாகச் சொல்லத் தொடங்கி விட்டாள். "பூங்கோதை பி.யூ.சி. முடித்ததுமே நல்ல வரன் வந்தது. சுமிம்மா கிட்டத் தட்ட நிச்சயம் என்ற அளவுக்கு வந்து விட்டது. இவளானால் விஷயம் தெரிந்ததும் வேண்டாம் என்ற ஒரே அழுகையாக அழுதாள். நாங்கள் எல்லாம் சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை. கடைசியாக அவள் அண்ணன் அதட்டிப் பேசவும், 'என்னைக் கொன்று விடுங்கள். நான் செத்துப் போகிறேன்' என்று கதறத் தொடங்கி விட்டாள். எங்களுக்கெல்லாம் ஒரே பயமாகி விட்டது. யாரையாவது விரும்புகிறாயா? என்று கேட்டால் பதிலே கிடையாது. பிறகு தான் அவள் விருப்பப்படி இந்த டாக்டர் படிப்பில் சேர்த்தோம். என்னவோ, அதே மனதாகப் படிக்கிறாள். ஆனால் சென்னையிலிருந்து பி.யூ.சி. முடித்து வந்த பிறகே அவளிடம் பழைய கலகலப்பு இல்லை...

"இப்போதுதான் பாரேன். எல்லாமே செய்வாள். பிரியமாகப் பேசுவாள். பார்த்துப் பார்த்துப் பரிவாள். ஆனால் அளவோடு தான். பிறகு தனியாக உட்கார்ந்து விடுவாள். முன்பெல்லாம் இப்படியா இருப்பாள்? அவள் இருக்குமிடமே யானை புகுந்த வெண்கலக் கடைபோல ஒரே சத்தமாக இருக்குமே. அத்தைகூட, 'வயது வந்த பெண் இப்படிக் கத்தாதேடி' என்று அதட்டிக் கொண்டே இருப்பார். இப்போது ஆடி ஓய்ந்த பம்பரம் போல எல்லாம் அடங்கிவிட்டதே. பூங்கோதை என்று பெயர் வைத்ததற்கு அந்தச் சூடிக் கொடுத்த நாச்சியார் போல உலகில் இல்லாத ஒன்றை எண்ணி மறுகுகிறாளோ என்று எனக்கு வேதனையாக இருக்கிறது" என்ற ஸ்வர்ணாவின் விழிகளில் நீர் துளிர்த்தது.

சுமிக்கும் நினைவு வந்தது. காலேஜில் சதா விட் அடித்துக் கொண்டு சிரிப்பை கிளப்பி விட்டுக் கொண்டே இருப்பாள். ஆனால் கடைசி டெர்மிலேயே கொஞ்சம் அமைதியாகி ஒதுங்கத் தொடங்கிவிட்டாள். பரீட்சைக்குப் படிக்கிறாளாக்கும் என்று எல்லாரும் நினைத்தார்கள். ஆனால், ஸ்வர்ணா சொல்வதைப் பார்த்தால் விஷயம் வேறுபோல இருக்கிறதே!

"ஒரு குறிப்புக் கூடக் காட்டவில்லையா அண்ணி?" என்று கேட்டாள் ஸ்வர்ணாவிடம்.

"ஊஹூம். ஆனால் இல்லையென்று போகாமல் போன தடவை உன் அண்ணா நடராஜ் வந்தபோது கொஞ்சம் கலகலப்பாக இருந்தாள். அவர் சென்ற பிறகோ இரண்டு மடங்கு கூட்டில் அடைந்து விட்டாள். ஒரு வேளை அவரிடம் நாட்டம் இருக்குமோ? அவளிடம் கேட்டுப் பார்த்தேன். காளிகா தேவிபோல ஒரு விழி விழித்தாள் பார்" என்று உடலைச் சிலிர்த்தாள் ஸ்வர்ணா. "ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, 'இந்த பேச்சுப் பேசாதீர்கள்' என்று ஒரு கத்துக் கத்தினாள். அப்பா! அதற்குப் பிறகு அந்த வழிக்கே நான் சென்றதில்லை. அதோடு சுமிம்மா. நான் கேட்டதும் தப்புதானே. நடராஜின் தரம் எங்கே? நாங்கள் எங்கே? ஏணி வைத்தாலும் இருவருக்கும் எட்டுமா?" என்றாள் வருத்தமாக.

"ஏன் எட்டாது? நடராஜ் ஒன்றும் பணப் பைத்தியம் அல்லவா!" என்று சுமி மனதிற்குள் ஏதோ திட்ட மிட்டாள்.

அன்று பிடிவாதமாகப் பூங்கோதையை வாக்கிங் செல்ல உடன் அழைத்தாள் சுமித்ரா.

காட்பாடி டவுன்ஷிப்பில் ஓர் ஓரமாக அவர்கள் வீடு இருந்தது. அங்கிருந்து மறுமுனையில் இருந்த பிள்ளையார் கோயிலுக்கு நடந்து சென்று வணங்கி விட்டு வருவது வாக்கிங்.

வரும்போது வழியில் வெறும் அஸ்திவாரம் மட்டும் போடப்பட்டிருந்த ஒரு வீட்டின் அருகே வந்ததும், "சற்று இளைப்பாறி விட்டுப் போகலாம் பூங்கோதை," என்றாள் சுமி.

இருவருமாக அந்த அஸ்திவாரத்தின் முன்னால் குவித்திருந்த மண்லில் உட்கார்ந்தனர்.

"பூங்கோதை! நீ நடராஜைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று பட்டென்று கேட்டுவிட்டாள் சுமித்ரா.

விசித்திரமாகத் தோழியைப் பார்த்தாள் பூங்கோதை. "சொல்லேன்" என்று வற்புறுத்தினாள் சுமி.

"அவர் உன்னைக் காதலிக்கிறார்," என்றாள் அவளும் வெளிப்படையாக.

சுமிதான் கடைசியில் அதிர்ந்து போனாள். பிரபுவும் இதையே சொன்னானே. "என்னடி உளறுகிறாய்?" என்று அதட்டினாள்.

"நீதான் உளறத் தொடங்குகிறாய்?" என்றாள் பூங்கோதை.

"இல்லை பூங்கோதை. அவருக்கு என்னிடம் ஒரு மதிப்பு. நட்பு. இப்போது இரக்கம். அவ்வளவுதான்" என்றாள் சுமி.

நம்ப முடியாதவள் போல சுமியைப் பார்த்தாள் பூங்கோதை. "சுமி, இன்னமும் அதே குருட்டுத்தனத்துடன் இருக்கிறாய்? அன்றுதான் உன் ஒழுக்கப்பித்தில் கண்ணை மூடிக் கொண்டு இருந்தாய் என்றால் இன்னுமா?"

"நீ தப்பாக நினைக்கிறாய் பூங்கோதை," என்றாள் சுமித்ரா குழப்பத்துடன்.

"எதைப் பற்றி?" பூங்கோதையின் குரல் உயர்ந்தது. "உனக்காக நடராஜ் எவ்வளவு தூரம் தன்னை மாற்றிக் கொண்டார் தெரியுமா? சிகரெட் பிடிப்பதை விட்டார். ஸ்டைலாக

முடியை முன்னே இழுத்து விடுவதை விட்டார். உடனொத்த மாணவர்களுடன் பேசிச் சிரிப்பதை விட்டார். இதையெல்லாம் நீ கண்டாயா, பேச்சில் நிதானம், பார்வையில் நிதானம், நடையில் நிதானம் - எல்லாமே அவர் உனக்காக ஏற்படுத்திக் கொண்டவை தானே. அவர் என்னவெல்லாம் செய்தார். பாவி நீ - அவர் தாயும் மறைந்து தந்தையும் மறைந்து ஓர் ஆறுமாதம் ஊரில் இருந்து வருவதற்குள் ஆனந்தமாய் யாரையோ மணந்து கொண்டாய்" என்றாள் ஆத்திரமாக.

"அவர் சொன்னதே இல்லையே பூங்கோதை" என்றாள் சுமித்ரா. அவளுக்குப் பூங்கோதையின் ஆவேசத்தில் குரலே எழும்பவில்லை.

"எப்படிச் சொல்லுவார்?" என்று மீண்டும் பாய்ந்தாள் பூங்கோதை. "நீதான் என்னவோ அப்படியெல்லாம் நினைத்தால் ஒழுக்கக் கற்பூரம் கரைந்து விடும் என்று கதவை இறுக மூடி வைத்திருந்தாயே! அதை மீறி அவர் எப்படிச் சொல்லுவார்? உன்னைத் தவிர வேறு பெண்ணைப் பார்க்க அவருக்குக் கண்ணே இல்லையே. உன்னைப் பார்த்துப் பார்த்து, உனக்குப் பயந்து பயந்து, மனதை மறைத்து மறைத்து... சை! இதைப் பார்த்துச் சகிக்க முடியாமல் தானே நான்..." வேகமாகப் பேசிக் கொண்டிருந்த பூங்கோதை பட்டென்று பேச்சை நிறுத்திக் கைகளில் முகத்தைப் புதைத்து விம்மினாள்.

"அதனால்தான் நம்பிக்கையற்று இங்கே வந்து காட்டினுள் அடைந்து விட்டாயோ பூங்கோதை" என்றாள் சுமித்ரா மிருதுவாக.

பூங்கோதை சட்டெ்டன நிமிர்ந்தாள். "வேண்டாம் சுமி அதைச் சொல்லாதே... நான் தாங்க மாட்டேன்" என்றாள் தவிப்போடு.

அவளை யோசனையோடு பார்த்தாள் சுமித்ரா மெல்ல எழுந்தாள். "வா போகலாம்."

இதற்குப் பிறகு சுமி தன் வளைகாப்பைத் தடுக்க முயல வில்லை.

ஆனால், நடராஜ் வரவில்லையானால் முடியாது என்று கண்டிஷன் போட்டாள். மாறன் உடனே நடராஜனுக்குக் கடிதம் எழுதினார்.

சுமியும் எழுதினாள். "உங்களுடைய மருமகனுக்கு (அல்லது மருமகளுக்கு) உங்களைப் பார்க்க வெகு ஆசையாக இருக்கிறதாம். நீங்கள் எப்படியும் கண்டிப்பாக வரவேண்டும் அண்ணா!" என்று முடித்தாள்.

கடிதம் கிடைத்ததும் நடராஜ் சற்றுநேரம் அந்த 'அண்ணா'வையே பார்த்துக் கொண்டிருந்தான். தானாகச் சிரிப்பு வந்தது.

கண்டிப்பாக வருவதாகக் கடிதம் எழுதி வைத்து விட்டு ஜன்னலருகில் சென்றான்.

எதிர்ச் சாரியில் சற்று தூரத்தில் அந்தப் பைக் நின்றது. பார்வை மீண்டும் கடிதத்தில் நிலைத்தது. இந்த ஒற்றனைத் தாண்டி எப்படிச் செல்வது?

மீண்டும் மீண்டும் அவனுக்கு அதே யோசனை. வருகிறேன் என்று கடிதம் எழுதியாயிற்று. அதைக் காப்பது எப்படி?

இரண்டு மூன்று நாள்களுக்குத் தேவையான உடைகளைப் பெட்டியில் எடுத்து வைத்தான். பெட்டி காரின் டிக்கியில் எப்போதும் ரெடியாக இருந்தது.

இனி இந்தப் பைக் மனிதன் அறியாமல் நழுவ வேண்டும். இரவு பகல் ஒற்றறியும் ஒருவருக்கு டிமிக்கி கொடுப்பது எப்படி? மீண்டும் மீண்டும் அதே யோசனை. யோசிக்க யோசிக்கப் பார்வை அதன்மீதே பாய்ந்தது.

எதற்கும் ரெடியாக இருக்கட்டும் என்று மானேஜருக்கு மேற்கொண்டு நடக்கவேண்டிய வேலைகள் பற்றிக் குறிப்புப் போட்டு மேஜையில் வைத்தான்.

இருப்புக் கொள்ளாமல், மீண்டும் வெளியே பார்த்தான். நடராஜனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அந்தப் பைக்கைக் காணவில்லையே.

அவசரமாக ஸேஃபை மூடினான். லிஃப்டுக்காகக் காத்திராமல் இரண்டிரண்டு படியாக இறங்கி ஓடினான். காரில் ஏறி விருட்டென்று கிளம்பி விட்டான்.

நடராஜை அவ்வளவு விரைவில் எதிர்பார்த்திராததால் எல்லாருமே திகைத்துப் போனார்கள்.

"மருமகன் பார்க்க வேண்டும் என்றானாம். அதுதான் ஓடிவந்தேன்" என்றான் இளநகையுடன்.

"அப்படியாம்மா?" என்று குறும்பாகச் சிரித்தார் மாறன்.

முகம் சிவந்த போதிலும், "ஆமாம், பெரியண்ணா" என்று பதில் கூறினாள் சுமித்ரா.

"பெரியண்ணாவா?" என்று வாயைப் பிளந்தார் அவர்.

"ஆமாம்" என்று நடராஜைச் சுட்டிக்காட்டி விளக்கம் கூறினாள் சுமி. "இவர் அண்ணா, நீங்கள் பெரியண்ணா. அப்படித்தானே அண்ணா?" என்று நடராஜிடம் வினவினாள்.

சற்று வியந்துவிட்டு, "நீ சொன்னால் அப்பீல் ஏது, சுமி?" என்றான் நடராஜ்.

அன்று முழுவதும் அண்ணா அண்ணா என்று அவனை முழுக்காட்டி விட்டாள் சுமித்ரா. "அண்ணா குளியுங்கள்". "அண்ணா காபி குடியுங்கள்". அண்ணா "பொரியல் வைக்கட்டுமா அண்ணா...?"

சற்றுத் தனியாக அவளைக் கண்டபோது, "என்ன சுமி ஒரே அண்ணா அபிஷேகம்?" என்று புன்னகையுடன் வினவினான் நடராஜ்.

"அண்ணாதானே!" என்றாள் சுமி அசையாத பார்வையுடன்.

மீண்டும் வியந்தாள் நடராஜ். "அதில் சந்தேகமா சுமி? பிரபுவின் பிள்ளைக்காக நீ துடித்ததைப் பார்த்த பிறகும் என்னால் வேறு எண்ண முடியுமா?"

"அது கிடக்கட்டும். அண்ணாதானே சொல்லுங்கள்" என்றாள் சுமி பிடிவாதமாக.

"ஏதேது, பீடிகை மிகவும் பலமாக இருக்கிறதே," என்று கேலியாக ஆச்சரியப்பட்டான் நடராஜ்.

"நழுவ வேண்டாம். பதில் சொல்லுங்கள். நீங்கள் என் அண்ணாதானே?"

"ஆமாம் தாயே, ஆமாம்."

"அண்ணா, எனக்கு இப்போது ஓர் ஆசை. பிள்ளைத் தாய்ச்சிப் பெண்ணின் ஆசை. இதை நிறைவேற்ற வேண்டும் இல்லையா?"

"ஆ... மாம்..." என்று இழுத்தான் நடராஜ்.

"எனக்குப் புதிதாக அண்ணி வேண்டும்" என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

"வ்வாட்!"

"என்ன தம்பி, என்ன விஷயம்? சுமி என்ன வெடி போட்டாள்? இப்படிக் கத்துகிறீர்களே," என்று அந்தப் பக்கமாக வந்த மாறன் கேட்டார்.

"மாறன் பிரதர் உங்கள் வீட்டில் அண்ணி மரம் இருக்கிறதா?" என்று சோகமாகக் கேட்டான் நடராஜ்.

மாறன் விழிக்க, சுமி குபீரென்று சிரித்துவிட்டாள்.

"இவளுக்கு இந்த நிமிடத்தில் பிரான்ட் நியூவாக ஓர் அண்ணி வேண்டுமாம். உங்கள் தோட்டத்தில் மாங்காய்க்குப் பதிலாக அண்ணி காய்த்தால் அவளுக்கு ஒன்று பறித்துக் கொடுக்கலாமே என்று கேட்டேன்" என்று பரிகாசமாகச் சொன்னான் நடராஜ்.

"இதென்னம்மா?" என்று வியப்புடன் கேட்டார் மாறன்.

"அண்ணன் என்றால் அண்ணி வேண்டாமா?" என்று சிணுங்கினாள் சுமி.

"வேண்டும்தான். ஆனால் இப்போது தம்பி உங்கே போகும் அண்ணிக்கு?"

"அதெல்லாம் என் பொறுப்பு. நீங்கள் இருவரும் மூச்சுக் காட்டக் கூடாது!" என்று எச்சரித்துவிட்டு மறைந்தாள் சுமி.

மறுநாள் காலையிலேயே வளைகாப்பெல்லாம் சுபமாக அடுக்கினார்கள். அலங்காரம் செய்து கொண்டு நின்றபோது பிரபுவின் நினைவில் சுமியின் முகத்தில் ஒரு கணம் நிழல் படிந்தது. ஆயினும் உடனேயே மாறி விட்டாள்.

மாலையில் பூங்கோதையை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வாக்கிங் கிளம்பினாள். குழந்தைகள் முன்னே ஓடினர். துணைக்கு நடராஜையும் அழைத்தாள் சுமி.

"இன்று வேண்டாமடி," என்று பார்வதி சொல்லியும் சுமி கேட்கவில்லை. "புதிதாகப் பிடிவாதம் பிடிக்கிறாள் பார், அவள் அண்ணனைக் கண்ட சலுகையா?" என்று அதிசயித்தார் அவர்.

குழந்தைகளுடன் பூங்கோதை சற்று முன்னே செல்ல சுமி தான் சொல்ல வேண்டியதை எல்லாம் நடராஜிடம் சொல்லி முடித்தாள்.

அவன் அதிசயத்துடன் முன்னே சென்று கொண்டிருந்த பூங்கோதையைப் பார்த்தான். "ஆமாம் அண்ணா! நாலு ஆண்டுகளாக இவள் இங்கே உங்களுக்காக நோம்பு காக்கிறாள்... அண்ணா! இவள் தான் என் அண்ணி. உங்கள் மனதில் ஏதேனும் ஆட்சேபணை இருக்கிறதா?"

"இருக்குமா?" என்றான் நடராஜ் கேலியாக. "நீ இவ்வளவு சொன்ன பிறகும், அங்கே இருக்க, இந்த ஆட்சேபணைக்கு அவ்வளவு தைரியமா?" என்று சிரித்தான் அவன்.

மகிழ்ச்சியுடன் சற்று வியப்பும் கலக்க, நடராஜை ஏறிட்டுப் பார்த்தாள் சுமி.

பார்வை புரிந்துவிட "ஆச்சரியமாக இருக்கிறதா சுமி? காரணம் உன் பிரபுதான்," என்றான் அவன்.

"அதெப்படி?" என்றாள் அவள் இன்னமும் அதிகப்படி ஆச்சரியத்துடன்.

"எப்படியும் குழந்தை பிறந்த பிறகேனும் உன் விஷயம் பிரபுவிற்குத் தெரிவித்தாக வேண்டும் அல்லவா? அங்கே ஓர் அண்ணியையும் வைத்துக் கொண்டு சொன்னால் எளிதாக இருக்கும். தப்பான ஊகங்களுக்கும் இடம் இராது. பிற்காலத்திலும் குடும்பமாகச் சேர்ந்து பழகலாம்" என்று விளக்கினான் நடராஜ்.

அவன் பேச்சின் பொருள் புரியவும், “ஆனால் அதற்காக மட்டும் என்று இதைச் செய்யவேண்டாம் அண்ணா! பூங்கோதை மிகவும் நல்லவள்...” என்று இழுத்தாள் சுமி.

“புரிகிறது புரிகிறது. அவள் முகம் வாட இடம் இராது. கவலைப்படாதே,” என்று உறுதி அளித்தான் அவன்.

திரும்புகையில், முன்னே ஓடிய பிள்ளைகளோடு செல்ல முயன்ற பூங்கோதையைக் கையைப் பிடித்து நிறுத்தினாள் சுமித்ரா.

“எனக்குத் தூக்கம் வருகிறது பூங்கோதை. நான் முன்னே போகிறனே். நீ அண்ணனோடு நிதானமாகப் பேசிக்கொண்டு வா” என்றாள். பூங்கோதை ஏதோ கூறுவதைக் கவனியாதவள் போல முன்னே விரைந்து சென்று விட்டாள்.

பூங்கோதைக்குச் சங்கடமாகப் போயிற்று. “இந்த சுமி....” என்று முகம் சிவக்கத் திணறிவிட்டுப் பிறகு சமாளித்துக் கொண்டு பொய்ப் புன்னகை பூத்தாள்.

“என் தங்கை விஷயம் தெரிந்தவள். சமயம் பார்த்து ஒதுங்கிக் கொண்டாள்,” என்றான் நடராஜ்.

சற்றுப் பொறுத்து அவர்கள் இருவரும் திரும்பி வந்ததும், பூங்கோதை நேராகச் சுமியின் அறைக்குச் சென்றாள்.

சற்றுக் கவலையுடனே தன்னைப் பார்த்த தோழியை இறுகத் தழுவிக் கொண்டாள்.

“மெல்ல மெல்ல. இது நான். உன் தோழி சுமிதான். என் அண்ணன் அல்ல” என்று குறும்பாகச் சொல்லிச் சிரித்தாள் சுமி.

“போ சுமி” என்று முகத்தை மூடிக்கொண்டு ஓடி விட்டாள் பூங்கோதை.

# 18

“இனியும் வேலையை விட்டுவிட்டு இங்கே இருக்க முடியாது மாறன் பிரதர் நான் வரட்டுமா?” என்று விடை பெற்றான் நடராஜ்.

“ஆமாமாம். வந்த காரியம்தான் ஆகிவிட்டதே” என்று சிரித்தாள் சமித்ரா.

“வாயைப் பார்,” என்று அவளிடம் சொல்லிவிட்டுப் பூங்கோதையைப் பார்த்துச் சிரித்தான் நடராஜ்.

“அது என்ன காரியம்” என்று வினவினான் மாறன்.

“அ... அது வந்து... ஒ... ஒன்றுமில்லை. இந்த வ... வளைகாப்பைச் சொன்னேன். நான் ஊருக்குப் போய் எழுதுகிறேன்” என்று நடராஜ் தடுமாற பூங்கோதை முகம் சிவந்து உள்ளே ஓட, சுமி விழுந்து விழுந்து விலாவைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள்.

“என்னடி இப்படி சிரிக்கிறாய்? எங்கானும் பிடித்துக் கொள்ளப் போகிறது. மெல்லச் சிரி” என்று அதட்டினார் பார்வதி.

உள்ளே ஓடிய நாத்தனாரைக் குழப்பத்துடன் பார்த்தாள் ஸ்வர்ணா. பிறகு அவள் பார்வை சுமியை அடைந்தது.

“இந்தச் சிரிப்பை ரசிக்க அந்தப் புருஷனுக்குக் கொடுத்து வைக்கவில்லை பார்,” என்றான் மாறன்.

“அவன் கிடக்கிறான் கழுதை!” என்றான் நடராஜ்.

"அண்ணா!" என்று அதட்டினாள் சுமி.

"இல்லையம்மா இல்லை. இனி உன் கணவரை ஒன்றும் சொல்வதில்லை. சரிதானா? நான் வரட்டுமா?" என்று கிளம்பினான் நடராஜ்.

"பூங்கோதையிடம் சொல்லவில்லையே," என்று விஷமமாகக் கேட்டாள் சுமித்ரா.

"பூங்கோதை!" என்று குரல் கொடுத்தார் மாறன்.

"நானே சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்" என்று உள்ளே சென்றான் நடராஜ். இரண்டு நிமிடங்கள் கழித்து வெளியே வந்தான்.

சுமியின் குறும்பான பார்வையைத் தவிர்த்து விட்டுக் காரில் ஏறிச் சென்றான்.

அன்று மாலை உலாவச் செல்லும் போது, பூங்கோதை சுமியோடு செல்ல முடியவில்லை.

அவள் தோழியின் திருமணம் என்று அதற்குச் சென்றிருந்தாள். வீட்டில் எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். இவள் எப்படி ஒரு திருமண விழாவில் தானாகவே கலந்து கொள்ளச் சென்றாள் என்று.

ஸ்வர்ணாவின் குறுகுறு பார்வையைக் கவனித்தும் சுமி ஒன்றுமே சொல்லவில்லை. இது நடராஜ் எழுதித் தெரிவிக்க வேண்டிய காரியம் ஆயிற்றே.

தன் முயற்சியின் வெற்றியை எண்ணி இளம் புன்னகையோடு கோயில் வரை சென்று திரும்பினாள் சுமி.

மதுவும் மதனும் வழக்கம் போலவே முன்னே ஓடுவதும், குறுக்குச் சாலை வந்தால் நின்று சுமியுடன் செல்வதும், மீண்டும் ஓடுவதுமாக இருந்தனர். வீடு திரும்பும் முனை வந்ததும் நேராக

வீட்டுக்கு ஓடினார். 'நான் ஃபர்ஸ்ட், நான்தான் ஃபர்ஸ்ட்' என்ற கூச்சல் கேட்டது.

இதழ்களில் இளம் புன்னகையோடு தேர் போல அசைந்தாடி நடந்தாள் சுமி. வழக்கம் போல முன் திரும்பி இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் சட்டென நின்றாள். தரையிலேயே பார்வை ஒரு பக்கமாய் ஓடியாது. ஷூ அணிந்திருந்த போதும் பரிச்சயமாய்த் தெரிந்த இரு கால்கள். படபடக்கும் நெஞ்சோடு பார்வையை மெல்ல உயர்த்தினாள்.

பிரபு! காரில் சாய்ந்தபடி அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

சுமி தப்பு செய்தவள் போலத் தலை குனிந்தாள்.

சிகரெட் லைட்டரின் பரிச்சயமான ஒலி கேட்டது. சிகரெட்டை வாயில் பொருத்திக் கொண்டு, "வெல்!" என்றான் பிரபு.

லேசாக நிமிர்ந்து பார்த்துவிட்டு முன்னிலும் அதிகமாகத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள் சுமி.

அவன் பார்வை அவள் வயிற்றில் - நன்றாகவே முன்னே தள்ளிக் கொண்டு தெரியத் தொடங்கிய வயிற்றில் படிந்தது. "இப்போது மாதம் எத்தனை?"

"ஏ... ஏழு..."

"டாக்டரிடம் செக் பண்ணுகிறாயா?"

"ஆ... ஆமாம்."

"வா போகலாம்" என்று திணறினாள் சுமித்ரா.

பிரபுவின் கை சுமியின் கரத்தில் அழுந்தியது. "கிளம்பு" என்று காரின் பக்கம் லேசாக இழுத்தான்.

"நான்... நான் இருக்கும் வீட்டில் சொல்ல வேண்டும்." என்றாள் சுமி.

"ம்ம்... ஆல்ரைட். ஆனால் சரியாகப் பத்தே நிமிஷம்தான். அதற்குள் கிளம்பிவிட வேண்டும்" என்று காரில் ஏற்றிச் சென்றான். பிரபு சுமியோடு தானும் கூடவே இறங்கி வீட்டிற்குள் சென்றான்.

சுமியோடு சேர்ந்து உள்ளே வந்த ஆடவனை எல்லாரும் வியப்புடன் பார்த்தார்கள்.

சுமி அறிமுகம் செய்து வைத்தாள். "இவர்தான் என் கணவர் அண்ணா. என்னை அழைத்துப் போக வந்திருக்கிறார்."

"என் பெயர் பிரபு!" என்று கைகூப்பினான் பிரபு.

"நா...ன்... என் பெயர் மாறன். இங்கேதான் ஒரு ஓட்டலில் மானேஜராக இருக்கிறேன். நீங்கள் என்ன ஸார், இப்படிப் பூப்போன்ற பெண்ணை அம்போ என்று விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டீர்கள்? உங்களால் எப்படித்தான் முடிந்ததோ?" என்றார் குறை கூறும் குரலில்.

"பழசை விடடா. ஏதோ கெட்டகாலம். ராமனும் சீதையும் மாதிரி இவர்களையும் பிரித்து வைத்திருக்கிறது. இப்போது நல்லபடியாகக் கூடிவிட்டார்களே அது போதாதா? நீ இதைப் பேசினால் குழந்தை மனக் கஷ்டப் படுகிறாள் பார்" என்றார் பார்வதி.

குழந்தை என்றால் சுமிதான். தன் பொய்யை மாறன் போட்டு உடைப்பதை எண்ணி முகம் சிவந்து தலை குனிந்து நின்றிருந்தாள். இதை மன வருத்தம் என்று பார்வதி எண்ணி விட்டார்.

நல்ல வேளையாகப் பிரபு வேறு ஒன்றும் சொல்லவில்லை குறுகுறுவென்று சுமியைப் பார்த்துவிட்டு, "அவர்கள்

சொல்லுவது போலப் போதாத காலம்தான் மிஸ்டர் மாறன்" என்று அதோடு விட்டுவிட்டான்.

இப்போதே கிளம்ப வேண்டும் என்றதும், எல்லாரும் குழம்பிப்போயினர் "இப்போதே என்றால் எப்படி? இரண்டு நாள் இருந்து போங்கள் மாப்பிள்ளை." என்றார் பார்வதி.

"எப்படி மாப்பிள்ளை என்று பார்க்கிறீர்களா? சுமியை இங்கு எல்லாருமே எனக்கு இன்னொரு தங்கையாகவே எண்ணி விட்டோம்" என்றார் மாறன். அவரும் தங்கிப் போகுமாறு வற்புறுத்தினார்.

சுமியை உள்ளே அழைத்து, "என்னடி, திடீரென்று இப்படிப் பறக்கிறாரே" என்றாள் ஸ்வர்ணா. "அவர் அப்படித்தான்" என்றாள் சுமி. "நான் அவருக்கு ஏதாவது உண்ணக் கொடுக்கிறேன். அப்படி இன்னொரு தடவை சொல்லிப் பார்க்கிறேன்" என்று சென்றாள் ஸ்வர்ணா.

"என்ன சுமி?" என்று வந்தாள் பூங்கோதை - விழிகளில் கேள்வி.

"நான் சென்னைக்குச் சீக்கிரமாகச் சென்றால் உன் விஷயத்தை விரைவாகக் கவனிக்க முடியும்?" என்று புன்னகை செய்தாள் சுமி.

"சுமி" என்று குரல் கொடுத்தான் பிரபு.

இதுவரை ஏதோ நடக்கிறது என்று இருந்த குழந்தைகள் சுமி கிளம்பப் போகிறாள் என்பதை உணர்ந்ததும் அழத் தொடங்கினர். துணிமணி ஒன்று எடுத்து வைக்கவில்லையே என்று திகைத்த ஸ்வர்ணா, "சும்மா இருங்களடா" என்று பிள்ளைகளை அதட்டினாள்.

"அடுத்த வாரம் எங்கள் பர்த்டே. அதற்கு இல்லாமல் ஆன்ட்டி எப்படிப் போகலாம்?" என்று கோபத்தோடு வாதிட்டான் மதன். "அதானே?" என்று அழுதாள் மது.

"என்றைக்குப் பர்த் டே சொல். நான் உன் ஆன்ட்டியை அழைத்துக் கொண்டு வருகிறேன். ஆமாம், பர்த்டேக்கு உனக்கு என்ன வேண்டும்? சின்னக் கார் வேண்டுமா? ஸ்கூட்டர் வேண்டுமா?" மதுவின் பக்கம் திரும்பி, "வாக்கிடாக்கி வேண்டுமா? பொம்மை நடந்து கொண்டே பேசும்" என்றான் பிரபு.

பெரிய பெரிய விளையாட்டுச் சாமான்களின் பெயர்களைக் கேட்டதும் பிள்ளைகள் வாயைப் பிளந்தனர். "எனக்குக் கார் தான்" என்றான் மதன். "எனக்கு வாக்கி டாக்கி. என் கிளாஸ் மேட் ரூபா அப்படி வைத்திருக்கிறாள். யாரோ சிங்கப்பூர் மாமா தாத்தா என்று பெருமையடிப்பாள். இன்னிமே நானும் பெருமையடிப் பேன்" என்றாள் மது.

"அதெல்லாம் காஸ்ட்லி மிஸ்டர் பிரபு, வேண்டாம்" என்று மறுத்தார் மாறன்.

"பரவாயில்லை. சுமி கிளம்புகிறாயா?" என்று எழுந்தான் பிரபு.

அவன் குறிப்பை உணர்ந்து சுமியும் விடைபெற்றுக் கிளம்பினாள்.

"துணிமணி..." என்ற ஸ்வர்ணாவிடம், "ஒன்றும் வேண்டாம். அங்கே சுமி விட்டு வந்தவை கிடக்கின்றன" என்று ஓர் எட்டு எடுத்து வைத்தான் பிரபு.

'இனியேனும் நல்லபடியாக இருங்கள் சுமி மிகவும் நல்ல பெண் மிஸ்டர் பிரபு! இவ்வளவு நாளில் ஒரு தடவையேனும்

அவள் உங்களைத் தாழ்த்திப் பேசியிருப்பாளா? கிடையாது. இன்று காலை நடராஜ் தம்பி ஏதோ சொன்னபோதுகூட 'அண்ணா' என்று அதட்டி அடக்கி விட்டாள்" என்று உடன் நடந்தார் மாறன்.

இந்த அண்ணாவில் பிரபுவின் விழிகள் பளிச்சிட்டன.

வெளியே சென்றதும், பிரபுவின் பெரிய நீண்ட காரைப் பார்த்துத் திகைத்தார் மாறன். சுமியைக் காரில் உட்கார வைத்துவிட்டுப் பிரபு திரும்பி வந்தான்.

"நீங்கள் சுமியைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டதற்கு என் நன்றி" என்று மீண்டும் தயங்கிவிட்டு, முகம் சிவக்கக் கேட்டான். "சென்னை வரை காரில் செல்வதால் சுமிக்கு ஒன்றும் இல்லையே, எனக்குத் தெரியவில்லை" என்றான் மெல்ல.

"ஸ்வர்ணா சிரித்தாள். "ஒன்றும் செய்யாது. நீங்கள் மேடு பள்ளம் பார்த்து ஓட்டுங்கள். போனதும் உடம்புக்கு வெந்நீர் ஊற்ற வேண்டும். அவ்வளவுதான்" என்றாள் பார்வதி.

கார் கிளம்பியது. முடிந்தமட்டும் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள் சுமி. இந்த அன்பான குடும்பத்தை விட்டு இப்படிச் செல்வது அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

செல்லும் வழியெல்லாம் பிரபு ஒன்றுமே பேசவில்லை. சுமியும்தான். எது எப்படியோ. அவன் அருகில் அமர்ந்திருப்பதே அவளுக்கு ஆறுதலாக, அபூர்வமான அமைதியாக இருந்தது. அதை அனுபவித்தபடி ஸீட்டில் சாய்ந்து கொண்டாள்.

காரை நிறுத்தி, பின்ஸீட்டில் இருந்து ஒரு குஷனை எடுத்து அவளிடம் நீட்டி, "வசதியாகச் சாய்ந்து கொள்" என்று கூறிவிட்டு மீண்டும் காரை ஓட்டினான் பிரபு.

சுமி தூங்கிக்கூடப் போனாள்.

வேலைக்காரர்களின் வியந்த பார்வையை லட்சியம் செய்யாமல், சுமியுடன் மாடிக்குச் சென்றான். "களைப்பாக இருக்கிறதா? பசிக்கிறதா?" என்று வினவினான். அவள் பதில் சொல்லும் முன்பாகவே, "அந்த அம்மா வெந்நீர் ஊற்றச் சொன்னாரே" என்று குளியலறைக்குச் சென்று தொட்டியில் வெந்நீர்க் குழாயைத் திருகி விட்டான்.

சுமி குளித்து முடித்து வந்தபோது, அவனும் குளித்து உடை மாற்றியிருந்தான். பிறகு இருவரும் பேச்சின்றியே உணவு அருந்தினார்கள்.

சமையல்காரர் பாலை மாடியில் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனார்.

அவர் சென்றபின் பிரபு சுமியிடம் வந்தான்.

எழ முயன்றவளைத் தடுத்து அவள் அருகில் முண்டியிட்டான். "சுமி" என்று அவளது கைகளைப் பற்றியவன், அந்தக் கைகளிலேயே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

தன் கைகளில் சூடான கண்ணீர் படுவதை உணர்ந்த சுமி திடுக்கிட்டுக் கைகளை உருவ முயன்றாள். ஆனால் காதலில் போலவே பிரபு கண்ணீரிலும் விடாக்கண்டனாக இருந்தான்.

அவன் குத்தலாகப் பேசுவான், முரட்டுத்தனமாக நடந்து கொள்வான் என்று எண்ணியிருந்தாள் சுமி. ஆனால் அவன் கண்ணீர் பெருக்கவும், அவள் மனம் பாகாக உருகி விட்டது. மெல்ல அவன் தலையை மடியில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

சில நிமிட நேரம் பிரபு அப்படியே இருந்தான்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சுமியை ஒட்டியிருந்த தன் கன்னத்தில் யாரோ மெல்ல உதைத்தது போல உணர்ந்தான் பிரபு.

'இவ்வளவு நாள் முட்டாளாக இருந்தாயே அப்பா!' என்று அவன் குழந்தை உதைத்ததோ, அல்லது 'அழாதே; அப்பா!' என்று அவன் கண்ணைத் துடைக்க கையை நீட்டியதோ? மனைவியின் உள்ளே அசைந்த தன் குழந்தையை உணர்ந்தபோது பிரபுவுக்குப் புல்லரித்தது.

பிரபு சட்டென நிமிர்ந்து சுமியைப் பார்த்தான் முகம் செக்கச் சிவக்க, முகத்தை மூடிக்கொண்டாள் சுமி.

"சுமி!" என்று அவள் கைகளை விலக்கி அருகே அமர்ந்து கொண்டான் பிரபு. "நீ என்னிடம் இப்படி நாணம் காட்டுவது இதுதான் முதல் தடவை தெரியுமா?"

சுமி தலை நிமிரவே இல்லை.

"ஆனால் சுமி, நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை? ஏன் மறைத்தாய்? எனக்குப் புரிந்து கொள்ளவே முடியவில்லை" என்றான் வருத்தத்துடன்.

தயங்கித் தயங்கி அவள் தன் காரணத்தைச் சொன்ன போதோ, அவன் ஒரேயடியாகத் திடுக்கிட்டுப் போனான். "சுமி, நானா அப்படிச் சொன்னேன்?... இருக்கலாம். அப்போது அந்த எண்ணத்திலேயே கூறியிருக்கலாம். ஆனால், நான் பிறகு மாறிவிட்டதை நீ புரிந்து கொள்ள வில்லையா? மேலும் அன்று சொன்னது சுகவீனத்தைத்தான். பேபி என்று நீ ஒத்துக் கொள்ளவில்லை. அது இல்லாவிட்டால் கடுமையான அனீமியா என்றார் டாக்டர். ஆனாலும் எனக்குச் சந்தேகம். உண்மையைச் சொல்லிவிட மாட்டாயா என்று எவ்வளவோ முயன்று பார்த்தேன். நீ அசையவே இல்லை."

"எங்களுக்கு முன்பே நீங்கள் புரிந்து கொண்டீர்களா?"

"ஆமாம் சுமி. நீ ஒன்றாம் தேதியே என்று விட்டு மழுப்பினாய். சோர்ந்து கிடந்தாய். உண்ணவில்லை. இனியும் இதை ஊகிக்க முடியாத அளவுக்கு நான் சிறு பையன் அல்லவே."

"இன்னமும் ஒன்று சுமி. நீ என்னைப் பற்றி மிகவும் கெட்ட ஒரு குடியனாக உருவகப்படுத்தி இருப்பாய். நான் நல்லவன் இல்லைதான். ஆனால். என் கெட்ட தன்மைக்கும் நான் எல்லை வைத்திருந்தேன். குடியிலும் அளவுதான். குல மகளிரைத் தொட்டதில்லை. என்னைப் போல அலைந்த சில..."

"வேண்டாமே" என்றாள் சுமி வேதனையோடு.

"இல்லை, நீ என்னை அறிந்து கொண்டாக வேண்டும். இன்று தவிர இனி இதைப்பற்றி நான் பேசப் போவது இல்லை இனி என்றேனும் நீ அந்தத் தாரிணி, ரேணுகா, லில்லி என்று எண்ணிக் கலங்கக் கூடாது. சுமி, நீயே கவனித்தாயா? அந்த ஜட்ஜ் பெரியப்பா வீட்டு விருந்து, சோமசுந்தரம் வீட்டு விருந்தில் எல்லாம் நான் பெண்களின் பக்கம் திரும்பியேனும் பார்த்தேனா? குலப் பெண்களைப் பற்றிக் குறிப்பாகக்கூட நான் நினைத்தது கிடையாது சுமி. ஆனால், சுரேஷ், சுதிர் இவர்களின் விருந்துகளில் - அந்தப் பெண்களும் இப்படிப் 'பறப்பவர்'கள் தாம்."

"அதற்காக நீங்கள் தப்பு செய்ய வேண்டுமா?" என்று தொண்டை அடைக்கக் கேட்டாள் சுமி.

பிரபு ஒரு வினாடி தயங்கினான். பிறகு, "நானும் கெட்டவன்தான் என்றேனே சுமி." என்றான் தணிவாக "நானும் அப்படிப் பறந்தவன்" தான். அத்தோடு அவர்களில் யாரையும் நான் மணந்து கொள்வேன் என்று ஏமாற்றவில்லை சுமி.

திருமணம் என்பது என் அகராதியில் இல்லை என்று சொல்லித்தான் பழகினேன். பிள்ளையோடு செத்த ரேணுகா என்பாயே - அந்தப் பிள்ளை என்னுடையதுதான் என்று என்ன நிச்சயம்?''

"என்ன!'' என்று அதிர்ந்தாள் சுமித்ரா.

ஆமாம் சுமி. அவள் என்னிடம் மட்டுமின்றி சுரேஷ், நாராயணன் போலப் பலருடனும் பழகியவள் தானே. பிள்ளையைக் காட்டி என்னை மிரட்டிப் பார்த்தாள். நான் பணியவில்லை என்றதும், என்ன நினைத்தாயோ. வாழ்வையே முடித்துக் கொண்டாள். லில்லியை எடுத்துக் கொண்டால்...'' சுமியின் முகம் தாழ்வதைக் கண்டு பேச்சை நிறுத்தினான்.

பிறகு மீண்டும் தொடர்ந்தான். "இதெல்லாம் உனக்குக் கஷ்டமாக இருக்கும் சுமி. ஆனால் நீ என்னைப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டு இனியும் என்னைப் பிரியாமல் இருக்க வேண்டும். இன்னொரு தடவை நீ சென்றாயானால், எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் சுமி.''

சுமி மௌனமாகத் தன் கையை அவன் கையில் வைத்தாள். அந்தக் கையை இறுகப் பற்றிய வண்ணம் அவன் தொடர்ந்தான். "இப்படியெல்லாம் வாழ்ந்த போதுதான் நான் உன்னைக் கண்டேன் சுமி. நான் மயிலாப்பூர் பகுதியில் காரில் சென்று கொண்டு இருந்தேன். எதிரே வந்த பஸ்ஸில் நீ இருந்தாய். உன் முகம் மட்டும் தான் தெரிந்தது. நிர்மலமான அமைதியுடன் இருந்த முகம். அன்றைய பார்ட்டி எனக்கு ரசிக்கவில்லை. திரும்பத் திரும்ப உன் முகமே கண்முன்னே வந்து நின்றது. பஸ்ஸில் கண்ட ஒரு முகத்தைப் பித்தனைப் போல எண்ணிக் கொண்டு இருப்பது எனக்கே பைத்தியக்காரத் தனமாகத் தெரிந்தது. ஆயினும் என்னை என்னால் சுயநிலைக்குக்

கொண்டு வர முடியவில்லை. நீ யாரோ? திருமணமானவளோ இல்லையோ? உன் இருப்பிடம், ஏன் நீ சென்ற பின் பஸ்ஸின் நம்பர்கூடத் தெரியாது. இந்தப் பெரிய மெட்ராஸின் ஜன சமுத்திரத்தில் மீண்டும் காண்பது கூட அதிசயம்தான். அப்படியும் உன்னை மறக்க முடியவில்லை. அன்றைய பார்ட்டியிலிருந்து வெகு சீக்கிரமாகத் திரும்பிவிட்டேன். பல நாள்கள் அந்தப் பகுதியில் சுற்றினேன். பலனே இல்லை. பிறகு ஒருநாள் என் பைத்தியக்காரத்தனத்தை எண்ணி நானே சிரித்துக் கொண்டு திரும்பிய போது, நாகேஸ்வரராவ் பார்க் பக்கமாகக் காரில் மெல்லத் திரும்பிய போது, கலகலவென்று இனிமையான உன் சிரிப்புச் சத்தம் கேட்டது. கேட்டதுமே அது உன் சிரிப்பாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். பரபரப்புடன் பார்த்த போது அது நீயேதான். 'அக்கா' என்று அழைத்த ஒரு பையனுடன் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாய் நீ. தாகத்துடன் நான் பார்த்துக் கொண்டு நிற்பதை நீ அறியவில்லை..."

சுமி வியப்புடன் அவனைப் பார்த்தாள். தம்பி தங்கைகளுடன் பக்கத்துப் பார்க்குக்குச் சுமி சிலமுறை சென்றதுண்டு. அப்போது பார்த்திருப்பான் போலும்.

"அன்று வாய்ப்பைத் தவறவிடாமல் உன்னைத் தொடர்ந்து உன் இருப்பிடத்தைக் கண்டு கொண்டேன். எனக்குத் தெரிந்த ஒருவர் டிடெக்டிவ் கம்பெனி நடத்துகிறார். அவர் மூலம் மற்ற விவரங்கள் கிடைத்தன. யோசித்தேன். சுமி! உன்னை அடையவேண்டும் என்று தோன்றியது. ஆனால் திருமணத்தின் வழியாகத்தான் என்னை அடையவேண்டும் என்றும் மணமான பிறகு என் மனம் அதிலேயே நிற்குமா அல்லது தன் பழைய குரங்கு வழி செல்லுமா என்பதெல்லாம் அப்போதும், பிறகு உன்னை மணந்த பிறகும் கூட எனக்குத் தெளிவு ஏற்படாதவை

தான். ஆனால், எப்படியும் உன்னை மணந்தாக வேண்டும் என்று உணர்ந்தேன். அதற்கான முயற்சிகளைச் செய்தேன்.

"உன் கடிதம் வந்தபோது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆயினும், உன்னை வென்று விடலாம் என்ற தைரியம் எனக்கு, 'என்னிடம் மயங்காமல் ஒரு பெண்ணால் இருக்க முடியுமா?' என்ற மமதை.

"ஆனால் அதெல்லாம் உன் உடலை வென்றதோடு சரி. உன் உள்ளம் எனக்குப் பணியவில்லை. எந்த வகையிலும் நீ என்னிடம் லயிக்கவில்லை. உன் பொறாமையைத் தூண்ட முயன்றேன். அன்று மல்லியை அணைத்து ஆடிய போதும் என் கவனம் எல்லாம் உன் மீதுதான்.

"இதற்கிடையே நடராஜ் வேறு. நீ அவனைக் காதலிக்க வில்லை என்பது எனக்கும் புரிந்தது சுமி ஆனால் நீ அவனை என்னைவிட உயர்வாக மதித்தாய். உன் நினைப்பில் வேறு ஒருவன் உயர்வதா என்று எனக்கு ஆத்திரம் வந்தது. அவன் நினைவை அழிக்க ஏதேதோ செய்தேன். நீ மாறினாய் சுமி. ஆனால் நான் நினைத்தவிதமாக அல்ல. சதா கண்ணீர் சிந்தினாய். அதை என்னால் தாங்க முடியவில்லை. கடைசியாகக் குழந்தை என்ற எண்ணம் வந்ததும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது தெரியுமா?

"இனித் துன்பம் தீர்ந்தது என்று நான் எண்ணிய போது நீ காணாமல் போனாய்." பிரபு சுமியை இறுக அணைத்துக் கொண்டான்.

அவன் உடல் குலுங்குவதைச் சுமி உணர்ந்தாள் ஆறுதலாகத் தானும் அவனை அணைத்தாள்.

"எப்படியேனும் உன்னைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்று என்ன பாடுபட்டேன் தெரியுமா? நடராஜிடம்

கெஞ்சினேன். அவன் அசையவே இல்லை. அவனுக்குப் பின்னால் ஆள் போட்டேன். அவன் கண்டு கொண்டானோ - ஊரைவிட்டு நகரவே இல்லை. கடைசியர்க அன்று அவன் தன்னைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பதாக அந்த ஒற்றன் வந்து சொல்லவும் ஏதோ விஷயம் என்று நினைத்தேன். அந்த டிடெக்டிவ் கம்பெனியிடம் சொல்லி வழக்கமான ஆளைத் திருப்பி அழைத்து வேறு ஆள் அனுப்பச் சொன்னேன். கடைசியாக... கடைசியாக உன்னைக் கண்டேன்...

"சுமி! நான் இனித் தவறுவேனோ என்ற சந்தேகம் இருந்தால் இப்போதிலிருந்து அதை அடியோடு துடைத்து விடு சுமி. நானே கண்டு கொண்டேன் - இனி என்னால் தவறு செய்ய முடியாது என்ற உன்னை மணந்த பிறகு நீ மட்டும்தான். இதை நம்புகிறாயா சுமி? கட்டாயம் நம்ப வேண்டும். சுமீ கட்டாயம்..." என்றான் குரல் கம்ம.

சுமி நிமிர்ந்து, அவன் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டுவிட்டு, அவன் மார்பில் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

"சுமி" என்றான் அவன் பிரமித்துப் போய்.

மீண்டும் 'சுமி?' என்ற ஒரு கேள்வியை அவளை நிமிர்த்திக் கேட்டான்.

கண்ணாலேயே ஆமோதித்த சுமி மீண்டும் அவன் நெஞ்சில் ஒட்டினாள்.

இருவருமே உணர்ச்சி வசப்பட்ட சில நிமிடங்கள் கழிந்தன.

"இன்னொரு விஷயம்..." என்று தொடங்கினான் பிரபு. "உன்னைத் தேடிச் சென்றபோது உன் அம்மாவைப் பார்த்தேன் சுமி. மிகவும் மெலிந்து போய்... 'சித்தியாகிப் போனேனே' என்று அவர்கள் கண்ணீர் விட்டபோது சகிக்க முடியவில்லை. கடிதம்

கூட எழுதக்கூடாது என்றாயாமே. பாவம். இன்னமும் அவர்களிடம் உன் கோபம் தீரவில்லையா?" என்ற கேட்டான்.

"நாம் இருவருமே போய் வரலாமா?" என்று மனம் கசிந்து வினவினாள் சுமி.

"ஊஹுஂஹுஂம். அவ்வளவு தூரப் பயணம் எல்லாம் இனி வேண்டாம். பதிலாக அவர்களை இங்கே வரவழைப்போம். பேரனோ பேத்தியோ பிறக்கும்வரை இருந்து பார்த்துவிட்டு நிதானமாகப் போகட்டும்" என்றான் பிரபு.

கரிசனத்துடன் அவன் பேசுவதைப் புன்னகையோடு கேட்டுவிட்டு, "பிறகு?" என்றாள் சிறு குறும்புடன்.

பிரபுவின் கண்கள் அவளை விழுங்கின.

"இதை அதற்கு அப்புறம்தான் கேட்டுப் பார்க்க வேண்டும். அப்போது..." என்று மனைவியின் கன்னச் சிரிப்பை ரசித்தபடி, அவள் காதருகில் ரகசியம் பேசினான் அவன்.



# விடியலைத் தேடும் பூபாளம்



ரமணிசந்திரன்